

அப்பர் தேவாரத் திருத்தலங்கள்

ஆய்வுரைகள்



என் கடன் பணி செய்து கிடப்பதே

பதிப்பாசிரியர்
திலகவதியார் திருவருள் ஆதீனம்
தவத்திரு தயானந்த சந்திரசேகர சுவாமிகள்

அப்பர் தேவாரத் திருத்தலங்கள்

ஆய்வுரைகள்

பதிப்பாசிரியர்

திலகவதியார் திருவருள் ஆதீனம்
தவத்திரு தயானந்த சந்திரசேகர சுவாமிகள்

வெளியீடு

திலகவதியார் திருவருள் ஆதீனம்
1120/5, தஞ்சாவூர் சாலை,
மச்சுவாடி, புதுக்கோட்டை - 622 001.
கைபேசி: 97891 82825 / 04322 -228024
www.sivabrindadevi.org/ email: sivabrindadevi@gmail.com

புதுக்கோட்டை திலகவதியார் திருவருள் ஆதீனம், 2018 ஜூலை 14,15 ஆகிய நாட்களில் நடத்திய 5-ஆம் ஆண்டு திருமுறை மாநாட்டில் வெளியிடப்பட்டது.

முதற் பதிப்பு	:	ஜூலை, 2018
படிகள்	:	300
நூல் பெயர்	:	அப்பர் தேவாரத் திருத்தலங்கள் ஆய்வுரைகள்
எழுத்து, அளவு	:	12.5 புள்ளிகள், டெம்மி 1/8
தாள்	:	ஜி.எஸ்.எம்
பக்கங்கள்	:	152
பதிப்புரிமை	:	பதிப்பாசிரிக்கே
அச்சகம்	:	சூர்யா பிரிண்ட சொலூசன்ஸ், சிவகாசி
வெளியீடு	:	திலகவதியார் திருவருள் ஆதீனம் 1120, தஞ்சைச் சாலை, மச்சுவாடி புதுக்கோட்டை - 622 001. www.sivabrindadevi.org email:sivabrindadevi@gmail.com தொலைபேசி: 04322-228024 அலைபேசி: 97891 82825 / 6380928173
விலை	:	ரூ. 100/=

32-2

பொருளடக்கம்



நீதியரசர் டாக்டர். அரு. லெட்சுமணன்
உச்ச நீதிமன்ற மேனாள் நீதிபதி,புதுதில்லி
மேனாள் தலைவர், இந்திய சட்ட ஆணையம்
புதிய எண்: 16, 3-வது குறுக்குத்தெரு,
கற்பகம்பாள் நகர், கொட்டிவாக்கம்,
சென்னை - 600 041.

வாழ்த்துரை

தமிழ் மண் இறையுணர்வை வளர்த்த மண். அருளாளர்கள், ஞானிகள் தோன்றி மக்களை அருள் நிலைக்கு ஆற்றுப்படுத்திப் பக்குவப்படுத்தினார்கள். அவ்வரிசையில், சைவ சமய உலகில் தனித்துவ மிக்கவராக விளங்கியவர் அப்பர் என போற்றப்படும் திருநாவுக்கரசு நாயனார் ஆவார்.

பன்னிரு திருமுறைகளில், அப்பர் பெருமானின் தேவாரம் 4,5 மற்றும் 6 என வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. அப்பர் பெருமான் அருளிய பாடல்கள் 3066. பதிகங்கள் 312.

சைவ சமயத்தை புறந்தள்ளி, சமண சமயத்தைத் தழுவிய அரசர்கள் இம்மண்ணை ஆண்டு வந்தார்கள். அவ்வேளையில், வாராது வந்த மாமணியாய் ஞானசம்பந்தரும், அப்பர் பெருமானும் இம்மண்ணில் உதித்தார்கள். இவ்விருவரின் அரும்பெரும் தொண்டும், நிகழ்த்திய அற்புதங்களும்தான் சைவ சமய நெறியின் திறத்தையும்,மேன்மையையும் இவ்வுலகுக்குக் காட்டின. அப்பர் பெருமான் சமண சமயத்தைத் தழுவியிருந்து, சிவனருளால் ஆட்கொள்ளப்பட்டு தமது தமக்கையாரான திலகவதியாரின் துணையால் சைவ சமயத்துக்கு மீண்டு வந்தவர். வயது முதிர்ந்த நிலையிலும், சைவ நெறியை, சிவநெறியை இம்மண்ணில் நிலை நிறுத்த வேண்டும் என்ற அவரின் மனத்துணிவு சிவனருளால் கிடைத்தது எனலாம். முதிர்ந்த வயதிலும் சிவச்சிந்தையோடு, உழவாரம் ஏந்தி தொண்டாற்றிய பாங்கு சைவ சமயத்திற்கு பெரும் எழுச்சியையும், மாற்றத்தையும் தந்தது.

அப்பர் பெருமான், ஒவ்வொரு திருத்தலங்களுக்காகச் சென்று அங்கு உறையும் இறைவன்,இறைவி பற்றியும், தலத்தின் சிறப்பினையும் தமது அருட்பாடல்கள் மூலம் நமக்குத் தந்தருளியிருக்கிறார். சோழநாடு, பாண்டிநாடு, கொங்கு நாடு, நடு நாடு, தொண்டை நாடு, துளுவ நாடு, வடநாடு என அவர் சென்று பாடிய திருத்தலங்களின் எண்ணிக்கை 118 ஆகும். சைவநெறி தழைத்தோங்க அவர் ஆற்றிய அருட்பணி இன்றும் நம்மை மெய் சிலிர்க்க வைக்கிறது. தனது அருட்பாக்களால் நம்மையும் இறை இன்ப நிலைக்கு அழைத்துச் செல்லுகின்ற காட்சி அற்புதமாய் அமைந்திலங்குகிறது.

பஞ்சபூதங்களின் தன்மையை இறைவனிடத்தில் கண்டு நமக்கு உரைக்கின்றதாகட்டும், ஐம்புலங்கள், ஐம்பொறிகளின் சேட்டைகளாகட்டும், அனைத்தையும் எத்திறத்தின் வழி நின்று விடுபடலாம் என்பதையும், வாழ்வில் எத்தகைய உய்நிலை அடையலாம் என்பதற்கும் அவர் அருளிச் செய்துள்ள ஒவ்வொரு பாடலும் நமக்குத் தரும் அரும் மருந்தாகும்.

அருள்நிலைக்கு இட்டுச்செல்கின்ற நிலையிலும், சமுதாயத்தில் புரையோடியுள்ள அழுக்காறுகளையும் தூற்றுவதோடு, நம்மையும் அதிலிருந்து

விடுபடவும் ஆற்றுப்படுத்துகிறார். **சாத்திரம்பல பேசும் சழக்கர்காள், கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர்** என்றதையும், இவ்வுலகை ஆள, குறையா செல்வத்தை (நிதியினை) தந்தாலும் அது மங்கும் செல்வமாகத்தான் இருக்கும் என்றதையும், அத்தகைய்ச் செல்வத்தைப் பெறுவதைக் காட்டிலும் சிவநெறிக்கே தன்னை ஆட்படுத்திக் கொள்வோம் என்றதையும், ஆவுரித்து தின்னும் புலையரேனும் அவர்கள் சிவநெறிக்கு ஆட்பட்டால் அவரை நாமும் போற்றி வணங்குவோம் என்று அக்காலங்களில் ஒடுக்கப்பட்ட நிலையில் இருந்துள்ள மக்களையும், பிற சமயங்களைத் தழுவியவர்களையும் சிவநெறிக்கு திரும்பவும் அழைக்க அவர் உரைக்கின்ற காட்சியும், மாட்சியும் அவருடைய சமய, சமுதாயப்பார்வைக்குச் சான்று பகர்கின்றன

என்கடன் பணி செய்து கிடப்பதே என்ற அப்பரின் வாசகம் இன்றும் சமய மற்றும் பொது மேடைகளிலும் அதிகளவில் பேசப்படுவதை நாம் பார்க்கலாம். **நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்** என்ற வாசகம், மக்களாட்சியின் தத்துவத்திற்கு வந்த முதல் புரட்சிக்குரல் என நாம் பறைசாற்றலாம். அது மட்டுமா, நேர்மறைச் சிந்தனை வேண்டும் என்பதனை **இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை** என்று பாடுவதும் இம் மண்ணிலுள்ள மானுட சமுதாயம் எழுச்சியோடு, வளர்ச்சியும் பெற வேண்டும் என்ற நோக்கமாகத்தான் அப்பரடிகளுக்கு இருந்திருக்க வேண்டும்.

சைவ சமயம் தழைத்தோங்க வந்துதித்தவர் அருளிச் செய்த அருட்பாக்களிலுள்ள உள்ளுரைகளை, **அப்பர் தேவாரத் திருத்தலங்கள்** என்னும் வகையில் சிறந்த சைவ அறிஞர்களிடமிருந்து ஆய்வுக்கட்டுரைகளைப் பெற்று நூலாக வெளியிடும் திலகவதியார் திருவருள் ஆதீனகர்த்தர், **தவத்திரு தயானந்த சந்திரசேகர சுவாமிகள்** அவர்களின் இம்முயற்சியினை வாழ்த்துகிறேன்.போற்றுகின்றேன். இதற்குத் துணையாக இருந்து ஆய்வுரைகளை அளித்துள்ள பெருமக்களையும் பாராட்டி வாழ்த்துகிறேன்.

ஒவ்வொரு ஆண்டும் திருமுறைக்கென மாநாட்டினை நடத்தி இதுபோன்ற அருள்நூல்களிலுள்ள கருத்துக்கருவூலங்களை வெளியிடுவது சாலச்சிறந்த பணியாகும். அதனைத் தொடர்ந்து ஆற்றி வருகின்ற திலகவதியார் திருவருள் ஆதீனத்தின் பணிகள், தொண்டுகள் தொடர வேண்டும் என எல்லாம் வல்ல இறையருளை வணங்கி பிரார்த்திக்கிறேன்.

இம்மாநாடு அனைத்து வகையிலும் சிறப்புற நடைபெற எனது உளம் நிறைந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கள் அன்புள்ள,

4.7.2018

பெறுநர்
தவத்திரு. தயானந்த சந்திரசேகர சுவாமிகள்
ஆதீனகர்த்தர், திலகவதியார் திருவருள் ஆதீனம்
1120/5, தஞ்சைச்சாலை, மச்சுவாடி,
புதுக்கோட்டை -622 001.



பதிப்புரை

தொண்டலால் துணையும் இல்லை என்றருளிய சொற்றொடருக்கு இலக்கணமாய் வாழ்ந்து காட்டிய அருளாளர் அப்பர் பெருமான் ஆவார். சரியை எனும் மார்க்கத்தின் மூலமாக இறையனுபவத்தை பெற்றவர்.

மக்கள் அனைவரும் துன்பம், துயரங்களிலிருந்து விடுபட்டு உய்நிலை பெற வேண்டும் என்ற உயர்ந்த நோக்கோடு அவர் அருளிய பாடல்கள் தேவாரம் என போற்றப்படுகின்றன. அவைகள் 4,5 மற்றும் 6 திருமுறைகளாக விளங்குகின்றன.

அப்பரடிகள், நாடு முழுதும் சென்று பாடிய திருத்தலங்கள் 118 ஆகும். அத்தகைய திருத்தலங்களில் குடிகொண்டு அருளுகின்ற இறைவனை, இறைவியைப் பற்றி போற்றி பரவிய பாடல்களில் உள்ள கருத்துக் கருவூலங்களை சைவ அறிஞர்களிடத்திலிருந்து ஆய்வுரைகளாகப் பெற்று வெளியிட வேண்டும் என்ற இறையருள் நமக்களித்த குறிப்புணர்வை சைவ அறிஞர்களிடத்தில் தொடர்பு கொண்டு நாடு வாரியாக வகுத்துள்ள வண்ணம் ஒவ்வொருரிடமும் ஆய்வுரை வழங்கிட கேட்டுக் கொண்டோம். அறிஞர்களும் அவர்தம் ஆய்வுரைகளை சிறப்பாக செய்து இந்நூல் வெளிவர முழுமையாக துணை நின்றுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிப்பதுடன், அவர்களின் அன்பான ஒத்துழைப்பையும் நன்றியோடு பாராட்டி வாழ்த்துகிறோம்.

உச்சநீதி மன்ற மேனாள் நீதிபதியும், நமது ஆதீனத்தின் மீதும், நம்மீதும் மதிப்பும் கொண்டிலங்கும் **நீதியரசர் டாக்டர்.அரு. லெட்சுமணன்** அவர்களின் வாழ்த்துரை மணி மகுடமாக இந்நூலிற்கு அமைந்துள்ளது. அவருக்கு நமது நன்றி பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

நாம் வெளியிட்ட நூல்களுக்கு அணிந்துரை அளித்து பெருமை சேர்த்த நாடறிந்த தொழிலதிபர், சக்தி குழுமத்தின் தலைவர் அருட்செல்வர் பெருந்தகை டாக்டர். நா. மகாலிங்கம் ஐயா ஆவார்கள். அவருக்கு பின் அவரின் வழித்தோன்றலாக விளங்கும் இன்றைய சக்தி தொழில் குழுமத்தின் நிர்வாக இயக்குநர் திரு. **டாக்டர். ம.மாணிக்கம்** அவர்களின் வாழ்த்துரையும் இந்நூலிற்கு அணிகலனாக அமைந்திருக்கிறது. அவருக்கும் நமது நன்றி பாராட்டினை தெரிவித்துக் கொள்கிறோம். ஒவ்வொரு திருமுறை மாநாட்டிலும் ஒரு நூல் வெளியிட வேண்டும் என்ற நமது எண்ணத்தினை மகிழ்வோடு ஏற்று துணையாக இருந்து வரும் நமது ஆதீன திருமுறை மாநாட்டுக்குழுத் தலைவர் டாக்டர்.எஸ். இராமதாஸ் உள்ளிட்ட நிர்வாகிகள் அனைவரும் பாராட்டுக்குரியவர்கள் ஆவார்கள். வழக்கம்போல் நாம் வெளியிடுகின்ற அனைத்து நூலினையும் பிழைத்திருத்தம் செய்து உதவி வருகின்ற பேராசிரியர் முனைவர் அய்க்கண் அவர்களுக்கும் நமது நன்றி பாராட்டுக்கள் உரித்தாகுக.

என்றும் சமய, சமுதாயச் சேவையில்,

1. அப்பர் பெருமான் தேவாரத்தில் காவிரி வடகரைத் திருத்தலங்கள்

முனைவர். அருள்திரு. ஊரன் அடிகளார் வடலூர்.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் (அப்பர்), சுந்தரர் ஆகிய தேவார மூவரும் நாடு முழுதும் சுற்றித் தல யாத்திரை செய்து தேவாரப்பதிகங்களைப் பாடி வழிபட்டார்கள். இவர்கள் பாடிய தலங்கள் எல்லாம் பாடல் பெற்ற தலங்கள் எனப் பெயர் பெற்றன. இவர்களுக்கு முன்பு எந்தத் தலமும் பாடப் பெறவில்லை. பாடல் பெற்ற தலங்கள் என்று ஒரு பெயர்ப்பட்டியல் உருவாவதற்கு இவர்கள் பாடியதுதான் காரணம். இத்தேவார மூவரும் வெறும் தலங்களை எல்லாம் பாடல் பெற்ற தலங்களாக்கினார்கள். பின்னால் மாணிக்கவாசகரால் திருவாசகத் தலங்கள் ஏற்பட்டன.

பாடல் பெற்ற தலங்கள் இத்தனை என்பதற்கு நாடு வாரியாக ஒரு கணக்கு உண்டு; வரிசை உண்டு. பாடல் பெற்ற சிவத்தலங்கள் இருநூற்று எழுபத்து நான்கு என்பது பழைய கணக்கு. திருவிடையாய், கிளியன்னவூர் என்ற இரண்டு தலங்கள் சிலகாலத்துக்கு முன் புதிதாகக் கண்டுபிடிக்கப் பெற்றன. இவ்விரண்டையும் சேர்த்துப் பாடல் பெற் தலங்களின் எண்ணிக்கை இப்போது இருநூற்று எழுபத்தாறு (276)

இவற்றுள் சோழ நாட்டுத்தலங்கள் 191. ஈழநாட்டுத்தலங்கள் (இலங்கையில் உள்ளவை) 2. பாண்டிநாட்டுத்தலங்கள் 14. மலைநாட்டுத்தலங்கள் (சேரநாடு) 1. கொங்குநாட்டுத்தலங்கள் 7. நடுநாட்டுத்தலங்கள் 22. தொண்டைநாட்டுத்தலங்கள் 33. துளுவநாட்டுத்தலம் 1. வடநாட்டுத்தலங்கள் 5. ஆகப் பாடல் பெற்ற தலங்கள் 276.

சோழ நாட்டில்தான் பாடல் பெற்ற தலங்கள் மிகுதி (அதிகம்). ஆதலின் அவற்றைக் காவிரி வடகரைத்தலங்கள், தென்கரைத்தலங்கள் என இரண்டாகப் பிரித்தார்கள். இவ்இரண்டிலும் வடகரைத்தலங்களை முதலில் வைத்துக் கூறுவதே மரபு. வடகரைத்தலங்களில் முதலாவது தில்லை (சிதம்பரம்), ஈறானது (கடைசியானது) கயிலை. பாடல்பெற்ற தலங்களின் வரிசை சோழ நாட்டில் காவிரி வடகரைத் தலமான தில்லையில் தொடங்கி, வடநாட்டுத் தலமான கயிலையில் நிறைவு பெறும் (முடியும்)

இமயம் தொடங்கி இலங்கை (ஈழம்) உட்பட இந்திய நாடு முழுவதும் இவை பரவியுள்ளன. இலங்கையிலுள்ள கேதீச்வரம், திரிகோணமலை இரண்டும் இதில் அடங்கும்.

அப்பர் பாடிய காவிரி வடகரைத் தலங்கள்

காவிரி வடகரைத் தலங்களின் மொத்த எண்ணிக்கை அறுபத்து மூன்று (63) இவற்றுள் முப்பத்து மூன்று (33) தலங்களை அப்பர் பெருமான் பாடியிருக்கிறார்.

வ. எண்	தலம்	திருமுறை	பதிக எண்கள்	பதிக எண்ணிக்கை
1.	கோயில் (சிதம்பரம்)	4 5 6	22;23;80;81 1;2 1;2	8 பதிகங்கள்
2.	திருவேட்களம்	5	42	1 பதிகம்
3.	திருக்கழிப்பாலை	4 5 6	6;30;106 40 12	5 பதிகங்கள்
4.	திருச்சாய்க்காடு	4 6	65 82	2 பதிகங்கள்
5.	திருவெண்காடு	5 6	49 35	2 பதிகங்கள்
6.	சீகாழி (தோணிபுரம்) (கழுமலம்)	4 5	82; 83 45	2 1(3 பதிகங்கள்)
7.	புள்ளிருக்குவேளூர்	5 6	79 54	2 பதிகங்கள்
8.	திருநின்றியூர்	5	23	1 பதிகம்
9.	திருப்புன்கூர் (திருப்புன்கூரும் திருநீடூரும்)	6	11	1 பதிகம்
10.	திருஅன்னியூர்	5	8	1 பதிகம்
11.	திருமணஞ்சேரி	5	87	1 பதிகம்
12.	திருக்குறுக்கை	4	49;50	2 பதிகங்கள்
13.	திருக்குரக்குக்கா	5	75	1 பதிகம்
14.	திருஓமாம்புலியூர்	6	88	1 பதிகம்
15.	திருநாரையூர்	5 6	55 74	2 பதிகங்கள்
16.	திருக்கடம்பூர்	5	19;20	2 பதிகங்கள்
17.	திருப்பந்தணைநல்லூர்	6	10	1 பதிகம்
18.	திருக்கஞ்சனூர்	6	90	1 பதிகம்

19.	திருக்கோடிகா	4 5 6	51 78 81	3 பதிகங்கள்
20	திருமங்கலக்குடி	5	73	1 பதிகம்
21.	திருஆப்பாடி	4	48	1 பதிகம்
22.	திருக்கொட்டையூர்	6	73	1 பதிகம்
23.	திருஇன்னம்பர்	4 5 6	72;100 21 89	4 பதிகங்கள்
24.	திருப்புறம்பயம்	6	13	1 பதிகம்
25.	திருவிசயமங்கை	5	71	1 பதிகம்
26.	திருப்பழனம்	4 5 6	12;36;87 35 36	5 பதிகங்கள்
27.	திருஐயாறு	4 5 6	3;13;38;39 40;91;92;98 27;28 37;38	12 பதிகங்கள்
28.	திருநெய்த்தானம்	4 5 6	37;89 34 41;42	5 பதிகங்கள்
29.	திருமழபாடி	6	39; 40	2 பதிகங்கள்
30.	திருக்கானூர்	5	76	1 பதிகம்
31.	அன்பில் ஆலந்துறை	5	80	1 பதிகம்
32.	திருஆனைக்கா	5 6	31 62; 83	3 பதிகங்கள்
33.	திருப்பைஞ்ஞலி	5	31	1 பதிகம்
	முப்பத்து மூன்று தலங்கள்			79 பதிகங்கள்

இவற்றுள் தில்லைச் சிதம்பரமும் திருஆனைக்காவும் பஞ்சபூதத் தலங்களுள் ஆகாயத்தலமும் நீருக்குரியதலமும் ஆகும். பஞ்சபூதத் தலங்களைப் பற்றி வேறோர் அன்பர் எழுதுவதால் நாம் எழுதும் வாய்ப்பில்லை. ஏனைய முப்பத்தொரு தலங்களைப் பற்றி எழுதுவோம்.

2. திருவேட்களம்

சிதம்பரம் நகராட்சிக்கு வெளியே, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இருக்கும் அண்ணாமலை நகரில் உள்ள தலம். அண்ணாமலை நகர் ஒரு தனிப் பேரூராட்சி. திருவேட்களம் கோயில் நகரத்தார் நிர்வாகம். அர்ச்சுனனுக்குப் பாசுபதம் தந்தருளிய தலம். இறைவன் பாசுபதேஸ்வரர். சம்பந்தரும் அப்பரும் பாடியது.

நன்று நாள்தொறும் நம்வினை போய்அறும்
என்றும் இன்பம் தழைக்க இருக்கலாம்
சென்றுநீ திருவேட்களத்து உள்ளுறை
துன்று பொற்சடையானைத் தொழுமினே

என்னும் அப்பர் பதிகத்தின் முதற்பாடலில் "**என்றும் இன்பம் தழைக்க இருக்கலாம்**" என்ற இரண்டாவது அடி இனிமையாய் எளிமையாய் உறுதிப்பொருளைக் கூறுகிறது.

வட்ட மென்முலை உமைபங்கனார்
எட்டும் ஒன்றும் இரண்டும் மூன்றும் ஆயினார்
சிட்டர் சேர்திருவேட்களம் கைதொழுது
இட்டம் ஆகி இரு மடநெஞ்சமே

என்னும் ஏழாம் பாடலின் இரண்டாவது அடி எண்ணலங்காரமாக அமைந்துள்ளது. **எட்டு** - அட்டமூர்த்தம். **ஒன்று** - பரம்பொருள். **இரண்டு** - சத்தியோடு சேர்த்து இரண்டு- **மூன்று** மும்மூர்த்திகள் - அயன்,அரி,அரன் (பிரம்மா, விஷ்ணு, சிவன்) பஞ்சபூதங்கள் **ஐந்து**, சூரியன் 6, சந்திரன் 7, ஆன்மா 8 ஆகிய எட்டு மூர்த்திகளாகவும், பரம்பொருள் நிலையில் ஒன்றாகவும் சிவசக்தி நிலையில் சிவம் சக்தி என இரண்டாகவும், முத்தொழிலாற்றும் நிலையில் மும்மூர்த்தியாகவும் சிவபெருமான் ஒருவரே உள்ளார் என்பது அருமைக்கருத்து.

4.திருக்காழிப்பாலை

சிதம்பரத்துக்குத் தென்கிழக்கே 11 கி.மீ. தொலைவில் காரைமேடு என்னும் ஊரில் திருக்கழிப்பாலைத் தலம் இருந்தது. கொள்ளிடத்தின் வடகரையில் இருந்த இந்தத் தலம் (கோயில்) கொள்ளிடம் ஆற்றின் வெள்ளத்தால் அழிவுண்டு போயிற்று. அங்கிருந்த சிவலிங்கத்தைக் கொண்டு வந்து, சிதம்பரத்திற்குத் தென்கிழக்கில் சிறிது தொலைவிலுள்ள திருநெல்வாயில் தலத்தில் சிறுகோயில் கட்டி வைத்துள்ளனர். திருநெல்வாயில் இப்போது மக்கள் பேச்சுவழக்கில் சிவபுரி என்று

வழங்குகிறது. திருநெல்வாயிலை அப்பர்பெருமான் பாடவில்லை. இவ்விரு தலங்களுக்கும் சிதம்பரம் அண்ணாமலை நகரிலிருந்து செல்லவேண்டும். கழிப்பாலையைப் போன்று அழிந்துபட்ட தலங்கள் இன்னும் சில உண்டு. அவற்றைப் பற்றியெல்லாம் ஆராய்ந்து படங்கள் கிடைத்தால் படங்களோடு இன்றைய தலைமுறை அன்பர்கள் அறியுமாறு ஆவணப்படுத்த வேண்டியது சைவ அறிவுலகின் கடமை. அப்பர் பெருமான் பாடிய திருக்கழிப்பாலைத் திருத்தாண்டகத்தின் முதற் பாடல்.

ஊன் உடுத்தி ஒன்பது வாசல் வைத்து(வ்)
ஒள்எலும்பு தூணா உரோமம் மேய்ந்து
தாம் எடுத்த கூரை தவிரப் போவார்
தயக்கம் பலபடைத்தார் தா(ம்) மறையினார்
கான் எடுத்து மா மயில்கள் ஆலும் சோலைக்
கழிப்பாலை மேய கபால (அ)ப்பனார்
வான்இடத்தை ஊடுஎடுத்து வல்லைச்செல்லும்
வழிவைத்தார்க்கு அவ்வழியே போதும். நாமே.

ஒண்ணுளே ஒன்பது வாசல் என்பது அப்பர் தேவாரத்தில் பல இடங்களில் வருகிறது.

ஒன்பது போல் அவர் **வாசல்** வகுத்தன	-4354
ஒழுகுமாடத்துள் **ஒன்பதுவாய்த**லும்	-5551
ஓட்டை மாடத்துள் **ஒன்பது வாசல்**	-195
ஒருமுழம் உள்ள குட்டம் **ஒன்பதுறை** உடைத்தாய்	-4604

கால்கொடுத்து இரு**கை** ஏற்றி, **கழிநிரைத்து இறைச்சி**
மேய்ந்து, **தோல்**படுத்து, **உதிரநீரால்** சுவர்எடுத்து,
இரண்டு வாசல் எல்வுடைத்தாய் அமைத்து
ஏழு **சாலோகம்** பண்ணி -4496

மனித உடம்பின் அமைப்பை அப்பர்பெருமான் மிக அருமையாக வருணிக்கிறார். ஒன்பது வாசல் என்பது நம் உடம்பிலுள்ள ஒன்பது துவாரங்களை, கண்கள் இரண்டு, செவித்துளைகள் இரண்டு, நாசித்துவாரங்கள் இரண்டு, வாய் ஒன்று, சிறுநீர்த்துவாரம் ஒன்று, மலத்துவாரம் ஒன்று ஆக ஒன்பது துவாரங்களும் ஒன்பது வாசல்கள். இரண்டு வாசல் ஏழு சலோகம் என்பதில் மலவாய் சலவாய் இரண்டும் வாசல்கள்! மற்ற ஏழும் ஜன்னல்கள். சலோகம்– சாளரம், சன்னல்

கருஉற்பத்திக்காலம் தொடங்கி ஜனனம் வரை ஒவ்வொன்றாகத் திறக்கப்பெறும் இவ்வாயில்கள் மரணகாலத்தில் ஒக்க(ஒருசேர)

அடைக்கப்படும். அப்பர் பெருமான் திருப்புகலூரில் சிவலிங்க ஐக்கியத்தின் போது இறுதியாகப் பாடிய புக்க திருத்தாண்டகத்தில் "ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய், ஒக்க அடைக்கும்போது உணரமாட்டேன்" என்று பாடுகின்றார்.

எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணின் அல்லால்
கண்இலேன் மற்றுஓர் களைகள் இல்லேன்,
கழல்அடியே கைதொழுதுகாணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போது உணர மாட்டேன்
புண்ணியா உன் அடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே. -7226

இதனுள் வரும் "ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்" என்ற தொடரும் அதனைத் தொடர்ந்த கருத்தும் வள்ளற்பெருமான் இராமலிங்க அடிகளை மிகவும் கவர்ந்திருக்கிறது. அதனை அப்படியே வைத்து அப்பரைப் போற்றிப்பாடும் வள்ளற்பெருமான்,

கண்ணுளே விளங்குகின்ற மணியே, சைவக்
கனியே, நாவரசே, செங்கரும்பே, வேதப்
பண்ணுளே விளைந்த அருட்பயனே, உண்மைப்
பதியோங்கு நிதியே, நின்பாதம் அன்றி
விண்ணுளே அடைகின்ற போகம் ஒன்றும்
விரும்பேன், என்றனை ஆள வேண்டுங் கண்டாய்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய் என்ற
உத்தமனே, சித்த மகிழ்ந் துதவு வோனே. 5(3241)

என்று பாடுகின்றார். அப்பர் பாடலும் வள்ளலார் பாடலும் சொல்லிலும் பொருளிலும் ஒத்து, ஒன்றை ஒன்று படி செய்துள்ளது போன்று அமைந்துள்ள திறம் ஒருமுறைக்கு இருமுறை, பலமுறை படித்துப் படித்து இன்புறுதற்குரியது. "அப்பரும் வள்ளலாரும்" என்னும் எமது நூலில் இவற்றை எடுத்துக்காட்டி விளக்கியுள்ளோம்.

துறைமங்கலம் சிவப்பிரகாசர் பாடிய நன்னெறி என்ற நூலில் ஒன்பது வாசலைப் பற்றிய அருமையான பாடல் ஒன்று உண்டு. அப்பர் தேவாரத்தின் தாக்கம்.

வருந்தும் உயிர் ஒன்பான் வாயில் உடம்பில்
பொருந்துதல் தானே புதுமை – திருந்திழாய்!

சீதநீர் பொள்ளல் சிறுகுடத்து நில்லாது
வீதலோ, நிற்றல் வியப்பு?

என்கிறார். ஓட்டைக் குடத்தில் நீர் வடியாமல் நிற்பது வியப்பல்லவா? அதுபோல ஒன்பது வாயில்களை உடைய நம் உடம்பில் உயிர் நிற்பதுதானே புதுமை! வியப்பு! என்கிறார் சிவப்பிரகாசர். ஒன்பது வாசல் கருத்து சிவப்பிரகாசரையும் வள்ளலாரையும் ஈர்த்திருக்கிறது.

4. திருச்சாய்க்காடு

சங்க இலக்கியத்திலும் (அகநானூறு) சிலப்பதிகாரத்திலும் குறிப்பிடப்பெற்ற பழந்தலம்.

5. திருவெண்காடு

சுவேதாரண்ம் என வடமொழிப் பெயரையும் பெற்றது. சந்தானகுரவர் நால்வரில் முதல்வரான மெய்கண்டார் பிறப்பதற்கு வரமளித்த தலம். இங்குள்ள சோமதீர்த்தம், சூரியதீர்த்தம், அக்கினிதீர்த்தம் ஆகிய மூன்றும் (முக்குளம்) சிலப்பதிகாரம் கனாத்திறமுரைத்த காதையில் கூறப்பெறும் சோமகுண்டம் சூரிய குண்டம் ஆகும்.

6. சீகாழி

சீர்காழி என்பது இன்றைய பேச்சு வழக்கு. ஞானசம்பந்தர் பிறந்த ஊர். மூவராலும் பாடப்பெற்றது. தருமபுர ஆதீனத்தின் நிர்வாகம். பிரமபுரம்[1], வேணுபுரம்[2], புகலி[3], வெங்குரு[4], தோணிபுரம்[5], பூந்தாராய்[6],சிரபுரம்[7], புறவம்[8], சண்பை[9], ஸ்ரீகாழி[10], கொச்சைவயம்பு[11], கழுமலம்[12] என இதற்குப் பன்னிரண்டு பெயர்கள் உண்டு.

தோணிபுரம், கழுமலம் என்ற இரண்டு பெயர்களாலும் மூன்று பதிகங்களை அப்பர் பெருமான் பாடியுள்ளார்.

7. புள்ளிருக்குவேளூர்

வைத்தீஸ்வரன்கோயில் என்று இன்று வழங்குகிறது. தருமபுர ஆதீனக் கோயில். சிறந்த பிரார்த்தனைத் தலம். சம்பந்தர் அப்பர் பாடல் பெற்றது. சிவத்தலமாகிய இது முருகன் தலமாகவும் சிறந்து விளங்குகிறது. அருணகிரிநாதர் திருப்புகழ் பெற்றது. குமரகுருபரர் பாடிய முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் புகழ்பெற்ற நூல். வள்ளலார் இராமலிங்க அடிகளும் பாடியுள்ளார். மாதந்தோறும் கார்த்திகை நாளில் நிகழும் கிருத்திகை அபிஷேகம் மிகவும் சிறப்புடையது. சந்தன அபிஷேகம் பன்னீர் அபிஷேகம் மிகச் சிறப்பு. அப்பர் பெருமான் பாடியருளிய புள்ளிருக்வேளூர்த்

திருத்தாண்டகத்தில் இரண்டு பாடல்கள் எம் உள்ளத்தை ஈர்ப்பவை.

மின்உருவை **விண்ணகத்தில் ஒன்றாய்**, மிக்கு
வீசும் **கால்தன்னகத்தில் இரண்டாய்**, செந்தீத்
தன்னுருவில் **மூன்றாய்**, தாழ்புனலின் நான்காய்த்
தரணிதலத்(து) அஞ்சாகி, எஞ்சாத்தஞ்ச
மன்னுருவை, வான்பவளக் கொழுந்தை, முத்தை,
வளரொளியை, வயிரத்தை, மாசொன்றில்லாப்
பொன்னுருவைப் புள்ளிருக்கு வேளூரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கினேனே.

பஞ்சபூதங்கள் ஐந்து, சூரியன்6, சந்திரன்7, ஆன்மா8 ஆகிய எட்டிலும் இறைவன் இருக்கிறான். இவ்வெட்டையும் அட்டமூர்த்தம் என்று கூறுவர்.

"நிலம்,தீ,நீர்,வளி, விசும்போடு ஐந்தும்
கலந்தமயக்கம் உலகம் ஆதலின்"

என்பது தொல்காப்பியம்.

விண்ணகத்தில் ஒன்றாய்	-விண்-ஆகாயம். ஆகாயத்தில் சப்தம்(ஓசை) என ஒன்றாக
கால் தன்னகத்தில் இரண்டாய்	- கால்-காற்று. காற்றில் சப்தம் பரிசம் (ஓசை, ஊறு) என இரண்டாக;
செந்தீத் தன் உருவில் மூன்றாய்	-செந்தீ -நெருப்பு. நெருப்பில் சப்தம், பரிசம், ரூபம் (ஓசை,ஊறு,ஒளி) என மூன்றாக
தாழ்புனலில் நான்காய்	- புனல்-நீர்,நீரில், சப்தம்,பரிசம், ரூபம், ரசம்,(ஓசை,ஊறு, ஒளி,சுவை) என நான்காக;
தரணிதலத்து அஞ்சாகி	-தரணி தலம் -நிலம்(மண்) -மண்ணில் சப்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் (ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம்) என ஐந்தாக,

இறைவன் இருப்பதை இப்பாடல் கூறுகிறது. ஆறாந்திருமுறை திருத்தாண்டகத்தில் இவ்வாறு கூறுவதைப் போன்றே, நான்காம் திருமுறை திருநேரிசையிலும், ஐந்தாம் திருமுறை திருக்குறுந்தொகையிலும் அப்பர் பெருமான் இன்னும் இரண்டு பாடல்களைப் பாடியுள்ளார்.

எண்அகத்து இல்லை அல்லர்; உளர் அல்லர்; இமவான் பெற்ற
பெண் அகத்தார்; ஐயர்; காற்றில் பெருவளி **இருவர்** ஆகி,

மண்அகத்து ஐவர்; நீரில் நால்வர், தீ அதனில் மூவர்;
விண் அகத்து ஒருவர் வீழிமிழலையுள் விகிர்தனாரே.
(4-64-3) (4793)

மண்அதலில் ஐந்தை, மாநீரில் நான்கை
வயங்கு எரியில்மூன்றை, மாருதத்து இரண்டை
விண் அதனில் ஒன்றை, விரிகதிரை
தண்மதியை, தாரகைகள் தம்மில்.........(6-60-2) 6857

திருவாசகத்தில் மாணிக்கவாசகர்,

பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விரிந்தாய் போற்றி

என்று போற்றித்திரு அகவலில் (அடிஎண் 137-141) கூறுவதும் இதுவே.

சைவ சமயகுரவர் நால்வருக்குப்பின் சமரச சுத்த சன்மார்க்க குரவராக, ஐந்தாமவராக வந்த வள்ளலார் பாடிய அருட்பெருஞ்ஜோதி அகவலில்,

"மண்ணினில் ஐந்தில் வகுத்து....." (377)
"நீரிடை நான்கியல் நிலவுவித்து...."(413)
"தீயிடை மூவியல் செறிவித்து...."(441)
"காற்றிடை ஈரியல் காட்டி...."(469)
"வெளியிடை ஒன்றே விரித்து"(505)

என்று கூறுவதும் இதுவே.

தேவாரம், திருவாசகம், திருவருட்பா இவை எல்லாவற்றுக்கும் காலத்தால் மிகவும் முற்பட்ட சங்க இலக்கியமாகிய பரிபாடல் பஞ்சபூதங்களாய் இறைவன் இருப்பதைக் கூறுகிறது.

சுவைமை, இசைமை, தோற்றம், நாற்றம், ஊறு,
அவையும் நீயே, அடுபோர் அண்ணால்!
அவை அவை கொள்ளும் கருவியும் நீயே;
முந்துயாம் கூறிய ஐந்தனுள்ளும்;
ஒன்றினில் போற்றிய விசும்பும் நீயே;
இரண்டின் உணரும் வளியும் நீயே;

மூன்றின் உணரும் தீயும் நீயே;
நான்கின் உணரும் நீரும் நீயே;
ஐந்துடன் முற்றிய நிலனும் நீயே;
அதனால் நின்மருங்கின்று மூஏழ் உலகமும் -பரிபாடல் 13 (14-23)

இங்கு ஒரு முக்கிய செய்தியை அறிதல் வேண்டும். முன்பு எடுத்துக்காட்டிய தேவார திருவாசகங்கள் திருவருட்பா சைவநூல்கள். சிவபெருமானைப் பாடியவை. சைவ பரமானவை. மேலே காட்டிய பரிபாடல் பாட்டு நல்லெழுதியார் என்ற புலவர் திருமாலைப் பாடிய பாட்டு. விஷ்ணுபரமானது. தத்துவம் முப்பதாறில் ஆன்ம தத்துவங்கள் இருபத்து நான்கும் சைவம் வைணவம் இரண்டுக்கும் உரியவை; பொதுவானவை. வித்தியா தத்துவம் ஏழும், சிவதத்துவம் ஐந்தும் சைவத்துக்கே சிறப்பாக உரியவை.

திருமந்திரம் தமிழில் தோன்றிய முதல் சாத்திர நூல். அது தோத்திரமாகவும் அமைவதால் பன்னிரு திருமுறையில் சேர்க்கப்பெற்றது. திருமந்திரத்தின் பின் வந்தது தேவாரம், அதன்பின் வந்தது திருவாசகம். இவை எல்லாவற்றின் பின் வந்தவை, சித்தாந்த சாத்திரங்கள் 14. சைவத் திருமுறைகளிலிருந்தே சைவ சித்தாந்த சாத்திரக் கருத்துக்கள், தத்துவக் கருத்துக்கள் எடுக்கப்பட்டு, சித்தாந்த சாத்திரங்கள் உருவாயின. இவற்றையெல்லாம் அன்பர்கள் நன்கு அறியவேண்டும்.

இனி, புள்ளிருக்குவேளூர்த் திருத்தாண்டகத்தில் இன்னொரு பாடலைப் பார்ப்போம்.

பேர்ஆயிரம் பரவி வானோர் ஏத்தும்
பெம்மானை, பிரிவிலா அடியார்க் கென்றும்
வாராதசெல்வம் வருவிப்பானை
மந்திரமும் தந்திரமும் மருந்தும் ஆகித்
தீராதநோய் தீர்த்து அருளவல்லான் தன்னை
திரிபுரங்கள் தீஎழத் திண்சிலை கைக்கொண்ட
போரானை, புள்ளிருக்கு வேளூரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கினேனே. 6-54-8 (6802)

பேராயிரம் பரவிவானோர் ஏத்தும் பெம்மான்- வானுலகத் தேவர்கள் ஆயிரம் பேர் சொல்லி வணங்கும் சிவபெருமான். "ஒருநாமம், ஓர்உருவம், ஒன்றுமில்லார்க்கு ஆயிரம் திருநாம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ" என்பது மாணிக்கவாசகரின் திருவாசகம் (11-திருத்தெள்ளேணம்-1). உண்மையில் இறைவனுக்கு ஓர் ஊர் இல்லை. ஒரு பேர் இல்லை; ஓர் உருவம் இல்லை. ஊர், பேர், உருவம் கடந்த பரம்பொருளாக இறைவன்

இருக்கிறான். ஆனாலும் நம் அன்பால் ஆயிரம் பேர்களால் அவனை வழிபடுகிறோம். இறைவனின் இவ்வியற்கை உண்மை முதலில் மனங்கொள்ளற்பாலது. அதனைத்தான் மேற்காட்டிய அப்பர் பாடலின் முதலடி காட்டுகிறது. வாராத செல்வம் வருவிப்பான், தீராத நோய்களைத் தீர்த்தருள்வான் என்பன பாடலின் இரண்டாவது மூன்றாவது அடிகள். வாராத செல்வம் அருட்செல்வம். பொருட்செல்வம் நமது முயற்சியால் சம்பாத்தியத்தால் வரும். அருட்செல்வத்தை அவனே அருளவேண்டும். அடியார்களுக்கு அவன் வாராத செல்வமாகிய திருவருட் செல்வத்தை வருவித்துத் தருகிறான். உயிர்களுக்கு உண்டாகும் நோய்களில் தீரும் நோய்கள் உண்டு; தீராத நோய்களும் உண்டு. வாதபித்த சிலேட்டுமங்களால், தட்ப வெப்ப மாறுபாடு முதலியவற்றால் வரும் நோய்களை மருத்துவத்தால் தீர்க்கலாம். குன்மம், குஷ்டம், முதலான நோய்கள் ஒழுக்கத்தால் மட்டுமின்றி, ஊழ்வினையாலும் வரும். இவை இறைவன், எப்படித் தீர்க்கிறான்? எதனால் தீர்க்கிறான்? மந்திரத்தால் தந்திரத்தால், மருந்தால் தீர்க்கிறான். தீர்க்கும் அவனே மந்திரமாக இருக்கிறான். தந்திரமாக இருக்கிறான், மருந்தாக இருக்கிறான். **மந்திரமும் தந்திரமும் மருந்தும் ஆகி** என்பது அருமைமிகுந்த ஒரு தொடர். "மந்திரமும் தந்திரமும் மருந்தும் ஆகித் தீராத நோய் தீர்த்து அருளவல்லான் தன்னை ...... புள்ளிருக்கு வேளூரானைப் போற்றாதே ஆற்றநாள் போக்கினேனே" என்று இப்பாடல் முடியும். இப்பதிகத்தின் பத்துப்பாடல்களும் "புள்ளிருக்குவேளூரானைப் போற்றாதே ஆற்றநாள் போக்கினேனே" என்ற தொடருடன்தான் முடியும். இப்படிப்பட்ட ஈற்றுத் தொடர்களைப் பதிகத்தின் "மகுடம்" என்பர்.

புள்ளிருக்குவேளூர் இறைன் வைத்தீஸ்வரன் வைத்தியநாதன், நம் உடற்பிணிகளையும் நீக்குகிறார். உயிர்ப்பிணியாகிய பிறவிப் பிணியையும் நீக்குகிறார்.

மணி, மந்திரம்,மருந்து- இம்மூன்றும் ஒரு தொகுதி, ஒரு மும்மை.
மந்திரம்,தந்திரம்,யந்திரம்-இம்மூன்றும் ஒரு தொகுதி, ஒரு மும்மை.

இவை கலந்தும் மாறிமாறியும் வரும். சம்பந்தர், அப்பர் தேவாரத் திருவாக்குகளோடு, வள்ளலார் திருவருட்பாத் திருவாக்கிலும் இவற்றைக் காணலாம்.

மருந்து மாவன **மந்திர**மாவன வலஞ்சுழியிடமாக
இருந்த நாயகன் இமையவரேத்திய இணையடித் தலந்தானே -2618

மருந்துவேண்டில் இவை **மந்திரங்கள்** இவை -3063
மருந்தவை மந்திரம் மறுமை நன்னெறி அவை -3788

என்பன சம்பந்தர் தேவாரத் திருவாக்குகள்.

மருந்தும் ஆகுவர் மன்னும் மாற்பேறரே -5833
மந்திரமும் தந்திரமும் ஆனார் போலும் -6402

என்பன அப்பர் தேவாரத் திருவாக்குகள்.

மருந்தறியேன், மணிஅறியேன், மந்திரம் ஒன்றறியேன் - 3313
மலப்பகை தவிர்க்கும் தனிப்பொது **மருந்தே**
மந்திரமே ஒளிர்மணியே -3916
மருந்தே மவுனமந்திரமே மந்திரத்தாற்பெற்ற மணியே -3918
மருந்தானை மணியானை வழுத்தாநின்ற
மந்திரங்க ளாளானை -3940
மருந்தினை மாமணியை என்கண்மணியை -4004
வயங்கொளி **மணியே மந்திரமே தந்திரமே மருந்தே** -4109
மருந்துஇது, மணிஇது, மந்திரம்இது, செய்
வகைஇது, துறைஇது, வழிஇது, எனவே
இருந்தெனுள் அறிவித்து .... -4651
தந்திர மந்திர யந்திர பாதா ......

வள்ளலார் திருவருட்பாவில் இப்படிப் பல இடங்கள் உண்டு. அருட்பெருஞ்ஜோதி அகவலில் **மணியே, மந்திரமே, மருந்தே** என்று தனித்தனியாகப் போற்றிப்பாடும் மிகப் பல வரிகள் உண்டு. திருவருட்பா அருட்பெருஞ்ஜோதி அகவலுக்கு யாம் எழுதியுள்ள பேருரை இரு தொகுதிகளில் மிக விரிவாக இவற்றையெல்லாம் காணலாம்.

8. திருநின்றியூர்

வைத்தீஸ்வரன் கோயிலுக்கும் மயிலாடுதுறைக்கும் இடையில் உள்ளது. நின்றியூர் பெருமானைப் பாடும் அப்பர் பெருமான்,

அஞ்சிஆகிலும் அன்புபட்டுஆகிலும்
நெஞ்சம்! வாழி! நினை! நின்றியூரரை நீ!
இஞ்சி மா மதில்எய்து இமையோர் தொழக்
குஞ்சிவான்பிறை சூடிய கூத்தனே.

எனப் பாடுகின்றார். **பயபக்தி** என்று ஒரு சொல் பக்தி உலகில் சர்வ சாதாரணமாக வழங்கி வருவதைக் காண்கிறோம். ஒன்று பக்தியால் வழிபட வேண்டும். அல்லது பயத்தால் வழிபட வேண்டும். கடவுளை வழிபடாவிட்டால் அது கெடுதல் செய்துவிடும் என்று பயந்து சாதாரண எளிய பாமரமக்கள் பயத்தால் வழிபடுவர். அறிவுத் தெளிவுடையவர்கள் பயத்தால்

வழிபடுவதில்லை; பக்தியால் வழிபடுகின்றனர். சிறுதெய்வ வழிபாடு பெரும்பாலும் பயத்தால் செய்யப்படுவதே. அஞ்சியாவது அல்லது அன்பினாலாது கடவுளை வழிபடுங்கள் என்று அப்பர் பெருமான் இங்கே கூறுவது "பயபக்தி" என்னும் உலக வழக்குக்கு ஒத்துள்ளது.

9. திருப்புன்கூர்

திருப்புன்கூருக்கு வழிபடச் சென்ற நந்தனார் (திருநாளைப் போவார்) தமது குலத்தை எண்ணிக் கோயிலுக்குட்புக அஞ்சிக் கோயிலுக்கு வெளியே நின்று வழிபட்டார். சிவலிங்கப் பெருமானின் தரிசனம் கிடைக்கவில்லை. சிவலிங்கத்தை நந்தி மறைத்தது. நந்தனார் சற்று வருத்தத்தோடே தரிசித்தார். நந்தனாரின் வருத்தம் கண்டு இரங்கிய சிவபெருமான் நந்தியைச் சற்று விலகச் செய்தார். இன்றும் இத்தலத்தில் நந்தியம்பெருமான் சற்று விலகியிருப்பதைக் காணலாம். நந்தனார் பிறந்த ஆதனூர் திருப்புன்கூருக்கு அருகில்தான் உள்ளது.

அப்பர்பெருமான் திருப்புன்கூரை வழிபட்டு பாடிய பதிகம் திருப்புன்கூரையும் திருநீடூரையும் சேர்த்துப் பாடியதாகும். திருப்புன்கூரில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் திருநாமம் சிவலோகநாதர் என்பது பாடலிலேயே அப்பர்பெருமானால் பாடல்தோறும் பத்துப்பாடல்களிலும் கூறப்பெற்றுள்ளது.

10. திருஅன்னியூர்

இப்போது பொன்னூர் என்று வழங்குகிறது.

11. திருமணஞ்சேரி

இப்பெயரால் இரண்டு தலங்கள் உள்ளன. ஒன்று மேலைத் திருமணஞ்சேரி (எதிர்கொள்பாடி). மற்றொன்று கீழைத் திருமணஞ்சேரி. மேலைத் திருமணஞ்சேரியைப் பலர் அறியார். அனைவரும் அறிந்த, புகழ்பெற்ற திருமணஞ்சேரி இக்கீழைத் திருமணஞ்சேரியே. சிவபெருமான் கல்யாணசுந்தரத் திருக்கோயிலங் கொண்டு அம்மையாரைத் திருமணஞ்செய்து கொண்டார் என்பது தலவரலாறு. ஆதலின் ஊர் திருமணஞ்சேரி எனப் பெயர் பெற்றது. திருமணத்தலமாக இன்றும் சிறந்து விளங்குகிறது. திருமண நாள்களில் திருமணங்கள் பல இன்றும் இக்கோயிலில் நிகழ்கின்றன. திருமணம் தடைப்படுவோர் வந்துவந்து வழிபட்டுத் திருமணத்தடை நீங்கப் பெறுகிறார்கள். மகப்பேறு வாய்க்காதவர்களும் இங்கு வழிபட்டு மகப்பேறு பெறுகிறார்கள்.

சம்பந்தர், அப்பர் இருவராலும் இத்தலம் பாடப்பெற்றது. இறைவன் பெயர் அருள் வள்ளல் நாதர்; கல்யாணசுந்தரேஸ்வரர்.

துள்ளுமான் மறி தூமழு வாளினர்
வெள்ளநீர் கரந்தார் சடைமேல் அவர்
அள்ளல்ஆர் வயல்சூழ் மணஞ்சேரி எம்
வள்ளலார் கழல் வாழ்த்தல் வாழ்வாவதே! 5-87-5 (6097)

என்பது அப்பர்பெருமான் அருளிய திருக்குறுந்தொகைப் பதிகத்தின் ஐந்தாவது பாடல். இப்பாடலின் ஈற்றடியான **வள்ளலார் கழல் வாழ்த்தல் வாழ்வாதே** என்பது எமது இளமைக் காலத்திலேயே உள்ளத்தைக் கவர்ந்தது. 1955-இல் சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையத்தைத் தொடங்கிய காலத்திலேயே கடிதங்கள் கட்டுரைகள் ஆகியவற்றின் தலைப்பில் இதனை மங்கல மொழியாக வாழ்த்தாக எழுதும் வழக்கத்தை மேற்கொண்டோம். இன்றைக்கு 50 ஆண்டுகளுக்குமுன் முதன்முதலாக யாம் எழுதி வெளியிட்ட **வடலூர் வரலாறு** நூலின் தொடக்கத்தில் அருட்பெருஞ்ஜோதி "அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி" என்ற மகாமந்திரத்தை அடுத்து **வள்ளலார் கழல் வாழ்த்தல் வாழ்வாவதே** என்று அச்சிட்டிருப்பதைக் காணலாம். வள்ளற்பெருமானை வாழ்த்தி வணங்குவதற்கு அப்பர் பெருமான் தேவாரத்திலிருந்து பொருத்தமான ஒரு தொடர் கிடைத்தது. எம்மைப் பின்பற்றிச் சன்மார்க்க அன்பர்கள் சிலர் இவ்வரிய தொடரை (இவ்வுரிய தொடரை) இன்றும் பயன்படுத்தி வருகின்றனர். சன்மார்க்க உலகில் இது ஒரு வழக்கமாகவே ஆகிவிட்டது.

12. திருக்குறுக்கை

மக்கள் வழக்கில் கொருக்கை என வழங்குகிறது. தருமபுர ஆதீனத் திருக்கோயில். அட்டவீரட்டத் தலங்களுள் ஒன்று. காமனை தகனம் செய்த தலம். மாசிமகத்தன்று காமதகனவிழா இன்றும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. காமதகனம் நிகழ்ந்த இடம் "விபூதிக்குட்டை" என்ற பெயரில் அருகில் 1 கி.மீ. தொலைவில் உள்ளது. இக்குட்டையைத் தோண்டினால் மண் விபூதியைப் போன்றே உள்ளது.

மார்க்கண்டேயருக்காக எமனை உதைத்தருளியது. சிவஅபசாரம் செய்த தந்தையின் காலை மழுவால் வீசி வெட்டி எறிந்த சண்டீசருக்கு அருள்புரிந்தது, திருஆனைக்காவில் வழிபட்ட சிலந்தியை மறுபிறப்பில் கோச்செங்கட்சோழனைப் பிறப்பித்தது. ஆயிரம் தாமரைப்பூக்களைக் கொண்டு அர்ச்சித்த திருமால் ஒரு பூக்குறையவே தன் கண்ணைப் பிடுங்கி

அர்ச்சித்ததைப் பாராட்டிச் சக்கரம் அருளியது, கல் எறிந்த சாக்கிய நாயனாருக்கு அருள் செய்தது. கண்ணைப் பெயர்த்து அப்பிய கண்ணப்பருக்கு அருள் செய்தது. திருமறைக்காட்டில் விளக்கைத்தூண்டிய எலிக்கு அருள்புரிந்தது. கணம்புல்ல நாயனாருக்கு அருளச் செய்தது. அப்பர் பெருமான் பாடிய திருக்குறுக்கை வீரட்டப் பதிகத்தின் பாடல்தோறும் சொல்லப் பெறுகின்றன. மற்றொரு பதிகத்தில் இரண்டே பாடல்கள் கிடைத்துள்ளன. அதிலும் அருச்சுனனுக்கு வில்லும், அம்பும் அருளியது, அயன்மால் தேவர்கள் பூசித்தது ஆகிய இரு அற்புதங்கள் கூறப்பெற்றுள்ளன.

13. திருக்குரக்குக்கா

திருக்குரக்காவல் என்பது இப்போது வழங்கும் பெயர்.

14. திருஓமாம்புலியூர்

வியாக்கிரபாத முனிவர் வழிபட்ட தலங்கள் புலியூர் என்ற பெயர் பெற்றன. தில்லைச் சிதம்பரத்திற்கும் புலியூர் என்று ஒரு பெயருண்டு. வடலூருக்கு அருகே கடாம்புலியூர் என்று ஒரு ஊர் உள்ளது. ஓமம் = வேள்வி. வேள்விச் சிறப்புடைமை பற்றி இவ்வூர் ஓமமாம்புலியூர் ஓமாம்புலியூர் எனப் பெயர் பெற்றது. சம்பந்தர் பாடலில் ஓமமாம்புலியூர் என்றும், அப்பர் பாடலில் ஓமாம்புலியூர் என்றும் கூறப்பெற்றுள்ளது.

15. திருநாரையூர்

நாரை வழிபட்ட தலம். தேவாரத் திருமுறைகளைத் தொகுத்த நம்பியாண்டார் நம்பிகள் பிறந்த திருவூர். ஐந்தாம் திருமுறை திருக்குறுந்தொகையில் ஒரு பதிகம். ஆறாம் திருமுறை திருத்தாண்டகத்தில் ஒரு பதிகம் ஆக இரண்டு பதிகங்கள் அப்பர் பெருமானால் பாடப்பெற்றுள்ளன. திருநாரையூர் திருத்தாண்டகம் பத்துப் பாடல்களும் "நாரையூர் நன்நகரில் கண்டேன் நானே" என்பதை ஈற்றுத் தொடராகக் கொண்டவை (மகுடம்)

16. திருக்கடம்பூர்

தல மரம் கடம்பு ஆதலின் கடம்பூர் என்று பெயர் பெற்றது. கோயில் கட்டட வகைகளுள் கரக்கோயில் என்பதும் ஒன்று. கடம்பூர்க்கோயில் இவ்வகை யாதலின் கடம்பூர்க் கரக்கோயில் எனப்பெயர் பெற்றது. அப்பர் பாடல்கள் பத்திலும் கடம்பூர்க் கரக்கோயில் என்ற பெயர்க்குறிப்பு உள்ளது.

நன்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்கடம்பைத் திருக்கரக்கோயிலான்

தன்கடன்(ன்) அடியேனையும் தாங்குதல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே.

என்பது அப்பர்பெருமானின் முத்திரைப் பாடல்; குறிக்கோட் பாடல். திருநாவுக்கரசரின் குறிக்கோள் மொழியாக ஒன்றைக் கூறவேண்டுமானால் "என்கடன் பணி செய்து கிடப்பதே" என்பதைத்தான் கூறவேண்டும்.

"என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்னும் இவ்வருந்தொடர் இன்று சமய உலகுக்கு அப்பாலும் சமுதாயத் தலைவர்களால், அரசியல் தலைவர்களால் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. இதை யார் சொன்னது என்பதுகூட அவர்களிற் பெரும்பாலோருக்குத் தெரியாது. இதுஒரு தனிப் பொன்மொழி என்று பெரும்பாலோர் எண்ணியிருப்பர். இது ஒரு தேவாரப் பாடலின் அடி என்பது பலருக்குத் தெரியாது. சைவ மெய்யன்பர் சிலரே இப்பாடலைத் தெரிந்திருப்பர். என்னுடைய கடமை பணிசெய்து கிடப்பதே, உன்னுடைய கடமை அடியேனையும் தாங்குவது என்று இருவரது கடமைகளையும் கூறி இறைவனிடம் வேண்டுகிறார் திருநாவுக்கரசர்.

"என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்பதில் கிடப்பது என்பது மிகவும் பொருள் பொதிந்த சொல்லாட்சி. பேச்சு வழக்கில் சும்மா இரு என்று சொல்வதை விடச் சும்மா கிட என்பதைத்தான் பெரும்பாலும் பயன்படுத்துகிறோம். இருப்பதற்கும் கிடப்பதற்கும் வேறுபாடு என்ன? இருப்பது -அமர்ந்து இருப்பது. கிடப்பது -படுத்துக் கிடப்பது. சும்மா கட என்கிறோம். பணி செய்து கிடத்தல்- பணி செய்து கொண்டே இருத்தல் அமர்ந்திருப்பதை விடப் படுத்துக்கிடப்பது செயல் குறைந்த நிலை. அதைத்தான் பணியிலேயே உழன்று கிடத்தல் என்றெல்லாம் பொருள் தரும். நமது குடமை பணி யெ்து கிடப்பது. இறைவன் கடமை நம்மைக் காப்பாற்றுவது. பணியைச் செய். பலனை எதிர்பாரதே என்று பகவத்கீதை கூறுவதைப் பெருமையாக பேசுகிறோம். திருநாவுக்கரசரும் இதைத்தான் சொல்கிறார். என்கடன் பணிசெய்து கிடப்பதே என்று சொன்னதோடு மட்டுமின்றிச் செய்தும் காட்டினார். காலமெல்லாம் பணி செய்தே கிடந்தார். பணி செய்து கிடப்பது அவர் காட்டிய வழி. "தன் கடன் அடியேனையும் தாங்குதல்" என்பதில் னகர ஒற்று அளபெடுத்துள்ள அழகும் அருமைப்பாடும் அறிந்து மகிழ்தற்குரியது.

17. திருப்பந்தணைநல்லூர்

மக்கள் வழக்கில் பந்தநல்லூர் என்று இப்போது வழங்குகிறது. பழங்காலத்தில் பந்து விளையாட்டு மகளிர்க்கே உரியது. பந்தார்விரலி,

பந்தணைவிரலி என்பன சில தலங்களில் உள்ள இறைவியின் பெயர்கள். திருப்பந்தணைநல்லூர் என்ற பெயர் இத்தலத்தில் இறைவி பந்துவிளையாடியதால் ஏற்பட்ட பெயர். கடலூர் மாவட்டத்தில் சிறுவந்தாடு என்று ஓரூர் உள்ளது. அதன் சரியான பெயர் "சிறுபந்தாடு" என்பதே.

18. திருக்கஞ்சனூர்

திருவாவடுதுறைக்கு அருகில் உள்ள தலம். மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனக் கோயில். கம்சன் என்னும் மன்னனின் நோய்தீர்த்த தலமாதலின் கஞ்சனூர் என்று பெயர் பெற்றது. அக்கினிதேவனின் சோகை நோயைத் தீர்த்ததால் அக்னீசுவர் என்பது இத்தலத்து இறைவன் பெயராயிற்று. மானக்கஞ்சாற நாயனாரும் அரதத்த சிவாசாரியாரும் பிறந்த ஊர்.

19. திருக்கோடிகா

மக்கள் வழக்கில் திருக்கோடிகாவல் என்று வழங்குவது. திருஆனைக்காவைத் திருஆனைக்காவல் என்று வழங்குவது போன்றது இது.

20. திருமங்கலக்குடி

திருவாவடுதுறை ஆதீனக் கோயில், சூரியனார் கோயில் என்ற ஊரும் (கோயிலும்) அவ்வூரிலுள்ள சூரியனார்கோயில் ஆதீனமும் திருமங்கலக்குடி மிக அருகில் உள்ளன. திருமங்கலக்குடியை வழிபட்ட பின்பே சூரியனார்கோயில் சென்று வழிபட வேண்டும் என்பது மரபு.

செல்வமல்கு திருமங்கலக்குடி
செல்வமல்கு சிவநியமித்தராய்ச்
செல்வமல்கு செழுமறையோர் தொழ
செல்வன் தேவியொடும் திகழ்கோயிலே

என்பது அப்பர் தேவாரம். 5-73-5 (5973). தலப்பெயரே மங்கலக்குடி என்று மங்கலகரமாக அமைந்துள்ளது. அப்பர்பெருமான் பாடல் நான்கு அடிகளிலுமே செல்வம் மல்குகிறது.

21. திருஆப்பாடி

ஆப்பாடி, ஆய்ப்பாடி என மக்கள் வழக்கில் மருவி வழங்குகிறது. காசிமடத்தால் புகழ்பெற்ற திருப்பனந்தாளுக்கு அருகில் ஆப்பாடி உள்ளது. எனினும் திருப்பனந்தாள் கோயிலை அப்பர்பெருமான் பாட நேரமில்லை. திருஆப்பாடி சண்டேசுவர் வழிபட்ட தலம். அருகில் மண்ணியாறு ஓடுகிறது.

மண்ணியாற்றங்கரையில்தான் சண்டீசர் மணலைச் சிவலிங்கமாய்ப் பிடித்து வைத்து வழிபட்டார்.

22. திருக்கொட்டையூர்

கும்பகோணம்- சுவாமிமலை சாலையில் 4 கி.மீ. தொலைவில் உள்ளது. ஆமணக்குக் கொட்டைச் செடியின் கீழ் சிவலிங்கம் தோன்றியதால் கொட்டையூர் என்ற பெயர் உண்டாயிற்று. ஆமணக்கு விதையைச் கொட்டைமுத்து என்று வழங்குவர். கோயிலின் பெயர் கோடீஸ்வரம். இறைன் பெயர் கோடீஸ்வரர். இத்தலத்தில் புண்ணியம் செய்தாலும் பாவம் செய்தாலும் கோடி மடங்காகப் பெருகும் என்பது நம்பிக்கை. பாவம் கோடி மடங்கு பெருகினால் கழுவாயே இல்லாதுபோகும் என்பதால் "கொட்டையூரில் செய்த பாவம் கட்டையோடே" என்றொரு பழமொழி வழங்குகிறது.

19-ஆம் நூற்றாண்டில் கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் என்றொரு அறிஞர் பெருமகனார் சிறந்து விளங்கினார். தஞ்சாவூர் சரபோஜி மன்னரின் அவைப் புலவராகத் திகழ்ந்தார். மிகச்சிறந்த தமிழ்ப்புலவர். சைவப்புலவர், கோடீச்சுரக்கோவை, தஞ்சைப் பெருவுடையார் உலா, சரபேந்திரபூபாலக் குறவஞ்சி நாடகம் ஆகிய மூன்று பிரபந்தங்களை இயற்றினார். கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகள் பிரபந்தங்கள் என அவை வழங்கும். அவர் மரபில் வந்தவர்தான் திருப்பனந்தாள் காசிமடம் 19-ஆம் பட்டம் அதிபர் காசிவாசி சாமிநாத சுவாமிகள்.

நம் காலத்தில் தவத்திரு இராமதாஸ் அண்ணா என்ற பெரியவர் கீழக்கொட்டையூரில் ஸ்ரீஷண்முகானந்த ஆஸ்ரமம், வள்ளலார் கல்வி நிறுவனங்களை நிறுவி, முதியோர் இல்லம், மாணவர் இல்லங்களை நடத்தி வந்தார். மிகச் சிறந்த கல்வி அறநிறுவனம். அவரது பிறப்பு நூற்றாண்டு விழா இவ்வாண்டு 2018 ஜுன் 23,24 இரு நாள்களில் நிகழ்ந்தது. அவரது திருவுருச்சிலையை நாம் திறந்து வைத்தோம். கொட்டையூரில் புண்ணியகோடியாக அவர் திகழ்ந்தார். கொட்டையூரில் புண்ணியச் செயல்கள் பற்றிய நம்பிக்கைக்கு அவர் ஓர் நட்சத்திரம்.

அப்பர்பெருமான் கொட்டையூரை வழிபட்டுப் பாடிய திருத்தாண்டகம் 10 பாடல்களும், "கொட்டையூரில் கோடீச்சுரத்து உறையும் கோமான்தானே" என்ற தொடரை மகுடமாக உடையவை. கோடீஸ்வரர் அல்லவா! கோமானாகத் திகழ்கிறார். கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் புலவர்கோமான். இராமதாஸ் அண்ணா தொண்டர்கோமான். வழிவழியாகக் கோமான்களைக் கொண்ட ஊர் கொட்டையூர்.

23. திருஇன்னம்பர்

மக்கள் வழக்கில் இன்னம்பூர் என்று வழங்குகிறது. கொட்டையூருக்கு அருகில் உள்ளது. எழுத்தறிநாதர் என்பது இங்குள்ள இறைவன பெயர்.

மலர்தூவி துதித்து நின்று, அழுது, காமுற்று, அரற்றி இறைவழிபாடு செய்யம் அன்பர்களையும், நாளெல்லாம் வீண்பொழுது போக்கி இறைவழிபாட்டைப் புறக்கணிக்கும் வீணர்களையும் இவ்வூர் இறைவன் வீசம், அரைக்கால் என்று ஒன்றுக்குக்கீழ் உள்ள பின்னம்கூட விடாமல் கணக்கெழுதி வைக்கிறார் என்று அப்பர் பெருமான் கூறுகின்றார். கணக்கு வாய்ப்பாட்டில் ஒன்றுக்கு கீழ் உள்ளவை கீழ்க்கணக்கு எனப்படும்.

சங்க இலக்கியங்கள் பதினெட்டுக்கும் பின்னர் தோன்றிய திருக்குறள் நாலடியார் முதலியவை பதினெண்கீழ்க்கணக்கு எனப்பெயர் பெற்றன. இவை பதினெண்க்கீழ்க்கணக்கு என்பதால், பத்துப்பாட்டு எட்டுத்தொகை ஆகிய சங்க இலக்கியங்கள் பதினெட்டும் மேற்கணக்கு எனக் கருதலாம். இலக்கியத்துறையில் கீழ்க்கணக்கு மேற்கணக்கு இவை என்றால், சமயத்துறையில் கீழ்க்கணக்கு எழுதுபவர் இன்னம்பர் ஈசர் எழுத்தறிநாதஸ்வரர். அப்பர் அருளிச்செயலைக் காண்போம்.

தொழுது தூமலர் தூமலர் தூவித் துதித்துநின்று
அழுது காமுற்று அரற்றுகின்றாரையும்
பொழுதுபோக்கிப் புறக்கணிப்பாரையும்
எழுதும்கீழ்க்கணக்கு இன்னம்பர் ஈசனே. 5-21-8 (5451)

24. திருப்புறம்பயம்

புறம்பியம் என்பது மக்கள் பேச்சு வழக்கு. பிரளயத்துக்குப் புறம்பாய் இருந்தமையால் புறம்பயம் எனப் பெயர் பெற்றது. இறைவன் சாட்சிநாதேஸ்வரர். செட்டிப்பெண் ஒருத்திக்காக இறைவன் காட்சி சொன்ன வரலாறு திருவிளையாடற்புராணத்திலும் இவ்வூர்த் தலபுராணத்திலும் வருகிறது. முந்திய தலைமுறைத் தமிழறிஞர் வித்வான் வை. சுந்தரேச வாண்டையூர் பிறந்த ஊர் தேவார மூவராலும் பாடப்பெற்றது.

25. திருவிசயமங்கை

விஜயன் (அர்ச்சுனன்) வழிபட்டதால் விஜயமங்கை என்று பெயர் பெற்றது.

பாண்வின் மகன் பார்த்தன் பணிசெய்து
வேண்டு நல் வரங்கொள் விசய மங்கை

ஆண்டவன் அடியே நினைந்து ஆசையால்
காண்டலே கருத்தாகி இருப்பனே.

என்பது அப்பர்பெருமான் வழிபட்டுப் பாடிய பாடல் 5-71-8 (5956)

26. திருப்பழனம்

திருவையாற்றுக்கு அருகில் உள்ளது. சம்தஸ்தானத் தலங்கள் ஏழில் இதுவும் ஒன்று.

27. திருவையாறு

வடஇந்தியாவில் ஐந்து ஆறுகள் பாய்ந்து வளப்படுத்தும ஊர் பஞ்சாப் என்று பேர் பெற்றது. அதைப்போலத்தால் தென்னிந்தியாவில் திருவையாறு தமிழகத்தின் பஞ்சாப். வடவாறு, வெண்ணாறு, வெட்டாறு, குடமுருட்டி, காவிரி (கொள்ளிடம்) ஆகியவை அந்த ஐந்து ஆறுகள் என்பர். ஐந்து ஆறுகளின் பெயர்களைக் கூறுவதில் அறிஞர்களிடையே கருத்து வேற்றுமை உண்டு. தஞ்சை மாவட்டத்தில் பெயரி ஊர். சப்தஸ்தானத் தலங்களாகிய ஏழு ஊர்களில் முதலாவது திருவையாறு, மற்ற ஊர்கள் திருப்பழனம், திருச்சோற்றுத்துறை, திருவேதிகுடி, திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி, திருநெய்த்தானம் என்பன.

திருவையாறு கோயிலுக்குக் காவிரிக்கோட்டம் என்று பெயர். தேவாரப் பாடலிலேயே இப்பெயர் கூறப்பட்டுள்ளது. "காவிக்கோட்டத்து ஐயாறுடைய அடிகளோ" என்பது சுந்தரர் திருவாக்கு. இறைவன் ஒரு சமயம் தன்னைத்தானே பூசித்த தலம். காசிக்குச் சென்றிருந்த பூசகர் சிவாசாரியர் வருவது தாமதப்படவே அவர் உருவில் இறைவனே வந்து பூசித்தார் என்பது புராண ஐதிகம். ஐயாறதனில் சைவனாகியும் என்ற மாணிக்கவாசகரின் திருவாசகத் திருவாக்கு இதனைக் குறிக்கிறது.

250 ஆண்டு காலத்திற்கு முன்பு இசைக்கடலாக விளங்கிய தியாகராஜ சுவாமிகள் (தியாகப்பிரம்மம்) திருவையாற்றில் திருமஞ்சன வீதியில் வாழ்ந்தார். காவிரிக்கரையில் அரவது சமாதி உள்ளது. தியாகப்பிரம்மம் உத்சவம் ஆண்டுதோறும் திருவையாற்றில் இன்றும் நிகழ்ந்து வருகிறது.

திருவையாறு தருமபுர ஆதீனத்திற்குச் சொந்தமான கோயில். அண்மையில் இளைய சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த சுவாமிகளின் பெருமுயற்சியால் பல கோடி ரூபாய் செலவில் திருப்பணி செய்யப் பெற்றுக் குடநீராட்டு விழா நிகழ்ந்தது.

தேவார மூவராலும் இத்தலம் பாடப்பெற்றுள்ளது. மூவரில் அப்பர்பெருமான் ஒருவரே கயிலைக்குச் சென்றவர். அங்கே கயிலைக் காட்சி அவருக்குக் கிடைக்கவில்லை. "உனக்குத் திருவையாற்றில் கயிலைக்காட்சியைக் காட்டுகிறோம். இப்போது பொய்கையில் மூழ்கித் திருவையாற்றுக்குச் செல்" என்று கயிலைநாதர் அருளினார். கயிலைப் பொய்கையில் மூழ்கித் திருவையாற்றில் எழுந்தார் அப்பர்பெருமான். அங்கமெல்லாம் நோகக் கயிலை சென்ற அவர், காலடிச் சுவடு பூமியிற் படாமலேயே திருவையாறு வந்து சேர்ந்தார். அவருக்குக் கயிலைக் காட்சியை ஐயாறிற் காட்டினார் இறைவன்.

ஐயாறப்பரைப் பாடும் அப்பர்பெருமான் பன்னிரண்டு பதிகங்களைப் பாடியுள்ளார். சில பாடல்களின் அருமை பெருமைகளை இங்கே காண்போம்.

மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும் பாடி
போதொடு நீர்சுமந்தேத்திப் புகுவார் அவர்பின் புகுவேன்
யாதும் சுவடு படாமல் ஐயாறு அடைகின்றபோது
காதல் மடப்பிடியோடும் களிறுவருவன கண்டேன்
கண்டேன் அவர்திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்

என்பது கயிலைக்காட்சிப் பதிகத்தின் முதற்பாடல். பதிகத்தின் பதினொரு பாடல்களும் "கண்டேன் அவர் திருப்பாத் கண்டறியாதன கண்டேன்" என்றே முடிகின்றன (மகுடம்).

திருஐயாற்றுப் பதிகம் பதினொரு(11) பாடல்களும் நான்கடிப் பாடல்களாக அமையாமல், ஓர் அடி கூடுதலாக, ஐந்துஅடி கொண்ட பாடல்களாக அமைந்துள்ளன. கூடுதலாக உள்ள ஐந்தாவது அடி (ஈற்றடி) நாலடிமேல் ஓரடிவைப்பு என்னும் இலக்கிய வகை ஆகும். இதுபோன்று நாலடிமேல் ஈரடி வைப்புப் பாடல்களும் உண்டு.

முதல் அடி, இறைவனையும் இறைவியையும் அப்பர் பெருமான் பாடி வருவதைக் கூறுகிறது. இரண்டாவது அடி ஐயாற்றுக்கு வருவதைக் கூறுகிறது. மூன்றாவது அடி ஐயாறு அடைவதைக் கூறுகிறது. நான்காவது அடி உயிர்இனங்கள் சில (விலங்குகள்,பறவைகள்) ஆணும் பெண்ணுமாக இணைந்து அம்மையையும் அப்பனையும் போல் வருவதை கூறுகிறது. ஈற்று ஐந்தாவது அடி, "கண்டேன் அவர் திருப்பாதம், கண்டறியாதன கண்டேன்" என முடித்துக் கூறுகிறது. இனிப் பாடல்தோறும் கூறப்பெறும் இணைகளைப் பாடல் வரிசையிற் காண்போம்.

காதல்மடப் பிடியோடும் களிறு வருவனகண்டேன் -1
கோழி பெடையொடும் கூடிக்குளிர்ந்து வருவன கண்டேன் -2

வரிக்குயில் பெடையோடு ஆடி வைகி வருவன கண்டேன் -3
சிறை இளம் பெடையோடு ஆடிச் சேவல் வருவன கண்டேன் -4
பேடை மயில்ஒடும்கூடிப் பிணைந்து வருவன கண்டேன் -5
வண்ணப் பகன்றில்ஒடு ஆடி வருவன கண்டேன் -6
ஏனம் இசைந்து வருவன கண்டேன் -7
கருங்கலை பேடையோடு ஆடிக்கலந்து வருவன கண்டேன் -8
துணைப் பேடையொடு ஆடிநாரை வருவன கண்டேன் -9
பைங்கிளி பேடையொடு ஆடிப் பறந்து வருவன கண்டேன் -10
இளமணநாகு தழுவி ஏறு வருவன கண்டேன் -11

பாட்டு 1: பிடி, களிறு என்றால் இக்காலத்தாருக்குத் தெரியாது. பெண்யானை, ஆண் யானை என்றால்தான் தெரியும். பிடி- பெண்யானை. களிறு- ஆண்யானை.

பாட்டு 2: கோழி - ஆண்கோழி, பெடை -பெட்டைக் கோழி
பாட்டு 3: குயில் பேடையோடு (பெண் குயிலோடு)
பாட்டு 4: பேடை- பெட்டைக்கோழி, சேவல் -ஆண்கோழி
பாட்டு 5: ஆண் பெண் மயில்கள்
பாட்டு 6: பகன்றில் பறவைகள் ஆணும் பெண்ணுமாக
பாட்டு 7: ஏனம்-மான்
பாட்டு 8: கலை-ஆண்மான் - பேடை- பெண்மான்
பாட்டு 9: பேடையோடு நாரை
பாட்டு 10: பைங்கிளி - பச்சைக்கிளி
பாட்டு 11: நாகு -பசு. ஏறு-காளை (எருது)

இவை எல்லாம் இணைஇணையாக வருவதைச் சத்தியும் சிவமுமாகக் கண்டார் அப்பர் பெருமான்.

சமண சமயத்துக்கு மாறி, சமணர்களோடு வாழ்ந்த அவலத்தை, அறியாமையை ஒரு பதிகம் முழுவதிலும் கூறி வருந்துகிறார் (4-39)

தொண்டலால் துணையுமில்லை
தோல்அலாது உடையும் இல்லை
கண்டலாது அருளுமில்லை
கலந்தபின் பிரிவதில்லை
பண்டை நான்மறைகள் காணாப்
பரிசினன் என்றெண்ணி
அண்ட வானவர்கள் ஏத்தும்
ஐயன் ஐயாறனார்க்கே! 4-40-4(4566)

பக்தி (சரியை) நெறியை வளர்க்க வந்தவர் **ஞானசம்பந்தர்**
தொண்டு (கிரியை) நெறியை வளர்க்க வந்தவர் **அப்பர்பெருமான்**
யோக நெறியை வளர்க்க வந்தவர் **சுந்தரர்**
ஞான நெறியை வளர்க்க வந்தவர் **மாணிக்கவாசகர்**

தொண்டு நெறியை வளர்க்க வந்த திருநாவுக்கரசர் (அப்பர்) திருவதிகையில் தம் அருள் வாழ்வைத் தொடங்கியதிலிருந்து திருப்புகலூரில் முத்தி பெறும் வரை காலமெல்லாம் தொண்டு செய்தே கழித்தார்.

சமயகுரவர் நால்வரில் அப்பர் ஒருவரே உடல் உழைப்புத் தொண்டை மிகுதியாகச் செய்தவர். செய்த பணிகளில் எல்லாம் பெரிய பணி உழவாரப்பணி, திருவதிகையில் அருள்பெற்ற முதல்நாளில் தொடங்கிய உழவாரப்பணி திருப்புகலூரில் முத்திபெறும் நாள் வரை விடாது தொடர்ந்து தொய்வின்றி நடந்தது.

அப்பருக்கு அடையாளமே உழவாரம்தான். சிவபெருமானுக்குச் சூலமும் முருகப் பெருமானுக்கு வேலும் போன்றது, அப்பர் பெருமானுக்கு உழவாரம். வேலின்றி முருகனில்லை. உழவாரமின்றி அப்பரில்லை.

அப்பர் கர்மயோகி. அவரது வரலாற்றைக் கூறத் தொடங்கும் சேக்கிழார் பெருமான் "திருநாவுக்கரசு வளர் திருதொண்டின் நெறிவாழ வருஞானத் தவமுனிவர்" என்று பாடித் தொடங்குகிறார் (பெரியபுராணம் 1271)

தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியமே என்ற அருந்தொடரைத் திருவாரூர்த் திருவிருத்தத்தின் ஒரு பதிகம் பத்துப்பாடல்களிலும் ஈற்றில் மகுடமாக அமைத்திருக்கிறார். பின்னாளில் சுந்தரர் திருத்தொண்டத்தொகையில் "**அடியார்க்கு அடியேன்**" என்று பாடுவதற்கு, அப்பரின் தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியமே என்பது முன்னோடி என்று கருதலாம்.

"தொண்டலால் துணையும் இல்லை" என்று தொடங்கும் பாடலுக்கு அடுத்த ஈற்றடி "அரிஅலால் தேவி இல்லை அரன் ஐயாறனார்க்கே" என்பதாம். அரன் (ஹரன்) சிவபெருமான். அரி(ஹரி) திருமால்(மகாவிஷ்ணு). அரன், ஆண் அம்சம். அரி,பெண் அம்சம். மகாவிஷ்ணு சிவபெருமானுக்கு வாகனமாகவும், மனைவியாவும் கூறுவது சைவத்தில் பலவிடத்தில் காணப்படுகிறது. அவ்விடங்களில் முக்கியமான ஓர் இடம் "அரன் அலால் தேவி இல்லை அரன் ஐயாறனார்க்கே" என்னும் இவ்விடம்.

இரப்பவர்க்கு ஈயவைத்தார்; ஈபவர்க்கு அருளும் வைத்தார்
கரப்பவர் தங்கட்கு எல்லாம் கடுநரகம் வைத்தார்

பரப்புநீர்க் கங்கைதன்னைப் படர்சடைப் பாகம் வைத்தார்
அரக்கனுக்கு அருளும் வைத்தார் ஐயன் ஐயாறனாரே.
4-39-1 (4952)

ஈ என்று இரப்பவர்களுக்கு (யாசிப்பவர்களுக்கு) ஈய வைக்கிறார் ஐயாறப்பர். அப்படி ஈபவர்களுக்கு அருள் கொடுக்கிறார். ஈயாமல் கரப்பவர்களுக்கு கடுமையான நரக உலகங்களைப் படைத்து அதில் சேரச் செய்கிறார். இரப்பவர்களுக்கு ஈதலின் சிறப்பை இப்பாடலின் இவ்வாறு இனிது கூறி, ஈதலை விளங்கச் செய்கிறார் அப்பர்பெருமான்.

ஆற்றில் ஓடும் தோணி (படகு-பரிசல்) மற்றவர்களைக் கரைசேர்க்கும். தான் கரை ஏறாது. ஏணி, ஏறுபவர்களை மேலே ஏற்றும் அது ஏறாது. தோணித்தொழில், ஏணித்தொழில் என்று இவை சுவையாக சொல்லப்படும்.

துன்பக் கடலிடைத் **தோணித்தொழில்** பூண்டு, தொண்டர்தம்மை
இன்பக்கரை முகத்து ஏற்றும் திறத்தன
......................................ஐயாறன் அடித்தலமே 6-92-6(5057)

என்று அப்பர்பெருமான் ஐயாறப்பனின் அடித்தலத்தைப் பாடுகின்றார். ஐயாறப்பரின் திருவடிகள் தொண்டர்களைத் துன்பக்கடலிலிருந்து தோணித் தொழில்பூண்டு இன்பக்கரையில் ஏற்றுகின்றன என்கிறார்.

ஓசை ஒலிஎலாம் ஆனாய் நீயே!
உலகுக்கு ஒருவனாய் நின்றாய் நீயே!
வாசமலர் எலாம் ஆனாய் நீயே!
மலையான் மருகனாய் நின்றாய், நீயே!
பேசப்பெரிதும் இனியாய், நீயே!
பிரானாய் அடிஎன்மேல் வைத்தாய் நீயே!
தேசவிளக்கு எலாம் ஆனாய் நீயே!
திருஐயாறு அகலாக செம்பொற் சோதீ!

எல்லாம் உலகமும் ஆனாய், நீயே!
ஏகம்பம் மேவி இருந்தாய் நீயே!
நல்லாரை நன்மை அறிவாய், நீயே!
ஞானச்சுடர் விளக்காய் நின்றாய் நீயே!
பொல்லா வினைகள் அறுப்பாய் நீயே!
புகழ்ச்சேவடி என்மேல் வைத்தாய் நீயே!
செல்வாய செல்வம் தருவாய், நீயே!
திருஐயாறு அகலாக செம்பொற் சோதீ

என்னும் திருஐயாற்றுத் திருத்தாண்டகப் பாடல்கள் சுவை மிகுந்தன; பொருள் பொதிந்தன.

வள்ளலார் இராமலிங்க அடிகள் இறைவனை முழுக்க முழுக்க ஜோதி வடிவமாகவே காண்கிறார். சம்பந்தர், அப்பர் போன்ற முன் ஞானிகள் இறைவனை உருவ வடிவில் வழிபட்டனரேனும் ஓரொருகால் சோதி வடிவிலும் கண்டார்கள். அதற்கு இத் திருவையாற்றுத் திருத்தாண்டகங்கள் சிறந்த எடுத்துக்காட்டு. பதிகத்தின் பதினொரு பாடல்களிலும் ஈற்றடி (மகுடம்) திருவையாறலாக **"செம்பொற்சோதீ"** என்பதுதான் "செம்பொற் சோதீ" என்று அப்பர்பெருமான் பாடியதால் ஐயாறப்பர், பஞ்சதீஸ்வரர் என்பதோடு செம்பொற் சோதீஸ்வரர் என்றொரு திருநாமமும் விளங்குகிறது.

28. திருநெய்த்தானம்

திருவையாற்றுக்கு மிக அருகில் உள்ளது. மக்கள் பேச்சு வழக்கில் தில்லைஸ்தானம் என்று வழங்குகிறது. சப்தஸ்தானத் தலங்களில் இதுவும் ஒன்று. இறைவன் நெய்யாடியப்பர். சம்பந்தரும் அப்பரும் பாடிய தலம். அம்பிகையின் பெயர் தேவாரப் பதிகத்துள் இளமங்கையம்மை என்று குறிக்கப் பெற்றுள்ளது. இன்று பாலாம்பிகை என்ற பெயரே வழங்கி வருகிறது. தேவாரப்பதிகங்களில் சொல்லப்பட்ட தலப்பெயர்கள் இறைவன் இறைவி பெயர்களெல்லாம் நல்ல தமிழ்ப்பெயர்கள். அவையெல்லாம் இன்று நூற்றுக்குத் தொண்ணூற்றொம்பது விழுக்காடு வடமொழிப் பெயர்களாக மாற்றப்பட்டு வழங்கி வருகின்றன. பொது மக்கள் வழக்கில் வடமொழிப் பெயர்களே பெரிதும் வழங்குகின்றன. அருணகிரிநாதர் பாடிய திருப்புகழில் தலப்பெயர்களையெல்லாம் வடமொழிப் பெயர்களாக மாற்றிப் பாடுகிறார். அதனால் வந்த கேடு இது. "நன்றாற்றலுள்ளும் கேடுண்டு" என்னும் திருக்குறள் ஒரு புடை ஒப்புமையாகும்.

29. திருமழபாடி

அப்பர் பாடிய திருமழபாடித் திருத்தாண்டகள் (4-40) ஏழு பாடல்களிலும் "மழபாடி வயிரத்தூணே" என்று ஈற்றடியில் வருமாறு பாடியுள்ளார். வைரத்தூண்நாதர் என்ற நல்ல தமிழ்ப்பெயர் இப்போது வச்சிரதம்பேஸ்தரர் என்ற வடமொழிப் பெயராக மாறி வழங்குகிறது. ஆறாவது பாடலில் தயாமூலதன்மம் குறிப்பிடப்படுகிறது. "தயாமூலதன்மம் எனக்கு நல்கி மனம் திருத்தும் மழபாடி வயிரத்தூணே!" என்றென்றே நான் அரற்றி நைகின்றேனே" என்பது பாடலின் இறுதிப்பகுதி. திருநள்ளாறு என்னும் தலத்திற் பாடிய வேறு ஒரு திருத்தாண்டகப் பாடலிலும் சலம் கெடுத்துத் **தயாமூலதன்மம் என்னும்** தத்துவத்தின் வழிநின்று

தாழ்ந்தோர்க்கு எல்லாம் நலம் கொடுக்கம் நம்பியை" என்று பாடியுள்ளார்.

தயா - அன்பு, கருணை,தயை, தயவு, பக்தியே சாதனம் என்பது பழம் பெரியோர்கள் காட்டிய வழி. பழைய வழி, வள்ளலார் காட்டிய புதிய வழி கருணையே சாதனம் என்பது. பக்தி வேண்டாம் என்று சொல்லவில்லை. பக்தியோடு கருணையும் வேண்டும் என்கிறார் வள்ளலார். சிவபக்தி மட்டும் போதாது. அதனோடு சீவகருணையும் வேண்டும் என்கிறார். சீவகருணையால், சீவகருணையைப் பெறலாம் என்கிறார். சீவகருணை - சீவகாருண்யம்; ஜீவகாருண்ய ஒழுக்கம்.

தயை, ஒரு தருமம், எல்லாத் தருமங்களுக்கும் மூலதருமம். ஆதலின் **தயாமூலதன்மம்** என்றார் அப்பர்பெருமான். அஃதோர் தத்துவம். **தயாமூலதன்மம் என்னும் தத்துவத்தில்** வழிநின்று என்றார். அன்பர்கள் அனைவரும் தயாமூலதன்மம் என்னும் தத்துவத்தின் வழி நிற்க வேண்டும். இது அப்பர்பெருமான் அனுபவம். அனுபவ அறிவுரை. வள்ளற்பெருமான் வற்புறுத்திக் கூறுவது.

30. திருக்கானூர்

கொள்ளிடக் கரையில் உள்ளது. ஊரின் பெரும்பகுதி வெள்ளத்தால் அழிவுற்று, ஒரு சிறு பகுதியும் கோயிலுமே உள்ளன. வெள்ளத்தால் மணல்மேடு உண்டாகி, இப்போது ஊரின் பெயர் மணல்மேடு என்றே வழங்கி வருகிறது.

31. ஆன்பில் ஆலந்துறை

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் லால்குடிக்கு அருகில் உள்ளது. ஊரின் பெயர் அன்பில், கோயில் பெயர் ஆலந்துறை. அன்பில் (1000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க ஓரூரின் அறிமுகம்) என்றொரு நல்ல வரலாற்று நூலை எமது ஒருசாலை மாணாக்கர் திரு.கே.ஆர். கிருஷ்ணமூர்த்தி என்ற அன்பர் எழுதியுள்ளார். கிரி டிரேடிங் ஏஜன்சி பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்தார் இந்த நல்ல நூலை அழகாக அச்சிட்டு அண்மையில் வெளியிட்டிருக்கிறார்கள் (2017) நாம் அணிந்துரை வழங்கியுள்ளோம். அன்பிலுக்கு அருகே மணக்கால் (மணற்கால்) என்றோர் ஊர் உள்ளது. அவ்வூரினரான எம்.ஆர்.ஜம்புநாதன் என்ற அந்தண அறிஞர் இருக்கு, யசுர், சாமம் ஆகிய மூன்று வேதங்களையும் தமிழில் மொழிபெயர்த்து எண்பது ஆண்டுகளுக்கு முன் 1920 -30-களில் வெளியிட்டார். திருப்பனந்தாள் காசிமடத்தின் வெளியீடு. அவரும் எனது நண்பர். அறிஞர் அண்ணாதுரை, கலைஞர் கருணாநிதி ஆட்சிக்காலங்களில் பேரோடும், புகழோடும் விளங்கிய அமைச்சர் அன்பில்

தர்மலிங்கம் இவ்வூரினர். பூர்வகுடிகளுள் ஒருவர். இவரால் அன்பில் அரசியற் புகழ் பெற்றது. அன்பில் தர்மலிங்கம் எமக்கு நல்ல நண்பர். இவரது வாரிசுகள் இன்றும் அரசியலில் உள்ளனர்.

அப்பர் பெருமான் அன்பில் ஆலந்துறையை வழிபட்டு ஒரு பதிகம் (5 திருக்குறுந்தொகை 80) பாடியுள்ளார். பதிகத்தின் பத்துப்பாடல்களுள் எட்டுப்பாடல்களில் அன்பில் ஆலந்துறை என்று தலப்பெயர் வருமாறு பாடியுள்ளார்.

வெள்ளம் உள்ள விரிசடை நந்தியைக்
கள்ளம் உள்ள மனத்தவர் காண்கிலார்
அள்ளலார் வயல் அன்பில் ஆலந்துறை
உள்ளவாறு அறியார் சிலர் ஊமரே.

என்பது ஒரு பாடல்.

32. திருஆனைக்கா

பஞ்சபூதத் தலங்களில் ஒன்று; நீர்த்தலம் (அப்புஸ்தலம்), காவிரி கொள்ளிடம் ஆறுகளுக்கு இடையே உள்ளது. திருவரங்கமும், திருஆனைக்காவும் நாம் படித்த ஊர்கள். உத்தியோகம் பார்த்த ஊர்கள். பன்னிரண்டு ஆண்டுகள் அகிலாண்டநாயகியையும் அரங்கநாதரையும் வழிபட்டுப் பிரத்தியட்ச தரிசனம் பெற்ற ஊர்கள். அணுஅணுவாக ஆராய்ந்து அனுபவித்த ஊர்கள். பஞ்சபூதத் தலங்களைப் பற்றி வேறு ஓர் அன்பர் கட்டுரை எழுதுகிறார் என்பதால் நாம் எழுத வாய்ப்பில்லாது தவிர்கிறது.

நடையை மெய்என்று நாத்திகம் பேசாதே

எத்தாயர், எத்தந்தை, எச்சுற்றத்தார்
எம்மாடு சும்மாடு – ஏவர் நல்லார்
செத்தால் வந்து உதவுவார் ஒருவர்இல்லை
சிறுவிறகால் தீமூட்டிச் செல்லாநிற்பர்
தென்ஆனைக்காவானை, தேனை,பாலை
செழுநீர்த்திரளை ; சென்று ஆடினேனே

என்பன அப்பர் தேவாரத்தில் சில வைர வரிகள். இவ்வளவில் அரை மனத்துடன் இத்தலச் செய்தியை நிறைவு செய்கிறோம்.

33. திருப்பைஞ்ஞீலி

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கொள்ளிடத்தின் வடகரையில் மணச்சநல்லூருக்கு அருகில் உள்ளது. இறைவன் அந்தணர் வடிவில் வந்து

அப்பர் பெருமானுக்குப் பொதிசோறு (கட்டுச்சோறு) அளித்துப் பசியைப் போக்கிய தலம். பைஞ்ஞீலி என்பது தலமரத்தால் ஏற்பட்ட பெயர். ஞீலி-இது ஒரு வகை வாழை. தனி இனம். வேறிடத்தில் இஃது பயிராவதில்லை. இதன் இலை காய், கனி அனைத்தும் இறைவனுக்கே பயன்படுத்தப்படுகிறது. இவற்றை மனிதர் பயன்படுத்தினால் பிணி வருதல் இன்றும் கண்கூடு. இக்கனியைச் சுவாமிக்கு நிவேதித்துத் தண்ணீரில் விட்டு விடுவார்கள் என்று திருமுறைத்தலங்கள் என்ற தல வரலாற்று நூலில் நூலாசிரியர் பு.மா.ஜயஜெந்தில்நாதன் எழுதியிருப்பது உண்மை. இத்தகைய அரிய (அபூர்வ) செய்திகளை அன்பர்கள் பலரும் அறியவேண்டும் என்பதற்காகவே இதனை இங்க பதிவு செய்கிறோம்.

நிறைவுரை

சம்பந்தர் தேவாரம் 1;2;3 திருமுறைகள். அப்பர் தேவாரம் 4;5;6 திருமுறைகள். சுந்தரர் தேவாரம் 7-ஆம் திருமுறை. இவ்வேழ திருமுறைகளும் சேர்ந்த தொகுப்புக்கு அடங்கல் முறை என்று பெயர். தேவாரப் பதிப்புகளில் பண்முறை தலமுறை என இருவகை உண்டு. பண்வரிசையில் தொகுக்கப் பெற்றது பண்முறை, தல வரிசையில் தொகுக்கப் பெற்றது தலமுறை. தலமுறை தில்லையில் தொடங்கி கயிலையில் நிறைவு பெறும்.

அப்பர் (நாவுக்கரசர்) பாடிய நான்காம் திருமுறை முழுவதும் திருநேரிசை. ஐந்தாம் திருமுறை முழுவதும் திருக்குறுந்தொகை. ஆறாம் திருமுறை முழுவதும் திருத்தாண்டகம். நேரிசை, குறுந்தொகை, தாண்டகம் என்பன இலக்கிய வகைகள். யாப்பு அடிப்படையில் அமைந்தவை. திருநேரிசை -நேரிசையாப்பு, திருக்குறுந்தொகை - குறுகிய பாடல்களின் தொகுப்பு. தாண்டகம் - தமிழில் முதன்முதலில் அப்பர் பெருமானால் தோற்றுவிக்கப்பட்ட ஒருவகைப் புது யாப்பு. திருமுறை ஆசிரியர்களில் அப்பர் பெருமான் ஒருவர்தான் தாண்டக யாப்பில் பாடியவர். தாண்டகம் பாடுவதில் அப்பர் பெருமான் வல்லவர். **தாண்டகவேந்தர்** என்று போற்றப் பெறுபவர். **தாண்டகச் சதுரர்** என்கிறார் சேக்கிழார் பெருமான்.

மூவர் பாடல்களும் பொதுவாகத் தேவாரம் எனப் பெயர் பெற்றாலும் ஒவ்வொருவர் பாடலுக்கும் ஒவ்வொரு தனிச்சிறப்புப் பெயர் உண்டு. ஞானசம்பந்தர் தேவாரம் **திருக்கடைக்காப்பு** என்று சொல்லப் பெறும். அப்பர் தேவாரத்திற்குத் **தேவாரம்** என்றே சிறப்புப் பெயர். சுந்தரர் தேவாரம் **திருப்பாட்டு** என்று சொல்லப்பெறும். இச்சிறப்புப் பெயர்கள் பழைய வழக்கே எனினும் இவற்றை அண்மைக்காலத்தில் பிரபலப்படுத்தியவர் வள்ளற்பெருமான் இராமலிங்க அடிகள்.

சைவ மெய்யன்பர்கள் திருத்தல யாத்திரை செய்வது இன்றியமையாதது. மிகவும் அவசியம். நல்ல தல வரலாற்று நூல் ஒன்றைக் கையில் வைத்துக் கொண்டு யாத்திரை செய்ய வேண்டும். தலவரலாற்று நூல்கள் சில பல இருந்தாலும் காஞ்சிபுரம் சங்கர மடம் ஆஸ்தான வித்வான் பு.மா.ஜெயசெந்தில்நாதன் எழுதிய **"திருமுறைத்தலங்கள்"** நல்ல நூல்.

திருச்சிற்றம்பலம்

❀❀❀❀❀❀❀

2. அப்பர் தேவாரத்தில் காவிரி தென்கரைத் திருத்தலங்கள்

முனைவர். பனசை மூர்த்தி, சிதம்பரம்

தோற்றுவாய்

இறையருள் சிவனருள் செம்மையாக நிறைந்துள்ள இடம்தான் திருத்தலம் எனப்படும். இவ்வுலகைப் படைத்து ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு இறைவனாலேயே நமக்கு அளிக்கப் பெற்றவைதான் இத்திருத்தலங்களாகும். இத்திருத்தலங்களில் பிறப்பெடுத்த ஆன்மாக்கள் வழிபட்டு நெறிப்படுத்த அமைக்கப் பெற்றவைதான் திருக்கோயில்கள். திருவருள் பெற்றவர்கள் புனிதத் தலங்களுக்குச் சென்று புண்ணிய தீர்த்தங்களில் நீராடி அவ்வத்தலங்களில் குடி கொண்டுள்ள மூர்த்தியை வழிபட்டுப் பேறு பெற வேண்டும் என அமைக்கப் பெற்றவைதான் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றாகும்.

மனித குலம் தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகிய காலம் தொட்டு தமிழ்நாட்டில் தலங்கள் தோறும் எண்ணற்றனவாகத் திருக்கோயில்கள் தோன்றின. மக்கள் எவ்வளவுதான் நீர்வளத்தோடும், செல்வ வளத்தோடும் வாழ்ந்தாலும் அங்கு வாழும் மக்களின் உள்ளத்தில் அறமும், அன்பும், கருணையும் நிறையும் பொருட்டு திருவருள் நிலையங்களாகத் தோன்றியவைதாம் திருக்கோயில்கள் என்பது. எனவே மக்கள் வாழும் ஊர் என்பது திருக்கோயில் உள்ள ஊர்தான் என்பதை அப்பரடிகளின் திருத்தாண்டகத்திலிருந்து தெளியலாம்.

திருக்கோயில் இல்லாத் திருவில் ஊரும்
திரு வெண்ணீறு அணியாத திருவில் ஊரும்
பருக்கோடிப் பத்திமையாற் பாடா ஊரும்
பாங்கினொடு பலதளிகள் இல்லா ஊரும்
விருப்போடு வெண்சங்கம் ஊதா ஊரும்
விதானமும் வெண்கொடியும் இல்லா ஊரும்
அருப்போடு மலர்பறித்திட்டு உண்ணா ஊரும்
அவையெல்லாம் ஊரல்ல அடவி காடே!

அப்பர் பெருமான் பாடிய காவேரிக்குத் தென்கரையிலுள்ள திருத்தலங்களில் சிலவற்றை இங்குக் காண்போம்.

1. திருவாட்போக்கி (ஐயர்மலை, ரத்னகிரி, சிவாயமலை)

திருவாருட்போக்கி சோழ நாட்டுத் தென்கரைத் தலங்களுள்

முதலாவது தலமாகும். தற்போது மக்கள் வழக்கில் ஐயர்மலை எனப்படும். ரத்தினகிரி, மாணிக்கமலை, சிவாயமலை, அரதனசலம் வேறு பெயர்கள். சுவாமி- ரத்னகிரீசர், அம்பாள்-கரும்பார் குழலி.

உண்மையில் நிற்பர்!

பஞ்சகவ்ய அபிஷேகம் கொள்பவன் பெருமான். அப்பெருமான் மகிழ்ந்து எழுந்தருளியிருக்கும் இடம் திருவாருட்போக்கி. அவன், கால தூதுவர்களால் கொண்டு செல்வதற்கு முன் தமது அடியார்களுக்கு அருள் செய்பவன். அவ்வடியார்களுக்கு உண்மையில் எழுந்தருளி நிற்பன். ஏனெனில் அவர்கள் ஊனமாகிய இருவினைக் குற்றங்களும் அற்றவர்கள் என்பதால் அவன் அருளுவது உண்மையாகும் என்று பெருமான் மெய்ப்பொருள் நிற்கும் திறத்தை வியந்து போற்றுகிறார் அப்பரடிகள்.

கானம் ஓடிக் கடிதுஎழு தூதுவர்
தானம் ஓடு தலைபிடியா முனம்
ஆனஞ்சு ஆடி உகந்த வாட்போக்கியார்
ஊன மில்லார்க்கு உண்மையில் நிற்பர்.

வாடி யேத்த வாட்டம் தவிருமே!

நமனுடைய தூதுவர்கள் நல்ல நடு இரவில் பக்கம் சேர்ந்து வந்து வருத்துவதற்கு முன், விரதம் முதலானவற்றில் தோய்ந்தும், தியானம் மேற்கொண்டும் அவனை வழிபட்டால், ஆடல் பாடல்களில் மகிழும் அப்பெருமான் நமது துன்பங்களை நீக்கி அருளுவான். அவன் எழுந்தருளியிருக்கும் தலம் திருவாருட்போக்கியாகும்.

நாடிவந்து நமன்தமர் நல்லிருள்
கூடிவந்து குமைப்பதன் முன்னமே
ஆடல்பாடல் உகந்த வாட்போக்கியை
வாடியேத்த நம் வாட்டந் திருமே!

என்ற பாடலால் பெருமான் வாட்டம் தீர்க்கும் வகையை நமக்கு அறிவிக்கிறார்.

இந்திரன், சயந்தன், வாயு, ஆதிசேஷன் வழிபட்ட தலம். அகத்தியர் இங்குச் சுவாமியை நண்பகலில் தரிசித்து அருள் பெற்றமையால் இங்கு நண்பகல் தரிசனம் சிறப்பு. அதனால் மூர்த்திக்கு மத்தியமான சுந்தர் என்று பெயர். மாணிக்கம் வேண்டி வந்த ஒரு மன்னனுக்கு சிவன் தொட்டி ஒன்றைக் காட்டி, அதில் நீர், நிரப்பச் சொன்னார். நீர் நிரப்பியும் தொட்டி நிரம்பாமைக் கண்டு மன்னன் கோபத்துடன் உடைவாளை ஓச்சினான். அப்போது இறைவன் மாணிக்கத்தைத் தந்தருளினார். மனம் திருந்திய மன்னன்

மாணிக்கத்தை விரும்பாது சிவப்பணி செய்து பேறு பெற்றான். அதனால் சுவாமிக்கு முடித்தழும்பர் என்று பெயர். சிவலிங்கத்தின் மேல்புறம் வெட்டுப்பட்ட வடு காணலாம்.

கோயிலில் நுழையும் போது வரவேற்பது தட்சிணாமூர்த்தி சந்நிதி. உள்ளே நுழைந்தால் ரத்னகிரீசுவரரைக் காணலாம். ரத்னகிரீசுவரர் மாணிக்க ஈசுவரர் என்பன சுந்ததரால் பாடப் பெற்ற பெயர்களாகும். மன்னன் வழிபட்டதால் ராஜலிங்க மூர்த்தி என்ற பெயரும் உண்டு.

பெருமானுக்கு நாடோறும் அருகிலுள்ள காவிரியிலிருந்து 10 இடங்களில் நீர் கொண்டு வரப்பட்டு உச்சிக் கால அபிஷேகம் செய்யப்படுகிறது. இன்றும் இப்பணியை பன்னிரண்டாம் செட்டியார் என்னும் மரபினர் செய்து வருகின்றனர்.

அருணகிரிநாதரால் பாடப் பெற்ற தலம். இடையன் ஒருவன் சுவாமிக்காக கொண்டு சென்றை பாலைக் கவிழ்த்த காகம் எரிந்து போனதால் இம்மலையில் காகங்கள் உலவுவதில்லை என செவிவழிச் செய்தி உள்ளது. அதனால் காகம் அரணு மலை என்பர்.

2. கற்குடி (உய்யக் கொண்டான் மலை, உய்யக் கொண்டான் திருமலை)

சோழநாட்டு தென்கரைத் தலம் தற்போது உய்யக் கொண்டான் மலை என்று வழங்குகிறது.

இறைவன் கல்லில் அதாவது மலையில் இருப்பதால் கற்குடி என்றாயிற்று. நந்திவர்ம பல்லவனால் அமைக்கப் பெற்ற கோயில். நந்திவர்ம மங்கலம் என்னும் பெயர்.

கற்பகமாய்க் கற்குடியில் கண்டேன்!

பெருமானின் மேனி செம்மை. அவன் வெண்ணீறு அணிவதால் வெம்மை, நீலகண்டத்தோடு விளங்குவதால் கருமையுடையவனாய் விளங்குகின்றான். நான்முகனாகவும் எண்திசையும் பரவும் அழகனாகவும் நுண்மயனாய் நன்மை புரிபவனும் அடியார்க்கு அண்மையனாகவும் அல்லார்க்குச் சேய்மையனாகவும் திகழ்பவன். பசுவின் பஞ்சகவ்வியத்தை விரும்பி ஆடுபவனும் பொய்யேதும் இல்லாத மெய்யனாகவும் விளங்குபவன். சடையும் மானும் கொண்டு கற்குடியில் வீற்றிருப்பவன். கற்பகம் போன்று அருளும் அப்பெருமானை கற்குடியில் கண்ணாரர் கண்டு மகிழ்ந்தேன் என்று அனுபவமாக அப்பர் இத்தலத்து இறைவனைப் போற்றுகின்றார்.

செய்யானை வெளியரைக் கரியான் தன்னைத்
திசைமுகனைத் திசையெட்டும் செறிந்தான் தன்னை
ஐயானை நொய்யானைச் சீரி யானை
அணியானைச் சேயானை ஆனஞ்சாடும்
மெய்யானைப் பொய்யாது மில்லான் தன்னை
விடயானைச் சடையானை வெறித்த மான்கொள்
கையானைக் கற்குடியல் விழுமியானைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே!

தேவர்களுக்குத் தலைவனானவன் அடியார்களின் மனதில் உறைபவன். எண்ணிறந்த குணங்களாகத் தோன்றுபவன். இடபவாகனனைக் குழலும் முழவும் இசைக்கக் கூத்தாடுபனும்ஆகிய நம்பெருமான் கற்குடியில் கற்பகமாய் விளங்குபவனை கண்ணாரக் கண்டு மகிழ்ந்ததை அப்பர் பதிவு செய்கிறார்.

வானவனை வானவர்க்கு மேலா னானை
வணங்குமடி யார்மனத்துள் மருவிபுக்க
தேனவனைத் தேவர் தொழு கழலான் தன்னைச்
செய்குணங்கள் பலவாகி நின்ற வென்றிக்
கோனவனைக் கொல்லை விடையேற்றி னானைக்
குடில் முழவம் இயம்பக் கூத்தாட வல்லானை
கானவனைக் கற்குடியில் விழுமியானைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே!

மார்க்கேண்டயரை காப்பாற்றுவதாக உறுதியளித்து இறைவன் அருள்புரிந்த தலம். கரன் வழிபட்ட தலம். வெளிச்சுவற்றில் சிவலிங்கம் "இடர் காத்தார்" எனும் பெயருடன் உள்ளது. இறைவன் உஜ்ஜீவ நாத சுவாமி. இறைவி: அஞ்சனா (பாலம்பிகை) தீர்த்தம்: 1. பொன்னொளி ஓடை, 2. குடமுருட்டி, 3. ஞானவாவி, 4. எண்கோணாத் தீர்த்தம், 5. நற்கோன த்தீர்த்தம். கொடி மரத்தின் அருகில் மார்க்கண்டேயனைக் காப்பாற்ற, எமனை தடுக்க, கருவறையின் நீங்கி வந்த பாதம் தெரியும் வண்ணம் உள்ளது.

நேரே உள்ளே நுழைந்ததும் தட்சிணாமூர்த்தி, நால்வர், அம்பாளுடன், விநாயகர். கஜலெட்சுமி, கயோடதேவி ஆகிய கோஷ்ட மூர்த்தங்களாக உள்ளன. கல்வெட்டில் ராஜாஸ்ரய சதுர்வேதிமங்கலம் என்றுள்ளது. சுவாமியின் பெயர் உய்யகொண்டநாதர். இப் பெருமான் மீது மகாவித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் கற்குடிமாமலை மாலை எனும் 100 பாடல்கள் கொண்ட நூலைப் பாடியுள்ளார்.

3. திருஎறும்பியூர் (திருவெறும்பூர்)

கோயில் மலை மீது உள்ளது. மலைக்கோயில் புராணப்படி இதற்கு பீப்பிலீச்சுரம், மணிக்கூடம், இரத்தினக்கூடம், திருவெறும்பிபுரம், எறும்பீசம், பிரமபுரம், இலக்குமிபுரம், மதுவனபுரம், குமாரபுரம் எனப் பல பெயர்கள் உண்டு.

திருமாலும், பிரமனும், நைமிகாரண்ய ரிஷிகளும் வழிபட்ட தலம். தென்கயிலாயம் என்பர். இந்திரனும், தேவர்களும் எறும்பு வடிவங்கொண்டு வழிபட்டதால் இப்பெயர் பெற்றது.

இறைவன்: பிப்பிலிகேசுவரர், எறும்பீசர், இறைவி: சௌந்தர நாயகி, தீர்த்தம்: பிரம்மதீர்த்தம்.

கல்வெட்டில் இறைவன் பெயர் திருமலையாழ்வார் என்றும் திருவெறும்பியூர் உடைய நாயனார் என்றும் உள்ளது. கிழக்கு நோக்கி 125 படிகள் ஏறிச் செல்ல வேண்டும்.

பெருமான், அப்பர் சுவாமிகளுக்குத் தன்னையும் காட்டி தன்னை அடையும் நெறியையும் காட்டி, தன்னை அடைந்தவனுக்கு தாய் தந்தையரைப் போல அன்பு காட்டி ஆட்கொண்டவன் திருஎறும்பியூர் பிரான் என்று அனுபவ அருளிப்பாட்டை அறிவிக்கின்றார். தொல்லாசிரியர்களால் ஆய்ந்த முத்தமிழையும் யான் அறியேன் அதன் இலக்கணத்தையும் அறியேன். கவிகளின் திறத்தையும் அறியேன். எண்ணளா கலைகளையும் நிற்கும் அவனை அறியும் விதியிலேன். ஆயினும் எனக்கு தன்னையும் காட்டி நெறியையும் காட்டிய மாணிக்கமும் செழுஞ்சுடராகிய அவனை நான் அடையப் பெற்றேன் என்று அப்பர் அவனது அருளிப்பாட்டை வியந்து போற்றுகின்றார்.

பன்னிய செந்தமி மிழறியேன் கவியேன் மாட்டேன்
எண்ணோடு பண்ணிறைந்த கலைக ளாய
தன்னையுந்தன் திறத்தறியாப் பொறியிலேனைத்
தன்திறமும் அறிவித்து நெறியுங் காட்டி
அன்னையையும் அத்தனையும் போல அன்பாய்
அடைந்தேனைத் தொடர்ந்தென்னை யாளக் கொண்ட
தென்னெறும்பியூர் மலைக் கோயில் மாணிக்கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேன் நானே.

என் அறிவிற்கு கருத்தாயும், மனதில் நிறைந்த அக்கருத்தின் பயனாயும் ஞானப் பெருஞ்சுடராயும் அமரர்கள் ஏத்தும் அழகிய வடிவினனும்

உலகிற்கு ஒப்பற்ற வித்தானவனும் உலகம் முழுதும் நிறைந்தவனும் முதல், இடை, கடைகளாகிய தொழிலை இயற்றுபவனும் உமையொரு பாகனும் மயானத்தில் ஆடும் மாசிலா மணியாகிய திருஎறும்பியூர் மாணிக்கத்தை "சென்றடையப் பெற்றேன் நானே!" என தான் அடைந்த அருள் அனுபவத்தை அனுபவமாக அறிவிக்கிறார் அப்பரடிகள்.

கருவையென்றன் மனத்திருந்த கருத்தை ஞானக்
கடுஞ்சுடரைப் படிந்துஇடர் தமரர் ஏத்தும்
உருவையண்டத் தொடுமுதலை யோத மேவிய
யுலகில்நிறை தொழிலிறுதி நடுவாய் நின்ற
மருவைவென்ற குழல்மடவாள் பாகம் வைத்த
மயானத்து மாசிலாமணியை வாசத்
திருவெறும்பியூர் மலைமேல் மாணிக்கத்தைச்
செழுஞ்சுடரை சென்றடையப் பெற்றேன் நானே.

கோஷ்ட மூர்த்தமாக நர்த்தன விநாயகர், சங்கர நாராயணர், விஷ்ணு, துர்க்கை சந்நிதிகள் உள்ளன.

தாருகாசுரனை அழிக்கத் தேவர்கள் பிரமனை வழி கேட்டனர். பிரம்மன் சொல்லியவாறு அவர்கள் எறும்பு உருவங்கள் கொண்டு வந்தனர். அத்தேவர்கள் லிங்கத்தை வழிபடும்போது மேலுள்ள எண்ணெய்ப் பசை வழுக்கிற்று. உடனே சுவாமி புற்றுருவங் கொண்டு சொரசொரப்புடன் காணப்பட்டார். பிரம்மன் அவர்கள் வழிபாட்டை ஏற்றார் என்பது தல வரலாறு. சிவலிங்கத்தின் மீது எறும்பு ஊர்ந்த அடையாளங்கள் உள்ளன. இத்தலப் பதிகங்கள் கல்லில் பதிக்கப்பட்டுள்ளன.

4. திருப்பூந்துருத்தி

ஆற்றிடைக்குறையிலுள்ள ஊர்கள் துருத்தி எனப்படும். இத்தலம் காவிரிக்கும் குடமுருட்டிக்கும் இடையில் உள்ளதால் இப்பெயர் பெற்றது. சப்தஸ்தானத் தலங்களுள் ஒன்று. ஏழூர்த் திருவிழா நடைபெறும் தலங்களுள் இதுவும் ஒன்று. பூந்துருத்தி காடவ நம்பியின் அவதாரத்தலம். இங்கு நந்தி விலகியுள்ளது. அப்பர் உழவாரத் தொண்டு செய்த தலமாதலால் மிதிக்க அஞ்சி வெளியில் நின்ற ஞானசம்பந்தருக்கு நந்தியை விலகச் செய்து காட்சி கொடுத்த தலம். ஞானசம்பந்தரின் பல்லக்கை அப்பர் தன் தோளிற் சுமந்த தலம். இவ்விடம் சம்பந்தர்மேடு எனப்படுகின்றது. இங்கு இருவருக்கும் கோயில் உள்ளது. திருவிழாக்கள் நடைபெறுகின்றன.

அப்பர் அமைத்த – "திங்களும் ஞாயிறும் தோயும் திருமடம்" எனப்படும் திருமடம் உள்ள தலம்.

இறைவன்: புஷ்பவனேஸ்வரர், இறைவி: சௌந்தர நாயகி, தீர்த்தம்: சூரிய தீர்த்தம்.

எழில் மிக்க கச்சி ஏகம்பத்திலும, நின்றியூரிலும் மேவியவன். எனக்கு இனிமையுடையவனாக விளங்குபவன். தன்னை நினையாத வஞ்சகர் நெஞ்சில் நில்லாதவன். என்னைத் தனக்கு ஆளாக்கிக் கொண்டு என்றும் நன்மையை செய்கின்றவன். நீண்ட காதணியை உடையவனும் கொன்றையணிந்த தூயோன். இயல்பாகவே பாடல்கள் இல்லாதவன். அவனைப் பூந்துருத்தியில் கண்டதாக அப்பரடிகள் அறிவிக்கிறார்.

எனக்கென்றும் இனியானை யெம்மான் தன்னை
எழிலாரும் ஏகம்பம் மேலேயான் தன்னை
மனக்கென்றும் வருவானை வஞ்சகர் நெஞ்சில்
நில்லானை நின்றியூர் மேயான் தன்னை
தனக்கென்றும் அடியேனை யாளாக் கொண்ட
சங்கரனைச் சங்கவார் குழையான் தன்னைப்
புனக்கொன்றைத் தாரணிந்த புனிதன் தன்னைப்
பொய்யிலியைப் பூந்துருத்திக் கண்டேன் நானே!

பூந்துருத்தி பெருமான் மாத்திரைக்கண் அதாவது நொடிப்பொழுதில் நினைத்த மாத்திரத்தில் உலகமெலாம் சுற்றி அருளுபவன். உயிர்களை உய்யச் செய்ய அவ்வுலகத்தில் புகுந்து அருட் செய்பவன். புண்ணியனாகவும் புனிதனாகவும் பொயைத் தவிர்த்து மெய்யின் உருவமாய்த் திகழ்பவன் பூந்துருத்தி பெருமான் என்பதை, "தலைகொண்டு மாத்திரைக்கண் உலகமெல்லாம் புக்கானைப் புண்ணியனைப் புனிதன் தன்னை பொய்யிலியைப் பூந்துருத்திக் கண்டேன் நானே" என அப்பரடிகள் வியந்து போற்றுகின்றார்.

கருவறையின் தென்பால் தென்கயிலையும், வடபால் வட கயிலையும் உள்ளன. கோயிலின் எதிரில் உள்ள அப்பர் மடத்திலிருந்து அப்பர் பல திருத்தாண்டகங்களைப் பாடினார். மகனை அழித்த பாவத்திற்காக ஒற்றைக் காலில் நின்று தவம் செய்யும் துர்க்கையும், அமர்ந்த கோலத்தில் அப்பர் பெருமானும் பூந்துருத்தி காடவ நம்பியின் திருவுருவமும் உள்ளன. வள்ளலாரும், அருணகிரிநாதரும் பாடிய தலம்.

5. திருக்கருகாவூர்

திருக்கருகாவூர் பெருமான் மூர்த்திமானாக விளங்குதலை அப்பரடிகள் விரித்துக் காண்கிறார். எல்லாவற்றிற்கும் முதற்பொருளாயும் மூலப் பொருளாயும் விளங்குகின்றான். எல்லாவற்றிற்கும் முற்பட்ட கால

எல்லையை கடந்தவன். நற்பண்புகளுக்கு இடமாக விளங்குகின்றான். செம்மையுறு ஞாயிற்றின் சுடரும் சோதியுமாக விளங்குகிறான். வானவர்களின் கால எல்லையாகவும், கூற்றுவனைக் கோபித்தவனும் வீற்றிருக்கும் இடம் திருக்கருகாவூர் என்பதை அப்பரடிகள் சிவசோதியுள் புகுந்து அவனது அருளைப் பூரணமாகப் பெற்ற நிலையில் நின்று ஏத்துகின்றார்.

மூலனாம் மூர்த்தியாயும் முன்னே தானாம்
மூவாத மேனி முக்கண்ணி னானாம்
சீலனஞ் சேர்ந்தா ரிடர்கள் தீர்க்கும்
செல்வனாஞ் செஞ்சுடர்க் கோர் சோதி தானாம்
மாலனாம் மங்கைக் கோர் பங்கனாம்
மன்றாடியாம் வானோர் தங்கட் கெல்லாம்
காலனாய் காலனைக் காய்ந்தா னாடுங்
கண்ணாங் கருகாவூ ரெந்தை தானே!

அப்பரடிகள் "மனிதர்கள் எச்சமயத்தராய் இருப்பினும் எல்லாச் சமயங்களுக்கும் தலைவன் நம் ஈசனே" எனப் பிரகனடப்படுத்துகிறார். உயிர்கள் உய்யும் பொருட்டு துன்ப வினைகள் இருந்தால் அவற்றை ஊட்டி வினை தீர்க்கும் உபாயத்தைச் செய்பவனும் ஈசன்தன் என்பதை,

கொண்ட சமயத்தார் தேவனாகி
ஏத்தாதார்க்கு என்றும் இடரே துன்பம்
ஈவானாம் என் நெஞ்சத்துள்ளான்.

என வினைகளை நுகருமாறு சஞ்சித, பிறார்த்த வினைகளை பகிர்ந்தளித்து வினை நீக்கம் செய்யும் அருளிப்பாட்டை விளக்குகிறார் அப்பரடிகள்.

ஊர்த்துவ மகரிஷியின் சாபத்தால் நித்துவரின் மனைவி வேதிகைக்கு ஏற்பட்ட கருச்சிதைவை இறைவன் மருத்துவம் பார்த்து அவளது கருவைக் காத்ததால் கருகாவூர் எனப்பட்டது. முல்லைவனம், மாதவினம், கர்ப்பபுரி என்பன வேறுபெயர்கள். காவிரியின் தென்கரையிலுள்ள பஞ்ச ஆரண்யங்களுள் இதுவும் ஒன்று. முல்லை வனம், அவளிவணல்லூர், பாதிரி வனம், அரழைப் பெரும்பாடி, வன்னி வனம், இரும்பூளை, பூளைவனம் கொள்ளம்புதூர், வில்வ வனம் என்பன பஞ்ச ஆரண்யங்கள். இவ்வைந்தையும் முறையே வைகறை, காலை, நண்பகல், மாலை, அர்த்தயாமம் ஆகிய காலங்களில் வழிபடுவது வழக்கம். ஸகாந்தத்தில், கோத்திர வைபவக் காண்டத்தில் சனற்குமார சங்கிதையில் நாரதருக்கு சனற்குமார் கூறுவதாகவுளள பகுதியில் இத்தலச்சிறப்பு இடம் பெற்றுள்ளது.

இறைவன்: கர்ப்பபுரீஸ்வரர், இறைவி: கர்ப்பரஹூம்பிகை, தீர்த்தம்: க்ஷுகுண்டம்.

அப்பராலும், சம்பந்தராலும் பாடப்பெற்றது.

இத்தலத்தை வழிபடுவோருக்கு குறைப்பிரவசம் ஏற்படுவதில்லை. கர்ப்ப வேதனையும் மிகுதியாவதில்லை. கருவைத் தருவதும் காப்பதுமாகிய அருள்திறன் பொருந்தி அம்பாள் விளங்குகிறாள்.

இத்தலத்திற்கு தலபுராணமும், பதிற்றுப்பத்தாந்தியும், இரட்டைமணிமாலையும், நான்மணிமாலையும் உள்ளன. இத்தலத்தில் அபிடேகம் செய்த நெய்யை உண்டால் குழந்தை உண்டாகும் என்பது நம்பிக்கை.

முதலாம் இராசராசன் கல்வெட்டில் "நித்த விநோத வளநாட்டு ஆவூர்க் கூற்றத்துத் திருக்கருகாவூர்" என்றுள்ளது.

6. திருகுடமூக்கு (கும்பகோணம்-குடந்தை)

அடியார்களை அங்குநண்ணி ஆவணத்துடையான் என்ற பாடல் வரிகளால் அப்பரடிகள் அடியார்களை அடிமை சாசனம் எழுதிக் கொண்டவன் என்கிறார். "என் தாயோடு என் அப்பன் ஏழ்ஏழ்பிறவியும் அன்றே சிவனுக்கு எழுதிய ஆவணம்" என்று திருமந்திரம் சுட்டியவாறு அடியார்களை அடிமைச் சாசனம் எழுதிக் கொண்ட அருளுடையவன் எனக் கூறுகிறார் அப்பரடிகள். அவன் செந்தாமரைப்பூவின் வண்ணமாய் விளங்குபவன். பிரளய காலத்தில் உயிர்களை அடைத்து வைத்து குடத்தின் மூக்கு இருந்த இடம் என்பதால் குடமூக்கு எனப்பட்டது. ஆவணம் உடையான் என்பதற்கு சுந்தரரை ஓலை காட்டித் தடுத்தாட் கொண்டதை க் கருத்தில் கொள்ளலாம்.

பூவ ணத்தவன் புண்ணியன் நண்ணியங்கு
ஆவ ணத்துடை யான்அடி யார்களைத்
தீவ ணத்திரு நீறுமெய் பூசியோர்
கோவணத்துடை யான் குடமூக்கிலே!

அகப்பற்றும் புறப்பற்றும் நீக்கித் துறந்த துறவி அடியார்களை விளித்து அழைத்து அறைகூவல் விடுக்கின்றார். " பிதற்றுமின்! பித்தராய் பிதற்றுமின்!

ஈடுபாடுடையவராய் அவன் புகழைச் சொல்லுங்கள் பிறவி நீக்க அவனது திருவருட் செல்வத்தைப் பெறுவதற்கு அவனது இனிய திருநாமங்களைத் திரும்பத் திரும்ப ஓதுமின்! காரணம் அவன் அடியார்கள் மேல் பெரும் பித்து கொண்டவன் என்பதால் பிதற்றுமின்" என்கிறார் அப்பரடிகள்.

துறவி நெஞ்சின ராகிய தொண்டர்காள்!
பிறவி நீங்கப் பிதற்றுமின்! பித்தராய்!

என்று அழைக்கின்றார் அப்பரடிகள்.

கோயில் பெருத்தது கும்பகோணம் என்பதற்கேற்ப சைவ வைணவக் கோயில்கள் அதிகம் உடையது. இலக்கியத்தில் குடமூக்கு எனப்படுகிறது. வழக்கில் கும்பகோணம் எனவாகும். உலகப் புகழ்பெற்ற மகாமக உற்சவமும் மகா தீர்த்தமும் உள்ள தலம். இத்தீர்த்தம் 15 ஏக்கர் பரப்பு. 10 சந்நிதிகளை உடைய 9 கிணறுகளைக் கொண்டது.

பேரூழிக் காலத்தில் பரமனின் வேண்டுதலுக்கு இணங்கி இறைவன் தந்த அமுதகலசம் தங்கிய தலம். இத்தலத்தில் 14 கோயில்களும், 14 தீர்த்தங்களும் உள்ளன. குரு சிம்ம ராசியில் நிற்க, சந்திரன் கும்ப ராசியில் இருக்கும் பௌர்ணமி நாளில் மகாமகம் நடைபெறுகிறது. அமுதகும்பம் வழிந்தோடியதால் அமுதசரோருகம் எனப்படுகிறது.

மகாமக நாளில் கங்கை, சரயு, யமுனை, சரஸ்வதி, சிந்து, நர்மதை, கோதவரி, கிருஷ்ணா, காவிரி ஆகிய ஒன்பது நதிகளும் நவகன்னியர்களாக வந்து நீராடியதால் கன்னியர் தீர்த்தம் ஆயிற்று.

அமுத கும்பம் உள்ள இடம்	: கும்பேசம்
உறி சிவலிங்கமான இடம்	: சோமேசம்
வில்வ இடம்	: நாகேசம்
தேங்காய் இடம்	: அபிமுகேசம்
கும்பத்தைச் சிதைத்த இடம்	: பாணபுரேசம்
பூணூல் சிதறிய இடம்	: கௌதமீசம்

மகாமக தீர்த்தக் கரையைச் சுற்றிலும் பிரமத்தீர்த்ததேசம், முருந்தேசம், தனேசம், ரிசபேசம், பானேசம், கோணேசம், பக்தேசம், வைரதேசம், அகத்தீசம், வியாதேசம், கங்காதேசம், பிரமேசம், முத்ததீர்த்தேசம் முதலிய ஆலயங்கள் உள்ளன.

இங்குள்ள 14 தீர்த்தங்களில் தடாகங்கள் -7, கிணறுகள்-3, காவிரித்துறைகள் 4 ஆகும்.

இறைவன்: கும்பேசுரர், இறைவி: மங்களாம்பிகை, தீர்த்தம்:

சம்பந்தராலும், அப்பராலும் பாடல் பெற்றது இத்திருத்தலமாகும்.

7. திருநல்லூர்

"அவனுக்கு அடிமைப்பட்ட எனக்கு இவ்வளவு துன்பமா?" என்று நினைந்து அவனையே உருகி வழிபடும் அடியார்க்கு அந்தமும் ஆறுதலும் கூறுகிறார் அப்பரடிகள். பிரார்த்த வினையைப் பகிர்ந்து ஊட்டி அனுவிக்கச் செய்து அவ்வான்மாவைப் பற்றியுள்ள தீவினைகள் நீக்கிப் புனிதனாக்குகிறார் சுவாமி. அதனால் துன்பமும் அவனால் ஊட்டப்படுகிறது. அதன்வழி சத்திநிபாதம் பெறச் செய்து தூய்மையாக்குகின்றான். இந்த அப்பரடிகளின் தெளிவிற்குக் காரணம் தன் தலைமேல் பெருமன் திருவடி தீக்கை அருளப் பெற்றதுதான் என்பதை இத்தலப் பதிகத்தில் விளக்குகிறார். இதில் நல்லூர் பெருமானின் பேரருள் தன்மையை வியந்து போற்றுகின்றார்.

நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார்
நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார்
சினந்திருகு களிற்றுரிவைப் போர்வை வைத்தார்
செழுமதியின் தளிர்வைத்தார் சிறந்து வானோர்
இனந்துருவி மணிமகுடத் தேறத் துற்ற
இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப் பில்கி
நனைந்தனைய திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே!

இப்பதிகத்தில் பதினொரு பாடல்களிலும் நன்னலத்து திருவடி, நாடேறுதிருவடி, நல்லருளல் திருவடி, நண்ணரிய திருவடி, நற்றவர்சேர் திருவடி, நாறுமலர்த் திருவடி, நலங்கிளருந்திருவடி, நன்றருளுந் திருவடி, நாம் பரவும் திருவடி, என பெருமானின் திருவடியை நினைந்து போற்றி அத்திருவடி தீக்கை அருளியதை மறவாமல் அனைத்துப் பாடல்களிலும் பதிவு செய்துள்ளார். சைவத்தில் திருவடி தீக்கை என்பது, ஞானம் பெறுதற்குரிய உரிய நிலையைப் பெருமான் தகுதி உள்ள ஆன்மாக்களுக்கு அருளுவதை சாத்திரங்கள் சொல்லும். அவ்வனுபவத்தை அப்பரடிகள் நினைந்து நினைந்து உருகிப் பதிவு செய்து போற்றுகிறார்.

கோச்செங்கட் சோழனால் கட்டப்பட்ட மாடக்கோயில் அப்பர் சுவாமிகளுக்குத் திருவடி காட்டிய தலம். அமர்நீதியாரை ஆட்கொண்ட தலம்.

ஆதிசேடனுக்கும், வாயுக்கும் தமக்குள் யார் பெரியவர் எனப் போட்டி. ஆதிசேடன் கயிலையை ஆயிரம் மகுடங்களால் பற்றினான். வாயுதேவன் சண்டமாருதமாக மலையை அசைத்தான். ஆதிசேடன் தன் பிடியைச் சற்று தளர்த்த, அப்போது வாயு இரு சிகரங்களைப் பெயர்த்து தென்னாட்டிற்கு கொண்டு வந்து திருநல்லூரியிலும், ஆவூரிலும் விடுத்தான். அம்மலைச்

சிகரமே நல்லூர் ஆகும். சுந்தரகிரி எனப் பெயர். தென்காயிலாய எனவும் வழங்குவர்.

அப்பர் திருச்சித்திமுற்றத்து சிவக்கொழுந்தீசரை வழிபட்டு கோடுவாய் முக்கு என்ற பதிகம் பாடி தனக்கு திருவடி தீட்சை வேண்ட அவரை நல்லூருக்கு வாவென பணித்து, உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம் என்றருளி அவர் சென்னிமிசை பாதமலர் சூட்டியருளிய தலம். இன்றும் இத்தலத்தில் அடியார்களுக்கு திருவடி சூட்டப்பெறுகிறது. அமர்நீதி நாயனார் துலா ஏறிய போது காட்சி கொடுத்த தலம்.

இறைவன்: பஞ்சவர்ணேசுவரர், இறைவி: திரிபுரசுந்தரி, தீர்த்தம்: சகாரத தீர்த்தம்.

அப்பராலும் சம்பந்தராலும் பாடல் பெற்ற தலமுமாகும்.

மலை மீதுள்ள பஞ்சவர்ணேஸ்வரின் சிவலிங்கத் திருமேனி ஆறு நாழிகைக்கு ஒருமுறை ஒரு நாளில் ஐந்துமுறை நிறம் மாறுகிறது. இதனால் பஞ்சவர்ணேஸ்வரர் என்ற பெயர். பிருங்கி முனிவர் வண்டு வடிவாய் வழிபட்ட துளைகள் உள்ளன.

இங்குள்ள சப்த சாகர தீர்த்தத்தில் நீராடினால் உடற்பிணி நீங்கும். குந்திதேவி கர்ணனைப் பெட்டியில் வைத்து விட்ட பாவத்திற்காக பிராயச்சித்தமாக உரோமசர முனிவர் சொற்படி மாசிமக நாளான நாளை ஏழு கடல்களில் நீராட முடியாமல் போனபோது, இறைவன் இத்தீர்த்தத்தினை ஏழு கடலாகப் பாவித்து நீராடப் பணித்தார். அவ்வாறு நீராடி பாவம் தீர்க்கப் பெற்றாள் என்பதால் சப்தசாகர தீர்த்தம் என வழங்கலாயிற்று.

8. திருக்கடவூர்

விதியினால் இடவல்லார் யார்? வேதாகம முறைப்படி வைகறைப் பொழுதில் நீராடி ஆர்வத்தோடு பெருமானிடத்தில் பக்தி கொண்டு உள்ளத்தில் அன்பு கொண்டு நல்ல விளக்குகளையும், தூபங்களையும் விருப்பத்தோடு இட்டு வழிபடுபடுபவர்கள் இடவல்லார் ஆவர். இவர்கள் பொருள் வலிமை, துணை வலிமை, மன வலிமையுடையவர்கள். இவர்களுக்குப் பெருமான் கரும்பு போன்று இனிக்கும் தன்மையுடையவன்.

இவர்கள் அப்பெருமானாகிய பித்தனுக்கு பத்தர் ஆகியவர்கள். கரும்பின் கட்டி சிறுகச் சிறுக ஊறிக் கலந்து நொடிப்பொழுதில் இனிமை தருதலைப் போல அப்பெருமானை உள்ளத்தால் நினைப்பவர்களுக்கு

இனிமையாகிய பேரின்பத்தை நல்குவன் எனப் பெருமானின் இனிமைத் தன்மையை அப்பரடிகள் இத்தலத்தில் வியந்து போற்றுகிறார்.

பெரும் புலர் காலை மூழ்கிப் பித்தர்க்குப் பத்தர் ஆகி
அரும்பொடு மலர்கள் கொண்டாங்கு ஆர்வத்தை உள்ளே வைத்து
விரும்பிநல் விளக்கு தூபம் விதியினால் இடவல்லார்க்குக்
கரும்பினில் கட்டிபோல்வார் கடவூர் வீரட்டனாரே!

என்பது அப்பாடல்.

திருவைந்தெழுத்தை ஓதினால் போதும், எமபயம் நீங்கும் என்பதை அப்பர் எடுத்துரைக்கின்றார். உயிரைக்கடைத்தேற வைக்கும் பதமான திருவைந்தெழுத்தை ஓதிய மார்க்கண்டேயரைக் காப்பாற்றியவர் பெருமான். இத்தலச் செய்தியாகிய இதை,

பதத்தெழு மந்திரம் அஞ்செழுத்து ஓதி பரிவினொடும்
இதத்தெழு மாணிதன் இன்னுயிர் உண்ண வெகுண்டு அடர்ந்த
கதத்தெழு காலனைக் கண்குருதி புனல் ஆறொழுக
உதைத்தெழு சேவடியான்கட வூர் உறைஉத்தமனே!

என்ற பாடலில் விளக்குகிறார்.

அட்ட வீரட்டத் தலங்களுள் ஒன்று. மார்க்கண்டேயருக்காக இறைவன் எமனை உதைத்த தலம். திருக்கடவூர் வீரட்டம், கடபுரி, வில்வாரண்யம், பிரமாந்திரத் தலம். பாபவிமோசன புண்ணிய வர்த்தம் என்பன வேறு பெயர்கள். பிரமனுக்கு உபதேசம் செய்த தலம்.

குங்கலியக்கலய நாயனார், காரி நாயனார் வாழ்ந்த தலம். அபிராமி அந்தாதி அருளப் பெற்ற தலம்.

இறைவன்: அமிர்தகடேசுவரர், இறைவி: அபிராமி, தீர்த்தம்: அமிர்த தீர்த்தம்.

இங்குள்ள காலசம்காரமூர்த்தி காலனை சம்சாரம் செய்த மூர்த்த தலமாகும். பெரிய கம்பீரமான தோற்றம். திருமேனியில் எமன் வீசிய தழும்பு உள்ளது. மார்க்கண்டேயர் இறையருள் பெற வழிபட்ட 108 தலங்களுள் இது 108 வது தலம். மார்க்கண்டேயர் கங்கை நீருடன் மலர்களால் அர்ச்சித்த தலம். அதனால் பிஞ்சிலாரண்யம் எனப் பெயர் பெற்றது.

தன்னையே துதித்து தன் பெயரையே பெயராக்கிக் கொண்ட ஒரு அடியவனுக்கு அருள்புரிந்து அவர்வழி உலகிற்கு அபிராமி அந்தாதி கிடைக்கச் செய்த தலம்.

அறுபது, எண்பது நிறைவு சாந்தி வைபங்கள் இங்கு செய்து கொள்வது சிறப்புடையது.

காலசம்கார மூர்த்தியின் மேல் வெள்ளிப்பிரமை, பக்கத்தில் உள்ள வெள்ளிப்பேழையில் உடையவர் மரகதலிங்கம் உள்ளது. இம்மூர்த்தியின் திருவடிக்கீழ் மார்க்கண்டேயர் கைக்கூப்பிய நிலையில் இருப்பது, எமன் உதை பெற்று கீழே விழுந்து கிடப்பது ஆகிய காட்சிகள் பீடத்தினடியில் வெள்ளித்தட்டால் மறைத்து வைக்கப்பட்டுள்ளது. ஆராதனை நடக்கும்போது தரிசிக்கலாம்.

9. திருவிடைமருதூர்

சோழ நாட்டு தென்கரைத் தலம். இடைமருது எனவும் வடமொழியில் மத்தியார்ச்சுனம் எனவும் வழங்கப்படும். வடக்கில் ஸ்ரீ சைலத்திற்கும் தெற்கில் திருப்புடைமருதூர்(புடார்சுனம்) இவை இரண்டிற்கும் இடையில் இருப்பதால் இடைமருதாயிற்று என்பர். வரகுண பாண்டியனுக்கு பிரமகத்தி நீங்கிய தலம். மகாலிங்கத் தலம் என்றும் புகழ்வர். இத்திருக்கோயிலைச் சுற்றி ஒன்பது பரிவாரத் தலங்கள் அமைந்துள்ளன. திருவலஞ்சுழி, சுவாமிமலை, தில்லை, சூரியனார் கோயில், ஆலங்குடி, சீகாழி, திருவாவடுதுறை, திருவாரூர், திருவாய்ப்பாடி என்பன ஒன்பது தலங்கள்.

இறைவன்: மகாலிங்கேஸ்வரர், இறைவி: பிருகத்சுந்தரகுஜாம்பிகை, தீர்த்தம்: காவிரி. மூவர் பாடல் பெற்றது.

அஸ்வமேத பிரகாரம், கொடுமுடி பிரகாரம், பிரளவப் பிரகாரம், உள் பிரகாரம், வீதியையும் சேர்த்தால் ஐந்து பிரகாரங்களாக தெரியும். திருவிடைமருதூர் தெருவழகு என்பர். நான்கு வீதியிலும் நான்கு விநாயகர் கோயில் இருக்க மத்தியில் மகாலிங்கேஸ்வரர் வீற்றிருக்கிறார். பஞ்சலிங்கத் தலம் என்றும் கூறுவர். தலமரமாகிய மருதமரத்தின் கீழ் கட்டுண்ட கண்ணனின் உருவம் உள்ளது.

அம்பிகைக்கு வழிபடும் முறையை பெருமானே தன்னைத் தானே வழிபட்டுக் காட்டிய தலம். இதற்கு அம்பிகை தயவு இருப்பதாக இன்றும் தபசு காட்சி நடைபெற்று வருகிறது. தைப்பூசத்தில் சுவாமி காவிரிக்கு எழுந்தருளி ஐராவணத்துறையில் தீர்த்தம் கொடுப்பது இன்றும் சிறப்பாக நடைபெறுகிறது. கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் பாடிய தலபுராணமும் மீனாட்சி சுந்தரம் பிள்ளை பாடிய உலாவும் உள்ளது.

பெருமான் மந்திரப் பொருளா? அம்மந்திரங்களின் தத்துவமாக விளங்குபவனா? என்ற கேள்விக்கு இத்தல பாடலில் பதில் அறிவிக்கிறார்

அப்பரடிகள்.

சூலப் படையுடையார் தாமே போலும்
சுடர்திங்கள் கண்ணியுடையார் போலும்
மாலை மகிழ்ந் தொருபால் வைத்தார் போலும்
மந்திரமும் தந்திரமும் ஆனார் போலும்

என்று பெருமான் மந்திரமாகவும் தந்திரமாகவும் விளங்குவதைப் பதிவு செய்கிறார். அப்பெருமான் பிரார்த்த வினைனைய அனுபவிக்கிற போதே ஆகான்மிகமாகிய மேல் வினைகளை பற்றாதவாறு தீர்க்கும் விகிர்தனாக விளங்குகிறான் என்பதை,

வேலைக் கடல் நஞ்சமுண்டார் போலும்
மேல்வினைகள் தீர்க்கும் விகிர்தர் போலும்
ஏலக் கமழ் குழலாள்பாகர் போலும்
இடைமருது மேவிய ஈசனாரே!

இடைமருது பதிகப் பாடலில் அருளியுள்ளார்.

பெருமான் முப்பத்தாறு தத்துவங்களாகவும் அறம்,பொருள், இன்பம், வீடு என நான்கு நிலைகளாகவும் பேறு, இழப்பு, துன்பம், பிணி, மூப்பு, சாக்காடு என ஆறாகவும் ஞானத்திற்கு ஏதுவாகிய கேட்டல், கேட்பித்தல், ஓதல், ஓதுவித்தல், சிந்தித்தல் என ஐந்தாகவும், எருக்கு, நாயுருவி, அரசு, வன்னி, தருப்பை என ஐந்தாகவும், திருவைந்தெழுத்தாகவும், தேவகதி, மக்கட்கதி, விலங்கின்கதி, நரககதி, பரகதி என ஐந்து கதியாகவும் விளங்கும் பெருமான் இடைமருதில் வீற்றிருக்கிறார் என்பதை,

பிரியாத குணமுயிர்கட் கஞ்சோ டஞ்சாய்ப்
பிரிவுடைய குணம்பேசிற் பத்தோ டொன்றாய்
விரியாத குணமொருகால் நான்கே என்பர்
விரிவிலாக் குணநாட்டத் தாறேயென்பர்
தெரிவாய குணமஞ்சும் சமிதை யஞ்சும்
பதமஞ்சுவே அதியஞ்சுமுச் செப்பினாரும்
எரியாத தாமரைமே லியங்கினாரும்
இடைமருது மேவிய ஈசனாரே!

என்ற பாடலில் விளக்குகிறார்.

10. திருநள்ளாறு

இத்தலம் சப்த விடங்கத் தலங்களுள் ஒன்று. திருஞானசம்பந்தர் அனல்வாதத்தில் எழுதியிட்ட "போகமார்ந்த பூண்முலையாள்" என்ற

பச்சைப்பதிகம் என்றழைக்கப்படும் பதிகத்திற்குரிய தலமாகும்.

நளன் தமயந்தியை மணந்து கொண்டான். தேவர்கள் இதைப் புறக்கணித்தார்கள். அதனால் சனிபகவான் நளனிடம் கோபம் கொண்டான். நளனிடம் வேறு குறை இன்மையால் 12 ஆண்டுகள கழித்து காலில் நீர்பட்டும் படாமலும் கழுவிச் சென்ற குற்றத்திற்காக அவனைப் பற்றினார். பின்னர் நளன் நாடாளத் தொடங்கினான். சனியின் வேகம் தணிய தீர்த்த யாத்திர சென்றான் நளன். பரத்வாஜ முனிவர் திருநள்ளாறு செல்லப் பணித்தார். நளன் திருநள்ளாறு சென்று தீர்த்தமுண்டாக்கி நீராடி உள்ளே சென்றபோது சனி உள்ளே நுழைய அஞ்சி வெளியே தங்கினார். இதனால் அச்சனி பகவனுக்கு இங்கு தனிச் சந்நிதி உள்ளது.

இத்தலத்தில் சனிபகவான் அனுக்கிரக மூர்த்தியாக உள்ளார். "நள்ளாறா என நம் வினை நாமே" என்பார் அப்பரடிகள். சனிக்கு மந்தன, சனைச்சரன் வேறு பெயர்கள் உண்டு. சனிபகவான் 4 கரங்களையுடையவர். காகம் வாகனம்.

இறைவன்: தர்பாண்யேசுவரர், இறைவி: பிராணாம்பிகை, தீர்த்தம்: நளதீர்த்தம்.

இடையன் கோயிலுக்குக் கொடுத்த பாலை கணக்கன் வீட்டிற்கு பயன்படுத்தினான். கணக்கன் இடையனை அச்சுறுத்தினான். அப்போது இறைவன் இடையனைக் காக்க சூலத்தை ஏவினார். இச்சூலத்திற்கு வழிவிடவே இங்குள்ள பலிபீடம் சற்று விலகியுள்ளது. இடையனுக்குக் காட்சி தந்து அருளினான்.

இரக்கமே அடி நிலை அறம்!

இறைவன் நமக்கு அடியார் குலம் என்னும் பெருமையை வழங்கி நம்மை பற்றியுள்ள மும்மல அழுக்குகளை நீக்குபவன். பொய்யின் நடுக்கத்தைப் போக்கி இரக்கத்தை அடிப்படையாகக் கொண்டு அறத்தின் வழியிலே வாழ்வோர்க்கெல்லாம் நன்மையை நல்கும் பூரணனாய் விளங்குபவன் நள்ளாற்று நாயகன். "அவனை நான் நினைக்கப் பெற்றேனே" என்று உருகிப் பாடி அருளுகின்றார் அப்பரடிகள்.

குலங்கொடுத்து கோள்நீக்க வல்லான் தன்னைக்
குலவரையின் மடப்பாவை யிடப்பா லானை
மலங்கெடுத்து மாதீர்த்தம் ஆட்டிக் கொண்ட
மறையவனைப் பிறைதவழ் செஞ் சடையினானைச்

சலங்கெடுத்துத் தயாமூல தனம மென்னுந்
தத்துவத்தின் வழிநின்று தாழ்ந்தோர்க் கெல்லாம்
நலங் கொடுக்கும் நம்பியை நள்ளாற் றானை
நானடியேன் நினைக்கப்பெற்று உய்ந்த வாறே!

என்ற பாடலில் தான் நினைந்து உய்ந்ததைப் பதிவு செய்கிறார் அப்பரடிகள். அடியார்கள் விரும்பி அடைய வேண்டிய சிவலோக நெறியை அவனே உணர்த்தியருளுபவன் என்பதை,

சேதித்த திருவடியைச் செல்ல நல்ல
சிவலோக நெறி வகுத்துக் காட்டுவானை

என்று தெரிவிக்கிறார்.

11. திருவீழிமிழலை

சோழ நாட்டுத் தென்கரைத் தலம். பூகைலாசம், கல்யாணபுரம், பஞ்சாக்கரபுரம், தஷிணகாசி, ஷண்மங்கலத்தலம், சுவேதகானனம், ஆகாச நகரம், பனசாரண்யம், நேத்தரார்ப்பணபுரம், தேஜ்நீவனம் என பத்து பெயர்களை கொண்ட தலம்.

இறைவன்: நேத்திரார்ப்பணேசுவரர், இறைவி: சுந்தரகுஜாம்பிகை, தீர்த்தம்: விஷ்ணு தீர்த்தம்.

மூவர், சேந்தனார், அருணகிரியார் பாடிய தலம். ஞானசம்பந்தருக்கும், அப்பரடிகளுக்கும் படிக்காசு நல்கி சிவனடியார்களுக்கு அமுதூட்டிய தலம். காசு அருளிய பலிபீடங்கள் கிழக்கிலும், மேற்கிலும் உள்ளன. அருகில் இருவரின் உருவங்கள் உள்ளன.

இறைவன் ஞானசம்பந்தருக்குத் தாம் சீகாழியில் இருக்கும் திருக்கோலத்தை இங்குள்ள விண்ணிழி விமானத்தில் காட்டியருளிய தலம். தில்லை மூவாயிரவர் என்பது போல இத்தலத்தில் வாழ்ந்த ஐந்நூற்று அந்தணர்கள் எனப் போற்றப் பெறுவர். திருமால் கொணரப் பெற்ற விண்ணிழி விமானத்தில் இருக்கிறார் என்பது சம்பந்தரின், "அன்று அரிவழிபட்டு இழிச்சிய விமானத்து இறைவன்" என்ற வரியால் தெளியலாம். மூவரின் பின் இறைவன் உமையோடு திருமணக் கோலமுள்ளனது. இத்தலத்தில் உமையை மணம் செய்தற்கு உரிய வாயிலில் அரசாணைக்காலும் வெளியில் பந்தக்கால் தூணும் உள்ளது. கல்யாண சுந்தரர் மாப்பிள்ளையாகக் காட்சி தருகிறார்.

அருகில் படிக்காசுகளை விற்ற இடம் ஐயன்பேட்டை உள்ளது. இங்கு சுவாமி தராசு கையோடும் உமை படியை பிடித்த கையோடும் காட்சி

தருகின்றனர். தலவிருட்சம் யுகத்துக்கு ஒன்றாகச் சொல்லப்படுகிறது. திருமணம் ஆவதற்கு அடியார்களால் வழிபடும் தலமாக உள்ளது.

சிவபூசை செய்யும் போது திருநீற்றினை நிறைவாகப் பூசிச் செய்யவேண்டும் என்பதை இத்தல பாடலில் தெரிவிக்கிறார். திருமால் திருநீற்றினை நிறையப் பூசி ஆயிரம் மலர்கொண்டு அர்ச்சிக்க, ஒன்று குறைய, கண்ணை மலராக அப்ப, அப்போது சக்கரப்படை அருளினான் என்பதையும் திருமாலால் விண்ணிலிருந்து கொணரப் பெற்ற விமானத்தில் இறைவன் வீற்றிருக்கிறான் என்பதையும் அப்பரடிகள் இத்தலப் பாடலில் பதிவு செய்கிறார்.

நீற்றினை நிறையப் பூசி
நித்தல் ஆயிரம் பூக்கொண்டு
ஏற்றுழி ஒருநாளொன்று
குறையக் கண்ணிறைய விட்ட
ஆற்றலுக்கு ஆழிநல்கி
அவன் கொணர்ந்து இழிச்சுங் கோயில்
வீற்றிருந்து அளிப்பர் வீழி
மிழலையுள் விகிர்தரே!

என்பது அப்பாடல். மேலும் பெருமான் விண்ணில் ஒலியாக ஒருவராய் காற்றில் ஒலி, ஊறுமாகி இருவராய், தீயில் ஒலி,ஊறு, ஒளியாகி மூவராய், நீரில் ஒலி,ஊறு,ஒளி, சுவையாகி நால்வராய், மண்ணில் ஒலி,ஊறு,ஒளி,சுவை, நாற்றம் என ஐந்து பண்பினராய் விளங்குவதை,

மண்ணகத்து ஐவர் நீரில் நால்வர் தீஅதனில்மூவர்
விண்ணகத்து ஒருவர் வீழி மிழலையுள் விகிர்தனாரே!

என்ற வரிகளால் அறிவிக்கின்றார் அப்பரடிகள்.

திருச்சிற்றம்பலம்

3. அப்பர் தேவாரத்தில் பாண்டி நாட்டுத் திருத்தலங்கள்

முனைவர். சொ. சேதுபதி,
துணைப் பேராசிரியர், புதுச்சேரி.

"எடுத்த மானிடப் பிறப்பே நமக்கு இனிய பரிசு. அதனை வறிதே அழிய இடங்கொடாது தொண்டு செய்து உய்க" என்று ஊர்கள்தோறும் சென்று தமிழ் பாடி உணர்த்திக்காட்டிய உத்தமர் திருநாவுக்கரசர். "வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின்" என்பது அவர் வாக்கமுதம்.

தன்னைத்தான் மதியாதபோது பிறர் எங்ஙனம் மதிப்பர்? தன்னைத்தான் உணர்தல் அதன் முதற்படி. தான் யார் என்பதை உணரத் தன் காலத்துச் சமயங்களில் உள்ளுறையும் உண்மைகளில் தோய்ந்து அவை உரைத்த ஒழுங்குகளில் ஒன்றி, தன் நிலையும் தமிழர்தம் முன் நிலையும் முழுதுணர்ந்து சிவனருளால் தன்னைத் தன்னிலிருந்து விடுதலை செய்து கொண்ட தகைமையாளர். அதனைத் தமிழர்களுக்குத் தயக்கமின்றி எடுத்துரைத்த குருநாதர்.

எப்பிறப்பாயினும் இறையுணர்வு சித்திக்கப்பெற்றால் அப்பிறப்பே நற்பிறப்பு என்பதை ஆழ உணர்ந்துரைத்த சீலர். அவர்தாம் நீள்நடந்த நெறியாளர். தொண்டால் பாரத முழுதளந்த பாவலர். முத்துவிழாக் கண்ட முதுபெரும் பக்தர். தொண்டை மண்டலம் தந்த இத்தூயர், தொண்டால் தமிழகமெங்கும் வலம் வந்து தமிழ்பாடிய தண்ணளியர். அவர் தண் பாண்டி நாட்டிற்கு வந்து தமிழ்பாடித் துதித்த மன்பெருமைத் தடத்தை நினைவு கூர்வது இங்கு நோக்கம்.

நெடும்பயணம் மேற்கொண்ட அருளாளர் அப்பர்

அப்பர் பெருமான் சென்று பாடிய அருள்தலங்கள் பலவாகும். விரிவும் விரைவும் மிக்க இவர்தம் அருள் பயணங்களில் எவ்வித ஊர்த்துணையையும் ஏற்றுக்கொண்டதில்லை. நேரிற்சென்று பாடுதலன்றி, தொலைவில் இருந்து நினைவில் இருத்திப் பாடினாரும் அல்லர். தமிழக எல்லை கடந்து வடபகுதிக் கயிலை வரை நெடும்பயணம் மேற்கொண்ட இவர் தனியொரு தலத்தைத் தலைமையதாய்க் கொண்டும் சென்றேகவில்லை.

நாவரசர் யாத்திரை மேற்கொள்ளும்போது ஒரு தலத்திற்குச் செல்லும் வழியின் மருங்கில் உள்ள தலங்களை விட்டுவிட்டு மீண்டும் ஒருமுறை சுற்றி வளைத்து யாத்திரை மேற்கொண்டு விடுபட்ட தலங்களை,

வந்து தரிசித்துள்ளார். யாத்திரையின் இடையில், திருவதிகை, தில்லை, திருநல்லூர், திருவாரூர், திருவீழிமிழலை, திருமறைக்காடு, திருப்பூந்துருத்தி, திருப்புகலூர் ஆகிய திருத்தலங்களைத் தவிர்த்து, பிற பகுதிகளில் அதிக நாட்கள் தங்கியதில்லை. மேலும் திருநல்லூர், திருப்பழனம், திருவாவடுதுறை, திருவாரூர் ஆகிய தலங்களைத் தவிர முன்பு தரிசித்த தலங்களுக்கு மீண்டும் பெரும்பாலும் சென்றதில்லை. ஆதலின் இவரது யாத்திரை விரைவு மிக்கதாய்க் காணப்படுகிறது. (முனைவர். சிவ. திருச்சிற்றம்பலம் (ப.ஆ), ஸ்ரீதிருநாவுக்கரசர் தேவாரம், நான்காம் திருமுறை ப.27)

சமகாலத்தவராகிய சம்பந்தரும், அப்பரும் தம் வாழ்நாளில், நான்கு முறை சந்தித்திருக்கின்றனர். இவற்றுள் மூன்றாம் சந்திப்பிற்குப்பின், திருப்புகலூர்- திருமறைக்காடு வரை சேர்ந்து அருள்பயணம் மேற்கொள்கின்றனர்.

திருமறைக்காடு வழிபாட்டுக்குப் பின்னர், திருஞானசம்பந்தர் பாண்டிநாட்டுப் பயணம் மேற்கொள்கிறார். அப்பரோ, சோழநாடு, கொங்குநாடு, நடுநாடு, தொண்டைநாடு ஆகியவற்றிற்கெல்லாம் பயணம் சென்றுவந்து, திருக்கயிலாயப் பயணமும் மேற்கொள்கிறார். பின்னர் சிவனருளால் யாதும் சுவடுபடாமல் ஐயாறு அடைந்து திருக்கயிலாயக் காட்சி கண்டு மகிழ்கிறார். அதன்பின், திருப்பூந்துருத்தியில் திருமடம் நிறுவி நிலை கொள்கிறார்.

இந்த ஐந்தாண்டு கால இடைவெளியில் திருஞானசம்பந்தர் தென்பாண்டி நாட்டிற் ப்யணம் செய்து பாடித்தரிசித்த பதிகள் இருபது. ஏறத்தாழ பரத கண்டத்தின் பல பகுதிகளுக்கும் பயணம் செய்து, அப்பர் பிரான் பாடிப்பரவிய தலங்கள் மிகப்பல. அதிலும், இவ்வைந்து ஆண்டுகளில் திருப்பூந்துருத்தி வாசத்திற்குப் பாதி இரண்டரை ஆண்டுகளை வைத்துக் கொண்டால் எஞ்சிய இரண்டரை ஆண்டுகளே இவரது பரத கண்ட யாத்திரைக்கு ஆன காலமாக அறியப்படும்பொழுது இவரது யாத்திரையின் விரைவு புலப்படுவதாகும். (மேலது.ப,28)

பாண்டி நாட்டுப் பயணத்திறக்கான பின்புலம்

மதுரையில் அமணர் ஆதிக்கம் போக்கிச் சைவநெறி தழைக்க வைத்த சம்பந்தப் பெருமான், திருப்பூந்துருத்திக்கு வருகை தருகிறார். அவரை எதிர்கொண்டு காணத் தன்னை ஒளித்துச் சம்பந்தர் எழுந்தருளிய முத்துப்பல்லக்கைச் சுமந்து பேரன்பு காட்டுகின்ற அப்பரை, “எங்குற்றார்?” எனச் சம்பந்தர் வினவுகிறார்.

"உம்அடியேன் உம்அடிகள் தாங்கிவரும் பெருவாழ்வு வந்தெய்தப் பெற்றிங்குற்றேன்" (பெ.பு.396)

என்கிறார் அப்பர். உடன் பல்லக்கினின்று இறங்கி அப்பரை இவர் வணங்கவும், அப்பர் இவரை வணங்கவும் உடனின்ற தொண்டரெலாம் தொழுதார்த்தார் என்று சித்திரித்துக்காட்டுவார் சேக்கிழார்.

பின்னர் இருவரது பயண அனுபவங்களும் பகிர்ந்துகொள்ளப் பெறுகின்றன. அதுகேட்டுவந்த அப்பர்பெருமான், பாண்டிநாடேகவும், சம்பந்தப் பெருமான் தொண்டைநாடேகவும் விழைகின்றனர். விரைகின்றனர்.

பாண்டிநாடே 'தமிழ்நாடு'

பதியெழுவறிவாப் பழங்குடியர் பலர் வாழும் மூதூர் மதுரைக்குத் திருவாலவாய் என்ற திருப்பெயர் உண்டு. நின்றநீர் நெடுமாறன் மங்கையர்க் கரசியாம் பாண்டிமாதேவியோடும் அமைச்சர் குலச்சிறையாரோடும் பரிபாலித்துவந்த பாண்டிநாட்டின் தலைமை நகரம். சைவப்பேரெழுச்சி கண்ட புண்ணியத் திருத்தலம். அதுகாண விழைந்த அப்பர்பிரான்தான் இருந்த திருப்பூந்துருத்தியில் இருந்து தென்திசை ஏகுகிறார். செல்லப்போவது பாண்டி நாடு. அதனைச் சேக்கிழார் தமிழ்நாடு என்றே சுட்டுகிறார்.

பண்புடைய பாண்டிமா தேவியார் தம்பரிவும்
நண்புடைய குலச்சிறையார் பெருமையும்ஞானத் தலைவர்
எண்பெருக வுரைத்தருள எல்லையில் சீர்வாகீசர்
மண்குலவு தமிழ்நாடு காண்பதற்கு மனங்கொண்டார். (பெ.பு.400)

என்கிறது பெரியபுராணம்

அப்பர் பெருமான், பாண்டித்திருப்பதிகளுள் திருப்புத்தூர், திருவாலவாய் (மதுரை), திருப்பூவணம், திருவிராமேச்சுரம் ஆகிய தலங்களுக்குச் சென்று தமிழ் பாடிப் பின்னர், நெல்வேலி, திருக்கானப்பேர் (காளையார்கோவில்) முதலான பதிகளுக்கும் சென்று பாடிப் பணிந்து மகிழ்கின்றார். இந்தச் செய்தியைப் பாடும் இடத்தும், சேக்கிழார் பாண்டி நாட்டைத் தமிழ்நாடு என்றே சுட்டி மகிழ்கின்றார்.

பொங்குத் தமிழ்த் திருநாட்டுப் புறம்பணைசூழ் நெல்வேலி
செங்கண்விடை யார்மன்னுந் திருக்கானப்பேர் முதலா
எங்குநிகழ் தானங்கள் எல்லாம்புக் கிறைஞ்சுவார் (பெ.பு.410)

என்கிறார். அதன் பிறகே, பொன்னிவள நாட்டின் வளநகர்கள் பல பணிந்து,

பூம்புகலூர் ஏகுகிறார். இந்தச் செய்தியைச் சொல்கிறபோதும், சேக்கிழார் பாண்டி நாட்டைத் தமிழ்நாடு என்றே சுட்டுகிறார். அப்பாடல் பின்வருமாறு,

தேம்பொழியும் செந்தமிழ்நாட்டினில் எங்குஞ் சென்றிறைஞ்சிப்
பாம்பணிவார் தமைப்பணிவார்பொன்னிநாடது அணைந்து
வாம்புனல்சூழ் வளநகர்கள் பின்னும்போய் வணங்கியே
பூம்புகலூர் வந்தடைந்தார் பொய்ப்பாசம் போக்குவார் (பெ.பு.432)

ஆக, தண்பாண்டிநாடு சேக்கிழார் வாக்கில் தமிழ்நாடாகவே துலங்குவதைப் பார்க்க முடிகிறது.

பாண்டி நாட்டில் அப்பர் தரிசித்த அருள்தலங்கள்

பாண்டித் திருநாட்டில் அப்பர்பெருமான் முதன்முதலாக அடியெடுத்து வைத்த தலம், திருப்புத்தூர். அதனைத் தொடர்ந்து திருவாலவாய் (மதுரை)க்குச் செல்கிறார். பின்னர், திருப்பூவணம் சென்று பாடிப் பரவி, திருவிராமேச்சுரம் சென்றதன் பின் திருநெல்வேலி, திருக்கானப்பேர் முதலிய பாண்டித் திருத்தலங்கள் பலவற்றுக்கும் செல்கிறார். சென்று,

தொழுதுபல வகையாலும் சொற்றொடை வண்டமிழ்பாடி
வழுவில் திருப்பணிசெய்து மனங்கசிவுற் றெப்பொழுதும்
ஒழுகியபண் பொழிபுனலும் ஓவாது சிவன்தாள்கள்
தழுவியசிந் தையில் உணர்வுந் தங்கியநீர் மையிற்சரித்தார்

(பு.பா.411)

என்கிறார் சேக்கிழார். இவற்றுள் இவர்தம் அருட்பாடல்கள் கிடைக்கப் பெற்றவை, திருப்புத்தூர்த் திருத்தாண்டகம் (6.076) திருவாலவாய் திருத்தாண்டகம் (6,019), “வேதியா” எனத் தொடங்கும் திருவாலவாய்ப் பதிகம் (4,062) திருஇராமேச்சுரத் தேவாரத் திருப்பதிகம் (4,061) ஆகியனவாகும். ஆனால் சேக்கிழார் வாக்குப்படி, பாண்டித்தலங்கள் பலவற்றிற்கும் சென்று பாமாலை புனைந்தேத்தியிருக்கிறார் அப்பர்பெருமான். ஆனால் கிட்டாது போயின. காலக்கொடுமை.

திருவாலவாய் அமர்ந்த செஞ்சுடரை செழும்பொருள்நூல்
தருவானை நேரிசையும் தாண்டகமும் முதலான
பெருவாய்மைத் தமிழ் பாடிப் பேணு திருப்பணிசெய்து
மருவார் தம்புரம் எரித்தார் பூவணத்தை வந்தடைந்தார் (பு.பா-406)

என்று சேக்கிழார் பாடுவதன் வாயிலாக, திருஆலவாய்த் திருத்தலத்தில்

அமர்ந்த செழுஞ்சுடரை, அப்பர்பெருமான் பாடிய பாடல்களுள் பலவென்பது தெளிவு.

திருப்புத்தூர்த் திருத்தலம்

அப்பர்பெருமான் தென்பாண்டி நாட்டிற்கேகியகாலை முதன்முதலில் புகுந்த இடம் இத்திருத்தலம். இது மூவரும் வந்து வாழ்த்தி வணங்கிய திருத்தலம். திருஞானசம்பந்தரும், அப்பரும் பாடிய பதிகங்கள் இத்திருத்தலத்திற்கு உண்டு. அருணகிரிநாதரும் வந்து திருப்புகழ் இசைத்திருக்கிறார். இந்த ஊரில் பதினான்கிற்கும் மேற்பட்ட திருமடங்கள் அமைந்து சிவநெறிக்கும் செந்தமிழுக்கும் தொண்டு செய்த செய்தியைத் திருக்கோயில் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இயற்கை எழில் சூழ்ந்த அருள்தலமாகிய இது, வள்ளல் பாரி ஆண்ட வளமிகு பறம்பு நாட்டில் உள்ள திருநகர். மருதவளம் மிக்க அருள்நகர். அதனால்தான் வயல்சூழ் திருப்புத்தூர் என்றே வருணிக்கிறார் அப்பர்.

இயற்கை வளமும் இனிய கொடை நலமும்

"திருந்துவயல் புடைதழுவு திருப்புத்தூர்" என்று அவர் பாடியதனால், நாற்புறமும் வயல்சூழ நடுவிருக்கும் அருள் நகர் என்பது புலனாகிறது. இப்பகுதியில் அதனைச் 'செய்' என்று குறிப்பது வழக்கம். செப்பமாகத் திருத்தம் செய்யப்பெற்ற வயல் என்பது அதன் உள்பொருள். அதனால்தான் திருந்துவயல் என்று தெளிவுப்படுத்துகிறது இப்பதிகத் தொடர். (நன்செய், புன்செய் என்று எழுத்தளவிலும் நஞ்சை, புஞ்சை என்று பேச்சு வழக்கிலும் இச் செய் இன்றும் இப்பகுதியில் வழக்கிலுள்ளளது) நன்னீர்ப் பிடிப்புள்ள பகுதி இது. ஆதலின் நன்செய் வயல் சூழ்ந்த மருதச்செழிப்பு இந்நகர்க்கு உண்டு. அதனால்தான், சேம்பாடு வயல் புடைசூழ் திருப்புத்தூர் என்றும் அவர் பாடுகின்றார். இங்கே, நாற்புறமும் வயல் சூழ்ந்த இவ்வளநகரில், விளைபயிர்கள் தனை மேயும் எருமைகள் கரைமீதேறி நீர் நிலைகளில் படிவதைக் கண்ணுற்ற அப்பர், "வளம்கொள்மேதி சேடேறி மடுப்படியும் திருப்புத்தூர்" என்று சித்திரப்படுத்துகிறார். (மேதி- எருமை. சேடு-மேடு. மடு-நீர்நிலை) எப்போதும் மழையைத் தருவிக்கும் பொழில்கள் ஆகிய காடுகளும் நிறைந்த கழனிசூழ் பகுதி இது என்பதால்தான் இங்கு நீர்வளம். அதுகருதியே, திருமருவு பொழில்புடைசூழ் திருப்புத்தூர் என்றும், செறிபொழில்சூழ் மணிமாடத் திருப்புத்தூர் என்றும் பாடுகிறார் அப்பர் பெருமான். மணிமாடங்கள் கொண்டதும், தேரோடும் நெடிய வீதிகள் கொண்டதும் ஆகிய திருப்புத்தூரில் உலாவரும் காற்று குளிர் தென்றற் காற்றாகிறது என்று அனுபவித்துப் பாடுகிறார் அப்பர். "அந்தண் தென்றல் திக்கணைந்து வருமருங்கில் "திருப்புத்தூர்" என்றும் "சீர்மருவு திருப்புத்தூர்" என்றும்,

"தேராரும் நெடுவீதித் திருப்புத்தூர்" என்றும் பாடுவதால், இந்நகரின் எழில் வளமும் பொருள் நலமும் தெளிவுறப் புலனாகிறது. இது கருதியே,

நெய்தல் ஆம்பல் கழுநீர் மலர்ந்து எங்கும்
செய்கண் மல்கு சிவனார் திருப்புத்தூர்

என்று திருஞானசம்பந்தரும் இந்நகரைச் சுட்டுகிறார்.

சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடிக்கு மேற்கே அமைந்துள்ள இத்திருத்தலம் தற்போது குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்தின் அருளாளுகைக்கு உட்பட்டதாகும். இத்தலத்தில் எழுந்தருள் பாலிக்கும் இறைவன் திருத்தளிநாதர். "தான் கண்ட அப்பெருமானைக் காண்" என்று பாடல்கள் தோறும்,

திருப்புத்தூரில் திருத்தளியான் காண் அவன் என்சிந்தை யானே.

என திருத்தாண்டகத்தின் ஒவ்வொரு பாடலின் நிறைவிலும் பாடிக் காட்டுகிறார் அப்பர்பெருமான். எப்போதும் தன் சிந்தைவிட்டகலாத செம்பொற்சோதியைத் திருப்புத்தூர்த் தலகத்தில் திருத்தளியானாகக் கண்டு மகிழ்கிற அப்பர்,

புவனம் ஏழும் விரிந்துபல உயிராகி விளங்கி னான்காண்

என்று காட்டுவது சிறப்பு. அதுமட்டுமின்றி, அறிவரிய நுண்பொருள்களாயினான் என்றும் ஆயிரம்பேருடையவன் என்றும் அடையாளப்படுத்துவது கூர்ந்த அருள்மதியின் புலப்பாடு எனல் தகும்.

மேலும் சிந்தையுள் நிறைந்த அச்சிவனைப் பல்வேறு கோணங்களில் படம் பிடித்துக் காட்டுகிறார் அவர். அவற்றுள் ஒன்று, நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி நற்கனகக்கிழி தருமிக்கு அருளியவனாய திறம்.

அப்பர் பெருமான் மதுரைத்திருத்தலம் காண விரைந்தவர், வழிபடும் தலமாகிய திருப்புத்தூரில் தங்கித் திருத்தளியானைச் சிந்தையில் இருத்திப் பார்க்கிறார். இந்தக் காட்சிக்கு அணுக்கமாக இன்னொரு காட்சி, இயற்கைக் காட்சி அவர்க்குக் கட்புலனாகிறது. அது கொன்றையும் காந்தளும் பூத்துச் சொரிகின்ற காட்சி, கொன்றை பொன்னிறம் உடையது. காந்தளோ ஏந்தும் கரம் ஒத்தது. ஆக, கொன்றை சொரிகின்ற பொன்னை காந்தள் கரமேந்திப் பெறுகிறது. இது இயற்கை. இந்த இயற்கை இறைமையின் அருள்திறத்தை அப்பரிடத்தில் ஒப்புமைப்படுத்தச் சொல்கிறது. அவன்தான் ஆயிரம் பேருடையவனும் நுண்பொருள்களும் ஆயினவனும், புவனம் ஏழும் விரிந்து பல உயிராகி விளங்குகிறவனும் ஆகத் திகழ்கிறான் அல்லவா? அவன் அருள்திறம், இந்த கொன்றை மலரிலும் காந்தள் மலரிலும் இணைந்து புதிய

ஒளியைப் பாய்ச்சுகிறது. இவ்விரு மலர்களுக்கும் இடையில் ஒரு கொடி இருப்பது போல இருந்து படக்கென்று விலகுகிறது. மின்னலைப்போல், அது உமையம்மையை நினைவுப்படுத்திய அந்தக் கணத்தில், அதன் பின்னணியில் திருக்கொடுங்குன்ற மலையும் அவருக்குத் தெரிந்ததுபோலும். அது "கொடுங்குன்றம்" அல்லவா? இறையவன் மலையை வில்லாக வளைத்தவன் அல்லவா? இந்தச் சிந்தனைகள் எல்லாம் சிந்தையுள் நிறைந்த திருத்தளியானின் அருட்காட்சியாகவே அப்பர்பெருமானின் தமிழுக்குப் புலப்படப்பாட்டு, பின்வருமாறு அவரிடமிருந்து புறப்படுகிறது.

மின்காட்டுங் கொடிமருங்குல் உமையாட் கென்றும்
விருப்பவன்காண் பொருப்புவலிச் சிலைக்கை யோன்காண்
நன்பாட்டுப் புலவனாய்ச் சங்க மேறி
நற்கனகக் கிழிதருமிக் கருளி னோன்காண்
பொன்கட்டக் கடிக்கொன்றை மருங்கே நின்ற
புனக்காந்தட கைகாட்டக் கண்டு வண்டு
தென்காட்டுஞ் செழும்புறவின் திருப்புத் தூரில்
திருத்தளியான் காண் அவன்என் சிந்தை யானே

இப்பாடலுக்கு தருமை ஆதீனப்புலவர் மகாவித்வான் சி. அருணைவடிவேலு முதலியார் விளக்கக் குறிப்புரையில் மேற்சுட்டிய விளக்கத்திற்கு வேண்டிய அரணாகி விளங்குகின்றது.

'தருமி' என்னும் அந்தணச் சிறுவனுக்கு, 'கொங்குதேர் வாழ்க்கை' (குறுந்தொகை-2) என்னும் அகப்பாட்டைப் பாடி ஈந்து, அதனை அறியாது குற்றங்கூறிய நக்கீரர் முன் புலவனாய்ச் சங்கத்திற்சென்று வாதிட்டு, பாட்டுக் குற்றம் அற்றதாதலையும், அதனைக் குற்றங் கூறியதே குற்றமாதலையும், தெளிவித்து பாண்டியன் வைத்திருந்த பொற்கிழியை அவ்வந்தணச்சிறுவன் பெறச் செய்து மறைந்தமையின், 'நன்பாட்டுப்புலவனாய்ச் சங்கம் ஏறி, நற்கனகக் கிழி தருமிக்கு அளினோன் காண்' என்று அருளிச்செய்தார்.

கனகம்- பொன். கிழி- முடிப்பு. இவ்வரலாற்றின் விரிவை, திருவிளையாடற் புராணத்துட் காண்க. இவ்வருட் செயலை ஈண்டு, அருளிச் செய்தமையால், தருமி என்பவன் இத்தலப் பெருமானை வழிபட்டோனாகவும் கருத இடம் உண்டு. கொன்றை பொன்காட்ட என்க. கடி-வாசனை.

கொன்றையும் காந்தளும் பொன்னையும், கையையும் காட்டுதல் தம்தம் பூக்களின் வண்ணத்தானும், வண்ணத்தொடு வடிவத்தானும் என்க. கொன்றை சொரிகின்ற பொன்னை, காந்தள் கையேந்தி வாங்கும் என அணிந்துரைத்தல் கருத்து. புனம் -காடு. கொன்றையையும் காந்தளையும்

இயைத்து அருளிச் செய்தமையின், செழும்புறவு என்றது. முல்லையும் குறிஞ்சியும் மயங்கிய நிலத்தை என்க. தென் - இசை. இசை பாடுவது வண்டாக, அதற்குச் சொரியப்படும் பொன்னைக் காந்தள் பெறுகின்ற திருப்புத்தூர் என்றது. பாட்டை ஆக்கினோன் சிவபிரானாக, அதற்குப் பாண்டியனால் வைக்கப்பட்ட பொற்கிழியைத் தருமி பெற்றான் என்பதனைக் தோற்றுவிக்கும் குறிப்பு மொழியாய் நின்று, சிவபிரானது அமைதி (திருத்தி யையும், அருள் நிலையையும் விளக்குவதாம் என்க. (திருநாவுக்கரசர் தேவாரம்- ஆறாந்திருமுறை, ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமையாதீனம். ப.1097)

இவ்விளக்கம் இன்னும் சில நுண்ணிய உணர்வுகளை நம்முள் கிளர்த்துகின்றது.

அப்பர் பெருமான் சங்கத்தமிழ் நன்காய்ந்தவர். அவர்தம் அருட்பாடல்கள் பலவற்றிலும் அதற்கான தரவுகளைக் காண இயலும். அவர் வள்ளல் பாரி குறித்தும், அவனைப் பாடிய கபிலர் பாடல்கள் குறித்தும் நன்கறிந்திருப்பது உறுதி.

நல்லவும் தீயவும் அல்ல குவி இணர்ப்
புல்லிலை எருக்கம் ஆயினும் உடையவை
கடவுள் பேணேம் என்னா ஆங்கு
மடவர் மெல்லியர் செல்லினும்
கடவன், பாரி கை வண்மையே (புறம்-106)

என்ற பாடலைத் தொடர்ந்து,

பூத்தலை யறாஅப் புனைகொடி முல்லை
நாத்தழும் பிருப்பப் பாடா தாயினும்
கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த
பரந்தோங்கு சிறப்பிற் பாரி (புறம்-200)

யின் நினைவும், அவருக்கு வந்திருக்க வேண்டும். கூடவே, 'யானே, பரிசிலன் மன்னும் அந்தணன்' என்று கபிலர் தன்னைச் சொல்லிய இடத்தில், தருமி என்ற அந்தணனின் நினைவும் வந்திருக்கக்கூடும்.

இவற்றையெல்லாம் உள்ளடக்கிய நுண்ணுணர்வுகளை, மின்காட்டும் கொடி, பொருப்பு, காந்தள், கொன்றை, நன்பாட்டுப்புலவன், சங்கம் உள்ளிட்ட சொற்கள் எழுப்புகின்றன. இவையாவும், இறையனார் இயற்றிய, கொங்குதேர் வாழ்க்கை என்னும் குறுந்தொகைப் பாடலோடு இயைந்திருப்பதும், திருப்புத்தூர் குறிஞ்சியும், முல்லையும், மருதமும் ஆகிய

முந்நிலமாகத் திகழ்வதும் கூடி, அப்பரை, இப்படிப் பாட வைத்திருக்கிறது போலும்.

இப்படியெல்லாம் இணைத்துச் சிந்திக்க, அவர்தம் விரிந்துபல உயிராகி விளங்கினான் காண் என்று காட்டும் தொடரும். "அறிவரிய நுண்பொருள்க ளாயினான்" என்று காட்டும் தொடரும் நமக்கு இடமளிக்கின்றன. இன்னும் இமதன விரிக்க எத்தனையோ நுண்பொருள்களை விளைவிக்கும் ஆற்றல் அப்பர் பெருமானின் அருட்பாடலுக்கு உண்டு.

வாழையடி வாழையென....

இது கருதியே, பறம்புமலையாம் பிரான்மலையில் பாரிக்குச் சங்கத்திழ் விழா எடுத்த தவத்திரு குன்றக்குடி அடிகளார், சமயத் தமிழுக்குத் திருப்புத்தூரில் ஆண்டுதோறும் விழா எடுத்தார். அத்தோடு, திருப்புத்தூர்த் தமிழ்ச்சங்கமும் அமைத்தார். அதற்கான காரண, காரியங்களை, திருப்புத்தூர்த் தமிழ்ச்சங்கத் தொடக்க விழாவில், (18.015.1967) பின்வருமாறு எடுத்துரைக்கிறார் அடிகள்பிரான்.

தமிழ்ப் புலவர்களுக்கு மழையென விளங்கிய வள்ளல் பாரி ஆட்சி செய்த பறம்பு நாட்டு எல்லையில் இருப்பது திருப்புத்தூர். இந்த வட்டத்தில் சங்ககாலத் தமிழ்ச்சான்றோர்கள் வாழ்ந்த ஊர்கள் பலப்பல உண்டு. எனவே திருப்புத்தூர் வழியாகவே தமிழ்ச்சூழலில் சிறந்தது என்று குறிப்பிடுவதில் மகிழ்ச்சி அடைகின்றோம். அதனால் அன்றோ அப்பரடிகள் இந்த ஊர் இறைவனைப் பாடும் போது "நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி நற்கனகக் கிழிதருமிக்கு அருளினோன் காண்" என்று நினைந்து பாடுகிறார். இன்னும் நமக்கு நினைவூட்டுகிறார். ஆதலால் திருப்புத்தூரில் தமிழ்ச் சங்கம் திருத்தளிநாதர் கோவிலில் அமைவது சாலவும் பொருத்தம் என்றே நம்புகின்றோம். திருப்புத்தூர்த் தமிழ்ச் சங்கம் குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்தின் திருப்புத்தூர்த் திருத்தளிநாதர் ஆயலத்தின் துணை அமைப்பாகத் தொடர்ந்து விளங்கும். துணை அமைப்பு என்று குறிப்பிடுவது நிதி- நிர்வாகத்தைப் பொறுத்ததே ஆம். கருத்துக்களில் திருப்புத்தூர் தமிழ்ச் சங்கப் புலவர் அவைக்குப் பாண்டியர், புலவர் அவைக்குக் வழங்கிய உரிமையும் ஆலவாயண்ணல் தமிழ் அவைக்கு வழங்கிய உரிமையும் உண்டு என்பதைக் குறிப்பிட விரும்புகிறோம். (தவத்திரு குன்றக்குடி அடிகளார் நூல் வரிசை -13, ப.570) இந்த மரபு. வாழையடி வாழையென இன்றும் நின்று நிலவுதற்குத் திருத்தளியான் தண்ணளி பெருங்காரணம் என்பது உறுதி. இத்திருத்தலத்தில், அடிகள்பெருமான் நடத்திய பொற்கிழிக் கவிதைப் போட்டியில் பங்கேற்று இருமுறை சிறப்புப் பரிசில் பெற்ற அனுபவமும்

இக்கட்டுரையாளனாகிய எனக்கு உண்டு என்பதையும் நன்றியோடு பதிவு செய்கிறேன்.

இனி, பொருண்மை கருதி மதுரை நகர் புகலாம்.

மதுரை சேர்ந்த வாகீசர்

திருப்புத்தூர்த் திருத்தலத்தில் இருந்து திருத்தளியானைச் சிந்தைக்கினியனாய்க் கண்டு கவிபாடிய அப்பர்பெருமான் அங்கிருந்து கிளம்பி மதுரை நகர் சேர்கிறார். உயர்ந்த மதில், அதனினும் உயர்ந்து பறக்கும் மீன்கொடி சேக்கிழாருக்குச் சைவத்தமிழ் கொடியாகத் தெரிந்ததுபோலும், கதிர்மதியம் தீண்டுகொடி என்று சிறப்பித்துப் பாடுகிறார்.

பாண்டிநாட்டெழுந்தருளும் பான்மையராய்த் தென்றிசைபோக்
காண்டகைய திருப்புத்தூர் பணிந்தேத்திக் கதிர்மதியம்
தீண்டுகொடி மதில் மதுரைத் திருஆலவாய் சேர்ந்தார் (பெ.பு.402)

நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறித் தமிழாய்ந்த அங்கணர் கோயிலை வலம் வந்து வணங்கி மகிழ்கிறார். அதுபோதில் அவருள் இருந்து முகிழ்த்தெழுந்த தாண்டவம். 'முளைத்தானை' எனத் தொடங்குகிறது.

இங்கே ஒரு சிறப்பையும் நினைவுகூர்தல் நல்லது. மதுரையில் உள்ள இலிங்கத் திருமேனி. தானே தோன்றிய திருமேனி. (சுயம்புலிங்கம்). தானே முனைத்தெழுந்த தயாபரனைக் கண்டதும், தென்கூடல் திருவாலவாய்ச் சிவனடியே சிந்திக்கப்பெற்ற சீலரான அப்பருக்குள் முளைத்தெழுந்த சொல், 'முளைத்தானை' என்பது. அது அப்போது அவருள் முளைத்தது. ஆனால் அவர் கண்ட இலிங்கத்திருமேனி எப்போது முளைத்தது? அவன் ஆதிசிவன் அல்லவா? அதனால், எல்லார்க்கும் முன்னே தோன்றி அடுத்தடுத்துச் சொற்றொடர்கள் அடுக்கிவந்து பாடலாகின்ற அழகை இத்திருத்தாண்டகத்தில் பார்க்கலாம். இதில் இன்னும் நயம்படப் பொருள் காண்பார், வித்வான் அருணைவடிவேலு முதலியார். எல்லார்க்கும் எனச் சிறப்புடைய உயர்திணைமேல் வைத்து அருளிச் செய்தாராயினும், எல்லாப்பொருட்கும் என்பதே திருக்குறிப்பாகக் கொள்க. எல்லாப் பொருட்கும் முன்னே தோன்றி முளைத்தமையாவது, அவற்றின் தோற்றத்திற்கெல்லாம் தானே நிமித்த காரணனாய் முதற்கண் நின்றமை. இனி இதற்கு, ஏனைய தலங்களில் உள்ள இலிங்க மூர்த்திகட்கெல்லாம் முன்னே தோன்றி முளைத்த, தான்றோன்றியாகிய (சுயம்புவாகிய) இலிங்கமூர்த்தி எனவும் உரைப்பர். (மேலது.ப.555) என்கிறார்.

இவன் இத்திருத்தலத்தில் மூலவனாகவும், மூத்தவனாகவும் இருந்த போதிலும், மூவாமேனி கொண்டிலங்குபவனாக வீற்றிருக்கிறான் என்று காட்டுவது கவியழகு. காரணம், சம்பந்தபெருமான் கண்டபோதும், தான் வந்தெய்திப் பணிந்தபோதும், இத்திருத்தாண்டகத்தை ஓதி யானும், நீங்களும் நம் பின்வருஞ் சந்ததியும் பாடித் தொழும்போதும் அப்பரமனது திருமேனி அன்றுள வண்ணமே என்றும் திகழும் அல்லவா? அதனால் மூவாமேனி என்று முளைத்தெழுகிறது அப்பர்தம் அருள் வாக்கு. அதுமட்டுமா, அப்பெருமானின் திருமேனி எழுதரிய திருமேனி. நஞ்சுண்டு அமுதீந்த நயத்தக்க தேவனை, தென்கூடல் திருவாலவாய்த் திருநகரில் கண்டு சிவனடியே சிந்திக்கப்பெற்றேன் நானே என்று மகிழ்ந்து பாடுகிறார் அப்பர்.

மூவனை, மூர்த்தியை, மூவாமேனி உடையானை,
மூஉலகும தானே எங்கும்
பாவனை, பாவம் அறுப்பான் தன்னை படி
எழுதல் ஆகாத மங்கையோடும்
மேவனை, விண்ணோர் நடுங்கக் கண்டு
விரிகடலின் நஞ்சு உண்டு அமுதம் ஈந்த
தேவனை, தென்கூடல்திரு ஆலவா அய்ச்
சிவன் அடியே சிந்திக்கப் பெற்றேன், நானே.

இப்பாடல்தான்,

'ஒருவன் திருவுள் ளத்திலழ கொழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிரோ வியமே' என்று மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழில் குமரகுருபரரை எழுதிப்பார்க்க வைத்தது போலும். திருப்புத்தூர்த்திருத்தலத்துத் திருத்தளிநாதரைச் சிந்தையுள் வைத்த அப்பர்பெருமான் மதுரை வரை அந்த அருளுணர்வில் திளைத்தப்படியே நடந்து வந்திருக்கிறார். அவர் சிந்தையெல்லாம் இனிக் காணப்போகும் மதுரைக் கடவுள் மீது நிலைகொண்டிருக்கிறது. அவன் எப்படியெல்லாம் இருப்பான் என்று கற்பனை கலந்த பத்திமையோடு புத்தி ஒருநிலைப்பட்ட உணர்வில் திளைத்தப்படியே இருந்ததால், முளைத்தெழுந்த திருமேனியைக் கண்டதும், புளகமுற, அவனடியையே இதுகாறும் சிந்திக்க நேர்ந்ததும், அத்தகு பெற்றினை அவன் அருளியதும் நினைவில் மலர, சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே என்று முடிப்புத் தந்து இத்திருத்தாண்டகம் முழுவதையும் பாடிப் பணிகிறார் அவர்.

அதில் பாடல்தோறும் "தென்கூடல் திருவாலவாய்ச் சிவன்" என்றே சுட்டப் பெறுகிறான் கூடலழகன்.

'கூடல்' என்பது மதுரை நகரத்திற்கும் ஆலவாய் என்பது அங்குள்ள திருக்கோயிலுக்கும் பெயர். திருக்கோயிலின் பெயராகிய ஆலவாய் என்பதே பின்னர் நகரத்திற்கு ஆகி வழங்கிற்று. 'தென்கூடல்' என்பது, செய்யுள் நெறியாகிய இனச்சுட்டில்லா அடை மேலனவற்றோடியைய, சிவன் என்பதில் தொகுத்தலாய் நின்ற இரண்டனுருபு விரித்து, 'அடியே' என்னும் பிரிநிலை ஏகாரத்தை அதனுடன் கூட்டுக. அவ்வேகாரம் மேல்நின்ற ஐயுருபுகளோடும் இயையும். 'சிந்திக்க' என்னும் வினையெச்சம், 'சிந்தித்தல்' என்னும் தொழிற்பெயர்த் தன்மையதாய் நின்றது. இவ்வாறு நிற்றல் வழக்கினுட் பயின்று வருவதேயாம். இது, 'வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய' (தொல்.சொல்.457) என்னும் விதியானே அமையும். 'சிவனை அடிசிந்தித்தல்' என்பது, 'அரசனை அடி பணிதல்' என்பது போலக் கொள்க. 'பெற்றேன்' என்றது. அப்பேற்றின் அருமை உணர நின்றது. எனவே, 'முளைத்தானை' என்பது முதலாக வகுத்துக் கூறிய பலவற்றிற்கும் அவனது அருமையை உணர்த்துதலே கருத்தாயிற்று. (மேலது.ப.555) என்று இலக்கண விளக்கத்தோடு இப்பாடலுக்கு உரை நல்கி மகிழ்கிறார் அருணை வடிவேலு முதலியார்.

தெண்ணிலவு தென்கூடல் என்ற தொடர். தெளிந்த ஞானம் உடையவர்கள் பலரும் தங்கியிருக்கும் தென்கூடல் எனப்பொருள் தருவதால், ஈங்கு, சங்கம் வைத்துத் தமிழாய்ந்த தரம் பெறப்படுகிறது.

'கண்ணோர் நெற்றித் தீத்திரள்' என்று சிவனைக் குறிக்கும் சொல்லாட்சி. நக்கீரனை நோக்கி நெற்றிக்கண் காட்டிய திறத்தையும் குறிப்பாக உணர்த்துகிறது எனப் பொருள் கொள்ள இடமளிக்கிறது. இத்திருத்தாண்டகம். இல்லறத்தார்க்கும், துறவறத்தார்க்கும் நல்லருள் பாலிக்கின்ற ஆலவாய் அண்ணலைத் தன்னுணர்வுந்தப் பாடிய அருட்பாடல் 'துறந்தார்க்குத் தூநெறியாய் நின்றான் தன்னை' என்று தொடங்குகின்றது. அதில் மற்றொரு பற்றில்லா அடியேற்கு என்று தன்னை உளப்படுத்திப் பாடுகிறார் அப்பர். இத்திருத்தலத்தில் இவரை வரவேற்று மகிழ்ந்தவர்கள் மூவர். அவர்கள் பாண்டிமாதேவியாரும் கூன்நிமிர்ந்த தென்னவனும், குலச்சிறையாரும் ஆவர். பொதுவாக மன்னவனை முன்னும் பெண்ணரசியை அடுத்தும் அமைச்சரை உடனும் உரைப்பது மரபு. ஆனால் சேக்கிழார், முன்னரே பாண்டிமாதேவியாரைக் குறிக்கிறார். காரணத்தை அந்தப்பாடலே காட்டுகிறது.

சீர்திகழும் பாண்டிமா தேவியார் திருநீற்றின்
சார்வடையக் கூன்நிமிர்ந்த தென்னவனார் தம்முடனே
பார்பரவுங் குலச்சிறையார் வாகீசர் தமைப்பணிவுற்று
ஆரகிலாக் காதல்மிக அடிபோற்ற அங்கிருந்தார் (பெ.பு.405)

எப்போதும் அப்பர்பெருமானைப் போற்றி வணங்குவதற்கும், உரியன தந்து விருந்தோம்பல் பொருட்டும், பாண்டிமாதேவியாரும், தென்னவ மன்னனும் அமைச்சர் குலச்சிறையாரும் ஒருங்குநின்ற பாங்கைச் சேக்கிழார். சித்திரித்துக் காட்டுகிறார். அதனால், அப்பர்பெருமான் அங்கு மேலும் சில நாட்கள் கூடுதலாக இருந்து தமிழ்பாடித் திருத்தொண்டு புரிந்து மகிழ்ந்திருந்தமை தெரிகிறது. அதுசமயம் அவர் பாடிய பல பாடல்கள் கிடைத்தில. இருப்பினும் அவர் மதுரை வளநகர் குறித்து உரைத்த பதிவுகள் விரித்துக் காண உதவியிருக்கும். ஆனாலும் கூடுதலாக ஒரு பதிகம் கிடைத்திருப்பது நம் பேறு எனலாம். பாடல்தோறும் 'ஆலவாயில் அப்பனே அருள் செயாயே' என்று வேண்டித் துதிக்கிறார் அப்பர்.

எல்லாவுயிர்க்கும் தந்தை அவன் ஆதலின் 'அப்பன்' எனச் சுட்டுகிறார். இங்கு, ஆலவாய் என்பதற்குப் பின்வருமாறு பெருவிளக்கம் செய்கிறார் சி. அருணைவடிவேலு முதலியார். "ஆலமரத்தின் கீழ் இருந்து அருளுந்திறம் காட்டுதலும்" இத் தொடர்க்குப் பொருந்திவரக் காணலாம்.

ஆலவாயில் ஆலமரத்தின்கீழ், இச்சுவாமிகள் அருளிய அடைவு திருத்தாண்டகத்தில் (தி.6, ப.71 பா.7) நெய்தல் வாயில், முல்லைவாயில், ஞாழல்வாயில், மதுரை நகர் ஆலவாயில், புனவாயில், குடவாயில், குணவாயில் என்றவற்றை நோக்கின், திருவிளையாடற் புராணத்திலே திருவாலவாய் ஆன படலத்திற் (19 -26 பா) கூறிய பெயர்க்காரணம் எத்தகையது என்றும் உணரலாம். வாயும் வாயிலும் ஒன்றோ? முல்லை வாயில், ஞாழல் வாயில் முதலியவற்றிலுள்ள 'வாயில்' என்பது வாயாகிய உறுப்பினை குறிக்குமோ? ஆலவாயிலும் ஞாழல் வாயிலும் மரத்தைக் குறித்து வந்த பெயராதலை இந்நாயனார் திருவாக்கைக் கொண்டு நன்குணரலாகாதோ? 'வாயில் புகுவார்' என்று அத் திருத்தாண்டகம் உணர்த்தும் ஒன்றே, ஆலம் (நஞ்சு. அது) பாம்பிற்கு ஆகு பெயராய், வாலை வாயில் வைத்து எல்லை காட்டிற்று என்றதைக் கட்டு என்று காட்டும். இத்திருப்பாடலிலும் 'ஆலவாயில் அப்பனே' என்றதன்றி, 'ஆலவாய் என்னாமை அறிக' (திருநாவுக்கரசர் தேவாரம், நான்காம் திருமுறை, ஞானசம்பந்தப் பதிப்பகம், தருமையாதீன வெளியீடு) என்பது அவர்தம் விளக்கம். இவ்வாறு,

திருவால வாய்அமர்ந்த செஞ்சுடரைச் செழும்பொருள்நூல்
தருவானை நேரிசையும் - தாண்டகமும் முதலான
பெருவாய்மைத் தமிழ்பாடிப் பேணுதிருப் பணிசெய்து
மருவார்தம் புரம் எரித்தார் பூவணத்தை வந்தடைந்தார் (பெ.பு)

அப்பர் என்கிறார் தெய்வச் சேக்கிழார்.

பொழில் திகழும் பூவணம் வந்த புண்ணியர்

ஆலவாய் அண்ணலைப் பணிந்தேத்திய பிறகு, அப்பர்பெருமான் வந்தடைந்த பாண்டி நாட்டுத் திருத்தலம் திருப்பூவணம் ஆகும். இதுவும் பொழில் நலம் சார்ந்த திருத்தலம். இது வைகையாற்றின் கரையில் அமைந்திருக்கிறது. இங்கு அப்பருக்குச் சிவபெருமான் நேருறக்காட்சி அளிக்கிறான். அதனைக் கண்ணுற்ற சிலிர்ப்பில் சிவனவன் தோன்றிய பாங்கு துலக்கமுறத் திருத்தாண்டகத்தில் பாடிக்காட்டுகிறார் அப்பர்.

வடிவேறு திரிசூலந் தோன்றுந் தோன்றும்
வளர்சடைமேல்இளமதியந் தோன்றுந் தோன்றுந்
கடியேறு கமழ்கொன்றைக் கண்ணி தோன்றுங்
காதில்வெண் குழைதோடு கலந்து தோன்றும்
எழில்திகழுந் திருமுடியு மிலங்கித் தோன்றும்
பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே

என வளர்கிறது அப்பர்தம் அருட்பாடல்கள். அதில் ஒன்பதாவது பாடலில் (6.18.9) இத்திருத்தலத்தில் சிவபெருமான் நின்ற திறத்தையும் பதிவு செய்கிறார். அப்பாடலில் "மணியார் வைகைத்திருக்கோட்டில் நின்றதோர் திறமுந்தோன்றும்" என்று அவர் பாடியருளியதால், இது மணிவாசகப் பெருமான் வரலாற்றோடும், வந்திக்கிழவியின் பிட்டுக்காய்ப் பரமன் மண்சுமந்த வரலாற்றோடும் தொடர்புடையதாகக் கருதுவாரும் உண்டு. ஆனால், இதனை மறுக்கிறார் க. வெள்ளைவாரணனார்.

'மணியார் வைகைத் திருக்கோடு' என்பது மணிகள் நிறைந்த வைகையாற்றின் அழகிய கரை யென்னும் பொருள் தருவதாய் அக் கரையிலமைந்த திருப்பூவணத்திருக்கோயிலைக் குறித்து நின்றது. திருப்பூவணத்திறைவர் வையைக்கரையிலே தோன்றித் தமக்குக் காட்சி வழங்கிய செய்தியைத் திருநாவுக்கரசர் இத் தொடராற் குறிப்பிடுகின்றாரெனக் கொள்வதே இத்திருத்தாண்டகம் பாடப்பெற்ற செவ்விக்குப் பொருத்தமுடையதாகும். இஃதன்றிப் பிட்டுக்கு மண் சுமந்த திருவிளையாடலைக் குறித்தற்குரிய சொல்லமைப்பெதுவும் இத்தொடரிற் காணப்படவில்லை. ஆகவே இத்தொடரிற் பிட்டுக்கு மண்சுமந்த திருவிளையாடல் குறிக்கப்பட்டதென்பார் கூற்று நாவுக்கரசர் வரலாற்று முரண்பட்டதாதல் நன்கு பெறப்படும். (க.வெள்ளைவாரணனார், பன்னிரு திருமுறை வரலாறு, இரண்டாம் பகுதி ப.86) என்பது அவர்தரும் தெளிவு.

கொடிமாடம் நிலவுதிருப் பூவணத்துக் கோயிலினுள்
நெடியானுக் கறிவரியார் நேர்தோன்றக் கண்டிறைஞ்சி

வடிவேறு திரிசூலத்தாண்டகத்தால் வழுத்திப் போய்
பொழிநீடு திருமேனிப் புனதர்ப்பதி பிற் பணிவார் (பெ.பு.407)

என்று இத்திருத்தல வழிபாட்டை அப்பர் பாடி முடித்த திறத்தைப் பாடிக் காட்டுவார் சேக்கிழர். இப்பாடல் வழி, திருப்பூவணம் கொடிமாடம் நிலவுகிற தலமாக விளங்குவதை அறிய முடிகின்றது. இதன்பின்னர் இவர் சென்று தொழ நினைத்த திருத்தலம் திருவிராமச்சுரம் என்பதாகும்.

அது தென்னிலங்கை மன்னன் இராவணனின் பத்துத் தலைகளையும் துணித்த இராமனின் பிரமஹத்தி தோஷத்தை நீக்கிய தலம்.

தென்னிலங்கை இராவணன்தன் சிரம் ஈரைந் தும்துணித்த
மன்னவனாம் இராமனுக்கு வரும்பெரும்பா தகந்தீர்த்த
பிஞ்ஞகனைத் தொழுவதற்கு நினைந்துபோய் பெருமகிழ்ச்சி
துன்னிமனங் கரைந்துருகத் தொழுதெழுந்தார் சொல்லரசர்.

(பெ.பு.408)

என்று பாடுகிறது பெரியபுராணம்.

திருவிராமேச்சுரம் கண்ட திருநாவுக்கரசர்

திருப்பூவணநாதரை வழிபட்ட பின்னர், அப்பர் சென்று சேர்ந்த அருள்தலம் திருவிராமேச்சுரம்.

தென்னிலங்கை அரக்கரைக் கொன்ற பிரமஹத்தி தோஷம் நீங்க, இராமன் சிவபெருமானை வணங்கிய தலம் என்பதால், இதற்கு திரு இராம ஈச்சுரம் எனப்பெயர். இராமனைப் பற்றியும் தென்னிலங்கை அரக்கர் பற்றியும் பலப்படப்பேசுகிறது இத்தாண்டகம்.

திருமாலின் அவதாரங்களுள் ஒன்றான இராமபிரான், நேசம்மிக்க அன்பினால் அலர்கள் கொண்டு செய்த கோயில் இது. இராமன் இப்போதுள்ளது போன்ற பெரிய திருக்கோயிலை அப்போதே கட்டி வழிபட்டதாகக் கொள்ளல் பொருந்தாது. முதன் முதலிற் பூங்கோயில் கட்டிப் போற்றியதாகக் கொள்வதே பொருத்தம் என்கிறார் அருணை வடிவேலு முதலியார். மேலும் "சொல்வேந்தர் அங்குற்ற காலத்தில் இருந்த நிலையிலேயே இராமபிரான் வழிபடத் தொடங்கிய நாளில் இருந்ததெனல் அசம்பவம்" என்றும் குறிப்பிடுகிறார். அசம்பவம் என்ற சொல்லுக்கு, அல்நிகழ்வு என்று பொருள் தருகிறது. சைவசித்தாந்த அகராதி. இந்த கோயிலை அடுத்துப் பின்னர் தோன்றியதுதான் இந்த ஊர் என்பதும் தெளிவு. இராமபிரான் காலத்து இவ்வூர் தோன்றிலது.

இராமபிரான் அமைத்த கோவிலானது, மலைகளைக் கடலில் அடைத்து நீரகற்றி நில மாக்கிய அத்திடலிற் செய்ததென அப்பர் பாடுகிறார்.

கடலிடை மலைக டம்மா லடைத்துமால் கரும முற்றித்
திடலிடைச் செய்த கோயிற் றிருவிரா மேச்சு ரத்தை (4.61.590)

என்பது அவர்தம் அருள்வாக்கு. அரக்கர்களின் இலக்கணங்களை எடுத்துரைத்து அக்குணங்களால் தம்மை வெளிப்படுத்திக் கொண்ட வல்லரக்கரை வீழ்த்திய இராமபிரான் வந்து இருந்து வழிபட்ட திருக்கோயிலுக்கு நன்று போ நெஞ்சமே என்று கூறி அதனால் விளையும் நன்மையாதெனில், சென்று நீ தொழுது உய்திகாண் என்று விளக்குகிறார். நோய்களும் வினைகளும் அறுந்துபோகும். மால்செய்கோயிலாம் இதனில் யார் வந்து வழிபடினும் தத்தம் குறிப்பு (நினைப்பு) நிறைவேறப் பெறுவர். இக்குறிப்புக்கு, சிவத்தையே பெறுதல் வேண்டும் என்னும் குறிக்கோள் எனவும் பொருளுணர்த்துவார் அருணைவடிவேலர். தம் கண்ணால் வழிபடுவோர் ஈசனுடன் உறையும் பேறுபெற்றுய்யலாம் என்றும் சொல்கிறார்.

நன்றுபோ னெஞ்ச மேநீ நன்மையை யறிதி யாயில்
சென்றுநீ தொழுதுய் கண்டாய் திருவிரா மேச்சு ரம்மே(4.61.591)

என்றெல்லாம் ஆற்றுப்படுத்தி அப்பர்பிரான் கண்டு தரிசித்து நாமுய்ய வழிகாட்டிய திருத்தலம் திருவிராமேச்சுரம் ஆகும்.

இவ்வாறாக அப்பர்பெருமான் தென் தமிழ்நாடாம் பாண்டிநாட்டில் பாடி வழிபட்ட தலங்கள் பல என்றாலும் பதிகமும் தாண்டகமும் கிடைக்கப்பெற்ற தலங்கள் நான்கு. அவற்றுள் வயல்சூழ் பதியாக விளங்குவது திருப்புத்தூர், பறம்புமலை நாட்டுத் திருத்தலம். ஆலவாயாம் மதுரையும், திருப்பூவணமும், வையையாறு வளஞ்செய்யும் திருத்தலங்கள். .நிறைவாய் நாமெல்லாம் உய்யுமாறு மால் செய்த தீவுத்திருக்கோயில் திருவிராமேச்சுரம்.

மலையிலிருந்து இறங்கி யாறாக நீண்டு கடலடையும் நீர்போல், உயிரும் பிறவிக்கடல் கடந்து பெம்மான் திருவடி பெற்றுய்ய ஆற்றுப்படுத்தும் அருட்கடலாக அப்பர்பெருமானின் பாண்டிநாட்டுத் திருமுறைகள் அமைகின்றன எனலாம்.

இன்னும் மேல் விளக்கம் வேண்டுமெனில் அவரவர் அப்பர்பிரான் அருளிய சொன்மாலைகளைத் தப்பாமல் ஓதிப் பெறத் துணையாகும் தமிழ் என்று இப்போதைக்குச் சொல்லி நிறைவுபடுத்தலாம்.

திருச்சிற்றம்பலம்

❀❀❀❀❀❀❀

4. அப்பர் தேவாரத்தில் கொங்கு நாட்டுத் திருத்தலங்கள்

முனைவர். கரு. முத்தையா
தமிழ்ப் பேராசிரியர் ப/நி. காரைக்குடி

பாடல் பெற்ற திருத்தலங்களுள் கொங்கு நாட்டு தலங்கள் மொத்தம் ஏழு ஆகும். அவை. அவிநாசி, கருவூர் ஆனிலை, கொடிமாடச் செங்குன்றூர் (திருச்செங்கோடு) திருநணா (பவானி) திருப்பாண்டிக் கொடுமுடி (கொடுமுடி), திருமுருகன் பூண்டி, திருவெஞ்சமாக் கூடல் என்பன.

இவற்றுள் கருவூர் ஆனிலை, கொடிமாடச் செங்குன்றூர், திருநணா ஆகிய மூன்று தலங்களைப் பற்றியும் திருஞானசம்பந்தர் ஒவ்வொரு பதிகம் பாடியுள்ளார். அவிநாசி, திருமுருகன்பூண்டி, திருவெஞ்சமாக்கூடல் ஆகிய மூன்று தலங்களைப் பற்றியும் சுந்தரர் ஒவ்வொரு பதிகம் பாடியுள்ளார்.

திருப்பாண்டிக் கொடுமுடி எனும் தலத்தைப் பற்றி மூவரும் ஆளுக்கொரு பதிகம் பாடியுள்ளனர். ஆக கொங்கு நாட்டுத் தலங்கள் ஏழைப் பற்றிய தேவாரப் பதிகங்கள் மொத்தம் ஒன்பது ஆகும். கொங்கு நாட்டுத்தலம் குறித்த அப்பர் பதிகம் என்பது ஒன்றே ஒன்றுதான். அப்பதிகத்திலும் ஐந்து பாடல்கள்தான் கிடைத்திருக்கின்றன. ஏனைய பாடல்கள் கிடைக்கவில்லை.

கிடைத்திருக்கும் ஐந்து பாடல்களிலும் அப்பர் திருப்பாண்டிக் கொடுமுடியில் கோவில் கொண்டுள்ள இறைவன் என்று குறிப்பிட்டு, சிவபெருமானின் பெருமைமிகு இயல்புகளை விளங்கியுள்ளாரே தவிர, குறிப்பிட்ட தலத்தின் இருப்பிடம், இயற்கை வளம், இறைவன்,இறைவி போன்ற எதனையும் குறிப்பிடவே இல்லை. எனவே இந்தத் தலத்தைப் பற்றிய பிற செய்திகளை திருஞானசம்பந்தரும், சுந்தரரும் பாடிய பதிகங்களைக் கொண்டுதான் நாம் அறிந்து கொள்ள வேண்டியதாக உள்ளது.

திருப்பாண்டிக் கொடுமுடியைப் பற்றிய திருஞானசம்பந்தரின் பதிகத்தில் (2-69) அவர் இத்தலத்தைப் பற்றிய சிற்சில குறிப்புக்களைத் தருகிறார். இத்தலம் காவிரியாற்றின் கரையில் அமைந்துள்ளது என்பது அவர்தரும் முதற்குறிப்பு.

காவிரிக் கோலக் கரைமேல்
பால் நீறணி வாரும்
பாண்டிக் கொடுமுடி யாரே (2-69-7)

என்று குறிப்பிடுகின்றார் சம்பந்தர்.

இயல்பாகவே ஆற்றங்கரையில் (அதுவும் எப்போதும் நீர்வளம் மிக்கிருந்த அக்காலக் காவிரியாற்றின் கரையில்) அமைந்த தலமாகலின் இயற்கை வளம் நிறைந்த தலமாக இலங்கியது என்பதை யாரும் சொல்லாமலே நாம் அறிந்து கொள்ளலாம். ஆயினும், பிள்ளையார், தம் தேவாரப் பாடல்களில் எப்போதும் இயற்கை வளத்தில் மனம் ஒன்றி விரித்துரைப்பது வழக்கமானதால் இப்பதிகத்திலும் திருப்பாண்டிக் கொடுமுடியின் இயற்கை வளங்களை ஈடுபாட்டோடு பாடுகிறார்.

கானமர் மஞ்ஞைகள் ஆலும்
காவிரிக் கோலக் கரை (2-69-7)

என இப்பதிகத்தில் மயில்கள் ஆடும் காட்சியை மனம் ஒன்றிய இலயத்தோடு காட்டுகிறார் சம்பந்தர்.

ஆற்றுநீர் பெரும் வெள்ளமாக வரும்போது செல்வ வளம் தரும் பொருள்களையும், நறுமணப் பொருள்களையும் தன் போக்கில் சேர்த்துக் கொண்டு வருவது இயற்கை வளத்தின் மற்றொரு கூறு. இதனையும் திருஞானசம்பந்தரின் தேவாரம் குறிப்பிட்டுக் காட்டுகிறது.

காரகில் பன்மணி உந்திப்
பரந்திழி காவிரி (2-69-8)

மருமலி மென்மலர்ச் சந்து
வந்திழி காவிரி (2-69-9)

என்று காவிரியாறு அகில், பலவகை மணிகள், மணம் மிக்க மலர்கள், சந்தன மரக் கட்டைகள் ஆகியவற்றை உருட்டி வந்த கண் கொள்ளக் காட்சியை நமக்குக் காட்டுகிறார் சம்பந்தர்.

மூன்றாவதாகத் திருஞானசம்பந்தர் இத்தலத்தின் இறைவர், இறைவியர் பெயரையும் உணர்த்துகிறார். பதிகத்தின் அனைத்துப் பாடல்களும், "பாண்டிக் கொடுமுடியாரே" எனப் பேசுகிறது. இத்தலத்தின் இறைவன் பெயர் கொடுமுடி நாதர் ஆகும்.

தேனம ரும்மொழி மாது
சேர்திரு மேனியி னாரும் (2-69-7)

என்று கூறுகிறார் சம்பந்தர். இத்தலத்து இறைவியின் பெயர் பண்மொழியம்மை. அதைத்தான் "தேனமரும் மொழி மாது" என்கிறார் சம்பந்தர்.

திருஞானசம்பந்தர் தந்த பதிகத்தின் வாயிலாகப் பாண்டிக் கொடுமுடித் தலத்தின் இருப்பிடம் இயற்கை வளம், இறைவன், இறைவி திருப்பெயர்களை அறிந்து கொண்ட நாம், சுந்தரர் தந்த பதிகத்தைப் பார்க்கும் போது இதே செய்திகளோடு இன்னொரு புதிய செய்தியையும் அறிந்து கொள்ள முடிகிறது.

சுந்தரரின் இத்தலப் பதிகத்தில் அவர் திருவைந்தெழுத்தைப் பாடல்தோறும் பயில வைத்துப் பாடியிருப்பதால் இப்பதிகத்திற்கு (7-48) நமச்சிவாயத் திருப்பதிகம் என்ற பெயர் வழங்குகிறது.

தேன்கிளர் புனற் காவிரி
வட்ட வாசிகை கொண்டடி தொழுது ஏத்தும் (7-48-2)

பொன் மாமணி
கல்லை உந்தி வளம் மொழிந்திழி காவிரி (7-48-4)

காவிரிக் கோட்டிடைக்
கொம்பின்மேற் குயில் கூவ மாமயில்
ஆடு பாண்டிக்கொடுமுடி (7-48-8)

என்றெல்லாம், காவிரியின் நீர் வளத்தையும், அது உந்தி வரும், பொன்,மணி, மலர் ஆகிய வளங்களையும் சோலையில் குயில் பாட மயிலாடும் இயற்கைக் காட்சியையும் சுந்தரர் காட்சிப்படுத்துகிறார், இவை, சம்பந்தர் பதிக வாயிலாக நாம் அறிந்த செய்திகளே. இவரது பதிகம் கூறும் புதிய செய்தியும் ஒன்று உண்டு.

சுந்தரர் காலத்தில் (அதற்கு முன்பிருந்தே கூட வழங்கியிருக்க வேண்டும்) இத்தலத்தின் ஊர்ப்பெயர் "கறையூர்" அங்கு அமைந்திருந்த கோவிலின் பெயரே பாண்டிக் கொடுமுடி என்பதுதான் அச் செய்தி. இவர்தம் பதிகத்தில் பல பாடல்களில்,

கறையூரிற் பாண்டிக் கொடுமுடி (7-48-1; 4;9;10) என்று குறிப்பது இச்செய்தியை நமக்கு உணர்த்தும்.

தேவாரத் தலங்கள் பலவற்றின் பெயர் இவ்வாறு ஊர்ப் பெயரும், கோவிற் பெயரும் இணைந்த நிலையில் அமைந்திருப்பதை நாம் காணலாம். சில எடுத்துக்காட்டுகள்.

கருவூர் ஆனிலை - கருவூர்-ஊர், ஆனிலை கோவில்
ஆவூர்ப் பசுபதீச்சுரம் -ஆவூர் -ஊர், பசுபதீச்சரம் கோவில்

கறையூர் என்ற ஊரில் பாண்டிக்கொடுமுடி என்ற கோயில்

இருந்தது பழங்கால வரலாறு. இப்போது அவ்வூரின் பெயரே "கொடுமுடி" என வழங்குவதை நாமறிவோம்.

இவ்வாறான பின்புலச் செய்திகளோடு அப்பர் தேவாரத்தில் இத்தலப் பதிகத்தைப் பார்த்தால் (5-81), அவர் இத்தல இறைவனின் பெருமைகளைப் பட்டியலிடுவதை உணரலாம்.

சிவன் சிட்டன்; செழும்சோதி, அட்டமூர்த்தி, ஆலநிழலமர் குரு; நட்டன் என்பவை முதற்பாடலில் (5-81-1) அப்பர் காட்டும் இறைப் பெருமைகள்.

பிரமனும், திருமாலும் அறிந்து கொள்ள இயலாத பெருமையுடையவன், தருமமாகிய தத்துவமாகித் திகழ்பவன், அனைவர்க்கும் மேலான பரமன் என அடுத்த பாடலில் (5-81-2) விளக்குகிறார்.

தூண்டிய சுடர் போன்ற ஒளிப்பொருள், அடியார்கள் காண்பதற்கு எளியவன், யாம் அவனை அறிவோம் என ஆணவம் கொண்டு நோக்குவார்க்கு நினைத்தற்கும் அரியவன் என இறைவனின் தத்துவப் பொருள்களை விரித்துரைக்கிறார் அப்பர் (5-81-4)

அடுத்த பாடலில் தேவர்கள் இருக்கு வேதம் உரைத்துப் பணிந்து ஏத்த வீற்றிருப்பவன் சிவ பெருமான் என எடுத்துரைக்கும் அப்பர் (5-81-5) இடையே வரும் ஒரு பாடலை அகத்துறைப் பாடலாகவும் பாடியுள்ளார் (5-81-3) கொடுமுடி நாதரை நினைத்து ஏங்கும் தலைவியின் சித்திரத்தைக் காட்சிப்படுத்துகிறது இப்பாடல்.

கொங்கு நாட்டுத் தலமாகிய திருப்பாண்டிக் கொடுமுடியைப் பற்றிய மூவர் தேவாரப் பதிகங்களின் வாயிலாக நாம் அறியும் செய்திகளை இவ்வாறு தொகுக்கலாம்.

1. ஊரின் பெயர் கறையூர். அங்கிருந்த கோவிலின் பெயர் திருப்பாண்டிக் கொடுமுடி.
2. இது காவிரிக்கரையில் அமைந்துள்ள தலம்.
3. எனவே இயற்கை வளம் நிறைந்த தலம்
4. ஆற்றுநீர் வளத்தால் செல்வம் கொழிக்கும் தலமும் ஆகும்.
5. இத்தலத்தின் இறைவன் பெயர் -கொடுமுடி நாதர், இறைவி பெயர்- பண்மொழியம்மை.

திருச்சிற்றம்பலம்

5. அப்பர் தேவாரத்தில் நடுநாட்டுத் திருத்தலங்கள்

ஞானியார் முனைவர். வீ.ஜெயபால். தஞ்சாவூர்.

உலக சமயங்களுள் தொன்மையானது சைவ சமயமாகும். இச்சயம் மானுட சமுதாயம் மண்ணில் நல்ல வண்ணம் வாழ பெரும் பங்கு வகித்து வருகிறது. அருளாளர்கள் பலர் தோன்றி தங்களின் அருட்பாக்களால் சிவபெருமானைத் தலங்கள்தோறும் சென்று பாடி சிவாநுபூதி நிலையை அடைந்தனர். "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற பொதுநலச் சிந்தனையோடு, பாடப்பட்டப் பாடல்கள் அனைத்தும் சைவசமயத்தின் கருவூலமாகத் திகழ்கின்றன.

அருளாளர்களின் வரிசையில், நால்வராகப் போற்றப்படுபவர் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசகர் ஆவர். இவர்களில் முதல் மூவர் பாடிய அருட்பாட்கள் தேவாரம் எனவும், பின்னவர் பாடியது திருவாசகம் எனவும் பன்னிரு திருமுறைகளில் சிறப்பிடம் பெற்றுள்ளன. சிவபெருமான் குறித்து தேவார மூவர் பாடிய மொத்த தலங்கள் தற்போது நிலவரப்படி 276 ஆகும். இத்தலங்கள் யாவும், பழங்கால இட எல்லை அடிப்படையில் தொண்டைநாடு, நடுநாடு, சோழ நாடு, பாண்டியநாடு, கொங்கு நாடு, மலைநாடு, துளுவநாடு, வடநாடு, ஈழ நாடு எனும் 9 நாட்டிற்குள் அடங்கி விடுகின்றன. இவற்றுள் தமிழகத்தில் உள்ள நடுநாட்டில், அருளனுபவத்தில் தோய்ந்த அப்பரடிகள் என்று அழைக்கப்படும் திருநாவுக்கரசர் சென்று வழிபட்ட திருத்தலங்களின் சிறப்புக்களைக் குறித்துப் பேசுவதாக இக்கட்டுரை அமையும்.

சோழ நாட்டிற்கும், தொண்டை நாட்டிற்கும் நடுவில் உள்ள பகுதி நடுநாடாகும். இப்பகுதியில் மூவர் முதலிகளால் பாடப்பட்டத் திருத்தலங்கள் 22 ஆகும். மூவருள் நடுவராக உள்ள அப்பரடிகளால் பாடப்பட்ட நடு நாட்டுத்தலங்கள் 9 மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கதாகும். அவை திருநெல்வாயில் அறத்துறை, திருத்தூங்கானை மாடம், திருவதிகை வீரட்டானம், திருமுதுகுன்றம், திருக்கோவிலூர் வீரட்டம், திருப்பாதிரிபுலியூர், முண்டீச்சுரம், திருவாமாத்தூர், திருவண்ணாமலை எனும் ஒன்பது திருத்தலங்கள் ஆகும். இவர் பாடிய தேவாரம் 4,5 மற்றும் 6 வது திருமுறைகள் என்று பதிவு செய்யப்பட்டுள்ளன. இவர் திருவதிகை வீராட்டானத்தில் 16 பதிகங்களும், திருவண்ணாமலையில் 2 திருப்பதிகங்களையும் ஏனையத்தலங்களில் தலா ஒரு பதிகம் எனவும் கூடுதலாக 25 பதிகங்களை அருளிச்செய்துள்ளார்.

இவரால் பாடப்பட்டத் திருத்தலங்கள் குறித்து அமைவிடம், பெயர்க்காரணம், மூர்த்திகள், பாடல் பெற்றமை, திருக்கோயில் அமைப்பு, தலச்சிறப்பு, எனும் தலைப்பில் இக்கட்டுரை இடம் பெறும்.

திருநெல்வாயில் அரத்துறை

இத்திருத்தலத்தைப் பற்றி அப்பரடிகள், ஒரு பதிகமாக 5-ஆம் திருமுறையில் அமையப்பெற்றுள்ளது.

இனிப்புச் சுவையுடைய கரும்புக்கு ஒப்பானை, அதனுள் இருக்கும் இனிப்புக் கட்டிக்கு ஒப்பானை விண்ணவரும் அறியாதவனை, எதற்கும் ஈடு இணையிலா ஒப்பானான அரத்துறை மேவிய இறைவனை தொழுவதே நம் வாழ்வின் சுவைக்கு உகந்தது எனப் பாடுகிறார்.

கரும்பு ஒப்பானைக் கரும்பினில் கட்டியை
விருமபு ஒப்பானை விண்ணோரும் அறிகிலர்
அரும்பு ஒப்பானை அரத்துறை மேவிய
சுரும்பு ஒப்பானைக் கண்டீர் நாம் தொழுவதே.

அ)அமைவிடம்: திருச்சி-விழுப்புரம் இருப்புப்பாதையில் பெண்ணாடம். புகைவண்டி நிலையத்திலிருந்து தென்மேற்கு 4.கி.மீ. தூரத்தில் உள்ளது. கடலூர் மாவட்டம் திட்டக்குடி வட்டத்தில் திட்டக்குடியிலிருந்து 5.கி.மீ. தொலைவில் உள்ளது.

ஆ) பெயர்க்காரணம்: இத்தலம் கோயிலின் பெயரைக் கொண்டு திருவரத்துறை என்று வழங்கப்படுகிறது. நெல்வாயில் என்பது ஊரின் பெயராகும்.

இ) மூர்த்திகள்: இறைவன்- அருள்மிகு தீர்த்தபுரீஸ்வரர், ஆனந்தீஸ்வரர், அரத்துறைநாதர். இறைவி- அருள்மிகு திரிபுரசுந்தரி, ஆனந்தநாயகி, அரத்துறை நாயகி, தீர்த்தம்: நீலமலர்ப்பொய்கை, வடவெள்ளாறு நதி, தலவிருட்சம்: ஆலமரம்.

ஈ) பாடல் பெற்றமை: தேவார மூவராலும் பாடப்பெற்ற நடுநாட்டின் முதலாவது தலம். அப்பரடிகளின் பாடல்கள் 5 ஆம் திருமுறையில் ஒரு பதிகம் இடம்பெற்றுள்ளது.

இது தவிர, சேக்கிழாரின் பெரியபுராணம், வள்ளலாரின் திருவருட்பாவிலும் இத்தலம் குறித்த பாடல்கள் இடம் பெற்றுள்ளன. அருணகிரிநாதரால் பாடப்பட்ட திருப்புகழ்த் தலமும் ஆகும்.

உ) திருக்கோயில் அமைப்பு: வடகரையில் 5 நிலை ராஜகோபுரத்துடன் கிழக்கு நோக்கி ஒரு பிரகாரத்துடன் அமைந்துள்ளது. கருவறையில் மூலவர் சுயம்பு லிங்க வடிவில் கிழக்கு நோக்கியும் அம்மன் தெற்கு நோக்கி தனிச் சன்னதியிலும் காட்சியளிக்கின்றனர். இராஜகோபுரத்தைக் கடந்து உள்ளே சென்றதும், வலஞ்சுழி விநாயகர், சமயச்சாரியார்கள், வான்மீகி முனிவர், சப்தமாதர்கள், லிங்கத்திருமேனிகள், மகாவிஷ்ணு, ஜோதிர்லிங்கம், உள்ளிட்ட சன்னிதிகள் அமைந்துள்ளன. இதனையடுத்து அண்ணாமலையார். ஆதிசேஷன், வள்ளி தெய்வானை சமேத முருகப்பெருமான், தண்டாயுதபாணி, சரஸ்வதி என அருள்பாலிக்கின்றனர். மேலும் சேரலிங்கம், சோழலிங்கம், பாண்டியலிங்கம் என மூவேந்தர்களுக்கும் லிங்கத்திருமேனிகள் அமைந்துள்ளன. இங்கு சந்தானச்சாரியார், பைரவர், சூரியன் சந்திரன் சந்நிதிகளும் அமைந்திருப்பது தனிச்சிறப்பாகும்.

ஊ) தலச்சிறப்பு: இத்தலத்தில் மகாவிஷ்ணு, ஆதிசேடன், சனீஸ்வரன், செவ்வாய், வால்மீகி முனிவர் முதலியோர் பூசித்துப் பேறு பெற்றனர். திரு ஆதித்துறை, திருவாலந்துறை, திருமாந்துறை, திருஆடுதுறை, திருவதிட்டத்துஜற, திருக்கைத்துறை, திருவட்டத்துறையாகிய திருநெல்வாயில் அறத்துறை எனும் ஏழையும் சப்தரிஷிகள் பூசை செய்ய வேண்டி நீ வா என்று அழைத்ததாக ஐதீகம். மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் மூவகைச் சிறப்புடைய இத்தலத்தில் திருஞானசம்பந்தருக்கு இறைவன முத்துச்சிவிகையையும், முத்துக்குடையையும், ஊதுதற்கு முத்துச்சின்னங்களையும் தந்தருளினார். பாலகாசி, விருத்தகாசி, ஊழிகாசி, எனும் 3 காசித்தலங்களுள் இத்தலம் ஊழிகாசித் தலமாகும். இக்கோயில் கருவறைக்கு இடதுபுறம் மகம் வாசல் அமைந்துள்ளது. கணவனை இழந்த பெண்கள் ஓராண்டு முடிந்த பிறகு, இத்தல ஆற்றில் குளித்துவிட்டு, மகம் வாசல் வழியாக ஆலயத்துள் சென்று இறைவனை வழிபடுவர். மீண்டும் அந்த வாசல் வழியாகவே மீண்டும் வெளியில் செல்வர். இதனால் இழந்த கணவர் நற்கதி அடைவர் என்பது அவர்களின் நம்பிக்கையாகும்.

மேலும் நம்பியாண்டார் நம்பி, காண்டூர் ரெங்கசாமி அய்யங்கார், குருநமசிவாயர் இவர்களும் இத்தலத்து இறைவன் குறித்துப் பாடியுள்ளனர்.

2. திருத்தூங்கானை மாடம்

இது அப்பரடிகள் தேவாரப் பாடல் பெற்ற இரண்டாவது தலமாகும். இது பெண்ணாகடம் என்றும் கடந்தைநகர் என்றும் அழைக்கப்படும்.

4-ஆம் திருமுறையில் மட்டும் இடம்பெற்றுள்ள இத்திருத்தலத்தினைப் பற்றிய மூன்று பாடல்கள் மட்டும் அமைந்துள்ளன.

ஆவியினைக் காத்திட, கூற்றகல, சூலாமேவிய தூங்கனை மாடத்து இறைவன் என்மேல் பொறிமேவு கொண்டருள வேண்டுவதாக அப்பரடிகள் அருளிய பாடல்,

பொன்னார் திருவடிக்கு ஒன்று உண்டு
விண்ணப்பம் போற்றிசெய்யும்
என் ஆவி காப்பதற்கு இச்சை உண்
டேல் இருங்கூற்று அகல
மின் ஆகும் மூஇலைச்சூலம் என்மேல் பொறி
மேவு கொண்டல்
துன்னார் கடந்தையுள் தூங்கானை
மாடச் சுடர்கொழுந்தே.

அ) அமைவிடம்: திட்டக்குடியிலிருந்து கிழக்கே 15 கி.மீ.தொலைவில் விருத்தாசலம் செல்லும் வழியில் உள்ளது. சென்னை-திருச்சி நெடுஞ்சாலையில் தொழுதூரிலிருந்து 15 கி.மீ. தொலைவில் உள்ளது.

ஆ) பெயர்க்காரணம்: தேவகன்னியர்(பெண்), காமதேனு (ஆ); கடம் (வெள்ளையானை) ஆகிய இவர்கள் இத்தலத்து இறைனைப் பூசித்ததால் பெண்ணாகடம் என வழங்கலாயிற்று. தூங்கானை மாடம் என்ற சொல்லுக்கு கஜப்பிரஷ்டம் என்று வடமொழியில் கூறுவர்.

இ) மூர்த்திகள்: இறைவன்- அருள்மிகு சுடர்க்கொழுந்து நாதர், பிரளைகாலேஸ்வரர், இறைவி- அருள்மிகு கடந்தைநாயகி, ஆமோதனம்பாள், தீர்த்தம்: பரமானந்த தீர்த்தம், வெள்ளாறு நதி. தலவிருட்சம்: சண்பகம்

ஈ) பாடல் பெற்றமை: திருஞானசம்பந்தராலும், அப்பரடிகளாலும் பாடல் பெற்ற திருத்தலமாகும். அப்பரடிகளின் தேவாரப்பாடல் 4-ஆம் திருமுறையில் இடம் பெற்றுள்ளது. நம்பியாண்டார் நம்பியும், சிவஞானப் பிரான் பிள்ளை அவர்களும் இத்திருக்கோயிலைப் பற்றிப் பாடியுள்ளார்கள்.

உ) திருக்கோயில் அமைப்பு: இத்திருக்கோயில் வெள்ளாற்றின் வடகரையில் 4-01 ஏக்கர் நிலப்பரப்பில் கட்டப்பட்டுள்ளது. கிழக்கு நோக்கி 5 நிலை இராஜகோபுரமும், ஒரு பிரகாரமும் கொண்ட இக்கோயில் மூலவர் சுயம்பு லிங்க வடிவில் காட்சியளிக்கிறார். வினைதீர்த்த விநாயகர், முருகப்பெருமான், இவர்களுடன் சிவஞான போதம் அருளிய மெய்கண்ட தேவர், பெரியபுராண நாயன்மார் கலிக்கம்பர் ஆகியோருக்கும் தனித்தனி சந்நிதிகள் இடம் பெற்றுள்ளன.

ஊ) தலச்சிறப்பு: இத்தலத்து நந்தியெம் பெருமானுக்கு அதிகார நந்தி என்று பெயரிட்டு அழைக்கப்படுகிறது. இவர் கிழக்கு நோக்கி அமர்ந்திருப்பார். இத்தலத்து இறைவன் பிரளயத்திலிருந்து மக்களைக் காத்தமையால், பிரளயகாலஈசுவரர் என்று அழைக்கப்படுகிறார். அருள்நந்தி சிவாச்சாரியாரும், மறைஞான சம்பந்தரும் இத்தலத்தில் வழிபாடாற்றி உள்ளனர்.

3. திருவதிகை வீரட்டானம்

சூலை நோய்க்கு ஆட்பட்ட நிலையில் தன்னை அதிலிருந்து மீட்டருளவும், தொடர்ந்து சிவசிந்தையில் திளைத்திடவும் வேண்டிப் பணிகின்ற திருத்தலமாக இத்திருத்தல பாடல்கள் உள்ளன.

கொடுமை பல அறியாமல் செய்திருந்தாலும், உன்னை இரவும், பகலும் என எப்போதும் நினைந்து வணங்கி கொண்டே இருப்பதாகவும், தன்னுடைய உடலை வாட்டி முடக்கிட்ட சூலை நோயைப் போக்கிட கெடில நதிக்கரையில் உமையோடு உறையும் வீரட்டானத்துறையும் இறைவனை உளம் உருகி பாடுகின்றார் அப்பரடிகள்.

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நான் அறியேன்
ஏற்றாய் அடிக் கேஇர வும்பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதுஎன் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன்அடி யேன்அதி கைக்கெடி
வீரட்டா னத்துறை அம்மானே (4-ம் திருமுறை)

மாற்றுச் சமயத்தை தழுவிப்பட்ட துயரம், துன்பம் போதும், இப்போது உமக்கு ஆளும்பட்டேன் என்று தம்மை வீரட்டானத்துறையும் சிவபெருமானிடம் ஒப்படைத்துக் கொள்கிறார் அப்பர் பெருமான்.

முன்னம் அடி யேன்அறி யாமையால்
முனிந்துஎன்னை நலிந்து முடக்கியிடப்
பின்னைஅடி யேன்உமக்கு ஆளும்பட்டேன்
சுடுகின்றது சூலை தவிர்த்தருளிர்
....

கொடிய சூலை நோக்கி தாக்கிய நிலையில், சிவபெருமானின் அருளை வேண்டுகின்ற போதும் கூட, நலமான போதும், தீங்குற்ற போதும்

இறைவனுக்கு எப்படிப் பாத்திரமாக இருப்பேன் என்று கூறுவதும், அன்னைத் தமிழ்மீது கொண்டுள்ள பற்றையும் நாம் உணரலாம்.

சலம்பூவோடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தேறியேன்
நலம்தீங்கிலும் உன்னை மறந்தேறியன்
உன்நாமம் என்நாவில் மறந்தறியேன் (4-ம் திருமுறை)
....

என்ற அருட்வரிகள் நம்முடைய கண்களைக் குளமாக்குவதோடு மனதை நெகிழ வைக்கிறது.

இதே திருத்தலத்தைப் பற்றிய அடுத்த பதிகத்திலும் ஒவ்வொரு பாடலிலும் வரும் ஈற்றடியை நோக்கினால், அப்பரடிகளுக்கு ஏற்பட்ட திருவதிகை வீரட்டானத்துறையுள் விளங்கும் சிவனருள் தம்முள் இருக்கும் வரை "அஞ்சுவது யாததொன்றும்இல்லை , அஞ்ச வருவதும் இல்லை" என்று ஒவ்வொரு பாடலின் ஈற்றடியில் அமைத்திருப்பது இறைவனிடத்தில் சரணடைந்தவர்களுக்கு க் கிடைக்கும் உறுதிப்பாட்டைக் கூறுகின்ற செய்தியாக நாம் பார்க்கலாம். ஒவ்வொருவருக்கும் பயனுள்ளதாகவும் இருக்கின்றது.

5 மற்றும் 6-ஆம் திருமுறையிலும் திருவதிகை வீரட்டம் எனும் பதிகத்தையும் அப்பர் பாடியருளிருக்கிறார்.

திருவதிகை வீரட்டானத்துறையும் சிவனின் திறத்தை, கருணையாளனை அவர்தம் அனுபவத்தால் பாடல் மூலம் நமக்கு காட்டுகிறார்.

இத்தலத்தைப் பற்றிச் சிலவற்றைப் பார்ப்போம்.

இத்தலம் அட்ட வீரட்டானத்துள் ஒன்று. அரிய சிற்பங்களைக் கொண்டு கலைப்பெட்டகமாகத் திகழும் சிறப்பினையுடையது.

அ) அமைவிடம்: கடலூர் மாவட்டம் பண்ருட்டியிலிருந்து 2 கி.மீ. தொலைவில் உள்ளது. கடலூரிலிருந்து மேற்கே 26 கி.மீ. தொலைவில் உள்ளது.

ஆ) பெயர்க்காரணம்: இத்தலம் எல்லாத் தலங்களிலும் மிக்க பெருமையுடையது. எனவே இத்தலத்தில் "அதியரைமங்கை அமர்ந்தான் தன்னை" என்று பாடியுள்ளார். கல்வெட்டுக்களிலும் அதியரைமங்கலம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இப்பெயர் அதிகை என மருவி வழங்குவதாகவும் கொள்ளலாம்.

இ) மூர்த்திகள்: இறைவன்– அருள்மிகு வீரட்டேஸ்வரர். இறைவி– அருள்மிகு திரிபுரசுந்தரி. தீர்த்தம்: சக்கரதீர்த்தம், சூலதீர்த்தம், கெடில நதி. தலவிருட்சம்: கொன்றை

ஈ) பாடல் பெற்றமை: இத்தலத்து இறைவன் மீது திருஞானசம்பந்தரும், சுந்தரமூர்த்தி சுவாமிகளும் தலா ஒரு பதிகமும், அப்பரடிகள் 16 பதிகங்களையும் பாடியுள்ளனர். நம்பியாண்டார் நம்பி, சேக்கிழார், சேந்தனார் போன்றோர் இத்தலத்து இறைவனைப் போற்றிப் பாடியுள்ளனர்.

உ) திருக்கோயில் அமைப்பு: தென்திசைக் கங்கை எனப்படும் கெடில நதியின் வடகரையில் 7.50 ஏக்கர் நிலப்பரப்பில் 3 பிரகாரங்களுடன் 110 அடி உயரத்தில் 7 நிலை கொண்ட இராஜகோபுரத்துடன், இரண்டாம் பிரகார நுழைவாயிலில் 16 கால் மண்டபமும் கொண்டு சுயம்பு லிங்கமாக அருள்மிகு வீரட்டேசுவரர் 16 கோணத்துடன் கிழக்கு நோக்கியும், திரிபுரசுந்தரி அம்பாள் தனிசந்நிதியாலும் அருள்பாலித்து வருகின்றனர். இங்குள்ள சிற்பங்களில் எழில் வாய்ந்தது சதுர்முகலிங்கமாகும். 3 பிரகாரங்கள், 1 விமானம் மற்றும் 2 கோபுரங்களையும் கொண்டு இக்கோயில் சிறப்பாக உள்ளது. திருநாவுக்கரசர் திருமடம், திலகவதியார் திருமடம் மற்றும் நந்தவனம் ஆகியன உள்ளன.

ஊ) தலச்சிறப்பு: இறைவன் உயிர்கள் மீது கருணை கொண்டு வீரச்செயல் புரிந்தருளிய அட்டவீரட்டானத்தலங்களுள் ஒன்று. சைவ சித்தாந்தச் சாத்திர நூல்களுள் ஒன்றான உண்மை விளக்கம் என்ற நூலை அருளிச்செய்த மணவாசகம் கடந்தார் அவதரித்த திருத்தலம். திருமால், பிரமன், திரிபுர அசுரர் மூவர், கருடன், பாண்டவர், திருமூலர், திலகவதியார், மகேந்திரவர்மன் முதலியோர் வழிபட்ட பெருமை உடையது.

4. திருமுதுகுன்றம்

தற்போது விருத்தாச்சலம் என்று அழைக்கப்படும் இத்தலம் விருத்த காசியாகும். இத்தலத்தில், அப்பர் பெருமான் ஒரு பதிகம் பாடியுள்ளார். அது 6–ஆம் திருமுறையில் வருகிறது.

“எத்திசையும் வானவர்கள் வணங்குபவனாகவும், காளையில் அமர்ந்து வரும் பெம்மானை, எனது இறைவன் என்று உணர வைத்து பாமாலை பாட வைத்து , பயிற்சியளிக்கும் குருவாக திருமுதுகுன்றுடையான் என் சிந்தயையுள் நிறைகின்றான்” என போற்றி பரவுகிறார் அப்பரடிகள்.

எத்திசையும் வானவர்கள் தொழ நின்றானை
ஏறு உர்ந்த பெம்மானை எம்மான் என்று

பத்தனாப் பணிந்தடியேன் தன்னைப் பல் நாள்
பாமாலை பாடப் பயில்வித்தானை

....

அ) அமைவிடம்: சென்னை-திருச்சி புகைவண்டி மார்க்கத்தில் விழுப்புரத்தை அடுத்துள்ளது. உளுந்தூர் பேட்டையிலிருந்து தெற்கே 23 .மீ. தொலைவில் உள்ளது.

ஆ) பெயர்க்காரணம்: இத்திருக்கோயில் சமய உலகில் மிக்க பெருமையுடையது. காசிக்குச் செல்ல இயலாதவர்கள் விருத்த காசியாகிய இவ்வூரில் உள்ள மணிமுத்தா நதியில் நீராடி, அருள்மிகு விருத்தகிரீஸ்வரரை வழிபட்டால் கங்கையில் மூழ்கி அருள்மிகு காசிவிஸ்வநாதரை வழிபட்ட பயனை அடைவார்கள். தமிழ்நாட்டில், மலை, குன்று, கிரி, அசலம், சைலம், கோடு ஆகிய மலையின் பெயர்களைக் கொண்ட ஊர்கள் உண்டு. அவ்வாறு அமைந்த ஊர்களுள் திருமுதுகுன்றமும் ஒன்று. பழமையான மலை இருந்து மறைந்ததாக பாறைச்சுவடுகள் மூலம் அறியமுடிகிறது.

இ) மூர்த்திகள்: இறைவன்- அருள்மிகு பழமலைநாதர், இறைவி: அருள்மிகு பெரியநாயகி, தீர்த்தம்: மணிமுத்தாறு, அக்னிதீர்த்தம், தலவிருட்சம்: நித்யானந்த கூபம், சக்கர தீர்த்தம், தலவிருட்சம்: வன்னிமரம்.

ஈ) பாடல் பெற்றமை: தேவார மூவராலும் பாடல் பெற்ற சிறப்பினையுடையது. அப்பரடிகளின் பாடல்கள் 6-ஆம் திருமுறையில் இடம் பெற்றுள்ளன. சேக்கிழார், அருணகிரிநாதர், வள்ளலார், குரு நமசிவாயர், துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள், சொக்கலிங்க அடிகள், குமாரதேவ சுவாமிகள், ஞானக்கூத்த சிவப்பிரகாச தேசிகர் போன்றோரால் பாடல் பெற்ற திருத்தலமாகும்.

உ) திருக்கோயில் அமைப்பு: இத்திருக்கோயில், ஊரின் நடுவே மணிமுத்தாறுக் கரையில் கீழ்மேல் 630 அடியும் தென் வடக்காக 392 அடியும் திருமதில் 4-ம் அடிகளும் 26 அடி உயரம் கொண்டு கிழக்கு நோக்கி உள்ளது. சுவாமி, அம்பாள் சன்னதிகள் கிழக்கு நோக்கி உள்ளன. நான்கு திசைகளிலும் உள்ள இராசகோபுரங்கள் கோயிலுக்கு அழகு செய்கின்றன. இங்குள்ள கைலாச பிரகாரம், வள்ளியடி பிரகாரம், அறுபத்து மூவர் பிரகாரம் பல சிறப்புக்களை உடையது. இத்தலத்தில் முருகன் 20 ஆகமங்களையும் சிவலிங்கங்களாக வைத்துப் பூசிப்பதாக வரலாறு கூறுகிறது.

ஊ) தலச்சிறப்புகள்: சுந்தரமூர்த்தி சுவாமிகள் இத்தலத்து இறைவனை "மெய்யை முற்றப்பொடி" என்று தொடங்கும் பதிகம் பாடி பன்னிராயிரம் பொன் பெற்றார். திருமால், பிரமன், அகத்தியர் வழிபட்ட பெருமையுடையது.

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருஞான சம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள், இத்தலத்தை முத்திதரும் தலங்களுள் ஒன்றாக சிவபோகசாரத்தில் குறிப்பிட்டுள்ளார்கள்.

தில்லைவனம் காசி திருவாரூர் மாயூரம்
முல்லை வனம் கூடல் முதுகுன்றம்; - நெல்லை களர்
காஞ்சி கழுக்குன்றம் மறைக்காடு அருணை காளத்தி
வாஞ்சியமென் முத்தி வரும். -சிவபோகசாரம்

5. திருக்கோவிலூர் வீரட்டம்

தற்போது திருக்கோவிலூர் என்றழைக்கப்படும் இத்தலம் எட்டு வீரட்டத் தலங்களுள் அந்தகாசுரனைச் சிவபெருமான் தண்டித்த இடமாகும்.

அப்பரடிகள் ஒரு பதிகம் பாடியுள்ளார். அப்பதிகம் 4-ஆம் திருமுறையில் இடம்பெற்றுள்ளது. "ஐம்புலன்களின் சேட்டைதான் நம்மை தீமைக்கு இட்டுச் செல்கின்றன. சேட்டைகளைத் தவிர்த்து இறைவனைத் சிந்தித்தல் ஒன்றுதான் எனது குறிக்கோள்" என்றுரைக்கிறார். இதை உணர்த்த வந்த அப்பரடிகள், இத்திருத்தல இறைவனிடம் உறுதி கூறுகிறார்.

சாற்றுவார் ஐவர் வந்து சந்தித்த குடிமை வேண்டிக்
காற்றுவர் கனலப் பேசிக் கண்செவிமூக்குவாயுள்
ஆற்றுவர் அலந்துபோனேன் ஆதியை அறிவு ஒன்று இன்றிக்
கூற்றுவர் வாயில் பட்டேன் கோயில்வீரட்டனீரே.

அ) அமைவிடம்: விழுப்புரத்திலிருந்து தெற்கே 34 கி.மீ. தொலைவில் உள்ளது. திருவண்ணாமலையிலிருந்து தென்கிழக்கே 35 கி.மீ. தொலைவில் உள்ளது. இவ்வூர் மேலூர் கீழூர் என இருபிரிவுகளாக உள்ளது. இத்திருக்கோயி; கீழூரில் உள்ளது.

ஆ) பெயர்க்காரணம்: சிவபெருமான் வீரச்செயல்கள் நிகழ்ந்துள்ள தலங்கள் எட்டினையும் அட்டவீரட்டம் எனக்கூறுவர். அவ்வகையில் இறைவனின் வீரச் செயல் நிகழ்ந்த இடமாக இவ்வூர் விளங்கியதால் இத்தலம் வீரட்டானம் எனப் பெயர் பெற்றது.

இ) மூர்த்திகள்: இறைவன்:அருள்மிகு வீரடேஸ்வரர். இறைவி: அருள்மிகு சிவானந்தவல்லி. தீர்த்தம்: தென்பெண்ணை நதி, தலவிருட்சம்: கொன்றை.

ஈ) பாடல் பெற்றமை: திருஞானசம்பந்தராலும், அப்பரடிகளாலும் பாடல் பெற்ற திருத்தலம். மாணிக்கவாசகரால் அருளப்பட்ட திருவாசகத்தில் திருப்பூவல்லிப்பகுதியில் குறிப்பிட்டுள்ளார். நம்பியாண்டார் நம்பி, சேக்கிழார்,

அருணகிரிநாதர் போன்ற அருளாளர்களால் பாடப்பட்ட தலம்.

உ) திருக்கோயில் அமைப்பு: இத்திருக்கோயில் தென்பெண்ணையாற்றின் தென்கரையில் 3.00 ஏக்கர் நிலப்பரப்பில் உள்ளது. இராஜகோபுரத்தின் உயரம் 70 அடியாகும். மேற்கு நோக்கிய இக்கோயிலில், அம்மன் சன்னதி தனிக்கோயிலாக மூன்று நிலை இராஜகோபுரத்துடன் விளங்குகிறது. உள்பிரகாரத்தில் மெய்ப்பொருள் நாயனார், அந்தகாசுர சம்ஹாரமூர்த்தி, சூரியன் என தனிச் சன்னதிகள் இடம் பெற்றுள்ளன. இக்கோயிலுக்கு பக்கத்தில் ஸ்ரீமத் ஞானியார் சுவாமிகளின் ஆதி மடாலயம் உள்ளது.

ஊ) தலச்சிறப்புகள்: இராஜராஜசோழன் பிறந்த ஊர், கடையேழு வள்ளலின் காரியின் தலைநகரம். மெய்ப்பொருள் நாயனார் இவ்வூரைத் தலைநகரமாகக் கொண்டு மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள் எனக்கருதி அரசு புரிந்து இறைவன் திருவடியை அடைந்த ஊர். பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணத்தில் அருச்சனைப்படலத்தில்

அவுணரில் கள்வனான அந்தகற் காய்த்து மூன்று
புவனமும் கவலை தீர்த்த புண்ணியன்புரம் ஈதாகும்

என இத்தலப் பெருமையைக் குறிப்பிடுகிறார். வீரட்டானமாகிய இத்தலத்து இறைவனை விநாயகர், முருகன், காளி, ஏகாதச உருத்திரர், இராமர், பரசுராமர், கிருஷ்ணன், இந்திரன், இயமதருமன், காமதேனு, சூரியன், குரு, உரோம முனிவர், கண்ணுவர், கபிலர், மிருகண்டு, பதஞ்சலி, வியாக்ரபாதர், காமன், குபேரன், வாணாசுரன், சப்தரிஷிகள், ஆதிசேடன் முதலியோர் வழிபட்டுப் பேறு பெற்றனர். இத்தலத்தில் பஞ்சாட்சரம் செய்பவர்கள் தங்களது பாவம் நீங்கி, மோட்சத்தை அடைவார்கள். இவ்வூரின் வடக்குப் பகுதியில் குகை நமச்சிவாயர் சமாதி உள்ளது.

6. திருப்பாதிரிப்புலியூர்

தற்போது கடலூர் என்று அழைக்கப்படும் அப்பகுதியே தேவாரக் காலத்தில் திருப்பாதிரிபுலியூர் என்றுஅழைக்கப்பட்டது. அப்பர் பெருமான் ஒரு பதிகம் பாடியருளிக்கிறார். 4-ஆம் திருமுறையில் அமையப்பெற்றுள்ளது.

ஓருயிர் முதலாக ஆறறிவு ஈறாகப் படைத்தளித்து காத்து வருகின்ற அந்த சிவபரம்பொருளை எண்ணி, இனி பிறப்பு இருந்தால், அப்பிறவி புழுவாய் பிறந்தாலும் எம்மையும் மட்டுமல்லாது தொழும் அனைவரையும் உம் அடியேனாக வழுவாது வைத்து அருள் செய்து காக்க வேண்டும் என்று இவ்வையகத்தாருக்காகவும் எத்தனை அழுகுற பாடியிருக்கிறார். இதோ.

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்அடி மனத்தே
வழுவாது இருக்க வரம் தரவேண்டும் இவ் வையகத்தே
தொழுவார்க்கு இரங்கி இருந்து அருள்செய் பாதிரிபுலியூர்ச்
செழுநீர்ப்புனல் கங்கை செஞ்சடைமேல் வைத்த தீ வண்ணனே.

அ) அமைவிடம்: பாண்டிச்சேரிக்கு தெற்கே 20 கி.மீ. தொலைவில் உள்ளது. பண்ருட்டிக்கு கிழக்கே 26 கி.மீ. தொலைவில் உள்ளது. விழுப்புரம்–சிதம்பரம் பாதையில் கடலூர் சந்திப்பிற்கு முன்னால் திருப்பாதிரிபுலியூர் இரயில் நிலையம் உள்ளது. இதற்கு அருகில் மேற்கே இத்திருத்தலம் உள்ளது.

ஆ) பெயர்க்காரணம்: பாதிரி தல மரமானதாலும், புலிக்கால் முனிவர் வழிப்பட்ட சிறப்பாலும் இத்தலம் பாதிரிபுலியூர் என்று அழைக்கப்படுகிறது.

இ) மூர்த்திகள்: இறைவன்: அருள்மிகு பாடலேசுவரர், தோன்றாத்துணைநாதர், இறைவி: அருள்மிகு பெரியநாயகி, அருந்தவ நாயகி. தீர்த்தம்: சிவகர தீர்த்தம், பிரமதீர்த்தம்(கடல்) தலமரம்: பாதிரி

ஈ) பாடல் பெற்றமை: திருஞானசம்பந்தராலும், அப்பரடிகளாலும் பாடல் பெற்ற தலம். மேலும் இது அருணகிரியாராலும், சேக்கிழாராலும், ஸ்ரீசிதம்பர முனிவராலும் பாடப்பட்டத் திருத்தலம்.

உ) திருக்கோயில் அமைப்பு: தென்திசைக் கங்கையாகிய கெடில நதியின் தென்கரையில் ஊரும் கோயிலும் உள்ளன. நான்கு மூலைகளிலும் பிள்ளையார் கோயில் அமைப்பு இராஜவீதி, மடவிளாகம் ஆகியன சேர்த்து 5 பிரகாரங்களைக் கொண்ட பெரிய கோயிலாகும். சுவாமி அம்பாள் கிழக்கு நோக்கிய சன்னதிகளை கொண்டதாய் விளங்குகிறது. 7 கலசம் 5 நிலைகளை கொண்ட இராஜகோபுரம் அவ்வூருக்கே அழகைச் சேர்க்கிறது. இங்குள்ள பாதிரி ஒரே காலத்தில் 12 வகை மலர்கள் பூத்த மரம் ஆகும். அப்பிகை தங்கித் தவம் புரிந்த மரம் இதுவாகும்.

ஊ) தலச்சிறப்புகள்: புலிக்கால் முனிவர் வாழ்ந்து இறையருள் பெற்ற திருத்தலம். அவரது மகன் உபமன்யு முனிவரும் இத்தலத்தில் வழிபாடு செய்துள்ளார். தேயமெல்லாம் நின்றிறைஞ்சும் திருப்பாதிரிபுலியூர் என அப்பரடிகளால் போற்றப்படும் தலம். அப்பரடிகள் சொற்றுணை வேதியன் திருப்பதிகம் பாடிக் கல்லே தோணியாக மிதந்து வரக் கரையேறிய தலம். அகத்திய முனிவர் வழிபட்ட தலம். கன்னி வனபுராணம், புலியூர் நாடகம் என இவ்வூர் குறித்த நூல்கள் இருந்தன. தொல்காப்பியத் தேவர் திருப்பாதிரிபுலியூர்க் கலம்பகம் இயற்றியுள்ளார்.

இவ்வூர்க் கல்வெட்டில் அப்பரடிகளை, **பரசமய கோளரி மாமுனி** என்று பொறிக்கப்பட்டுள்ளது.

7. முண்டீச்சுரம்

இத்திருக்கோயில் உள்ள ஊரை மக்கள் கிராமம் என்றே அழைக்கின்றனர்.

இவ்வுலகத்தாருக்கு யார் உற்ற உறவுகள், ஒழிவு அற நின்று எங்கும் உலப்பிலானை காண வினாவினால், திருமுண்டீச்சரத்துள்ளும் உறையும் முண்டீசுரர் கண்டுணரலாம் என்பதோடு, சிவலோகனாக அவன் தன் சிந்தையாகவே உள்ளான் என 6-ஆம் திருமுறையில் அப்பர் பெருமான் பாடுகிறார்.

உற்றவன்காண் உறவுஎல்லாம் ஆவான் தான்காண்
ஒழிவு அற நின்று எங்கும் உலப்புஇலான்காண்

ஒரு பதிகம் மட்டுமே பாடியருளிய இப்பதிகத்தில் ஒவ்வொரு பாடலின் ஈற்றடியில் "சிவலோகன்காண் அவன் என் சிந்தையானே". என்று மகுடம் சூட்டுகிறார் அப்பரடிகள்.

அ) அமைவிடம்: விழுப்புரத்திலிருந்து தென்மேற்கே 15 கி.மீ. திருச்சி நெடுஞ்சாலையில் அரசூரை அடைந்து அங்கிருந்து மேற்கே 2.கி.மீ. பண்ருட்டியை அடைந்து, அதன் வடமேற்கே 20 கி.மீ. தொலைவில் உள்ளது.

ஆ) பெயர்க்காரணம்: சிவபெருமான் திருக்கோயில்களில் வாயில் காவலர்களாக விளங்கிய திண்டி வழிபட்டதால் திண்டீச்சரம் எனவும், முண்டி வழிபட்டதால் முண்டீச்சரம் எனவும் வழங்கப்படுகிறது. கல்வெட்டுக்களில் முடீச்சரம் என்றே பொறிக்கப்பட்டுள்ளது.

இ) மூர்த்திகள்: அருள்மிகு சிவலோக நாதர், முண்டீசர். இறைவி: அருள்மிகு கானார் குழலி, செல்வநாயகி, தீர்த்தம்: பிரம தீர்த்தம். தலவிருட்சம்: வன்னிமரம்.

ஈ) பாடப் பெற்றமை: அப்பரடிகளால் பாடப்பெற்ற தேவாரச் சிறப்பினை உடையது.

உ) திருக்கோயில் அமைப்பு: பெண்ணையாற்றின் தென்கரையில் அமைந்துள்ள இக்கோயில் கிழக்கு நோக்கி உள்ளது. சுவாமியும், வலதுபுறத்தில் அம்பாளும் தனித்தனியே கிழக்கு நோக்கி அருள்பாலிக்கிறார்கள். இக்கோயில் பழமையான கற்றளியாகக் காட்சி தருகிறது. துவார வாயிலில் விநாயகரும், முருகனும் இடம் மாறி உள்ளனர்.

ஊ) தலச்சிறப்புகள் :தேவேந்திரனும் வழிபட்ட பெருமையுடையது. வீரபாண்டியன் என்னும் மன்னனுக்கு இப்பெருமான் திருநீற்றுப்பை (பொக்கணம்) வழங்கியுள்ளார்.

இவ்வூர் "மௌலி கிராமம்" என்று கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது. பின்பு இது கிராமம் என்று மருவிற்று.

8. திருவாமாத்தூர்

5 மற்றும் 6 -ஆம் திருமுறையில் இத்திருத்தலத்தினை பற்றி பாடியருளிக்கிறார்.

ஆமாத்தூர் தலத்தில் குடிகொண்டுள்ள அழகியநாதனை நெஞ்சில் நினைத்து அவன் நினைவாக இருந்தால், வஞ்ச ஆறுகள் அனைத்தும் வற்றிவிடும் என்றும் அதனைக் காணலாம் எனவும் அழகுற பாடுகிறார்.

பஞ்சபூதவலையிலப் படுவதற்கு
அஞ்சி நானும் ஆமாத்தூர் அழகனை
நெஞ்சினால் நினைத்தேன் நினைவு எய்தலும்
வஞ்சஆறுகள் வற்றின காண்மினே

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் அருட்சமாதி இத்தலத்தின் உள்ளது.

அ) அமைவிடம்: விழுப்புரத்திலிருந்து வடமேற்கே 6 கி.மீ. தொலைவில் பெண்ணையாற்றின் ஒரு பிரிவாகிய பம்பையாற்றின் வடகரையில் உள்ளது.

ஆ) பெயர்க்காரணம்: உயிர்களுக்கும் (பசுக்களுக்கு) இறைவன் தாயாக இருந்து அருளும் தலம். பசுக்களின் குறையறிந்து அவ்வகட்கு இறைவன் கொம்புகள் அளித்த காரணத்தால் ஆமாத்தூர் என்று இத்தலம் அழைக்கப்பட்டது.

இ) மூர்த்திகள்: இறைவன்: அருள்மிகு அபிராமேஸ்வரர். அழகியநாதர். இறைவி: அருள்மிகு முத்தாம்பிகை, அழகியநாயகி. தீர்த்தம்: ஆம்பலம், பூம்பொய்கை. தலவிருட்சம்: வன்னி மரம்.

ஈ) பாடல் பெற்றமை: தேவார மூவராலும் பாடல் பெற்ற சிறப்பினை உடையது. அப்பரடிகளின் பாடல்கள் 5 மற்றும் 6–ஆம் திருமுறைகளில் இடம் பெற்றுள்ளன. கபிலர், பாணர், சேக்கிழார், அருணகிரிநாதர், இரட்டை புலவர்கள் போன்றோரால் சிறப்பிக்கப்பட்டத் திருத்தலமாகும்.

உ) திருக்கோயில் அமைப்பு: பம்பையாற்றின் கரையில் ஆமாத்தூர் ஆலயம்

அமைந்துள்ளது. வேறு எங்கும் காணாத வகையில், சுவாமி, அம்பாள் கோயில்களை கிழக்கு வீதியின் இருபுறங்களிலும் கிழக்கு நோக்கியும், மேற்கு நோக்கியும் உள்ளன. மால்துயர் தீர்த்த விநாயகரும், ஆறுமுகர் சந்நிதிகளும், சுவாமி, அம்பாள் சன்னதிகளும் சிறப்புடையன.

ஊ) தலச்சிறப்புக்கள்: தவத்திரு வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் இயற்றிய தலபுராணம், இத்தலத்தின் பெருமையைக் கூறும். இவர்கள் தங்கித் தவம் இயற்றிச் சித்தி பெற்ற கௌமார மடலாயமும் அவர்தம் ஞான சமாதிக் கோயிலும் இத்தலத்தில் உள்ளன. நந்தி, காமதேனு, தவமிருந்து கொம்புகளைப் பெற்ற சிறப்புடைய தலமாகும்.

கல்வெட்டுகளில், இறைவனின் பெயர் திருவாமாத்தூர் ஆள்வார் என்று பொறிக்கப்பட்டுள்ளது.

திருப்பதிகம் பாடுவதற்கு நில நிவந்தம் அளிக்கப்பட்ட செய்திகள் உள்ளன. திருநந்தா விளக்கு எரிக்கப் பொன் கொடுத்த செய்தியும் உள்ளன. இது போன்று கொடை அளித்த செய்திகளை அறியமுடிகிறது.

9. திருவண்ணாமலை

இத்திருத்தலத்தினைப் பற்றி 4 ஆம் திருமுறையில் ஒரு பதிகமும், 5-ஆம் திருமுறையில் 2 பதிகங்களுமாக பாடியுள்ளார் அப்பரடிகள்.

அண்ணாமலையானை தேடிச்சென்று, ஆடி,பாடி பணிந்து வணங்கினால் நம்மை நாடி வந்து ஆட்கொள்வர். அவ்வாறு ஆட்கொண்டால் நமது வினைகள் யாவும் ஓடிப்போய்விடும் என நம்மை ஆற்றுப்படுத்தி அழைக்கிறார்.

தேடிச் சென்று திருந்துஅடி ஏத்துமின்
நாடி வந்து அவர் நம்மையும் ஆட்கொள்வர்
ஆடிப் பாடி அண்ணாமலை கைதொழ
ஓடிப் போம் நமது உள்ள விணைகளே. -5-ம் திருமுறை

இது நினைத்தாலே முத்தி தரும் தலம். இத்தலத்தில் சித்தர்களும் யோகிகளும், மகான்களும், ஞானிகளும் வாழ்ந்து வருகிறார்கள். இத்தலத்தில் கார்த்திகை தீபம் சிறப்பு வாய்ந்தது.

புத்திதரும் தீபம் நல்லபுத்திரசம் பத்துமுண்டாம்
சித்தி தரும் தீபம் சிவதீபம் - சத்திக்கு
உயிராகும் சோணாமலை ஓங்கி வளர் ஞானப்
பியராகும் கார்த்திகை தீபம். -கார்த்திகை தீப வெண்பா

அ) அமைவிடம்: திண்டிவனத்திலிருந்து மேற்கே 64 கிமீ. விழுப்புரம்–காட்பாடி இருப்புப்பாதையில் இத்தலம் அமைந்துள்ளது.

ஆ) பெயர்க்காரணம்: திருமால், பிரமன் இருவருக்கும் அடிமுடி எட்டாத நிலையில் இறைவன் மலை உருவில் தோன்றியது ஆதலால் அண்ணாமலை என்று பெயர் பெற்றது.

இ) மூர்த்திகள்: இறைவன்: அருள்மிகு அருணாசலேசுவரர், அண்ணாமலையார். இறைவி: உண்ணாமுலையம்மன், அபீதகுஜாம்பாள். தீர்த்தம்: பிரமதீர்த்தம், சிவகங்கை தீர்த்தம். தலவிருட்சம்: மகிழமரம்.

ஈ) பாடல் பெற்றமை: தேவார மூவருள் திருஞானசம்பந்தரும், அப்பரடிகளும் பாடல் பெற்ற திருத்தலம். மாணிக்கவாசகர், இத்திருத்தலத்தில்தான் திருவெம்பாவையை அருளினார். அருணகிரியாரால் அருளப்பட்ட திருப்புகழும் இத்திருத்தலத்தில்தான். சேக்கிழார், குருநமசிவாயர், இராமலிங்க வள்ளலார் இவர்களால் பாடல்கள் அருளப்பட்ட திருத்தலம்.

உ) திருக்கோயில் அமைப்பு: இத்தலத்தில் உள்ள மலை 2667 அடி உயரம் உடையது. மலையடிவாரத்தில் 24.00 ஏக்கர் நிலப்பரப்பில் 7 பிரகாரங்களைக் கொண்டு இத்தலம் அமைந்துள்ளது. 9 கோபுரங்களுடன் திகழும் இக்கோயில், கிழக்கு நோக்கி உள்ளது. இராஜகோபுரம் 11 நிலைகளுடன் கூடியது. இதன் உயரம் 217 அடியாகும். இதன் அடிநிலை 135 அடி நீளம் 98 அடி அகலம் கொண்டது. இக்கோபுரம் தென்னிந்தியாவிலேயே மிக உயரமான கிழக்கு இராஜகோபுரமாகும். தெற்குத் கோபுரத்தைத் திருமஞ்சனக்கோபுரம் என்றும், மேற்குக் கோபுரத்தைப் பேய்க் கோபுரம் என்றும் வடக்குக் கோபுரததை அம்மணி கோபுரம் என்றும் வழங்குவர். இரமண மகரிஷி பலகாலம் தங்கித் தவம் செய்த பாதாள லிங்கேஸ்வரர் சன்னதி சிறப்பு வாய்ந்தது.

இரண்டாம் கோபுரம் வல்லாள மகாராஜா கோபுரம். இக்கோபுரத்தின் மீது ஏறி அருணகிரிநாதர் தனது உடலை நீக்கிக் கொள்ளக் கீழே விழுந்த போது முருகபெருமான் அவரைக் காப்பாற்றினார். மூன்றாம் கோபுரம் கிளிக்கோபுரம் ஆகும். இக்கோபுரத்தில் தான் அருணகிரிநாதகர் கிளி வடிவத்தில் கந்தர் அநுபூதி பாடினார். இத்திருக்கோயில் பல சிறப்புக்களை உடையது.

ஊ) தலச்சிறப்புக்கள்: சமய உலகில் புகழ் பெற்ற இத்தலம் மூர்த்தி தலம், தீர்த்தம் மூன்றாலும் சிறந்து விளங்குகிறது. பஞ்சபூதங்களில் தேயுத் தலமாக உள்ளது. சிவபெருமான் உமையம்மைக்கு இடப்பாகம் அளித்த சிறப்பும் இத்தலத்திற்கு உண்டு. திருமால், பிரமன், சூரியன், சந்திரன், அட்டவசுக்கள்,

பிரதத்தராசன், புளகாதிபன் முதலியோர் வழிபட்டு அருள்பெற்ற சிறப்புடையது. திருவண்ணாமலையே இங்கு சிவமாக உள்ளதால் இத்தலத்தில் கிரிவலம் திருச்சுற்று 14 கி.மீ. தூரம் உடையது. மலையைச் சுற்றி அஷ்டலிங்கங்கள், அஷ்டநந்திகள், தீர்த்தங்கள், ஆஸ்ரமங்கள் உள்ளன. இத்தலம் அன்றும் இன்றும் விரூபாஷ தேவர், ஈசான்ய தேசிகர், ரமண மகரிஷி, பூண்டி மகான், சேஷாத்திரி சுவாமிகள் போன்ற ஞானிகளின் உறைவிடமாய்த் திகழ்கின்றது.

இவ்வாறாக அப்பரடிகளால் பாடப்பட்ட நடுநாட்டுத்திருத்தலங்களைப் பற்றிய செய்திகள் இருந்தாலும், அவர்களுடைய பாடல்கள் 4,5,6 திருமுறைகளில் இடம் பெற்று இருக்கின்றன. இப்பாடல்கள் சமயம் மற்றும்,சமுதாயத்திற்கு வழிகாட்டும் நிலையில் உள்ளன. சைவ அன்பர்கள் இப்பாடல்களைப் படித்துப் பயன்பெற வேண்டும் என்பது நமது விருப்பமாகும்.

திருச்சிற்றம்பலம்

6. அப்பர் தேவாரத்தில் தொண்டை நாட்டுத் திருத்தலங்கள்

தமிழாகரர். தெ. முருகசாமி
மேனாள் முதல்வர், இராமசாமித் தமிழ்க் கல்லூரி, காரைக்குடி

முன்னுரை

"தொண்டலால் துணையும் இல்லை" – என்ற சமூக பார்வையோடு சமயத்தை வளர்த்த பெருமை அப்பரடிகளையே சாரும். அவர் தமிழால் நாடு முழுவதையும் உழுது, தொண்டு என்னும் பயனை அறுவடையாகத் தந்தவர். அந்த வகையில் தொண்டை நாட்டில் மட்டும் அவரது பயனை நினைவு கூர்ந்து பரிமாறுகிறது இக்கட்டுரை!

தொண்டை நாடு

வேழ முடைத்து மலைநாடு மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து –பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்துத் தெண்ணீர் வயல்தொண்டை
நன்னாடு சான்றோருடைத்து.

என்பது அருந்தமிழ் ஔவை வாக்கு. வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு – எனத் தொல்காப்பியர், சேர,சோழ,பாண்டியர்களைச் சுட்டும் நிலையில் ஔவையார் தொண்டை நாடு எனக் கூடுதலாக ஒன்றைக் குறித்த அளவில் தமிழ்நாடு நாற்பெரும் பெயருடையதாக இருந்தது எனத் தெரிகிறது.

நாலாவது பெயராக அமைந்த நாடு தொண்டை நாடு. இந்த எல்லை பற்றித் தட்சண இந்திய சரித்திரம் என்னும் நூலுள், கிழக்கே கடலும், மேற்கே பவள மலையும், வடக்கே திருவேங்கடமும், தெற்கே பினாகி நதியும் (பாலாறு செய்யாறுகளின் இடைப்பட்ட நதி) எல்லையாக உடையது என்று அந்நூலாசிரியர் நரசிம்மலு நாயுடு என்பவர் கூறுகிறார்.

இந்த எல்லைக்குறிப்பில் வடக்கே வேங்கடம் உள்ளதால் தொல்காப்பியர் காலத்தில் வண்புகழ் மூவர் எனப்பட்ட வகையில் தொல்காப்பியப்பாயிரம் கூறும் வடவேங்கடம் வரைக்கு உட்பட்ட நாடு தமிழ்நாடாக இருந்தது எனத் தெரிகிறது. இதன் பின்னர் தொண்டை நாடென ஒன்றை ஔவையார் சேர்த்துக் கூறுவதால் விரிந்து பரந்த சோழநாடு இரண்டாக்கப் பிரிக்கப்பட்ட நிலையில் சோழ வட எல்லை தொண்டை நாடானது எனலாம்.

பெயர்க்காரணம்

அதற்கு அப்பெயர் வர ஒரு காரணம் உண்டு. நாகப்பட்டினத்தை ஆண்ட சோழன், நாகலோகம் சென்று நாககன்னி ஒருத்தியை மணந்தான். கருவுற்ற நாககன்னியைப் பிரிந்து சோழநாடு வரும் நிலையில், பிறக்கும் தன் புத்திரனுக்குத் தன் நாட்டின் பாதியைக் கொடுப்பதாகக் கூறினான். இந்நிலையில் சிறிது காலத்தில் பெற்ற குழந்தையை தொண்டைக் கொடியால் பாதுகாப்புடன் சுற்றித் தெப்பத்தில் இட்டு அனுப்பினாள். நாகப்பட்டினக் கரையையடைந்த குழந்தையை எடுத்து வளர்த்த சோழன் தன்நாட்டின் ஒரு பகுதிக்குத் தொண்டை நாடு எனப் பெயர் வைத்து நாட்டை அக்குழந்தைக்குப் பிரித்துக் கொடுத்தான். கடலின் திரையால் மிதந்து வந்ததால் அக்குழந்தை திரையன் என்றும் தொண்டைமான் என்றும் அழைக்கப்பட்டான். காலப்போக்கில் தொண்டை நாடு சோழ வளநாட்டின் உப நாடாக இருந்த நிலை மாறித் தனி நாடாக (இராஜதானியாக) மாறிய சிறப்பால் சான்றோர் உடைத்துத் தொண்டை நாடு எனப்பட்டது.

தொண்டை நாட்டின் பொதுச் சிறப்பு

இவ்வாறாகத் தொண்டை நாட்டுக்குப்பட்ட முத்தமிழ் நாடு ஆன்மீகம் கொழிக்கும் புண்ணிய பூதியாகக் கருதப்பட்ட நிலையில் தொண்டை நாட்டின் ஆன்மீகப் பங்களிப்பு சைவ, வைணவமாகப் பரிணமித்தாலும் சைவ சமயத் தொடர்பான ஆன்மீகச் சிறப்பு அளப்பரியதாகும். அவற்றுள் சைவ சமய வகையில் தேவாரம் பாடிய மூவரும் திருவாசகம் பாடிய மணிவாசகரும் தொண்டை நாட்டின் சைவத் திருக்கோயில்களைப் பாடிய நிலையில் சைவ சமயக்குரவர் நால்வருள் அப்பரடிகள் என்னும் திருநாவுக்கரசரின் திருத்தலப் பயணம் பற்றியதை மட்டும் இக்கட்டுரையில் காண்போமாக!

அப்பர் வணங்கிய தொண்டை நாட்டுத்தலங்கள்

அப்பரடிகள் தொண்டை நாட்டளவில் தொழுது வணங்கிய தலங்கள் ஒன்பது. 1. திருக்கச்சி ஏகம்பம், 2.திருக்கச்சி மேற்றளி, 3. திருமாற்பேறு, 4.திருவாலங்காடு, 5. திருப்பாச்சூர், 6. திருக்காளத்தி, 7. திருவொற்றியூர், 8. திருவான்மியூர்., 9. திருக்கழுக்குன்றம்.

1. திருக்கச்சி ஏகம்பம்

கச்சி-பெயர்க்காரணம்

தமிழ் நாட்டில் உள்ள பழம்பெரும் நகரங்கள் யாவும் ஆன்மீகத் தொடர்புடையதாகவே உள்ளன. இக்கச்சி ஏகம்பம் என்பது காஞ்சிபுரத்தைக் குறிப்பது. கி.பி. 2-ஆம் நூற்றாண்டின் மணிமேகலைக் காப்பியத்தில் கச்சி

மாநகர் புக்காதை எனக் கூறப்பட்டுள்ள கச்சி என்ற பழம் பெயர் எனத் தெரிகிறது. இதன் தொடர்ச்சியாகவே கி.பி.6-ஆம் நூற்றாண்டினரான அப்பரடிகள் தம் தேவாரத்தில் "மதிற் கச்சி ஏகம்பம் மேயானை" என்றே பாடுவதால் "கச்சி" என்பது காஞ்சிபுரத்தின் பழம் பெயர் எனத் தெரிகிறது.

மர வகைகளுள் காஞ்சியும் ஒன்று. காஞ்சி மரங்கள் சூழ்ந்த நகரம் காஞ்சிமா நகரம் எனப்பட்டது. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் சுட்டப்படும் இக்காஞ்சியை அப்பரடிகளும் காஞ்சிமா நகர் என்றே சுட்டுகிறார்.

கம்பா நதியில் சிவபூசை செய்த பார்வதி தேவியார் நதியின் வெள்ளப் பெருக்கை கண்டு அஞ்சி கச்சணிந்த மார்புடன் மண்ணாலான சிவலிங்கத்தைக் காட்டி அணைத்ததால் ஏற்பட்ட வடுவுடன் காணப்பட்ட அந்த ஈசனுக்குக் கச்சிபேசன் எனப்பட்டதால் அவன் தங்கியருள் பாலிப்பது கச்சி நகராயிற்று.

ஏகம்பம் பெயர் காரணம்

ஏகம்பம் என்பதும் சிவலிங்கத்தின் ஒரு பெயர். கம்பம் என்பது தூண். மரத்தால் கல்லால் அமைத்த இலிங்க உருவே ஏகம்பம். ஒற்றைத்தூண் என்பது பொருள். இதையே நடப்பட்ட தறி (தூண்) என்றும் கூறுவதுண்டு. இந்நிலையில் இறைவனது பெயர், ஊருக்கும் ஆனது.

காஞ்சி பெயர்க்காரணம்

காஞ்சி மரக்காட்டால் பெற்ற பெயராயினும் நிலையாமை என்ற கோட்பாட்டின் அடிப்படையில் மக்களுக்கு வாழ்வியலை உணர்த்தும் ஊர் என்பதால் காஞ்சிபுரம் ஆனது. இதற்கேற்பவே மணிமேகலை பலகாலம் தங்கியிருந்து அன்னதானம் செய்து பல உயிர்களைக் காத்ததோடு தவத்திறம் பூண்ட அறவண அடிகள்பால் தருமங்களைக் கேட்டு மரித்த இடமாக வாழ்வின் நிலையாமையை உணர்த்தும் குறியீட்டு நகரமாய் உள்ளதால் காஞ்சிபுரம் ஆயிற்றெனலாம்.

மேலும் இந்நிலையாமை வாழ்வால் உயிர் முத்திபெறும் தலமாகவும் கருதப்பட்ட நிலையில் பாரத நாட்டில் முத்தி தரும் திருத்தலங்களுள் காஞ்சிபுரம் ஒன்று என ஆன்றோர் கூறினர். 1. காசி, 2.கயா, 3. வடமதுரை, 4.துவாரகை, 5. அவந்திகை, 6, அயோத்தி, 7. காஞ்சி என்பன முத்திதரும் தலங்கள். இவற்றுள் காஞ்சிபுரம் மட்டும் தமிழ்நாட்டில் உள்ளது. பிற தலங்கள் வடக்கே உள்ளன. இருப்பினும் நகரங்களுள் சிறந்தது காஞ்சி என்பதாய் ஆன்றோர் கூறுவர். சிவப்பிரகாசர் "நகர்கள் நாயகம்" எனக் சிவஞானபாலய தேசிகர் கலம்பத்துள் கூறுகிறார்.

காசியினும் ஒரு பங்கு கூடுதல் சிறப்புடைமையை "ஞ்" என்ற ஓர் எடுத்துக் கூடுதலால் பொதுவாகக் கூறினாலும் "நகரேஷ காஞ்சி" என வடமொழியாலும் கூறுவதால் காஞ்சியின் புண்ணிய புனிதம் ஆன்மீகத்தால் தொன்று தொட்டு வருவதை உணர முடிகிறது.

இங்குள்ள காமகோட்டம் எனப்படும் காமாட்சியம்மன் கோயிலும் குமரகோட்டம் எனப்படும் முருகப்பெருமான் கோயிலும் சிறப்புமிக்கவை.

காமாட்சி என்ற சொல் காமக்கண்ணி என்ற தமிழ்ச்சொல்லின் வடசொல்லாக்கம். ஆன்மாக்களை அருளோடு பார்த்து ஈடேற்றும் பார்வையுடையவளே காமக் கண்ணியாம் காமாட்சியாகவும், இந்தக் காமக்கண்ணி என்ற சொல்லுடைய புலவர் பெயர் சங்க காலத்தில் உண்டு.

அப்பரடிகள் திருமாலால், "பூசனைப் பூசனைகள் உகப்பானை" எனக் கச்சி ஏகம்பப்பதிகத்தில்(6) பாடுவதால் கம்பா நதியில் காமாட்சி பூசனை செய்திட்ட குறிப்பு தெரிகிறது. அதாவது திருமாலும் சக்தி வடிவினரே எனச் சைவம் உணர்த்தும் வகையில் அம்பிகை வழிபட்ட காஞ்சிபுரம் சிறப்பு தெரிகிறது. "அரி அலால் தேவி இல்லை" என்றே அப்பரடிகள் திருவையாற்றில் பாடுவதால் திருமாலால் பூசனைப் பூசனைகள் உகப்பானை என்ற கச்சி ஏகம்பப் பதிகத் தொடர்(6) கம்பா நதியிலே அம்பிகை வழிபட்டதை சுட்டுவதாக உணரலாம்.

இப்படியாக அம்பிகை வழிபட்ட சூழலில் காஞ்சி மாநகரம் காமகோட்டமாக எண்டிசையோரும் ஏத்த நின்ற நகரம் குமர கோட்டமாகப் புகழ் பெறுவதற்குரிய குறிப்பையும் அப்பரடிகள் திருக்கச்சி ஏகம்பத் திருத்தாண்டகத்தில்(9)

முந்தைகாண் மூவரினும் முதலா னான்காண்
மூவிலைவேல் மூர்த்திகாண் முருக வேட்குத் தந்தைகாண்

என்று கூறுவதால் உணர முடிகிறது.

சைவ சித்தாந்த அமைப்பின்படி இறைவனை மாதொருபாகனாகக் கூறுவர். இந்த அர்த்தநாரி வடிவத்தோடு முருகனாம் குழந்தையை நடுவில் அமர்த்திக் காட்சியளிக்கும் "தாய் மகன் தந்தை" என்ற சோமாஸ்கந்த மூர்த்தமாகவும் கண்டு வழிபடுவர். இந்த வழிபாட்டுக்கேற்பவே காஞ்சிபுரத்தின் கோயில்களும் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

ஏகாம்பநாதர் திருக்கோயிலை வழிபட்ட நிலையில் கந்தகோட்டம் வணங்கிவிட்டு காமாட்சியம்மனை வணங்குமாறு கோயில்கள் அடுத்தடுத்து ஆன்றோர்களால் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த குறிப்பையே "முருவேட்குத் தந்தைகாண்" என ஏகம்பத் தாண்டகத்தில் உணர்த்திக் காட்டினார் எனலாம். இதைத்தான் "நங்கடம் பனைப் பெற்றவள் பங்கினன்" என அப்பரடிகள் தென்கடம்பூர்ப் பதிகத்தில் கூறினாலும் அதன் பொருத்தத்தைக் காஞ்சிபுரத்தில் கண்டு வணங்குவதைப் பாக்கியமாகக் கூறுவார் போல் அப்பர் முருகவேட்குத் தந்தைகாண் என்றார் போலும்!

இத்திருத்தாண்டகத்தில்(9) முருகனோடு விநாயகரையம் சேர்த்து "தண் கடமா முகத்தனாற்குத் தாதைகாண்" என்கிறார் அப்பர். இங்ஙனம் கூறியதைப்பொதுவானதாகக் கருதினாலும் அதில் ஓர் சிறப்பும் உள்ளது எனலாம். சோமாஸ்கந்த காட்சியால் காஞ்சிபுரம் சிறப்புடையதுபோல விநாயகப் பெருமானை இடையில் கொண்ட காட்சியாக மதுரையம்பதி உள்ள குறிப்பு நினைவு கூருமாறு அப்பரடிகளின் கச்சி ஏகம்பகத்தில் ஓர் குறிப்பு உள்ளது.

கருவுற்ற நாள்முத லாகவுன் பாதமே காண்பதற்கு
உருகிற்றென் உள்ளமும் நானும் கிடந்தலைந்தெய்த்தொழிந்தேன்
திருவொற்றி யூரா திருவலால வாயா திருவாரூரா
ஒருபற்றி லாமையும் கண்டிரங் காய்கச்சி ஏகம்பனே!

இப்பாட்டில் கூறப்பட்ட திருவொற்றியூரும், கச்சி ஏகம்பமும் தொண்டை நாட்டுத்தலங்கள், திருவாலவாய் பாண்டிய நாட்டுத்தல உணர்வோடே பாண்டிய நாட்டையும் நினைக்கிறார் என்பதைச் சாதாரணமாகக் கருதுவதற்கும் கூடுதலாக ஒரு சிறப்போடே உணரலாம்.

பிடியதன் உருஉமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவர்இடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே!

என்பது திருஞானசம்பந்தரின் வலிவலத் தலத்தோத்திரமாகும். இதில் திருநாவுக்கரசர் "நங்கடம் பனைப் பெற்றவள் பங்கினன்" என முருகனை - சிவசக்திக்கு இடையில் வைத்துப் பாடியது போலத் திருஞானசம்பந்தர் விநாயகரைத் தாய் தந்தையரின் இடையில் இருப்பவராகப் பாடுவதாக உணர முடிகிறது. இக்காட்சிக்கான இடமாக உள்ளதுதான் ஆலவாயான மதுரை.

காஞ்சிபுரத்தைப் போலவே மதுரையில் ஆலவாய் சிவன் சந்நிதிக்கும் அன்னை மீனாட்சி சந்நிதிக்கும் இடையில் முக்குறுணி விநாயகர் சந்நிதி கொண்டுள்ளார். ஒரே கோயில் வளாகத்தில் மீனாட்சியை வணங்கிவிட்டுச் சிவனை வணங்கச் சென்றாலும் சிவனை வணங்கிவிட்டு

மீனாட்சியை வணங்கச் சென்றாலும் இடையில் பேருருவாக வீற்றிருக்கும் விநாயகரை வணங்காமல் செல்ல முடியாதாகையால் காஞ்சிபுரச் சோமாஸ்கந்த காட்சியை மதுரையில் சோமாஸ் விநாயகரைக் கண்டு களிக்கலாம் எனலாம். இந்த ஓர் பொருத்தமான உணர்வுடன் கூடிய வழிபாட்டு நினைப்பைத் தூண்டும் நிலையிலேயே அப்பரது ஏகம்பத் திருத்தாண்டகத்தில் 'முருக வேளுக்குத் தந்தை' - எனப்பட்டதாய் கருதலாம்.

2. திருக்கச்சி மேற்றளி

திருக்கச்சி ஏகம்பத்தோடு சார்ந்த தான திருக்கச்சி மேற்றளி என்பது காஞ்சிபுரத்தின் மேற்குத் திசையில் உள்ள சிவத்தலமாகும். இச்சிவத்தால் இரண்டாக உள்ளது. ஒன்று உருவீசுவரர் கோயில். மற்றது மேற்றளிக் கோயில், தீர்த்தம்: விஷ்ணு தீர்த்தம்.

திருஞானசம்பந்தப் பிள்ளையார் பாடிய பாடலைக் கேட்டுத் திருமால் உருகிவிட்டாராம். உருகிய நிலையில் சிவனை வேண்டி வரம் பெற்றுப் பழைய உரு பெற்ற தலம் என்பதால் உருகீசுவரர் கோயில் எனப்பட்டது. இந்த அற்புதத்தைப் பிள்ளைப் பிராயத்தரான சம்பந்தர் வந்து பாடிய இடமாதலால் அந்த இடச்சூழல் பிள்ளையார்பாளையம் என்ற சிறப்புப் பெயர் பெற்றது. இது காஞ்சிபுரத்தின் மேலைத் திசையானாதால் மேற்றளி எனப்பட்டது. தளி–கோயில்.

3. திருமாற்பேறு

காஞ்சிபுரத்தையடுத்துள்ள திருத்தலம். திருமால் சக்கரம் வேண்டிப் பூசித்துப் பேறு பெற்ற தலம். குபன் என்னும் அசுரன் பொருட்டுத் ததீசி முனிவருடன் சண்டையிட்ட திருமால் சிவனிடம் சங்கரப் பேறு பெற்றார். சுவாமி–மால் வணங்கீசுவரர். அம்பாள் – கருணைநாயகி அம்மை. விஷ்ணு தீர்த்தம்.

4. கச்சி, கச்சி மேற்றளி, திருமாற்பேறுகளின் தேவாரச் சிறப்புகள்

காஞ்சிபுரம் என்றதும் கம்பா நதித் தீர்த்தத்தில் காமாட்சி வழிபட்ட புராணச் சிறப்பே அனைவரது நெஞ்சிலும் தோன்றும் என்பதால் சிவ பூசை செய்வதன் சிறப்பைத் தன் சிவபூசையைக் கொண்டு அன்னை தெரிவித்த சிறப்பால் கச்சி ஏகம்பத்தைப் பாடத் தொடங்கும் நிலையில் கைப்போது மலர்தூவி நம்புலனும் அகத்தடக்கிப்பூசை செய்ய வேண்டும் என்று கூறுகிறார்.

ஐம்புல அடக்கத்தாலான்றி வழிபாடு பயனை நல்காது என்பதை நல்லதோர் உவமையால் கூறிச் சிவபூசையை ஆன்மாக்கள்

இடையறவில்லாமல் செய்ய வேண்டும் என்கிறார்.

ஒருமுழம் உள்ள குட்டம்
ஒன்பது துளையு டைத்தாய்
அரைமுழம் அதன்அகலம்
அதனில் வாழ்முதலை ஐந்து
பெருமுழை வாய்தல் பற்றிக்
இடந்துநான் பிதற்று கின்றேன்

ஒன்பது நீர்த்துறையுள்ள குளத்தில் ஐந்து முதலைகள் இருந்து எவரையும் குளத்தைப் பயன்படுத்த முடியாமல் அச்சுறுத்துவத்தைப் போல ஒன்பது ஓட்டைகள் உள்ள உடம்பில் ஐம்பொறிகள் ஆன்மாவை ஆட்டி வைக்கின்றதால் அமைதியான சிவபூசைக்கு வழியில்லையே எனப் பிதற்றுகிறார் அப்பர். இதைத்தான், 'வாழ்த்துமாறு அறிய மாட்டேன் மால்கெடு மயங்கினேனே' என்று திரு ஏகம்ப நேரிசைப்பாவில் (4) கலங்குகிறார். இருப்பினும் 'அருத்தியால் ஏத்த (அன்பு வழிபட) அவரவர்க்கு அருள் செய்வார்' எனப் பதிகத்தின் இறுதிப்பாடலில் நம்பிக்கை கொள்கிறார். ஆக, காமாட்சியம்மை காட்டிய சிவபூசை சிறப்பைக் கூற விரும்பிய நாவுக்கரசர், 'இச்சையால் உமை நங்கை வழிபடக் கச்சி ஏகம்பம்' மேய இறைவன் எனத் திருக்குறுந்தொகையில் சான்றாகப் பாடினார்.

நாவுக்கரசர் சமணரோடே பலகாலம் உழன்றவர். அச்சமண சமயத்தின் தலைநகராக இருந்தது காஞ்சிபுரம். இந்நகரிலிருந்தது பல்லவ மன்னன்தான் தமக்குப் பல துன்பங்களைத் தந்தவன் என்ற நினைவு இக்காஞ்சியம் பதிக்கு வந்ததும் நினைவில் வந்து மோதுவதால் அதைத் தவிர்த்துவிட்டுப் பாட மனம் வராதவராய் திருவிருத்தம் என்ற பதிகத்தில்,

ஓதுவித்தாய் முன்அறவுரை
காட்டி அமணரொடே
காதுவித்தாய் கட்டநோய்
பிணித் தீர்த்தாய் கலந்தருளிப்
போது வித்தாய் நின்பணி
பிழைக்கிற்புளி யம்வளாரால்
மோதுவிப்பாய் உகப்பாய் முனி
வாய்க்கச்சி ஏகம்பனே (1)

என்று நம் அனுபவத்தைக் கூறி, மேலும் முன்னர் போல் பிழை செய்யமாட்டேன். செய்தால் புளியம்விளாரால் தண்டனையை அளிக்குமாறு கச்சி ஏகம்பரிடம் வேண்டுகிறார்.

சமணர்களோடு நாவுக்கரசர் பட்ட துன்ப ஓலங்களை அவரால் மறக்க முடியவில்லை. பந்தைத் தண்ணீருக்குள் எந்தளவிற்கு அழுத்தினாலும் அதுமேலே வருதல் போலக் காஞ்சிபுர மண்ணை மிதித்தவாறாகப் பாடும் அப்பருக்கு அமணரோடிருந்த வாழ்வை நினைந்து பாடியதோடன்றி அங்ஙனம் அமணரோடு நம்மை ஆட்படுத்திய குற்றத்தைச் சிவன் மீது ஏற்றிப் பாடுவதிலும் அப்பரின் தன் வரலாற்றுப் பதிவுக்கான ஆவணமாய் கச்சி ஏகம்பப்பதிகம் உள்ளது எனலாம்.

எத்தைக் கொண்டு எத்தகை ஏழை
அமணொடு இசைத்து எனைக்
கொத்தைக்கு மூங்கர் வழிகாட்டுவித்து
என்னைக் கோகு செய்தாய்

இத்திருவிருத்தத்திலும் (2) தம்மை இளம் வயதில் சரியான வழிகாட்டித்திருத்தாத குற்றத்தை இறைவன்மீது சுட்டுவது தூய மனத்திறந்த தன் வரலாற்றுப் பதிவாகும் எனலாம். இதைத்தான் சேக்கிழார், ‘நம்பர் அருளாமையினால் கொல்லாமை மறைந்துறையும் அமண் சமயம் குறுகுவார்’ என்றார்.

ஊமை குருடுக்கு வழிகாட்டுதல் போல என்பது ஓர் உலக மொழி. வாய்பேச முடியாதவன் கையால் வழிகாட்ட முனைந்தாலும், அதைக் காணும் இயல்பு குருடனுக்கு இல்லாததைப் போல இறைவன் தம்மைப் பழி வாங்கி விட்டதாக நாவுக்கரசர் ‘கோகு செய்தாய்’ என நேருக்கு நேராகவே ஏசுகிறார்.

கோகு– கபடம். இப்படிக் கூறுவதோடு நெஞ்சம் அமைதி பெறாமல் ‘நின்கழலடி போற்றாத கயவர் நெஞ்சில் குய்யம் பெய்தாய்’ என்று தூற்றுகிறார். அமணர்கள் என்னைப் பாடாதபாடு படுத்துதற்குரிய வஞ்சனைகளையெல்லாம் செய்யுமாறு நீதான் அவர்களைத் தூண்டினாயோ என்பதாகத் தாம்பட்ட துயரைக் கருதிக் கருதிக் கலங்குகிறார்.

இந்த வரலாறெல்லாம் முன்பே நடந்து முடிந்துவிட்டாலும் தம்மைக் கொடுமைப்படுத்திய சமணத் தலைமையிடத்திற்கு வந்ததும் நெஞ்சம் பீறிட்டுக் கிளம்பிய வகையில் அப்பரால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

அடங்காத கோபத்தால் அமணரைச் சாடுவதோடு ஆண்டவனையும் சாடிய உணர்வு சற்று சாந்தப்பட்டதால் ஏற்று கொண்டாய் என்னை எனப் பணிந்து பாடும் போது ஓர் உண்மையை வெளிப்படுத்துகிறார். எனக்கு சூலை நோய் தந்து பின் ஏற்றுக் கொண்டதையெல்லாம் இந்த உலகமே அறியும் என்பதால் உலகத்தில் மக்கள் ஏதோ காரணமாகத் தம் கைப்பொருளை ஒற்றி

வைத்துப் பின்னர் அதை மீட்டுக் கொள்வதைப்போல இறைவா நீயும் ஐம்புலக் சேட்டைகளுக்கு என்னை ஒற்றி வைத்துப் பின் மீட்டாய் என்று நன்றியோடு பாடுகிறார். சோன்று- மீண்டும் எடுத்துக்கொள்வது என்பது கருத்து.

காஞ்சிபுரச் சிறப்புகளைப் பொழில் சூழ்ந்ததாகவும் பாதுகாப்பான மதிலுடையதாகவும் பல இடங்களில் பாடிச் சிறப்பித்தாலும், கல்வியைக் கரையிலாத காஞ்சி மாநகர் தன்னுள் இறைவன் வீற்றிருக்கின்றான் என்பது அரிதினும் அரிதான செய்தியாகும். (கச்சிமேற்றளி 8-ஆம் பாடல்)

தெண்ணீர் வயல் தொண்டை நன்னாடு சான்றோர் உடைத்து என ஔவையார் பின்னாளில் தொண்டை நாட்டைச் சிறப்பிப்பதற்கு முன்னரே அப்பரடிகள் கல்வியை எல்லையிலாதாகக் கொண்ட காஞ்சி என்றதால் காசியின் பழம்பெருமை வழிவழியானது எனலாம்.

ஆக காஞ்சிபுரத் தொடர்புடைய கச்சி ஏகம்பம், கச்சி மேற்றளி, திருமாற்பேறு என்ற மூன்று திருத்தலங்களுக்கு மேலாக உள்ள தனித் தலங்ளைக் காண்போமாக!

4. திருவாலங்காடு

பழையனூர் ஆலங்காடு எனப் பெயர் பெறும். ஆலமரக்காடானதால் ஆலங்காடு எனப்பட்டது. இதற்கான பழையனூர் என்ற அடைமொழியால் காரைக்கால் அம்மையாரின் திவ்விய வரலாற்றுக்குரிய தலம் என்பதால் திருமுறையைத் தோற்றுவித்த அம்மையாரின் நினைவால் பழையனூர் ஆகியிருக்கக் கூடும்.

மேலும் காடு என்பது சுடுகாட்டைக் குறிப்பதற்கேற்பச் சிவபெருமான் காரைக்கால் அம்மையாரின் மூத்த திருப்பதிகம் இரண்டும் சுடுகாட்டின் தன்மைகளைச் சுட்டுவதோடு சிவனது நடனத்தில் பயன்படுத்தப்பெறும் பல்வேறு இசைக்கருவிகள் பற்றிய குறிப்பும் அம்மையாருக்குக் காட்டியருளிய ஊர்த்துவ தாண்டவத்தின் பொருத்தத்தை உரைப்பனவாகவும் உள்ளன. அந்த வகையில் திருவாலங்காட்டு மூலவர் ஊர்த்தவ தாண்டவர் என்றும் மூலவரான தேவி வண்டார்குழலி என்னும் பெயர் பெறுவர்.

இத்திருத்தலத்திற்கு அப்பரடிகள் இரண்டு பதிகங்கள் பாடியுள்ளார். அவற்றுள் திருநேரிசைப் பதிகத்தில் இத்தலத்தின் பழமையைச் சுட்ட பொழில் மேய ஆலங்காடு என்றே பல இடங்களிலும் கூறுகிறார். பழனம் என்பத வயலைக் குறித்தாலும் பழமையையும் சுட்டும் என்பதால் பழையனூர் திருவாலங்காடு என்பது பொருத்தமே ஆகும். காரைக்கால் அம்மை பாடுவதற்கேற்பவே பழைய சுடுகாட்டுச் சூழலையே அப்பரும் பாடுவதால்

மட்டுமின்றித் திருவாலங்காட்டுத் திருத்தாண்டகத்தில் தோத்திரமும் சாத்திரமும் ஆனாய் என்று அப்பரடிகள் பாடுவதால் சாத்திரத் தோற்றத்திற்குப் பழைய திருமுறைகளே காரணம் என்பதைச் சுட்டும் விதத்தில் தோத்திரமான திருமுறைகளைத் தோற்றுவித்த பழஞ்சிறப்பு காரைக்கால் அம்மையாருக்கே உண்டு என்ற தொடர்பில் பழையனூர் திருவாலங்காடு என்பது அப்பரின் கூற்றலால் உணரலாம்.

5. திருப்பாச்சூர்

பாசு என்றால் மூங்கில். இறைவன் சுயம்பாக மூங்கிலின் அடியில் முளைத்ததால் திருப்பாச்சூர் எனப்பட்டது. பனந்தாள் அடியில் சிவன் தென்பட்டதால் திருப்பனந்தாள் என ஊர்ப்பெயர் அமைந்தது போன்றது. இந்தத் திருப்பாச்சூர் பெயரும் ஆகும். பாசூர்நாதரும் பசுபதி நாயகியும் வீற்றிருக்கும் திருப்பாசூருக்கு அப்பர் இரண்டு பதிகம் பாடியுள்ளார்.

அவற்றுள் திருக்குறுந்தொகைப் பதிகத்தில் ஆன்மாக்களை எட்டியிருந்தே நோக்கியருளி அவரவர் இடத்திற்கே வந்து அமரவர்க்கும் வேண்டுவனவற்றை அருளும் எளிவந்த பிரான் என்கிறார். திருத்தாண்டகப்பதிகத்தில் அன்பிற்கும், ‘இணையொருவர் தாமல்லாமல் யாரும் இல்லார்’ என இறைவனை எந்தப் பற்றும் இல்லாத தனியன் என்பதை நேர்த்தியாகக் கூறி வழக்கமான புராணப்பாங்கின் கதைகளோடே பதிகத்தை நிறைவு செய்கிறார்.

6. திருக்காளத்தி

கண்ணப்பர் பேறு பெற்ற தலம். ஞானப் பூங்கோதை உடனாய காளத்தீச்சுரர் வீற்றிருக்கும் திருக்காளத்திமலை. உச்சிக் குடுமித் தேவர் என்று காளத்தி அப்பரை அழைப்பார்.

ஸ்ரீகாளகஸ்தி என வடமொழியில் அழைத்தாலும் தமிழில் சீகாளத்தி என்பர். சீ என்பது சிலந்தி, காளம் –விடமுடைய பாம்பு. அத்தி என்பது யானை, மூன்று உயிரினங்களும் துதித்துப்பேறு பெற்றதால் அஃறிணைகளும் பேறு பெற்ற தலம் என்ற தனிச் சிறப்பை உடையது.

பொன்முகலிநதி தான் தீர்த்தமாகும். ஒவ்வொரு யுகத்திலும் ஒவ்வொரு உயிரினமும் பூசித்து முத்தி பெற்றதாய்ப் புராணம் கூறும்.

கிரேதா யுகத்தில் சிலந்தி ஒன்று தன் வாயின் நூலிழையால் சிவலிங்கத்திற்கு மேலே அமைத்த விதானமானது விளக்குச் சுடரால் பற்றி எறியத் தொடங்கியதைப் பார்த்ததுப் பதை பதைத்து அவ்விளக்கின் சுடரில் விழுந்து தன்னை மாய்த்துக் கொண்டதற்காகச் சிவபெருமான் அச்சிலம்பிக்கு அருள் செய்தார்.

திரேதா யுகத்தில் பாம்பு பூசித்து வழிபட்டுப் பேறு பெற்றது. துவாபர யுகத்தில் யானை பூசித்துப் பேறு பெற்றது. கலியுகத்தில் அருச்சுனன் இறைவனிடம் பாசுபதாஸ்திரம் வேண்டித்தவம் செய்தான்.

அருச்சுனனின் வேண்டுதலை நிறைவேற்ற சிவனார் வேடனாய் வந்து அருள்புரிந்த நிலையில் அருச்சுனனைப் பார்த்து உமக்கு இந்தப் பிறவியில் முத்தி இல்லை; அடுத்த பிறவியில் தான் முத்தி என்றபடிக் கண்ணப்பராய்ப் பிறந்து காளத்தியப்பருக்குக் குருதி வடிந்த கண்ணிற்குத் தனது கண்களை அப்பியதால் பேறு பெற்ற புகழ் வாய்ந்தது திருக்காளத்தியாகும்.

இத்தலத்திற்கு அப்பர் ஒரு திருத்தாண்டகப்பதிகமே பாடியுள்ளார். இத்தாண்டகத்தில் பாண்டவருள் ஒருவனான அருச்சுனன் காளத்தியில் பேறு பெற்றதாகக் கூறும் கதையை நினைவு கூட்டிய வகையில் 'பாசுபதன் காண்' எனக் காளத்திநாதனைப் பாடுகிறார்.

மேலும், வில்லாடி வேடனாய் ஓடினான் காண் – என்றும் கூறிப் பாராட்டுவதால் அருச்சுனனே வில்லால் வேட்டையாடி வாழ்ந்த கண்ணப்பனாக வந்த குறிப்பை ஒரே வழி நினைவு கூர்வதாகப் பாடியுள்ளார். ஆக அந்தந்தத் திருத்தலத்தில் வழிபடும் போதும் அங்குள்ள வரலாற்றை நினைவு கூர்வதான கருத்தை ஆவணப்படுத்தும் சான்றோர்களாக அருளாளர்கள் இருந்தனர் என்பதற்கு அப்பரும் சான்றாகின்றார்.

7. திருவொற்றியூர்

சென்னைக்கு வடமேற்கே 5 கல் தொலைவில் உள்ள திருத்தலம். ஆதிசேடன் பூசித்த தலம் எனப் புராணம் கூறுகிறது. அதனால் இறைவனுக்கு படம் பக்கநாதர் என்று பெயர். படம் என்பது விரிந்த பட நாகத்தைக் குறிக்கும். மாணிக்கத் தியாகேசர் என்றும் பெயருண்டு. அம்பிகைக்கு வடிவுடையாம்பிகை என்ற பெயர். கிருபா தீர்த்தமும், கடற்கரை ஓரத்தில் உள்ளதால் அலைகடல் தீர்த்தமும் திருவொற்றியூரின் தீர்த்தலங்களாகும். மகிழமரம் தல விருட்சமாகும்.

ஒற்றியூரை அப்பர் நான்கு திருப்பதிகங்களால் பாராட்டுகிறார். அவற்றுள் திருத்தாண்டகப்பதிகத்தில் இன்றைய நாட்டு நடப்பியலின் சீரழிவை நீக்க அருளுரை வழங்குவதாக உள்ளது. "காமத்துள் அழுந்தி நின்று கண்டாரால் ஒறுப்புண்ணாதே " என்ற நாட்டு மக்களுக்கான அறவுரை மிக மிக வேண்டிய மாமருந்துக் கருத்தாக உள்ளது.

இந்நாளின் ஒழுக்கக்கேட்டின் உச்சமாகப் பாலியல் வன்கொடுமை உள்ளது. இதற்கான அவமானத்தை எண்ணாத நிலையில் சிலர்

வாழ்கின்றனர். அதைத்தான் காமத்தால் அழுந்தும் போது பலரின் வெறுப்புக்கு ஆளாவதே தண்டனை என எண்ணத் தூண்டுகிறார் அப்பர். எனவே எமன் ஒரு காலத்தில் இறைவனது காலால் உதைபட்டு தண்டனை பெற்றதை நினைந்து பார்த்தால் காமத்தால் அழுந்துவோர்கள் உலகோரால் பழிக்கப்படுவதை எண்ணி அத்தீய ஒழுக்கத்தில் ஈடுபடார் என்பதை அப்பர், “கூற்றுத் தண்டவத்தை அஞ்சிக் குறிக்கொண்மீமின்” என்கின்றார். இந்த எச்சரிக்கை மிக மிக வேண்டற்பாலதான ஒன்றாகும்.

ஏனெனில் கடுமையான தண்டனை இல்லாததால் சீர்கேடான ஒழுக்கத்தில் வாழ்வார் அஞ்சாமல் வாழ்வதோடு வெளி நாடுகளுக்கும் தப்பிக்கவும் செய்கின்றனர். சட்டத்தின் ஓட்டையை அடைத்துக் கடுமையான தண்டனையைத் தந்து ஒழுக்கச்சீர்கேட்டை ஒழிக்கலாம் என்பது நாட்டு நடப்பியலின் கருத்தாயினும் ஆன்மீக அறிவுரைகளும் தக்க பலன்களைத் தரலாம் என்பதற்கு அப்பரின் அறிவுரைப்பாடலே சான்று.

காமத்துள் அழுந்தி நின்று
கண்டாரால் ஒறுப்புண் ணாதே
சாமத்து வேத மாகி
நின்றதோர் சயம்பு தன்னை
ஏமத்தும் இடையி ராவும்
ஏகாந்தம் இயம்பு வார்க்கு
ஓமத்துள் ஒளிய தாகும்
ஒற்றியூர் உடைய கோவே!

என்ற இந்தத்திரு நேரிசைப்பாடல், தீய ஒழுக்கத்தைத் தடுத்து நிறுத்தத் தூண்டும் தடுப்பாணைப் பாடலாகும்.

நடப்பியலைச் சிந்திக்காத எழுத்தாளன் இருக்க முடியாது போல அப்பரடிகள் தீய ஒழுக்கத்தால் சீர்கெட்டொழியும் தனி மனித வாழ்விற்கான ஒழுக்கப் பாதுகாப்பை மேற்கண்ட பாடலால் அறிவுறுத்திய அப்பரடிகள் கீழ்க்கண்ட இரண்டு பாடல்களால் பொது வாழ்விற்கான அறிவுறுத்தலைச் செய்வது அற்புதமானவையாகும்.

ஓம்பினேன் கூட்டை வாளா
உள்ளத்தோர் கொடுமை வைத்துக்
காம்பிலா மூழை போலக்
கருதிற்றே முகக்க மாட்டேன்
பாம்பின் வாய்த்தேரை போலப்
பலபல நினைக்கின் றேனை

ஓம்பிநீ உய்யக் கொள்ளாய்
ஒற்றியூ ருடைய கோவே!

வாழ்க்கையைப் பயனுடையதாக வாழ்வாங்கு வாழாமல் சோம்பித் திரிந்து விட்ட அவலத்தால் மனிதனின் நிலை பாம்பின் வாயில் அகப்பட்ட தவளைப் போல் நிலையற்றதாகும் என்பதை அப்பரடிகள் கூறுகிறார். "ஒரு பொழுதும் வாழ்வது அறியார். கருதுப-கோயும் அல்ல பிற" என்ற (337) குறள்போல் வாழாமல் தக்காங்கு வாழ வழி கூறுகிறார் அப்பர்.

அடுத்தும் வாழ்க்கையை வாணிபத்தோடு தொடர்படுத்தி அறிவுரை கூறுகிறார்.

மனமெனும் தோணி பற்றி
மதியெனும் கோலை யூன்றிச்
சினமெனும் சரக்கை ஏற்றிச்
செறிகடல் ஓடும்போது
மனனெனும் பாறை தாக்கி
மறியும்போ தறிய ஒண்ணாது
உனையுனும் உணர்வை நல்காய்
ஒற்றியூர் உடைய கோவே!

இப்பாடல் திரை கடல் ஓடியும் திரவியம் தேடு என்ற கருத்தைக் கூறுவதான குறிப்பில் வாழ்க்கைக் கடலில் மனம் என்ற தோணியை மதி என்ற கோலால் செலுத்தும் போது நல்ல சரக்குகளை ஏற்றாமல் கோபதாபக் கீழான குணங்களை ஏற்றிக் கொண்டு பயணித்தால் காமப்பாறையில் மோதி அழிய வேண்டி ஆகிவிடும். நல்ல துறையை ஏறாமல் தத்தளிக்க நேரிடும். எனவே இறை சிந்தனையுடன் வாழ்க்கைப் பயணத்தைச் செய்தால் திரைகடல் ஓடியும் திரவியம் தேடி வரலாம் என்பதைக் குறிப்பாகக் கூறுகிறார் அப்பரடிகள்.

8. திருவான்மியூர்

வான்மீகி முனிவருக்கு அருள் தந்த தலம். மருந்தீசர் என்றும் பால்வண்ண நாதர் என்றும் திருப்பெயர்களைக் கொண்ட சிவனும் சொக்கநாயகி என்ற பெயர் கொண்ட தேவியும் அருள்பாலிக்கும் திருத்தலமாக உள்ளது திருவான்மியூர். இத்தலத்தை ஒரு பதிகத்தால் பாடி பரவுகிறார் அப்பர்.

மருந்தீசர் என்ற பெயருக்கேற்ப ஆன்மாக்களின் மயக்கமாகிய நோய்க்குத் தன்னருளால் மருந்தளித்துக் காப்பதாக பதிகப் பாடல்கள் உணர்த்துகின்றன. பக்தியால் அம்மருந்தைப் பெறலாம்.

ஓட்டை மாடத்தில் ஒன்பது வாசலும்
காட்டில் வேவதன் முன்னம் கழலடி

நாட்டி நாள்மலர் தூவி வலம்செயில்
வாட்டம் தீர்ந்திடும் வான்மியூ ரீசனே!

என அப்பரின் பாடல், காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ள வழிகாட்டுகிறது எனலாம்.

9. திருக்கழுக்குன்றம்

செங்கற்பட்டின் கிழக்கே உள்ள திருத்தலம். தேவார மூவரும் திருவாசகம் பாடிய மணிவாசகரும் என நால்வரும் பாடிய தலம் என்ற பெருமைக்குரியது.

வேதகீரிசுரர்- மூலவர் பெண்ணின் நல்லாள் அம்மை என்பது தேவியின் பெயர். இத்தலத்தில் சங்கு தீர்த்தம். பட்சி தீர்த்தம் இரண்டும் சிறப்பானவை.

அட்ட வசுக்கள் இந்திரன் திருமால் முதலாயினோர் வழிபட்ட தலம். பசுவும், வராகமும் மலையைச் சுற்றி வந்து தேவ உருபெற்றதாகத் தல புராணம் கூறுகிறது.

கிரேதா யுகத்தில் கண்டன், பிரகண்டன் என்னும் கழுகு அரசர்களும் திரேதா யுகத்தில் சம்பாதி சடாயு என்னும் கழுகுகளும் துவாபர யுகத்தில் சம்புசித்தன் மாகுத்தன் என்னும் முனிவர்கள் தங்களுக்குள் சண்டையிட்டதால் கழுகு உருவாகிப் பூசித்து அருள்பெற்ற தலம் என்றெல்லாம் கூறும் புராணத் தொடர்ச்சியில் கலியுகத்தில் பூடா, விருத்தா என்ற இரண்டு தவசிகள் சிவபெருமான் அருளிய உபதேச வார்த்தையை மறந்துவிட்ட பாவத்தால் கழுகு உருவத்தில் வழிபட்டுக் கொண்டிருக்கும் தலம் என்பதாகப் புராணம் கூறுகிறது.

இந்தத் தலத்தினை அப்பரடிகள் தாண்டகப் பதிகம் ஒன்றால் பரவிப் போற்றுகிறார். அப்பதிகத்தில் இரண்டு பாடல்களே உள்ளன. எஞ்சியவை கிடைக்கப் பெறவில்லை. சொல்லொடு பொருளனைத்தும் ஆனான் தன்னைக் கண்ணாரக் கண்டதாய்த் திருக்கழுக்குன்ற நாதரைக் கருதுவதோடு கல்லாடை புனைந்தருளும் கபாலி எனவும் கண்டு அப்பரடிகள் தொழுகிறார்.

முடிவுரை

ஆக, அப்பரடிகளின் தொண்டை நாட்டுப் பயணத்தால் கல்வியைக் கரையிலாக் காஞ்சி என்ற அவர்தம் கூற்றுக்கேற்பச் சான்றோர் உடைத்தான தொண்டை நாட்டை நாமும் நீள நினைந்து வழிபடுவோமாக!

திருச்சிற்றம்பலம்

❀❀❀❀❀❀❀

7. அப்பர் தேவாரத்தில் துளுவ நாடு மற்றும் வடநாட்டுத் திருத்தலங்கள்

சித்தாந்தச் செல்வமணி. முனைவர். பழ.முத்தப்பன், திருச்சிராப்பள்ளி.

திருத்தொண்டர் புராணத்தில் சேக்கிழார், தேவாரம் பாடியருளிய மூவர்களின் வரலாற்றைத் தரும் பொழுது, மூவரின் தேவாரப் பதிகங்களை அடிப்படையாகக் கொண்டு அவர்களின் தலயாத்திரைச் செய்திகளைத் தருகிறார். அத்தகு நிலையில் திருநாவுக்கரசரின் தலயாத்திரைச் செய்திகளைத் தரும்பொழுது, அவர் சென்ற துளுவ, வடநாட்டுத் திருத்தலங்கள் பற்றிய குறிப்புகளையும் பதிவு செய்துள்ளார். அவரின் பதிவுகளை மீள்பார்வை செய்யும் பொழுது கிடைத்த செய்திகளைத் தருவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

திருநாவுக்கரசரின் வடநாட்டு யாத்திரை

சேக்கிழார் பதிவின்படி திருநாவுக்கரசர் பழையனூர் திருவாலங்காட்டிற்குச் சென்று, அங்கு எழுந்தருளியிருக்கும் இறைவன் மீது "திருவாலங்காடு உறையும் செல்வர் தாமே" என்ற மகுடம் கொண்ட திருத்தாண்டகம் பாடித் தொழுது வணங்கிப் பிற தலங்களையும் வணங்கும் ஆவல் கொண்டு வடதிசை நோக்கிப் புறப்படுகிறார். அவ்வாறு சென்றவர் நெடிய மலைகளையும் காடுகளையும் கடந்து, இன்றைக்கு அரக்கோணம் ரேணிகுண்டா வழியில் அமைந்துள்ள வைப்புத் தலங்களில் ஒன்றான திருக்காரிக்கரை என்ற திருத்தலத்திற்குச் சென்று வணங்கினார். பின்பு அங்கிருந்து திருக்காளத்தியை அடைகிறார். பொன்முகலி ஆற்றில் நீராடித் திருக்காளத்தி மலையை ஏறித் திருக்காளத்தி நாதரை வணங்கி, "என் கண்ணுள்ளான்" என்ற மகுடம் பொருந்திய திருத்தாண்டகத்தைப் பாடியருளுகிறார். திருக்கண்ணப்பரையும் வணங்கி, காளத்தி மலையில் சில நாட்கள் தங்கித் திருப்பணிகள் செய்தார்.

பிறகு அத்திருத்தலத்தைப் பாடிய பெருங்கருணைத் திறத்தால் திருக்கயிலை மலையைச் சென்று கண்டு வணங்கிட வேண்டும் என்ற பேரார்வம் அவர் மனத்தே தோன்றுகிறது. ஆர்வத்தால் திருக்கயிலை யாத்திரையைத் தொடங்குகிறார். அவ்வாறு யாத்திரை செல்லும் பொழுது கன்னட நாட்டைக் கடந்து காடுகள், ஆற்றுத்துறைகள், நெடிய மலைகள் முதலிய யாவற்றையும் கடந்து, துளுவ நாட்டு மேலைக் கடலாகிய மாகடல் சூழ்ந்த திருக்கோகர்ணம் என்னும் திருத்தலத்தை அடைந்து, அங்கு எழுந்தருளியிருக்கும் இறைவனை, சந்திரனும், "தண்புனலும் சந்தித்தான்

காண்" என்று தொடங்கும் பத்துப் பாடல்கள் கொண்ட திருத்தாண்டகத்தைப் பாடியருளுகிறார்.

திருக்கோகர்ணம் சென்று வணங்கியதைச் சேக்கிழார் குறிப்பாகத் தருகின்றாரே தவிர, அத்திருத்தலத்தைக் குறிப்பிட்டுக் காட்டவில்லை.

கருநடம்கழிவு ஆகஏகிப் பின்கலந்த வனங்களும்
திருந்தித் துறையாவையும் பயில்சேண்நெடுங் கிரிவட்டையும்
பெருநலம் கிளர்நாடும் எண்இலபின்படச் செறிபொற்பினால்
வருநெடுங்கதிர் கோலு சோலைய மாளவத்தினை நண்ணினார்
(திருநாவுக்கரசர் -351)

என்ற பாடலில் இடம்பெற்றுள்ள பெருநலம் கிளர்நாடு என்ற தொடர், திருநாவுக்கரசர் திருக்கோகர்ணத்தைப் பாடிச் சென்ற வழியினைக் குறிப்பிடுகிறது என்று பெரியபுராண உரையாசிரியர் சி.கே.சுப்பிரமணிய முதலியார் தன்னுடைய பெரியபுராண உரையில் குறிப்பிட்டுக் காட்டுகிறார். திருக்கோகர்ணம் என்பது ஹுப்ளியிலிருந்து 168 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது என்று குறிப்பிடுவார்கள். இந்நகரில் எழுந்தருளி இருக்கும் இறைவனைக் காசி நகரில் சிவலிங்கத்தைத் தொட்டு நீராட்டி மலரிட்டு வணங்குவது போல வணங்கலாம். இத்தலத்தைப் பற்றிய ஒரு புராணச் செய்தியும் உண்டு. இராவணன் இலங்கையில் எழுந்தருளச் செய்தற்காகக் கயிலை மலையையில் இருந்து கல் எடுத்துச் சிவலிங்கமாக உருவாக்கி எடுத்து வந்தான். அவ்வாறு வரும்பொழுது அந்த லிங்கத்தை இவ்வூர்த் தரையில் வைத்து, மீண்டும் எடுக்கும் பொழுது எடுக்க முடியாமல் போயிற்று. ஆதலால் மிக வலிமை கொண்டு எடுக்க முயன்ற போது, அந்த லிங்க உருவம் பசுவின் காதுபோல குழைந்துவிட்டதாம். அதனால் (கோ-பசு, கர்ணம்-காது) கோகர்ணம் எனப் பெயர் பெற்றது என்பர். எனவேதான் அந்த லிங்கத்திற்கு மகா பலேசுவரர் எனப் பெயர் ஏற்பட்டதாம். லிங்கம் சிறிய அளவில் (கொட்டைப்பாக்கு அளவில்) ஆவுடைப் பகுதிக்குள் அடங்கியுள்ளது. ஆவுடைப் பகுதியை விரலால் தடவினால்தான் லிங்கத்தை அறிய முடியும். இத்தலத்தைக் கலைமகள் வழிபட்டாள் என்ற செய்திகள் கிடைக்கப் பெறுகின்றன.

திருக்கோகர்ணத்தைத் திருஞானசம்பந்தரும் பாடியிருக்கிறார். இறைவனின் சந்நிதி மேற்குப் பார்த்த சந்நிதியாக அமைந்துள்ளது. திருநாவுக்கரசர் பாடிய திருத்தலத் திருத்தாண்டகத்தில் "மகா சூழ் கோகர்ணம்" என்ற மகுடம் பாடல் தோறும் அமைந்துள்ளது. மற்ற செய்திகள் அனைத்தும் சிவபெருமானின் பொதுவான புகழினைப் பாடுவதாகவே அமைந்துள்ளன. திருத்தலத்தைப் பற்றிய வேறு குறிப்புகள் பதிகத்தில் இடம்பெறவில்லை.

இத்திருத்தலம் துளுவ நாட்டைச் சேர்ந்தது. துளுவ நாட்டில் இத் திருத்தலம் ஒன்றேதான் பாடல்பெற்ற தலமாக அமைந்துள்ளது.

திருப்பருப்பதம் (ஸ்ரீசைலம்)

திருநாவுக்கரசர் திருக்காளத்தியை வழிபட்டு, வடநாடு நோக்கிச் செல்கின்ற பொழுது, ஸ்ரீ சைலம் எனப்படும் திருப்பருப்பதத்தைச் சென்று அடைந்தார் என்ற செய்தி சேக்கிழாரால் குறிக்கப்படுகிறது.

துங்கமால்வரை கானியாறு தொடர்ந்த நாடு கடந்தபின்
செங்கண் மால்விடை அண்ணல்மேவு திருப்பருப்பதம் எய்தினார்
(திருநாவுக்கரசர்.348)

பாடலில் வடநாட்டு வழிச் செலவில் காடுகளையும் மலைகளையும் கடந்து, சிவந்த கண்ணைக் கொண்ட விடையேற்றினை உடைய சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் திருப்பருப்பதம் என்று குறிக்கப் பெறுவதால், இத்திருத்தலம் நந்திதேவர் தவம் செய்து இந்த மலையாக உருவெடுத்துச் சிவபெருமானைத் தாங்கி வழிபட்டு அருள் பெற்றிருக்கிறார் என்ற குறிப்பு காணப்பெறுகிறது. நந்தியம் பெருமானோடு இத்திருத்தலத்திற்குத் தொடர்பு இருப்பதால்தான் இன்றைக்கும் நந்தியால் என்ற ஊரிலிருந்து இத்திருத்தலத்திற்குச் செல்லுகின்ற வழி உள்ளது. இதனை இப்பொழுது ஸ்ரீசைலம் என வழங்குவர். இது பன்னிரு சோதித் திருத்தலங்களில் ஒன்று. இத்திருத்தலத்தின் பெருமையினைச் சேக்கிழார் பின்வரும் பாடலில் பெருமையுடன் கூறுகிறார்.

மாவிஞ்ஞையர், வானநாடர்கள், வன்இயக்கர்கள் சித்தர்கள்
கான கின்னரர், பன்னகாதிபர் காமசாரிகளே முதல்
ஞானமோனிகள் நாளும்நம்பரை வந்துஇறைஞ்சி நலம்பெறும்
தானம்ஆன திருச்சிலம்பை வணங்கி வண்தமிழ் சாற்றினார்
(திருநாவுக்கரசர்-349)

விஞ்சையர், தேவர், சித்தர், கின்னரர், நாகர் ஆகிய சிவஞானிகள் வழிபடுகின்ற திருத்தலம் என்று சேக்கிழார் குறிப்பிடுவது இத்திருத்தலத்தின் சிறப்பைக் குறிக்கும். வடநாட்டுத் திருத்தலங்களில் திருநாவுக்கரசரால் பாடப்பெற்ற திருத்தலங்களில் இது ஒன்று. இத்தலம் ஸ்ரீசைலம் என்றும் மல்லிகார்ச்சுனபுரம் என்றும் வழங்கப் பெறுகிறது. இத்திருத்தலத்தில் உள்ள கோயிலுக்கு நான்கு வாயில்கள் உள்ளன. மலையின் உயரம் கடல்மட்டத்திலிருந்து 1563 அடியாகும். இத்திருத்தலத்தைத் தேவார ஆசிரியர்கள் மூவரும் பாடியுள்ளனர். சுந்தரர் இத்திருத்தலத்தை "சீபர்ப்பதம்" என்று குறிப்பிடுவார். இத்திருத்தலம் பற்றிய தேவாரப் பாடல்களில்

திருநாவுக்கரசர் சிவபெருமானின் சில புராணச் செய்திகளைப் பதிவு செய்திருக்கிறார். பன்றிக்குப் பின்னே வேடராய்ச் சென்றது, முப்புரம் எரித்தது, பிரமனின் தலையை ஏந்தியது, காமனைக் காய்ந்தது, யானைத்தோலைப் போர்த்தியது போன்ற வரலாற்றுக் குறிப்புகள் இப்பதிகப் பாடல்களில் இடம் பெற்றுள்ளன. இந்தத் திருத்தலத்தின் பெருமைகளைச் சிவ இரகசியப் பேரிதிகாசம் பலவாறாக எடுத்துக் கூறுகிறது. கந்த புராணத்திலும் இத்திருத்தலம் பற்றிய குறிப்புக் காணப்பெறுகிறது. சந்திராவதி என்ற அரசி இவ்விறைவரை மல்லிகை மலர்களால் அருச்சித்ததால் மல்லிகார்ச்சுனபுரம் என்ற பெயர் ஏற்பட்டது என்பர். திருநாவுக்கரசரின் வடநாட்டுத் திருத்தல யாத்திரையில் முதலாவதாக விளங்கும் இத்திருத்தலம் குறிப்பிட்டத் தக்கதாகும்.

வாரணாசி

திருநாவுக்கரசரின் வடநாட்டுத் திருத்தல யாத்திரையில் அடுத்துக் குறிப்பிடத்தக்கது காசித் திருத்தல வழிபாடாகும்.

அன்னநாடு கடந்து, கங்கை அணைந்து சென்றுவலம் கொள்ளும்
மின்னுவேணியர் வாரணாசி விருப்பினோடு பணிந்து, உடன்
பின் அணைந்தவர்தமை அங்கண் ஒழிந்து கங்கை கடந்துபோய்
மன்னுகாதல் செய்நாவின் மன்னவர் வந்துகல்சுரம் முந்தினார்
(திருநாவுக்கரசர் -353)

இப்பாடலின்படி, திருநாவுக்கரசர் பைதிர நாட்டினைக் கடந்து, கங்கையாறு வலமாக வருகின்ற ஒளிபொருந்திய சடையினைக் கொண்ட சிவபெருமான் எழுந்தருளிய வாரணாசியை விருப்பத்துடன் வணங்கி, பின் தன்னுடன் வந்த அடியார்களை அத்தலத்திலேயே இருக்கச் செய்து, தான் மட்டும் கங்கைக்கரையையும், மலை நாடுகளையும் கடந்து கயிலாயம் நோக்கிச் சென்றார் என்று தெரிகிறது. வாரணாசியில் திருநாவுக்கரசர் போற்றிப் பாடிய பதிகம் கிடைக்கப் பெறவில்லை. வாரணாசி என்பது இன்றைக்குக் காசி என்று வழங்கப் பெறுகிறது. வரணை, அசி என்ற இரண்டு நதிகள் தெற்கு வடக்காகச் சூழ்ந்து இருப்பதால் வாரணாசி என்ற பெயர் ஏற்பட்டது என்பர். திருநாவுக்கரசர் புராணத்தில் கயிலைக்குச் செல்லுகின்ற வரலாற்றில் இத்தலம் குறிக்கப் பெற்றிருக்கிறது என்ற செய்தி தவிர வேறு செய்திகள் கிடைக்கப் பெறவில்லை. காசி பற்றிய பெருமைகள் இன்றைக்கு இந்திய சுற்றுலாப் பயணத்தில் பலவாறு குறிக்கப் பெறுகின்றன.

கயிலாயம்

திருக்காளத்தியை வழிபட்டு, அங்குத் திருப்பணிகள் செய்த

குறிப்பினால் திருக்கயிலையை வணங்க வேண்டும் என்ற குறிப்பு திருநாவுக்கரசருக்கு ஏற்பட்டது என்பதைச் சேக்கிழார் கீழ்வரும் பகுதியில் குறிப்பிடுகிறார்.

சேண்நிலவு திருமலையில் திருப்பணி ஆயின செய்து
தாணுவினை அம்மலைமேல் தாள்பணிந்த குறிப்பினால்
பேணுதிருக் கயிலைமலை வீற்றிருந்த பெருங்கோலம்
காணும்அது காதலித்தார், கலைவாய்மைக் காவலனார்
(திருநாவுக்கரசர்-347)

இப்பாடலின்படி, திருக்காளத்தி மலையில் திருநாவுக்கரசர் மேற்கொண்ட பணிகள் அவருக்குக் கயிலையை வணங்க வேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்தியிருக்கிறது என்பது தெரிய வருகிறது. எனவே காளத்தி வழிபாடும் பணியும் நாவுக்கரசருக்குக் கயிலை வழிபாட்டு உணர்வே திருப்பருப்பதம் உள்ளிட்ட திருத்தலப் பாடல்களாக நான்கு பதிகங்கள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. நாவுக்கரசரின் வரலாற்றில் கயிலாய யாத்திரைதான் சிறப்பிடம் பெற்றதாகும். அந்த யாத்திரையின் சிறப்பைக் கூற முனைந்தால் விரிவடையும் என்பதால் தலத்தின் சிறப்பு மட்டும் சில செய்திகளால் பதிவு செய்யப்படுகிறது. திருநொடித்தான்மலை என்று வழங்கப்பெறும் இமயமலையின் சிகரங்களில் ஒன்றாக விளங்குவது. 22980 அடி உயரம் உடையது. பனிக்கட்டியால் ஆகிய பெரிய தூண் போலக் காட்சி தரும். திருநாவுக்கரசருக்குக் கயிலாயம் செல்லும் வழியில் முனிவர் வடிவத்தில் சிவபெருமான் தோன்றி, தீர்த்தத்தில் மூழ்கச் செய்து கயிலாயக் கோலம் காட்டினார். அந்த அனுபவத்தைத்தான் நான்கு பதிகங்களாக நாவுக்கரசர் பாடியுள்ளார். திருஞானசம்பந்தர் திருக்காளத்தியிலிருந்த படியே கயிலாயத் திருப்பதிகத்தைப் பாடினார். சுந்தரர் வெள்ளை யானையின் மீது ஏறித் திருநொடித்தான்மலைப் பதிகம் பாடிக் கயிலாயத்தை வணங்கினார். காரைக்கால் அம்மையார் எலும்பு வடிவமாம் பேய் வடிவத்தோடு தலையால் நடந்து சென்று கயிலைப் பெருமானை வழிபட்டார். சேரமான் பெருமாள் ஞானஉலா பாடினார். பெருமிழலைக்குரும்பர் யோகக் காட்சியில் கயிலாயத்தை வழிபட்டார். இவ்வாறு கயிலை மலையைக் கொண்ட வரலாற்றுச் செய்திகள் உண்டு. மூவராலும் பாடப்பெற்ற திருத்தலம். நாவுக்கரசர் பாடிய போற்றித் திருத்தாண்டகம் நான்கு பதிகங்களில் முதன்மை உடையதாகும். தேவாரப் பதிகங்களில் வேறு போற்றிகள் இருந்தாலும் கயிலை மீது பாடிய திருநாவுக்கரசரின் போற்றித் திருத்தாண்டகமே மிகச் சிறந்ததாகும். அது போலத் திருநாவுக்கரசரின் மூன்றாவது பதிகமான போற்றித் திருத்தாண்டகப் பதிகமும் பெருமை உடையதாகும்.

இவ்வாறு திருநாவுக்கரசரின் யாத்திரையில் துளுவ நாட்டுத்தலம் திருக்கோகர்ணமும், வடநாட்டுத் தலங்களான திருப்பருப்பதம், வாரணாசி, திருக்கயிலாயம் ஆகிய தலங்கள் இடம்பெற்று, இந்திய வரலாற்றுக்குத் துணை செய்கின்றது எனக் கொள்ளலாம்.

திருச்சிற்றம்பலம்

8. அப்பர் தேவாரத்தில் நிலத்திற்குரிய திருத்தலங்கள்

முனைவர். மா. சிதம்பரம்,
அழகப்பா அரசு கலைக் கல்லூரி, காரைக்குடி

அறிமுகம்

கற்கோவிலில் உறையும் சிவனைச் சொற்கோவிலுக்குள் கொண்டு வந்து சிறப்பித்த பெருமை திருமுறைகளையே சாரும். இத்திருமுறைகள் பன்னிரண்டு என வகுக்கப் பெற்றன. இப் பன்னிரு திருமுறைகளைப் பாடியருளிய அருளாளர்கள் நாயன்மார் எனப்பட்டனர். அவர்களுள் தனிச்சிறப்பைப் பெற்றவர், இடையறாப் பேரன்பும் மழைவாரும் இருவிழியும் உழவாரத்தின் படையறாத் திருக்கரமும் சிவபிரான் திருவடிக்கே பதித்த நெஞ்சும் நடையறாப் பெருந்துறவும் கொண்ட, வாகீசப் பெருந்தகை எனப் போற்றப்பெறும் திருநாவுக்கரசர் ஆவார். அவர் பாடிய திருமுறைகள் நான்கு, ஐந்து, ஆறு என்பதாம். அத் திருமுறைகளுள் அமைந்த நிலம் தொடர்பான தலங்களான திருஆரூர் திருக்கச்சிப்பதிகங்களின் சிறப்பினைஆய்வதாய் இக்கட்டுரை விரிகிறது.

இறையே நிலனாய்...

தமிழர் வழிபாட்டு மரபு. இவ்வுலகின்கண் காணப்படும் ஐம்பெரும் பூதங்களைப் படைத்தளித்தவர் சிவனே என்றும் அவனே இவ்வுலகத்தின் தலைவன் என்றும் குறிப்பிடும்.

> நீரும் நிலனும் தீயும் வளியும்
> மாக விசும்போடு ஐந்துடன் இயற்றிய
> மழுவான் நெடியோன் தலைவனாக (மதுரைக்காஞ்சி- 453-455)

என்ற மதுரைக்காஞ்சியின் வரிகள் மேற்கண்ட கூற்றிற்குச் சான்றாகும். இவ் இறைமரபின் வளர்நிலையில், தனக்கு மேல் சமயம் இல்லாச் சமயமாகிய சைவசமயம் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் எனும் ஐம்பெரும் பூதங்களுள் இறைவன் இருக்கிறான் என்பதனை விடுத்து இறைவனே ஐம்பெரும் பூதங்களாய் இருக்கிறான் என்று குறிப்பிடுகிறது. இதனை,

> இருநிலனாய்த்தீயாகி நீருமாகி இயமானனாய் எறியுங் காற்றுமாகி
> அருநிலைய திங்களாய் ஞாயிறாகி ஆகாச மாயட்ட மூர்த்தியாகி
> பெருநலமும் குற்றமும் பெண்ணும் ஆணும் பிறருவுருந்
> தம்முருவுந் தாமேயாகி

பெருநலையாய் இன்றாகி நாளையாகி நிமிர்புன் நடையடிகள்
நின்றவாறே

என்ற நாவுக்கரசர் தேவாரம் எடுத்துரைக்கும். இவற்றுள் நிலமாய் அமையும் இறைவன் மலையாகவும், களர்நிலமாகவும், காடாகவும், புல்லாகவும், புதராகவும், பூடுவாகவும், நகராகவும், நகரின் பல்வேறு செயல்களாகவும் அந்த நகரத்தின் அழிவாகவும் காட்சி தருகிறான் என்பதும் திருநாவுக்கரசர்தம் திருவாக்காம். இதனை,

கல்லாகிக் களறாகிக் கானு மாகிக் காவிரியாய்க் கால்ஆறாய்க் கழியுமாகிப்
புல்லாகிப் புதலாகிப் பூடுமாகிப் புரமாகிப் புரமூன்றுங் கெடுத்தா னாகிச்
சொல்லாகிச் சொல்லுக்கோர் பொருளு மாகிச் சுலாவாகிச் சுலாவுக்கோர் சூழலாகி
நெல்லாகி நிலனாகி நீருமாகி நெடுஞ்சுடராய் நிமிர்ந்தடிகள் நின்ற வாறே.
(6.94.3)

என்பதனால் அறியலாம். இவ்வாறு இறைவன் நிலமாய் நின்ற தலங்களுள் குறிப்பிடத்தக்க தலங்களான திருஆரூரும் திருக்கச்சியும் பதிகச் சிறப்பாலும் பக்தி மேம்பாட்டாலும் சிறப்புற்றுத் திகழ்கின்றன.

திருஆரூர்– திருக்கச்சிப் பதிகங்கள்

திருநாவுக்கரசர் தேவாரத்தின் நான்காம் திருமுறையில் திருஆரூர் பற்றி ஒன்பது பதிகங்களும் (04,05,19,20,21,52,101,102) திருக்கட்சி பற்றி மூன்று பதிகங்களும் (07,44,99) ஐந்தாம் திருமுறையில் திருஆரூர் பற்றி இரண்டு பதிகங்களும் (06,07) திருக்கட்சி பற்றி இரண்டு பதிகங்களும் (47,48) ஆறாம் திருமுறையில் திருஆரூர் பற்றி பத்துப் பதிகங்களும் (24,25,26,27, 28,29,30,31,32,33)

திருக்கட்சி பற்றி இரண்டு பதிகங்களும் (64,65) காணக் கிடைக்கின்றன.

திருஒற்றியூர்– திருக்கச்சி – திருஆரூர்–திரு ஆலவாய்

இறைவனின் திருவருட்திறம் வேண்டி இரந்து நிற்கும் திருநாவுக்கரசர் திருஒற்றியூர், திருக்கச்சி, திருஆரூர், திருஆலவாய் நான்கினையும் ஒரே நேர்கோட்டில் வைத்து ஒரு பாடலில் குறிப்பிடுகிறார். இக்கட்டுரைக்கான தலைப்புத் தேர்வும் இப்பாடலில் இருந்தே எடுக்கப்பட்டிருக்க வேண்டும். இது ஆதீனகர்த்தரின் அறிவு நுட்பத்திற்குச் சிறந்த சான்றாகும்.

கருவுற்ற நாள்முத லாகவுன் பாதமே காண்பதற்கு
உருகிற்றெ னுள்ளமும் நானுங் கிடந்தலந் தெய்தொழித்தேன்
திருவொற்றி யூரா திருவால வாயா திருவாரூரா
ஒருபற்றி லாமையுங் கண்டிரங் காய்கச்சி யேகம்பனே. (4.99.6)

என்பதாகும். இப்பாடலில் திருநாவுக்கரசர் திருஒற்றியூர், திருஆரூர், திருஆலவாய் என்ற தலங்களை மட்டும் குறிப்பதேன்? எனச் சிந்திக்கும்போது பிறிதோர் நுட்பம் வெளிப்பட்டு நிற்பதனை உணர முடிகிறது. இந் நான்கு தலங்களும் இறைவன் தன்னை நோக்கி வேண்டி நின்ற பெண்மைக்கு அருள் செய்த தலங்கள் ஆகும். திருஒற்றியூரில் வாசுகிக்கும் திருக்கச்சியில் அம்மையாம் பார்வதிக்கும் திருஆலவாயிலில் அங்கயற்கண்ணிக்கும் திருஆரூரில் இலக்குமிக்கும் அருட்பேறாகிய இறைவன் திருவருட்கருணை செய்தார். திருநாவுக்கரசர் தம் வாழ்விலும் இறைவனின் கருணைப்பேறு, திலகவதியார் எனும் பெண்மையாலே கிட்டிற்று. எனவே பெண்மைக்கு அருள் செய்த இத்தலங்களில் உறையும் இறைவன் தனக்கும் அருள் செய்தல் வேண்டும் என வேண்டி நிற்கும் உளவியல் நுட்பம் வெளிப்போந்து நிற்பதனை அறியமுடிகிறது.

மாணிக்கவாசகரின் காலம்

திருமுறைகளுள் எட்டாம் திருமுறையாகிய திருவாசகத்தையும், திருக்கோவையாரையும் பாடியருளிய மாணிக்கவாசகரின் காலம் பற்றிய குறிப்புரை ஒன்றினை திருஆரூர்ப் பதிகம் வெளிப்படுத்தி நிற்கின்றது. இப்பதிகத்தின் இரண்டாவது பாடலில்,

நரியைக் குதிரைசெய் வானும் (4-4-2)

என்ற குறிப்பு காணப்படுகிறது. நரியைக் பரியாக்கிய நிகழ்வு மாணிக்கவாசகரின் பொருட்டு நிகழ்ந்ததாகும். இதனைத் திருவாசகத்தில்,

நரியைக் குதிரைப் பரியாக்கி (8, திருவா-647)

என மாணிக்கவாசகரும் குறிப்பிடுவார். மேலும் ஆறாந் திருமுறையின் பதினெட்டாம் பதிகமாகிய திருப்பூவணப் பதிகத்தில் இடம் பெற்றுள்ள,

"...............................மணியார் வைகைத்
திருக்கோட்டில் நின்றதோர் திறமுந் தோன்றும்" (6-18-9) என்ற பாடல் அடிகள் இறைவன் வந்திக்காய்ப் பிட்டுக்கு மண்சுமந்த திருவிளையாடலைக் குறித்து நிற்கின்றது. எனவே மேற்கண்ட அகச்சான்றுகளின்வழி மாணிக்கவாசகரின் காலம் திருநாவுக்கரசரின் காலத்திற்கு முற்பட்டது எனத் துணியலாம்.

அரிய சொல்லாட்சிகள்

திருநாவுக்கரசரின் திருக்கச்சி, திருஆரூர்ப் பதிகத்தில் அரிய சொல்லாட்சிகளையும் காணமுடிகிறது. திருவாரூர்ப் பதிகத்தில் "பயிக்கம்" என்றொரு சொல் பயின்று வருகிறது.

"பாவியே னறியாதே பாழூரிற் பயிக்கம்புக் கெய்த்த வாறே" (4-5-8)

இப் "பயிக்கம்" எனும் சொல் "பிச்சை எடுத்தல்" என்னும் வழக்கத்தினைக் குறிப்பதாகும். இதனை, "பலியும், படிகமும் பயிக்கமும் பிண்டமும் சரியையும் ஐயமும் பிச்சை" (பிங்கலந்தை- 2123) "போற்றிய பயிக்கம் பாகம் பொருந்திய பலியே பிண்டம் சாற்றிய பிடிதம்ஐயம் சரிதை ஏழ் பிச்சையின் பேர்" (சூடாமணி நிகண்டு - 9-11) என்பதனால் அறியலாம். திருக்கச்சியேகம்பப் பதிகமொன்றில் குய்யம் என்ற சொல் காணப்படுகிறது.

"குய்யம்பெய் தாய்கொடி மாமதில் சூழ்கச்சி யேகம்பனே" (4-99-3)

இப்பாடலில் பயின்றுவரும் "குய்யம்" என்ற சொல் "மறைப்பு" என்னும் பொருளது. இது குஹ்யம் என்பதன் மருஉ ஆகும். இறைவன், கயவர் தம்மை அறியாதவாறு ஒளித்து நிற்றல் குய்யம்பெய்தல் எனப்பெறும். இத் திருக்கச்சியேகம்பப் பதிகமே இறைவனை உமைகேள்வன் என்றும் குறிக்கும். இவ்விடத்துக் "கேள்வன்" எனும் சொல் "கணவன்" என்னும் பொருளது. இன்பத்தினையும், இடர்களையும் கேட்டற்குரியவன் என்னும் தன்மை கருதியே இச்சொல் தோற்றம் பெற்றது. "தன்னுடைய கேள்வன் மகன் தகப்பன்" (திருவாச-திருபொற்சுண்ணம் 13) எனக் குறிப்பார் மாணிக்கவாசகர். மேற்கண்ட பதிகத்தின் இரண்டாவது பாடலில் கொத்தை எனும் சொல் காணப்படுகிறது.

கொத்தைக்கு மூங்கர் வழிகாட்டு வித்தென்னைக் கோகுசெய்தாய் (4-99-2)

இக்கொத்தை எனும்சொல் "கண்பார்வையற்றவர்" என்னும் பொருளதாகும். என்கண் கொத்தையாக்கினீர் (7 -95-2) எனும் சுந்தரர் தேவாரம் ஒப்புநோக்கி அறியப்பட வேண்டியதாகும்.

சித்தாந்தக் கருத்துக்கள்

திருநாவுக்கரசர்தம் பதிகங்களில் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் மிகுதியும் காணப்படுகின்றன. நீரில் எழுத்தும் நிகழ்கனவும் பேய்த்தேரும் போல் நிலையின்றி மாயும் பொருள்களாகிய பெருங்கடல் என்னும் மாயையில் வீழாது தன் அடியவரை அருள்புரிந்து காப்பவன்

சிவபரம்பொருள். எனவே தன்னைப் பிறப்பிற்குக் காரணமாகிய நல்வினையும், தீவினையும் ஏதும் செய்ய இயலாது என்கிறார் திருநாவுக்கரசர். இதனை,

பொய்மாயப் பெருங்கடலில் புலம்பா நின்ற
புண்ணியங்காள் தீவினைகாள் திருவே நீங்கள்
இம்மாயப் பெருங்கடலை யரித்துத் தின்பீர்க்
கில்லையே கிடந்துதான் யானேல் வானோர்
தம்மானைத் தலைமகனைத் தண்ண லாரூர்த்
தடங்கலைத் தொடர்ந்தோரை யடங்கச் செய்யும்
எம்மான்ற னடித்தொடர்வா னுழிதர் கின்றேன்
இடையிலேன் கெடுவீர்காள் இடறேன் மின்னே (6-27-1)

என்ற பாடல் விளக்கி நிற்கும். இப்பாடல் உணர்த்தி நிற்கும் கருத்தானது

இங்குளி வாங்கும் கலம்போல் ஞானிபால்
முன்செய் வினைமாயை மூண்டிடினும்- பின்செய்வினை
மாயையுட னில்லாது மற்றவன்றான் மெய்ப்பொருளே
ஆய்வத னாலுணரும் அச்சு (சிவஞானபோதம் சூ-10-அதி-2)

என்ற சிவஞானபோதக் கருத்தோடு ஒத்தமைவதாகும். இடர் கெடுவதற்கு ஈசன் அருள்அன்றி வேறு கதியில்லை. இவ் ஈசன் அருளும் வழிபாடு அன்றி வேறு வகையான அமையாது என்பார் நாவுக்கரசர். அவ் இடர் "சிற்றிடர்" "பேரிடர்" என இருவகைப்படும். பேரிடர் கட்டு நீங்காதவர்க்கு வினைகளான் இடையறாது வருவது ஆகும். சிற்றிடர் கட்டு நீங்கினவர்க்கு முன்னைப் பழக்கத்தால் நிகழும் மறதியான் ஒரோ வழி வருவது ஆகும். இவ் இருவகை இடர்களுக்குக் காரணமான கட்டும் கட்டுள் நின்ற பழக்கமும் நீங்குதல் இறை வழிபாட்டால் அன்றி அமையாது ஆதலின் அதனை இடர் என குறித்தார். கட்டு நீங்காதார் செய்யும் பணி அறிவுப்பணி என்றும் கட்டு நீங்கினார் செய்யும் பணி அன்புப் பணி என்றும் சுட்டப்பெறும். இப்பணியைச் சிவாகமங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனக் குறித்து கீழ் உள்ளவர்கள் மேலானவற்றிற்கு உரியவரல்லர் என்றும் மேல் உள்ளவர் கீழானவற்றிற்கு உரியவரல்லர் என்றும் விளக்கும். எனவே ஞானிகள் மேற்சொன்ன நான்கிற்கும் உரியவர் என்பது பெறப்படும். இதனை சிவஞான சித்தியார்,

ஞானோ கக்கிரியா சரியை நான்கும்
நாதன்றன் பணி ஞானி நாலினுக்கும் உரியன்

ஊனமிலா யோக முதல் மூன்றினுக்கும் உரியவன்
யோகி கிரி யாவான்றான் ஒண்கிரியை யாதி
யான இரண்டினுக்குரியவன் சரியையினில் நின்றோன்
அச்சரியைக் கேயுரியன் (சிவஞான சித்தியார்- சூ.12.5)

எனக் குறிப்பிடும்.

திருநாவுக்கரசர் இறைவனை உலகிறந்த ஒண்பொருளானும் (4-4-6) எனக் குறிப்பார். இதனை "எல்லா உலகிற்கும் அப்புறத்தார்" (திருகளிற்றப்படியார்-1) எனத் திருக்களிற்றுப்படியார் குறிக்கும். இறைவன் அடியவர் மனத்தெழும் அன்பினைக் காண்கிறானே அன்றி அவர்கள் செயலினைக் கண்டு அருள் செய்வதில்லை. உள்ளத்தில் அன்பில்லாதவர் செய்யும் செயல் எவ்வளவு பெரிதாய் அமையினும் அதனால் பயனில்லை என்பதனை,

கரும்பு பிடித்தவர் காய்பட் டாரங்கொர் கோடலியால்
இரும்பு பித்தவ ரின்புறப் பட்டா ரிவர் கணிற்க
அரும்பவிழ் தண்பொழில் சூழணி யாரூ ரமர்ந்தபெம்மான்
விரும்பு மனத்தினை யாதென்று நானுன்னை வேண்டுவதே
(4-102-5)

என்ற பாடலால் விளக்குவார் நாவுக்கரசர், இத்தகைய கருத்தினைச் சிவஞான சித்தியாரும்,

அரனடிக் கன்பர்செய்யும் பாவமும் அறமதாகும்
பரனடிக் கன்பிலாதார் புண்ணியம் பாவமாகும்
வரமுடைத் தக்கன் செய்த மாவேள்வி தீமையாகி
நரரினிற் பாலன்செய்த பாதகம் நன்மை யாய்த்தே
(சிவஞான சித்தியார்-29)

என விளக்கி நிற்கும்.

நமிநந்தி அடிகள் பற்றிய குறிப்பு

நாவுக்கரசர் திருஆரூர்ப் பதிகத்தில் நமிநந்தி அடிகளைப் பற்றிக் குறிப்பிடுகிறார். அப்பாடல்,

துடிக்கின்ற பரம்பரை யார்த்துத் துளங்கா மதியணிந்து
முடித்தொண்ட ராகிமுனிவர் பணிசெய்வ தேயுமன்றிப்

பொடிக்கொண்டு புசிப் புகுந்தொண்டர் பாதம் பொறுத்த பொற்பால்
அடித்தொண்ட ணந்தியென் பானுள ளாரூ ரமுதினுக்கே (4-102-4)

என்பதாம்.

இப்பாடல் தொண்டர்களை “அடித்தொண்டர்“ “முடித்தொண்டர்” எனக் குறிப்பிடுகிறது. இவர்களுள் முடித்தொண்டர் எனப்படுவோர், மதியை முடிமேல் அணிந்து தொண்டு செய்பவர் ஆவர். அடித்தொண்டர் எனப்போடுவோர் அடியவரின் திருவடியைத் தாங்கித் தொண்டு செய்யும் பெற்றியோர் ஆவர். அடியவரின் முடியைத் தன் தலைமேல் சூடும் தன்மை கொண்டோர் என்பதனால் அடித்தொண்டர் என்பது காரணப்பெயர் ஆகும். மேற்கண்ட பாடலில் முடித்தொண்டர் எனப் பன்மையிலும் அடித்தொண்டன் என ஒருமையிலும் குறித்தமையால் முடித்தொண்டராகிய முனிவர் பலர் உண்டு என்பதும் அடித்தொண்டர் நமிநந்தி அடிகள் ஒருவரே என்பதும் பெறப்படும். இதன்வழி நமிநந்தி அடிகளின் பெருமை வெளிப்போந்து நிற்கும்.

சரியைத் தொண்டின் பயன்

இறைவனுக்குரிய தொண்டுகளில் ஒன்றாய சரியை மார்க்கத்தில் தொண்டு செய்வார் அடையும் பயனை திரு ஆரூர்ப் பதிகம் எடுத்துரைக்கும். இறைவனின் வளர்சடைக்கு இண்டைமாலைகள் புனைந்து இரவு பகலும் இடைவிடாது தொடர்ந்து தொண்டு செய்வோர் உலகம் முழுவதையும் ஒருகுடையின் கீழ் ஆளும் பேறு பெறுவர் என்பது அத்தகைய பயன் ஆகும். இதனை விளக்கும் பாடல்,

வண்டு லாமலர் கொண்டு வளர்சடைக்
கிண்டை மாலை புனைந்த மிராப்பகல்
தொண்ட ராகித் தொடர்ந்து விடாதவர்க்
கண்ட மாளவும் வைப்பாரா ரூரரே (5-7-3) என்பதாகும்.

பெரியபுராணத்திற்கு அகச்சான்று

நாவுக்கரசரின் தமக்கையராகிய திலகவதியார் தனக்கு நிச்சியிக்கப்பெற்ற கலிப்பகையார் போரில் வீரமரணம் அடைந்ததும் தமது உயிரையும் மாய்த்துக் கொள்ளத் துணிந்தார். பின் நாவுக்கரசரின் வேண்டுகோளுக்கிணங்க அம்முடிவினைக் கைவிட்டார் எனப் பெரியபுராணம் விளக்கியுரைக்கும். இதனை விளக்கும் பெரியபுராணப் பாடல்,

தம்பியார் உளராக வேண்டுமென வைத்ததயா
உம்பருல கணையவுறு நிலைவிலக்க உயிர்தாங்கி
அம்பொன்மணி நூல்தாங்கி தனைத்துயிர்க்கும் அருள்தாங்கி
இம்பர்மனைத் தவம்புரிந்து திலகவதி யாரிருந்தார்

(பெரியபுராணம் பா-1298)

என்பதாகும். சேக்கிழாரின் இத்தகைய கூற்றிற்கு அகச்சான்றாய்,

எம்மை யாரிலை யானுமு ளேனலேன்
எம்மை யாரு மிதுசெய வல்லரே
அம்மை யாரெனக் கென்றென் றரற்றினேற்கு
அம்மை யாரைத்தந் தாரரு ரையரே (5-7-6)

என்ற ஐந்தாம் திருமுறைப்பாடல் அமைகிறது. மேற்கண்ட பாடலில் முதல் அடியில் எம் ஐயர் என்பது நீண்டு எம்மையார் என நின்றது. இதில் "ஐயர்" என்பது தாய் தந்தையரைக் குறித்தது. இரண்டாம் அடியில் எம்மையார் என்பதில் என் அம்மை என்பது எம்மை என ஆகி ஆர் விகுதி பெற்று எம்மையார் என ஆயிற்று. இவ்விடத்து இச்சொல் திலகவதியாரைக் குறித்து நின்றது ஆகும்.

அகப்பொருள் மரபு

தமிழர் காதலையும் வீரத்தையும் இரு கண்களெனப் போற்றினர். அதிலும் புறத்தினும் அகமே பெரிதும் போற்றப்பட்டது என்பதற்கு சங்கப்பாடல்கலும் புறப்பாடல்களிலும் அகப்பாடல்களின் எண்ணிக்கை மிக்கிருத்தலே சான்றாகும். அகமே தமிழ் எனப்பட்டது என்பதற்கு ஆரிய அரசன் பிரகதத்தனுக்குத் தமிழ் அறிவுறுத்தற்காகப் பாடியது என்னும் குறிஞ்சிப்பாட்டின் துறைக்குறிப்பே சான்றாகும். எனவேதான் அறம் சொல்லுதலை அடிப்படையாகக் கொண்டு தோன்றிய திருக்குறளிலும் காமத்துப்பால் என்றொரு பகுதி அமைந்தது. இத்தகைய அகபொருள் செல்வாக்கு பக்தி இலக்கியங்களிலும் தொடர்ந்து காணப்படுகிறது. ஆரூர் இறைவனைக் கண்டு உள்ளம் பறிகொடுத்த பெண் அவனைக் காணும்தோறும் காதல்கைமிக்கு பிச்சியாய் நிற்றலைக் கண்ட செவிலித்தாய் உரைப்பதாய் அமைந்த பாடல்,

தண்ட வாளியைத் தக்கன்றன் வேள்வியைச்
செண்ட தாடிய தேவர கண்டனைக்
கண்ட கண்டிவள் காதலித் தன்பதாய்க்
கொண்டி யாயின வாறென்றன் கோதையே (5-7-7)

என்பதாகும். இப் பதிகத்தின் பிறிதோர் பாடல் அறத்தொடு நிற்றல் என்னும் துறையினைச் சார்ந்ததாகும். தலை மக்களின் வாழ்வை அறவழியில் நிலைப்படுத்த விரும்பும் தோழி முதலானோர் தலைவனும், தலைவியும் பிறர் அறியாமல் கொண்ட காதல் உண்மையை உரியவர்க்கு உரியவாறு எடுத்துரைப்பது "அறத்தொடு நிற்றல்" எனப்படும். களவு வாழ்வினைக் கற்பு வாழ்வாக மாற்றும் அருஞ்செயலே, அறச்செயலே அறத்தொடு நிற்றல் என்பதாகும். மேற்கண்ட பாடல் செவலி அறத்தோடு நிற்றல் என்னும் துறையினைச் சார்ந்ததாகும். தலைவியின் வளர்ப்புத் தாயான செவிலி தோழியிடம் சில வினாக்களை எழுப்பித் தலைவியின் களவு ஒழுக்கத்தினை அறிந்து கொள்வாள். பின் தான் அறிந்தவற்றை நற்றாய்க்கு "முன்னிலைமொழி" என்னும் வகையான் அறத்தொடு நிற்பாள். செவிலியியானவள் நற்றாயிடம் தலைவி நம்மிடம் நெறிப்படாத பேச்சுக்களைப் பேசத் தொடங்கி விட்டாள். தனித்து இருக்கும்போது ஆரூர் அரன் என்று மொழிகின்றாள். எனவே இவள் ஆரூரான் வீதி உலாப் போனபோது கண்டு காதல் உற்றாள் போலும் என்று கூறி அறத்தொடு நிற்கின்றாள். அத்தகைய பாடல்,

இவள்ந மைப்பல பேசத் தொடங்கினாள்
அவண மன்றெனி லாரூ ரானெனும்
பவனி வீதி விடங்கனைக் கண்டிவள்
தவனி யாயின வாறென்றன் தையலே (5-7-8)

என்பதாகும். அகப்பொருள் இலக்கிய மரபிற்கு மணிமகுடம் வைத்தாற்போன்று அமைந்த நாவுக்கரசின் பாடலும் திருஆரூர்ப் பதிகத்தில் அமைந்த பாடலே ஆகும். அத்தகைய சிறப்பின் அமைந்த பாடல்,

முன்ன மவனுடைய நாமம் கேட்டாள் மூர்த்தி யவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள் பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள் அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை
தன்னை மறந்தாள் தன்னாமம் கெட்டாள் தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே (6-25-7)

என்பதாய் அமையும்.

யோகநெறி தந்தருள்வான்

திருஆரூரில் புற்றிடங்கொண்ட பெருமான் அடியவர்க்கு யோகநெறி தந்தருள்வான் எனக் குறிப்பார் நாவுக்கரசர். மங்கையோடு இருந்து யோகு

செய்யும் அம்மணாளனை உயிர்க்காற்றை அடக்கி உற்று நோக்கி, உள்ளம் என்னும் கிழியில் அவன் உருவம் எழுதி, அதன் முன்பு உயிரையே ஆவணம் செய்து தந்தால் அதாவது மீளா அடிமை உனக்கு என ஓலை எழுதித் தந்தால் இறைவன் தன்னை உணரும் சிறப்புடையாரோடு இணைத்து அருள் தருவான் என்பது இதன் கருத்தாகும்.

உயிரா வணம்இருந்து உற்றுநோக்கி உள்ளக் கிழியில் உருஎழுதி
உயிரா வணம்செய்திட்டு உன்கைத் தந்தால் உணரப்படுவாரோடு
ஒட்டி வாழ்தி

அயிரா வணமேறா தானே றேறி அமரர்தா டாளாதே ஆரூ ராண்ட
அயிரா வணமேயென் னம்மா னேநின் அருட்கண்ணால்
நோக்காதார் அல்லா தாரே.
(6-25-1)

நிறைவுரை

நாவுக்கரசர் தேவாரத்தின் திருஆரூர், திருக்கட்சிப் பதிகங்கள் அப்பதிகங்கள் அமைந்துள்ள நிலம்சார்ந்த வருணனைகள் மட்டும் பதிவு செய்தல் எனும் தன்மையுடன் நீர்த்துப் போகாமல் உளவியல் நுட்பங்கள், சைவ சித்தாந்தக் கூறுகள், அடியார் பற்றிய வரலாற்றுப் பதிவுகள், பிற இலக்கியத் தோற்றத்திற்கான அகச்சான்றுகள், அரிய சொல்லாட்சிகள், அகப்பொருள் கூறுகள் போன்றினவற்றைத் தன்னுட் கொண்டு பொலிந்து நிற்றலை ஆயும்தோறும் அறியமுடிகிறது.

திருச்சிற்றம்பலம்

❀❀❀❀❀❀❀

9. அப்பர் தேவாரத்தில் நீருக்குரிய திருத்தலம்

இலக்கிய மேகம். ந. சீனிவாசன், தேவகோட்டை

இறைவனை வழிபாடு செய்து இப்பிறவிப் பிணியினைப் போக்கிக் கொள்வதே மானிடப் பிறவியின் நோக்கமாகும். அதற்கு நமக்கு அருளாளர்களின் அருளும், வழிகாட்டுதலும் அவசியமாகும். அத்தகைய அருளார்களின் சைவ மரபில் போற்றக்கூடிய நால்வர் பெருமக்கள் நமக்கு முன்னோடி ஆவார்கள். பொதுவாக நாலு பேர் சொல்றதக் கேளு எனத் தமிழிலே ஒரு சொலவடை உண்டு. அந்த நாலு பேர்தான் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசகர் ஆவார்கள். அவர்கள் காட்டும் நன்நெறியே நமக்கு வாழ்வியல் வழி ஆகும். அவர்களின் வழிமுறைகளைப் பின்பற்றி நடந்தால் நாம் ஈசன் அருளை இனிதே பெறலாம்.

பகவான் ஸ்ரீஇராமகிருஷ்ணர் கூறுவார் "ஒருவர் விறகும், பிறபொருட்களும் தேடிப் பெற்று சமையல் செய்து வைத்தால் நாம் அதனை எளிதாகப் பெற்று உண்பதைப் போல ஞானிகள் ஊனினை உருக்கி, உள்ளொளி பெருக்கி நமக்காகச் சேர்த்து வைத்துள்ள தவத்தினை நாம் எளிதாக பெறுகின்றோம்" என்பார்.

அதுபோலவே அப்பர் பெருமன் ஈசன் அருளைப் பெற்றுப் பாடித் தந்துள்ள மூன்று திருமுறைகளில் நீர்த்தலமாகிய திருவானைக்கா மூலம் நமக்கு அளிக்கும் ஞானத்தைப் பருகினால் நாமும் ஆனைக்கா அண்ணலில் அருளினை எளிதில் பெறலாம் அல்லவா! ஆறாம் திருமுறைகளில் இரண்டு பதிகங்களும் ஆனைக்கா அண்ணலின் அருமைகளை, பெருமையை, பேரருளை நமக்கப் பறை சாற்றுகின்றன.

எங்கும் ஈசன்

அருளாளர்களைப் பொறுத்த மட்டில் எல்லா இடங்களிலும் எல்லாப் பொருட்களிலும் ஈசனைக் காணும் பேறுடையவர்கள். எனவேதான் அவர்களால் எல்லா உயிர்களிடத்தும் அன்பினைச் செலுத்த முடிகின்றது. "பார்க்கும் திசைதொறும் பாசங்குசமும்" என்று பாடுவார் அபிராமி பட்டர்.

"எங்கும் ஈசன் எனதாவர்க்கு இல்லையே" என்று அப்பரடிகளும் முழங்குவார். அத்தகைய ஈசன் எங்குளான் எனின் "மனத்தகத்தான்" என்பார். தன்னிலும், தரணியிலும் ஈசனைக் காணும் பேறுடையவர்கள்

ஆதலால் நினைத்தவர்கள் நெஞ்சுளாய் என்று பாடுகின்றார்.

பரஞானத்தாற் பரததை தரிசித்தோர்! பரமே
பார்த்திருப்பார்: பதார்த்தங்கள் பாரார் பார்க்க
வருஞானம் சகஞானம்: வயிந்தவத்தின் கலக்கம்
தருஞானம்: போகஞா திருஞழன ஞேயர்
தங்கியஞான சங்கற் னை ஞானமாடும்
திருஞானம் இவையெல்லாம் கடந்த சிவஞானம்
ஆதலால் சீவன்முத்தர் சிவமே கண்டிருப்பர்

என்பது சிவஞான சித்தியாகும்.

எனவே ஈசனை உலகிலுள்ள பஞ்சபூதங்களிலும் கண்டு தரிசித்துப் பேரானந்தம் அடைந்தார்கள்.

ஆரறிவார் அண்ணலின் பெருமை

இறைவன் சாதாரண மக்களுக்குதான் ஆலங்களில், உருவங்களில் விளங்குகின்றார்கள் என்று எண்ணுகின்றோம். அருளாளர்களோ பிரபஞ்சம் முழுவதுமாக இறைவனைக் காண்கின்றார்கள். பஞ்சபூதத்தலங்கள் எனின் நாம், சிதம்பரம், திருவண்ணாமலை, திருவானைக்கா, திருக்களாத்தி, காஞ்சிபுரம் என்று வழிபாடு செய்கின்றோம். அருளாளர்கள் அங்கும் சென்று வழிபாடு செய்து நமக்கு நன்நெறி காட்டுவதோடு நில்லாமல் நீரிலும், நிலத்திலும், நெருப்பிலும்ம, காற்றிலும், ஆகாயத்திலும் கடவுளைக் கண்டு வழிபாடு செய்ய முயலுங்கள். இயற்கையன்னையான பஞ்சபூதங்களை இறைவனாக எண்ணி வழிபாடு செய்யத் தொடங்கினால் பின்னர் அவற்றில் தூய்மை காக்க முயலுவீர் என்றும் வழிகாட்டுகின்றார்கள். இன்றைய சூழலில் நாம் மிகவும் முக்கியமாக பின்பற்ற வேண்டிய ஒன்றாகும்.

செழுநீர் திரளைச் சென்று ஆடினார்

தூய்மை செய்து கொள்வது என்பது உடலை மட்டுமல்ல, மனத்தையும்தான்,

மனத்துக்கண் மாசிலன்ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற.

என்பார் தெய்வப்புலவர். மனத்துள்ளே இறைவனை நாட்டிட வேண்டும் என்றால் மனம் தூயதாக இருத்தல் அவசியமாகும். அப்படி ஈசனை மனத்தில் இருந்த அந்த ஈசனை செழுதீர்த்திரள் ஈசனாக இருப்பானேயாகில் அவனிடம் சென்று தீர்த்தமாடி பிறவிப் பிணியைப் போக்கலாம்.

"ஆர்த்த பிறவித்துயர் ஆர்த்தாடும் தீர்த்தன்" என மணிவாசகப் பெருந்தகையும் குறிப்பிடுவார்.

அத்தகைய பெருமை வாய்ந்த ஈசனின் பெருமைகளையெல்லாம் ஒரு சேரப் பதிகம் முழுமைக்கும் பாடிப் பின்னர் அத்தகைய ஆனைக்காவில் உறையும் செழுநீர்த்திரள் ஈசனைச் சென்று நான் கலந்து இன்புற்று, தீர்த்தமாடிப் பிறவிப் பயன் பெற்று இன்புற்றேன் என்கின்றார்.

திருக்கச்சி ஏகாம்பத்தில் எவ்வாற மணலால் அம்பிகை ஈசனை சமைத்தாளோ, அதுபோன்று இங்கே நீராலேயே ஈசனை அம்பிகை உருவாக்கி வழிபட்டாள் எனத் தலப்புராணம் தெரிவிக்கின்றது. கங்கையைத் தலையில் சூடியவன் கங்கையிலும் ஆயிரம் பங்கு மேம்பட்ட தானே தீர்ததமாய் இருக்கிறான் எனில் அதைவிடப் பேறு ஏது?

ஈசன் எனும் தீர்த்தத்தில் ஆடவேண்டுமெனில் அன்பால் அகங்குழைந்து, நெக்குருகிப் பாடிப் பணிந்து கலந்து இன்புற வேண்டும் என்கின்றார் அப்பரடிகள்.

முன்னானைத் தோல் போர்த்த மூர்த்தி தன்னை
மூவாத சிந்தையே மனமே வாக்கே
தன்னானை யாப்பண்ணி யேறினானைச்
சார்ந்தற் கரியானை தாதை தன்னை
என்னானைக் கன்றினையென் ஈசன் தன்னை
யெறிநீர்த் திரையுகளும் காவிரிசூழ்
தென்னானைக் காவானைத் தேனைப் பாவைச்
செழுநீர்த்திரளைச் சென்றாடி னேனே!

என்று பாடி உருகுகின்றார்.

அன்பனாயிடும் ஆனைக்கா அண்ணலே

உலகியலை மெய்யென்று எண்ணிக் கொண்டு நாத்திகம் பேசிக் கொண்டு திரியாமல் உடல் வீழ்வதன் முன்னம் ஆனைக்கா அண்ணலை அடைந்து உய்வீர்களாக என்று எச்சரிக்கின்றார்.

ஒன்பது வாயில்கள் உள்ள இந்த உடலை கழுகு உண்பதன் முன்னம், கடைசி காலத்தில் படுக்கையில் வீழ்ந்து உளறுவதன் முன்னம், நெஞ்சம் வேதனையால் புண்ணாகுமன்னர், நாவாலே ஈசனின் மலர்ச்சேவடியினை ஏந்தி, துன்பமின்றி, துயரின்றி வாழ முயலுங்கள். சிந்தையில் உள்ள தீயவற்றை அகற்றி, உருகி, உருகி வழிபாடு செய்யுங்கள்.

சிவபெருமான் என்னும் சச்சிதானந்த தேனைப் பருக வாருங்கள் என்று அழைக்கின்றார் அப்பரடிகள்.

அத்தா உன் பொற்பாதம் அடைவேனே...

ஆனைக்கா அண்ணலின் பொற்பாத கமலங்களை அடையப் பெற்றதால், எனக்குத் துன்புறும் நிலை ஏற்படாது என உறுதிபடக் கூறுகின்றார்.

மரத்தின் கீழ் எழுந்தருளும் அண்ணலுக்கு பெரும் பேற்றால் தனது எச்சிலால் திருநிழற்பந்தர் செய்த சிலந்தியை எம்பெருமான் மறு பிறவியில் கோட்செங்கண் சோழானக்கி, தனக்கு 78 மாடக் கோயில்களை கட்டிட அருள் பாலித்தார் என்ற வரலாறு உலகறியும்.

பெருக் காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்
பெருங்கோயில் எழுபதினோடு எட்டும் மற்றும்
கரக்கோயில் கழபொழில் சூழ் ஞாழற் கோயில்
கருப்பறியில் பொருப்பனைய கொகுடிக்கோயில்
இருக்கு ஓதி மறையவர்கள் வழிபட்டு ஏத்தும்
இளங்கோயில் மணிக்கோயில் ஆலக்கோயில்
திருக்கோயில் சிவன் உறையும் கோயில் சூழ்ந்து
தாழ்ந்து இறைஞ்சத் தீவினைகள் தீருமன்றே!

எனப் பாடி உருகுவார்.

ஒன்பது வழியே ஒளிரும் ஈசன்

கோட்செங்கட் சோழன் திருஆனைக்கா அண்ணலுக்கு ஆலயம் அமைக்கும் போது மேற்கு நோக்கிய சன்னிதியாய், ஒன்பது சாரளத்தின் வழியே செழுநீர்த்திரள் ஈசனை திரிசிப்பதற்கு வகை செய்தார்.

ஒன்பது மணிகளாலும் ஒளிபெறு சாலகத்தின்
ஒன்பது வாசலால் வந்து உறுவினை தீர்க்கும் தீர்த்தம்
ஒன்பதும் இறைஞ்ச ஓங்கும் உமாபதி தன்னைக் காண்போர்
ஒன்பது தீர்த்தம் ஆடும் உறுபயன் பெறுவர் அன்றே

எனத் தலபுராணம் பாடும்.

ஒன்பது வாயில்களைக் கொண்ட இவ்வுடம்பில் எல்லாம் வல்ல ஈசன் எப்போதும் ஒளிர்கின்றான். யார் ஒருவர் மெய்யுளே விளக்கை ஏற்றி, வேண்டளவு உயரத்தூண்டிக் காண வல்லார்களோ அவர்கள் என்றும்

துன்பம் இன்றித் துயர் இன்றி, ஆனந்தமாக ஆனைக்கா அண்ணலைக் காணலாம் என அப்பரடிகள் நம்மை உருகி அழைக்கின்றார்.

ஒழுகு மாடத்து ஒன்பது வாய்தலுங்
கழுகரிப்பதன் முன்னங் கழலடி
தொழுது கைகளால் தூமலர் தூவிநின்று
அழுமவர்க்கு அன்பன் ஆனைக்கா அண்ணலே

திருமாலும், நான்முகனும் தேடித் தேடித் தேடணொணத் தேவனை ஈசனை நம்முள்ளும் தேடிக் கண்டு கொண்டு உய்வு பெற அப்பரடிகள் திருவடி மலர்களை நம் சென்னிமேல் சூடுவோம்.

திருச்சிற்றம்பலம்

❀❀❀❀❀❀❀

10. அப்பர் தேவாரத்தில் நெருப்புக்குரிய திருத்தலம்

பொற்கிழிக்கவிஞர்
பேராசிரியர். சொ.சொ.மீ.சுந்தரம்,மதுரை

அகப்பற்றும் புறப்பற்றும் அதிகமுடைய ஆணவக்காரர்களுக்கு அடிமுடி காட்டா மலை அண்ணாமலை! நெருப்பின் வடிவாய் நிலைத்த இத்திருத்தலம் நினைக்க முத்தி தரும் பெருந்தலம். இங்கே வாழ்ந்த குகை நமச்சிவாய தேவர் என்ற பரமபக்தர், தான் பாடிய "அருணகிரி அந்தாதி" என்ற நூலில் அண்ணாமலையார் அருள்செய்யும் பெருமையை வாயாராப் பாடும்பொழுது,

> வன்பெருக்கில் கல்மிதக்கும், வாய்முதலை பிள்ளைதரும்;
> என்புருக்கொள் பெண்ணாய் இருக்குமே- அன்பருக்கு
> நாட்டுகுரு சோணகிரி நாதன்அடி யார்மூவர்
> பாட்டினிசை கேட்ட பரம் (16-ஆவது பாடல்)

என்று பாடுகிறார். மூவர் பாடல் கேட்ட அண்ணாமலையார் திருவருளால் கடலில் கல் மிதக்கும். முதலை வாயிலிருந்து பிள்ளை வரும், எலும்பு பெண்ணாக மாறும் என்று குறிப்பிடும் குகை நமச்சிவாயர் இம்மூன்று அற்புதச் செயல்களில் அப்பரடிகள் வாழ்வில் நிகழ்ந்த ஆழிமிசை கல்மிதப்பில் அணைந்த செயலை முதலாவதாகக் குறிப்பிடுகிறார். சோணகிரி என்பது திருவண்ணாமலை. கல்லோடு கட்டிக்கடலில் போடப்பட்ட பொழுது அந்தக்கல்லையும் மிதக்கச்செய்து தானும் மிதந்தவர் அப்பரடிகள். இதை "வன்பெருக்கில் கல்மிதக்கும்" என்று முதலில் பாடுகிறார் குகைநமச்சிவாயர். மூவர் முதலிகளில் முதலில் பாடியவர் அப்பரடிகள் அவரோடு கட்டப்பெற்ற கல்மிதக்க மலை காரணம். அந்த மலை அண்ணாமலை என்பது குகை நமச்சிவாயர் கருத்து.

இதனால் அண்ணாமலையார் மேல் அப்பருக்கும் அளவற்ற காதல் உண்டாகி விட்டது. நான்காம் திருமுறையில் ஒரு பதிகமும் (10 பாடல்கள்) ஐந்தாம் திருமுறையில் மூன்று பதிகங்களும் (31 பாடல்களும்) அவர் பாடியிருக்கிறார். இப்பதிகங்களில் இறைவன் பெருமை, இறைவியின் பெருமை, தலப்பெருமை, இயற்கை வளம், இறைவனைச் சிறிதும் மறவாத அடியவர் பெருமை ஆகிய அனைத்தும் மிகச்சிறப்பாக வெளிப்படுத்தப்படுகின்றன.

அணியணா மலையுளான்

அணிமலை என்றால் அருகில் இருக்கும் மலை. அண்ணாமலை என்றால் எட்டமுடியாத மலை. அணியணா மலை என்றால் அருகில் இருந்தும் எட்டமுடியாத மலை. இறைவன் அடியவர்களுக்கு அருகில் இருப்பான். தேவர்களுக்கு மனத்தாலும் அணுக முடியாதவனாக இருப்பான். அடியவர் பிறப்பறுக்கும் பிஞ்ஞகன் ஆன சிவபெருமான் புறத்தார்க்குச் சேயோன் என்கிறார் மணிவாசகர். இதனால் திருவண்ணாமலை அணியண்ணாமலை என்று அப்பரடிகள் பாடுகிறார்.

ஓதியே மலர்கள் தூவி உமையவள் பங்கா மிக்க
சோதியே துளங்கும் என்தோள் சுடர்மழுப் படையி னானே
ஆதியே அமரர் கோவே அணியணா மலையு ளானே
நீதியால் நின்னை யல்லால் நினையுமா நினைவி லேனே.

என்பது நான்காம் திருமுறை.

"அணியணா மலையுளானே" என்று அப்பர் பாடியதை மனத்தில் கொண்ட சேக்கிழார் திருவண்ணாமலைக்கு அப்பரடிகள் வந்து வழிபட்டுப் பாடுவதை,

அண்ணா மலைமேல் அணிமலையை, ஆரா அன்பின் அடியவர்தம்
கண்ண ரமுதை, விண்ணோரைக் காக்கக் கடலில் வந்தெழுந்த
உண்ணா நஞ்சம் உண்டானைக் கும்பிட்டு உருகும் சிந்தையுடன்
பண்ணார் பதிகத் தமிழ்பாடிப் பணிந்து பரவிப் பணிசெய்தார்

என்று பாடுகிறார். அண்ணாமலை மேல் இறைவன் அணிமலையாள் இருக்கிறான் என்று முரண்அணிச் சுவைபடக் கூறி, அணியணா மலையுளான் என்பதை விரித்துரைக்கிறார்.

திருவடி மறவாச் செம்மை

நான்காம் திருமுறையில் அப்பரடிகள், "அண்ணாமலைப் பெருமானே! நின்னையல்லால் வேறு யாரையும் நினைக்க மாட்டேன். தொண்டனேன் உன்னையல்லால் யாரையும் சொல்ல மாட்டேன். நின் பாதமல்லால் பற்றிலேன். உன் மலரடி மறக்க மாட்டேன்" என்று பத்து பாடல்களிலும் இறைவனை மறவாத இயல்பை வெளிப்படுத்திப் பாடுகிறார். ஓதி மாமலர்கள் தூவி எனத்தொடங்கும் பாடலில் "ஓதி" என்பது வாயினாலும் "மலர்கள் தூவி" என்பது உடலாலும் "நினைவு" மனத்தாலும் செய்யப்படும். மனம், வாக்கு, காயம் என்னும் முக்கரண வழிபாட்டையும் சுட்டிக்காட்டுகிறார்.

மருவி நின் பாதம் அல்லல் மற்றொரு மாடிலேனே (மூன்றாம் பாடல்)
வரிமிகு வண்டு பண்செய் பாதம்நான் மறப்பிலேனே (ஆறாம்பாடல்)
பரவும்நின் பாதமல்லால் பரம!நான் பற்றிலேனே (ஏழாம் பாடல்)
தீர்த்தனே நின்தன் பாதத் திறமலால் திறமிலேனே (எட்டாம் பாடல்)
வால்உடை விடையாய் உன்தன் மலரடி மறப்பிலேனே (ஒன்பதாம்பாடல்)
சிரத்தினால் வணங்கி ஏத்தித் திருவடி மறப்பிலேனே (பத்தாம் பாடல்)

என்றும் சிவனடி மறவாச் சிந்தைச் சிறப்பினைப் பாடுகிறார்.

அட்ட மூர்த்தம்

இறைவன், கதிரவன், மதியம், வான், மண், நீர், காற்று, நெருப்பு, உயிர் என அட்டமூர்த்தமாய் இருப்பவன். இந்த இறைவன் திருவண்ணாமலையில் அழல்தூணாய் ஒளி உருவமாய் நிற்கிறான். இந்த ஒளி உருவம் சக்தி உருவம். இதை அப்பர் பெருமான்

"இரவியும் மதியும் விண்ணும் இருநிலம் புனலும் காற்றும்
உரகமார் புவனம் எட்டும் திசைஒளி உருவம் ஆனாய்"

என்று பாடுகிறார்.

இயற்கை வளம்

அண்ணாமலையில் அருவித் தண்ணீர் பொன்துகள் சேரப்பொழிகிறது என்பதை "அருவி பொன்சொரியும் அண்ணாமலை "என்று குறிப்பிடுகிறார். புண்ணிய மலையில் பொன் கொழிப்பதை "அப்பொன்னே கொழித்துவீழும் அணி அணாமலை" என்று பாடுகிறார். பாம்பு உமிழும் நாகரத்தின ஒளியால் இரவிலும் ஒளிவீசும் மலையை "அரவுமிழ் மணிகொள்சோதி அணியணாமலை" என்றும் சிங்கங்கள் திரிவதால் "அரிக்குலம் மலிந்த அண்ணாமலை" என்றும் மேகம் கூடி மழைபொழிவதால் "ஆர்த்துவந்து ஈண்டு கொண்டல் அணியணாமலை" என்றும் "அறைகழல் அமரர் ஏத்தும் அணிஅணாமலையை" அழகாகப் பாடுகிறார் அப்பரடிகள்.

அன்னையின் பெருமை

அண்ணாமலையார் அகத்துக்கு இனியவளாம் உண்ணாலைத் தாயாரை உயர்வாகப் பேசுகிறார் அப்பரடிகள். "உமையவள்" என்றும் "பண்தனை வென்ற இன்சொல் பாவை" என்றும் பாராட்டிப் பேசி அதன் மூலம் பெண்ஓர் பாகப் பெருமான் புகழைப் பண்ணோர் இன்தமிழால் பாடிப் பரவுகிறார்.

ஐந்தாம் திருமுறை – திருக்குறுந்தொகை

நினைக்க முத்தி தருவது திருவண்ணாமலை என்பதால் அப்பெருமானை நீள நினைந்து நெஞ்சுருகும் அப்பரடிகள் இப்பெருமானை மறந்து உய்வனோ என்று ஐந்தாம் திருமுறையில் பாடுகிறார்.

வட்டனை மதிசூடியை வானவர்
சிட்டனைத் திருஅண்ணா மலையனை
இட்டனை இகழ்ந்தார் புரமூன்றையும்
அட்டனை அடியேன் மறந்துஉய்வனோ

என்று தொடங்கி "அடியேன் மறந்து உய்வனோ" என்று பத்துப்பாடல்களிலும் கூறுகிறார்.

அனைத்து வேடமாம் அம்பலக்கூத்தனைத்
தினைத்தனைப் பொழுதும் மறந்து உய்வனோ

என்று தில்லையில் பாடியதைப் போலத் திருவண்ணாமலையிலும் பாடுகிறார். இப்பதிகம் திருவண்ணாமலையிலிருந்து புறப்பட்டுப் பல தலங்களை வணங்கி மீண்டு வரும்போது பாடப்பெற்றதாக இருக்க வேண்டும் என்று பெரியபுராணப் பேருரை ஆசிரியர் சிவக்கவிமணி. சி.கே. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

இப்பதிகத்தில் முதல் ஒன்பது பாடல்களில் முப்புரம் எரித்த வரலாறு குறிப்பிடப்படுகிறது. பத்தாவது பாடலில் இராணவனுக்கு அருள்செய்தது கூறப்படுகிறது. "முப்புரமாவது மும்மலகாரியம்" என்பது திருமந்திரம். இராவணன் ஆணவத்துக்கு அடையாளம். மூலமலம் ஆணவம். திருவண்ணாமலை மால் பிரமன் இருவருடைய ஆணவத்தையும் அடக்கியதால் அது மாலறியா நான்முகனும் காணா மலை. மும்மலம் அகற்றி ஆணவ இருள்நீக்கும் ஒளிமலை அண்ணாமலை என்பது இப்பதிகத்தினால் உணர்த்தப்படுகிறது.

ஓடிப்போகும் நம் மேலை வினைகளே

சிவபெருமான் மீது காதல் கொண்டு தன்னை மறந்து தன்நாமம் கெட்ட ஒரு காதலி, தன் வீட்டு வாசலில் ஒரு பிச்சைக்காரன் போலச் சிவனே வந்து நின்றதும், வீட்டுக்குள் ஓடினாள். பிச்சையிடச் சோறு கொண்டு வந்தாள். அதற்குள் அவர் ஓடிப் போய்விட்டார். இந்தக் காதலியின் துன்பம் எல்லை கடந்ததாயிற்று. "இவர் இப்படிச் செய்யலாமா? அறியாப் பருவத்தில் நம்மை அழைக்கிறார். அறிந்து கொண்டாலோ ஓடிப் போய் விடுகிறார்" என்று வாடுகிறாள்.

என்னையறி யாப்பருவத்து என்னைமணம் புரிந்தான்
எனையறிந்த பருவத்தே தனையறியா விரும்பான்

என்று இராமலிங்க வள்ளலார் பாடியது போல இக்காதலி வருந்துகிறாள். "இவருடைய ஊரான திருவண்ணாமலையைக் கும்பிட்டாலே நம் வினைகள் ஓடிப்போகுமே? இப்பொழுது இவரே ஓடிப்போய் விட்டாரே?" என்று ஏங்குகிறாள். அவளுடைய ஏக்கம்,

பாடிச் சென்று பலிக்கென்று நின்றவர்
ஓடிப் போயினர் செய்வது ஒன்று என்கொலோ
ஆடிப் பாடி அண்ணாமலை கைதொழ
ஓடிப் போகும் நம் மேலைவினைகளே

என்ற அகத்துறைப் பாட்டாக வெளிப்படுகிறது. அண்ணாமலையே சிவலிங்கம், அதைத் தொழுதாலே வினை ஓடும் என்ற கருத்தையொட்டிப்

பெருந்துறையே என்று பிறப்பறுத்தேன் நல்ல
மருந்தினடி என்மனத்தே வைத்து

என்று மாணிக்கவாசகர் பாடுகிறார். இவர்களுக்கப் பின்வந்த அருணகிரிநாதர்,

ஒருபொழுதும் இருசரணம் நேசத்தேவைத் துணரேனே
உனது பழனி மலையெனும் ஊரைச் சேவித்து அறியேனே

என்று பாடுவதும் இங்கு நினைக்கத்தக்கது. இப்பதிகத்தில் "அட்டமூர்த்தி அண்ணமாலை" என்றும் "அற்றம் தீர்க்கும் அண்ணாமலை" என்றும் "அல்லல் தீர்க்கும் அண்ணாமலை" என்றும் "ஆணிப்பொன்னின் அண்ணாமலை" என்றும் "அண்டத்தோங்கும் அண்ணாமலை" என்றும் "அந்திவாய் ஒளியின்தன் அண்ணாமலை" என்றும் மலைவடிவான சிவத்தை வாயாரப் பாடுகிறார் அப்பரடிகள்.

தேடிச் சென்று திருந்தடி ஏத்துமின்
நாடி வந்து அவர்நம்மையும் ஆட்கொள்வார்

என்று கூறும் அப்பர்பெருமான் "முந்திச் சென்று முப்போதும் வணங்குமின்" என்று நமக்குக் கட்டளை இடுகிறார்.

இப்பதிகத்தில் அட்டமூர்த்தி, வெட்டிவீணைகள் பாடும் விகிர்தனார், பாணிநட்டங்கள் ஆடும் பரமனார், காலன் ஆருயிர் கால்கொடு பாய்ந்தவர், அந்திவாய் ஒளியார், என்று சிவபிரானையும் "சுற்றமாமிகு தொல்புகழாள்" என்று உமையவளையும் வாயாரப் பாடுகிறார் அப்பரடிகள். நிறைவாக,

மறையி னானொடு மாலவன் காண்கிலா
நிறையும் நீர்மையுள் நின்றருள் செய்தவன்
உறையும் மாண்பின் அண்ணாமலை கைதொழப்
பறையும் நாம்செய்த பாவங்கள் ஆனவே.

என்று மறையவனும் மாலவனும் காணாத மலையின் புகழைப் பாடித் தல வரலாற்றையும் சுட்டிக்காட்டுகிறார்.

அல்லல் தீர்க்கும் அண்ணாமல கைதொழ
நல்ல வாயின நம்மை அடையுமே

என்று நமக்கு நல்வழி காட்டுகிறார். அண்ணாமலையாரைத் தொழுதால் நம் வாழ்வில் நல்லதே நடக்கும் என்று நமக்கு அப்பரடிகள் நம்பிக்கை ஊட்டுகிறார்.

இலிங்கபுராணத் திருக்குறுந்தொகை

இறைவனை அடையும் வழியைக் காட்டுவது இலிங்கபுராணத் திருக்குறுந்தொகை. சிவபெருமானை அடைய் விரும்பினால் என்ன செய்ய வேண்டும்?

1. மகிழ்வோடு மலர்கொய்து பூமாலை புனைந்தேத்தி அவனுக்குச் சூட்ட வேண்டும்.
2.நின்மலமாகிய பெருமானை நீராட்ட வேண்டும்.
3. அவனுடைய திருநீற்றை நெற்றியில் அணிய வேண்டும்.
4. ஆலய வாயிலைக் கூட்டிச் சாணநீரால் மெழுக வேண்டும்.
5. நெய்யும் பாலும் கொண்டு சிவலிங்கப் பெருமானுக்குத் திருமுழுக்குச் செய்ய வேண்டும்.
6. அவனுக்காகப் பூக்கூடை சுமக்க வேண்டும்.
7. பொய்யும் வஞ்சகமும் இல்லாமல் வாழ வேண்டும்.
8. எருக்கு மாலையைச் சிவனுக்கு இண்டை மாலையாகச் சூட்ட வேண்டும்.
9. அவனுக்கு ஆடைகள் அணிவிக்க வேண்டும்.
10. அவனுக்காக மரங்களில் ஏறி மலர்பறிக்க வேண்டும்.
11. நிரம்ப நீர்சுமந்து அபிடேகம் செய்ய வேண்டும்.
12. எட்டுறுப்பும் நிலத்தில் படத் தரையில் விழுந்து வணங்க வேண்டும். (பெண்கள் ஐந்துறுப்புத் தரையில் பட வணங்க வேண்டும்)
13. வெந்த நீற்றை விளங்கப் பூசித் தலையில் இண்டை மாலை அணிய வேண்டும்.
14. கரிய குவளை மலர்களைக் கண்ணுதற் பெருமான் கால்களில் இட்டுக் களிப்புற வேண்டும்.

15. அவன் சந்நிதியில் வாய் விம்ம சங்கநாதம் செய்ய வேண்டும்.
16. கழுத்தில் உருத்திராக்க மாலை அணிந்து கழலடி பணிய வேண்டும்.

திருமாலும் பிரமனும் இவற்றைச் செய்யவில்லை. எனவே அடி தேடிய திருமால் அடியைக் காணவில்லை. முடி தேடிய பிரமன் முடியைக் காணவில்லை. தேடிக் களைத்தார்கள். இறைவன் அவர்களுக்கு "இங்குற்றேன்" எனக்கூறி இலிங்க வடிவத்தில் காட்சி தந்தான். இதுவே அடிமுடி காட்டா அண்ணாமலையார் வரலாறு. இதுவே அப்பர் பாடிய இலிங்கபுராணத் திருக்குறுந்தொகை. நெருப்பை இருட்டில் கூடக் காணலாம். ஒளிமயமான இறைவனை அயனும் மாலும் அறியமுடியவில்லை. இதை அப்பரடிகள்,

நெய்யும் பாலும்கொண் டாட்டி நினைந்திலர்
பொய்யும் பொக்கமும் போக்கிப் புகழ்ந்திலர்
ஐயன் வெய்ய அழல்நிற வண்ணனை
மெய்யைக் காணலுற் றார்அங்கு இருவரே.

என்று பாடுகிறார். பொய்யும் வஞ்சகமும் இல்லாமல் செய்யும் வழிபாடே சிவ வழிபாடாகும்.

பொக்கம் மிக்கவர் பூவும் நீருங்கொண்டு
நக்கு நிற்பவன் அவர்தமை நாணியே

என்பது அப்பரடிகள் வாக்கு. அகந்தூய்மை வாய்மையால் காணப்படும் என்பது வள்ளுவம். இப்பதிகத்தில் பதினோராவது பாடல்.

செங்க ணானும் பிரமனும் தம்முளே
எங்கும் தேடித் திரிந்தவர் காண்கிலார்
இங்குற் றேன்என்று இலிங்கத்தே தோன்றினான்
பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே.

என்பது. இது தேடித் திரிந்தாலும் காண முடியாத கண்ணுதல், தன்னுடைய கருணையினால் தானே வெளிப்படுவான் என்பதைத் தெரிவிக்கிறது. "காண்பார் யார் கண்ணுதலாய்க் காட்டாக் காலே" என்ற அப்பர் தேவாரத்துக்கு இப்பதிகம் விளக்கவுரையாக அமைகிறது. நெருப்பு வடிவான திருவண்ணாமலைக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி வழிபட்டால் நம்முடைய வினைகள் யாவும் எரிந்துபோகும். ஆணவ அழுக்ககற்றும் அண்ணாமலையானைப் பாடிப் பரவிப் பரமன் அருள் பெறுவோம்.

திருச்சிற்றம்பலம்

11. அப்பர் தேவாரத்தில் காற்றுக்குரிய திருத்தலம்

முனைவர். சே. செந்தமிழ்ப்பாவை
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி

திருநாவுக் கரசுவளர் திருத்தொண்டின் நெறிவாழ
வருஞானத் தவமுனிவர் வாகீசர் வாய்மைதிகழ்
பெருநாமச் சீர்பரவ லுறுகின்றேன் பேருலகில்
ஒரு நாவுக் குரைசெய்ய ஒண்ணாமை உணராதேன் (திருநா.1)

என்று திருநாவுக்கரசர் புராணத்தை, சேக்கிழார் தொடங்குகிறார். பல்வேறு அடியார்களின் வரலாற்றையும் தொகுத்துரைத்த சேக்கிழாரே இவரது வரலாற்றை, தொண்டு நெறியை முழுவதுமாக உரைக்க முடியாமல் வியக்கும் சூழலை இப்பாடல் காட்டுகிறது.

பாரத நாட்டின் பக்தியியக்கம் காட்டிய முதற்தொண்டர் திருநாவுக்கரசராவார். கோயிற்தொண்டாம் திருத்தொண்டில் இன்று வரையும் ஒப்பாரும் மிக்காரும் இன்றிச் சுட்டப்பெறும் தகைமை அவருக்குண்டு. சிவபக்த அடியார்களில் திருத்தொண்டன் அடையாளத்துடன் இருக்கும் ஒரே வடிவம் திருநாவுக்கரசர் வடிவமாகும். பாரதத்தில் மட்டுமின்றி உலகின் பல்வேறு பகுதிகளில் உள்ள அருங்காட்சியகங்களிலுள்ள திருநாவுக்கரசரின் கற்சிலைகளும் செப்புத்திருமேனிகளும் உழவாரப் படையுடனேயே காட்சி தருகின்றன. சமய உணர்வு தோன்றிய காலந்தொட்டு 81-ம் அகவையில் பூம்புகலூரில் முத்திபெற்ற காலம் வரை இடையறாத உழவாரப் பணியை மேற்கொண்டதாலேயே இவர்தம் வடிவம் இங்ஙனம் அமைக்கப்பெற்றது. துப்புரவுப் பணிக்குக் கிடைத்த இலக்கிய வரலாற்றுச் சான்றாகவும் இவர்தம் தோற்றம் திகழ்கிறது.

நாவுக்கரசர் மேற்கொண்ட யாத்திரை

நாவுக்கரசர் தலங்கள் தோறும் சென்று பல தேவாரத் திருப்பதிகங்களைப் பாடியவர். இவருடைய தேவாரப் பதிகங்கள் பன்னிரு திருமுறைகளில் நான்கு, ஐந்து, ஆறாம் திருமுறைகளாகத் தொகுக்கப் பட்டுள்ளன. இவர் பாடிய பதிகங்களுள் இன்று நமக்கு கிடைப்பன 3066 பாடல்கள் ஆகும்.

திருக்கோயில் வழிபாட்டுக்குத் துணை செய்வதாக அமைந்தது யாத்திரையாகும். ஆங்காங்குள்ள இறைவடிவங்களை இறைவன் உறையும்

திருக்கோயில்களைச் சென்று தரிசித்துப் பேறுபெறுவது யாத்திரையின் நோக்கமாகும். சரியை நெறியில் தலை நின்ற திருநாவுக்கரசரும் குமரி முதல் இமயம் வரை தமிழகத்துக்கு அப்பாலும் தொடர் யாத்திரை மேற்கொண்டு ஒவ்வொரு திருத்தலத்தையும் பாடிச் சிறப்பித்தார்.

தலச்சிறப்பு

அங்ஙனம் திருநாவுக்கரசர் திருத்தல யாத்திரை சென்று பாடிய திருத்தலத்தில் ஒன்று காளத்தி ஆகும். இத்திருத்தலம் ஆசார பூசையை விட அன்புப் பூசை பெரியது என்பதை நிலைநாட்டிய இடமாகும். தொண்டை நாட்டுத் தலங்கள் 32-ல் இது 19-ஆவது திருத்தலம். இங்குள்ள இறைவன் காளத்தி நாதர், குடுமிநாதர் என்று அழைக்கப் பெறுகின்றார். இத்திருத்தலத்தை காளத்திப்பதிகத்தின் பதினொரு பாடல்களிலும் "காளத்தியானவனென் கண்ணு ளானே" என்று நாவுக்கரசர் சிறப்பித்துப் பாடுகிறார்.

சிலந்தி, பாம்பு, யானை ஆகியவற்றால் பூசிக்கப் பெற்றதால், இத்தலம் காளத்தி எனப் பெயர் பெற்றது. பஞ்ச பூதத் தலங்களில் காற்றுத் தலமாக இத்திருத்தலம் திகழ்வதால் அதனை மெய்ப்பிப்பது போல இறைவனின் கருவறையில் எரியும் தீபங்களில் ஒன்று எக்காலமும் காற்றினால் மோதப்பட்டாற்போல் அசைந்து ஆடிக்கொண்டே இருப்பது குறிப்பிடத்தக்கது. இத்தலம் தட்சிணகயிலாயம் என்றும் போற்றப் பெறுகிறது. உண்மை அன்பின் திறத்தைக் காளத்திவேடன் வழி உலகிற்கு எடுத்துரைத்த காளத்திநாதரின் சிறப்பினை நாவுக்கரசர் பதினொரு பாடல்களின் வழி எடுத்துரைக்கின்றார்.

சிவபெருமானின் தோற்றச் சிறப்பு

காளத்திநாதர் மாசு மறுவற்ற பொன்தூண் போன்றவர்; மாணிக்கக் குன்றனைய செவ்விய திருமேனியர்; ஏழ் உலகங்களையும் தாங்கும் உறுதியான தூண் போன்றவர்; (திருநாவு.தே.115:1) எலும்பு மாலையை அணிகலனாகக் கொண்டவர்; நறுமணம் வீசும் கொன்றை மாலையைச் சூடியவர்; (திருநாவு.தே.115:2) தீயைக் கையிலேந்தி ஆடுபவர்; (திருநாவு.தே:115:4) கங்கையைச் சடைமுடியில் தாங்கியவர்; விடையை வாகனமாக, அரவத்தை ஆபரணமாகக் கொண்டவர்; (திருநாவு.தே.115:6) சிவனார் கரிய கண்டர்; எரியும் தீயும் பவளமும் போன்ற சிவந்த வண்ணம் கொண்டவர்; யானையின் தோலைப் போர்த்தியவர்; (திருநாவு.தே.115:7) மகாசங்கார காலத்தில் பொங்கிப் பெருகும் ஊழித்தீ போன்று விளங்கும் செம்மை வண்ணர்: (திருநாவு.தே.115:10) வலிமை பெற்ற தோள்களும்,

மழுப்படையும் கொண்டவர்; (திருநாவு.தே.115:8) என்று காளத்திநாதர் தோற்றத்தைச் சிறப்புற வருணிக்கிறார்.

இறைவனின் சீரிய தன்மை

இவ்வுலகத்தின் ஆதி அந்தம் என அனைத்துமாகக் காளத்திப்பெருமான் விளங்குவதை,

நாரணன்காண் நான்முகன்காண் நால்வே தன்காண்
ஞானப் பெருங்கடற்கோர் நாவாய் அன்ன
பூரணன்காண் புண்ணியன்காண் புராணன் தான்காண்
புரிசடைமேற் புனலேற்ற புனிதன் தான்காண்
சாரணன்காண் சந்திரன்காண் கதிரோன் தான்காண்
தன்மைக்கண் தானேகாண் தக்கோர்க் கெல்லாம்
காரணன்காண் காளத்தி காணப்பட்ட
கணநாதன்காண் அவனென் கண்ணு ளானே.

(திருநாவு.தே.115:3 1-6)

என்று போற்றிப் பரவுவர்.

மயானத்து மைந்தன்

சிவபிரான் தனக்கென உணவினைச் சேமித்து வைக்காத வறுமையாளர்; பெருமைமிகு கச்சியேகம்பத்தில் வீற்றிருப்பவர்; இரந்து, அவர் தருவார் பிச்சை உணவையேற்று உண்பதன்றி வேறுவகையில் உணவு கொள்ளாத பெருந்திறமையாளர்; மயானத்தில் இருப்பவர்; திருக்காளத்தி எனப்படும் தலத்தின் மேவும் சிவகணங்களின் தலைவர்; (திருநாவு.தே.115:1)

மூவுலகுமானவர்

எல்லாச் செயல்களையும் தானே முன்னிறுத்தி, வகுத்து நெறிப்படுத்தி இயக்குபவர்; மூன்று உலகங்களானவர்; நான்முகனின் தலைமையைக் கொய்தவர்; முறை தவறாத பஞ்சாதி எனப்படும் வேதத்தை ஓதியவர் (திருநாவு.தே.115:2)

சுறாவேந்தனார்

சிந்தை செய்வார் மனத்தினுள் பொருந்தி இருப்பவர்; தேவர்கள் போற்ற வணங்க இருப்பவர்; மன்மதன் தொடுத்த அம்பினைப் பயனற்றதாக்கி அவனைத் தன் நெற்றிக் கண்ணால் எரித்தவர்; (திருநாவு.தே.115:4)

மனத்தகத்தவர்

மனங்குளித்து வாய் குளிரப்பாடும் அடியார்களின் கூட்டத்தில் உறைபவர்; விண்ணவரிடத்து இருந்து பல நன்மைகளைப் புரிபவர்; ஏழு அண்டங்களைக் கடந்தவர்; செம்பொன்னனைய மலர்கள் பூத்துக் குலுங்கும் சோலைகளில் தன்மையாய்த் திகழ்பவர்; மலை, தீ, காற்று என விளங்குபவர்; இத்தன்மையில் மேவும் பருமையாக விளங்குபவர்; கயிலைமலையின் உச்சியில் வீற்றிருப்பவர். (திருநாவு.தே.115:5)

காபாலியன்

சிவபிரான் எல்லாப் பொருள்களும் தோன்றுவதற்கு முன்பே தோன்றியவர்; விண்ணோர் அனைவரும் போற்றிப் புகழும் நிலையில் பொல்லாங்கு மிகுந்த ஐம்புலன்களின் ஆரவாரத்தை அழித்தவர்; மண்டையோட்டினைக் கையில் கொண்டு பிச்சைக்குச் செல்பவர். (திருநாவு.தே.115:6) கச்சியேகம்பத்தார்; எண்திசைகளும் யாவும் தானாகும் குணம்கொண்டவர்; திரிபுரத்தை எரித்துச் சாம்பலாக்கியவர்; என் சிந்தையுள் அமர்ந்து தீவினைகளைத் தீர்ப்பவர்; கபாலம் கொண்ட இப்பிரான் என் கண் உள்ளார்(திருநாவு.தே.115:7) சிவபிரான் தாருகாவனத்து முனிபுங்கவர்களின் இல்லங்கள் தோறும் சென்ற இரந்து பலி கொள்பவர்; விண்ணவரால் போற்றிப் புகழப்படுபவர்; அருச்சுனனிடம் வேடவடிவங் கொண்டு திருவிளையாடல் புரிபவர்; கல்லால மரத்தின் கீழிருந்து சனகாதி போன்ற நால்வர்க்கு அறமுரைத்தவர்; (திருநாவு.தே.115:8) உயிரை அறியும் ஞானமாக விளங்குபவர்; வானில் பரவி விளங்கும் ஒளியாகியிருந்து அனைத்தையும் தமக்குள்ளே ஒடுக்கிக் கொண்டவர் (திருநாவு.தே.115:9)

ஏழுலகுமானவர்

இறைவன் யாவர்க்கும் கடவுளாவார்; ஏழ்கடலும், சூழ்ந்து மேவும் மலைகளும் அவரே; குற்றமுடைய மன்னுயிர்களின் வழிபாடுகளையேற்று அருள் பாலிப்பவர்; விண்ணவர் பெருமானாகவும், வேதத்தின் பொருளாகவும் விளங்கும் நீலகண்டர்; கபாலங்கொண்டு திருக்காளத்தியில் மேவுபவர்; (திருநாவு.தே.115;10) சிவனார்; உண்ண முடியாத- உண்பதற்கு அரிய ஆலகால நஞ்சினை உண்டவர்; அன்புடன் மகிழ்ந்தேத்தும் அடியார்களுக்கு அருள்பாலிப்பவர்; கண்ணாரக் கண்டு மகிழும் நல்ல காட்சியைத் தருபவர்; (திருநாவு.தே.115:10) என்று இறைவனின் அனைத்து சிறப்பியல்புகளையும் ஒவ்வொரு பாடலிலும் எடுத்துரைக்கின்றார்.

இறைவி

இத்தலத்தின் இறைவி ஞானப்பூங்கோதை. ஞானச் செல்வியாகிய இவ்வம்மையை நாவுக்கரசர், உமையாள் நற்கொழுநன் (திருநாவு.தே.115:4) மலைமகள் தன் மணாளன்(திருநாவு.தே.115:8) ஞானப்பூங்கோதையாள் பாகத்தான் (திருநாவு.தே.116.116:9) என்று முதலில் அம்மையைச் சுட்டி அதன்பின் இறைவனைக் குறிப்பிடுகின்றார். இது அம்மையின் சிறப்பினை நன்கு புலப்படுத்தும்.

தொகுப்புரை

காளத்திநாதர் தனது தோற்றச் சிறப்பு, அவர் மேனியில் அணிந்துள்ள அணிகலன்கள், இறைவன் தன் சீரிய இயல்பு, செயல்கள் போன்றவை நாவுக்கரசரால் காளத்திப்பதிகத்தில் நன்கு விளக்கப் பெற்றுள்ளன.

நாவுக்கரசர் பிற தலங்களில் உள்ள இறைவனை விடக் காளத்திநாதர் மீது மிகுதியான அன்புடையவராக விளங்கியதை "காளத்தியானவர் என் கண்ணினுள் உள்ளான்" என்று ஒவ்வொரு பாடலிலும் உரைப்பது புலப்படுத்தும்.

இவ்வுலகில் உள்ள அனைத்துப் பொருள்கிலும் தானேயாகி நிற்பதோடு எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்திருப்பவராகவும் விளங்கும் இறைவன் அதோடு மட்டுமின்றி இவ்வுலக உயிர்கள் ஞானமாகிய கடலைக்கடப்பதற்கும் நாவாயாக இறைவன் விளங்குவான் என்று உரைப்பது ஈசனின் எல்லையற்ற பெருங்கருணையை விளக்குவதாய் அமைந்துள்ளது.

மக்கள் யாவரும் ஒரு நாள் சுடுகாட்டிற்கு வந்தே தீரவேண்டும். இறைவனோ அக்காட்டிலேயே தங்கி வாழ்ந்து வாழ்வின் இயல்பினை மக்களுக்கு நாளும் உணர்த்துகின்றான் என்னும் நுண்ணிய கருத்தினை மயானத்து மைந்தன் என்னும் தொடரின் வழி நாவுக்கரசர் உரைக்கின்றார்.

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களையும் புரிபவனாகச் சிவபெருமான் விளங்குதலை நாவுக்கரசரின் திருக்காளத்திப்பதிகம் நன்கு விளக்குகின்றது எனில் அது மிகையாகா!

திருச்சிற்றம்பலம்

12. அப்பர் தேவாரத்தில் ஆகாயத்திற்குரிய திருத்தலம்

முதுமுனைவர். மு.பெ. சத்தியவேல் முருகனார்
ஆசிரியர், 'தெய்வ முரசு', சென்னை.

திருநாவுக்கரசர் தில்லைக்குச் சென்றதும், பதிகங்கள் பாடியதும், அங்கே செல்லும்போது பெற்ற அனுபவமும், சென்ற பின் பெற்ற அனுபவமும் தெய்வச் சேக்கிழார் சொன்னால் ஒழிய நாம் எவ்வாறு அறிவோம்? எனவே தெய்வச் சேக்கிழார் திருவாய் மலர்ந்தருளிய பெரியபுராணத்தை எடுத்துக் கொள்வோம். சேக்கிழார் அப்பரடிகளுடன் தில்லைக்குள் நுழைகிறார். அவர் நம்மை கைப்பிடித்து அழைத்துச் செல்ல நாமும் அவருடன் பயணிப்போம்.

ஆனாத சீர்த்தில்லை அம்பலத்தே ஆடுகின்ற
வானாறு புடைபரக்கும் மலர்ச்சடையார் அடிவணங்கி
ஊனாலும் உயிராலும் உள்ளபயன் கொளநினைந்து
தேனாரும் மலர்ச்சோலைத் திருப்புலியூர் மருங்கணைந்தார்

அப்பர் சுவாமிகள் தில்லைக்குத் திருவிழா வேடிக்கை பார்க்கவா புறப்பட்டார்? புறப்படும் போதே ஊனாலும் உயிராலும் உள்ள பயன் கொள நினைந்து அதுவே குறிக்கோளாக தில்லையின் எல்லைப்புறத்தை அடைகிறார்.

தில்லைக்குக் கிட்ட வந்து விட்டோம் என்று எண்ணும் போதே அப்பர் சுவாமிகளுக்கு 'இதோ, இன்னும் சிறிது நேரத்தில் ஊனாலும் உயிராலும் உள்ள பயன் பெறப்போகிறோம்' எனற் எண்ணம் மேலோங்கி அதனால் படப்படப்பு வர நடையின் வேகம் வரவரக் கூடி விரைந்தாராம். சேக்கிழார் அதைப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

நாவுக்கரசரும் இருவர்க் கரியவர் நடமாடிய திருஎல்லைப்பால்
மேவித் தலமுடி மெய்யில் தொழுதபின் மேன்மேல் எழுதரும் விரைவோடும்
காவிற் களிமயில் மகிழ்வுற் றெதிரெதிர் ஆடக் கடிகமழ் கமலம் சூழ்
வாவித் தடமலர் வதனம் பொலியுறு மருதத் தண்பனை வழிவந்தார்

இப்போது நாவுக்கரசர் மட்டும் தனியாகத்தான் எந்தவித பந்தாவும் இல்லாமல் வருகின்றார். அவர்பின் சேக்கிழாரும், சேக்கிழார் பின் நாமும் அறியாமல் பின் தொடர்கிறோம். நாம் சித்தத்தால் தொடர்வதால் அருவமாகவே பின் தொடர்கிறோம்.

அப்போதெல்லாம் தங்க நாற்கரச் சாலை, அல்லது நெடுஞ்சாலை போன்றவை உண்டா? கல்லும் மண்ணும் காலாரப் போன வழியால் ஆனவழி! தில்லையைப் பார்க்கப் போகிறோம் என்ற குதூகலத்தால் அப்பர் அந்த மண்சாலையிலேயே நெடுஞ்சாண்கிடையாக படிந்து தொழுது எழுகிறார். நல்ல காலம், போக்குவரத்து நெரிசல் இல்லை! எனவே எந்தப் பிரச்சினையும் இல்லை! இப்படி வழியெல்லாம் வணங்கிக் கொண்டே வந்தால் எப்பொழுது போய்ச் சேருவது? உடனே எழுகிறார். விரைகிறார். 'மேன்மேல் எழுதரும் விரைவோடும்' என்று சேக்கிழார் குறித்துக் கொள்கிறார்.

எப்போதுமே எண்ணத்திற்கு வலிவு அதிகம். எண்ணத்தாலே தானே விசித்திரம் பலவுடைய அண்டங்களை ஆண்டவன் படைத்தான்? நம்மைப் பேன்றவர்களுடைய எண்ண அலைகளே சுற்றுச் சூழலைத் தாக்குமே, 'நான் நினைச்சுக்கிட்டே இருந்தேன் சார், நீங்க வந்துவிட்டீங்க' என்று சொல்வதை நாம் எத்தனை முறை கேட்டிருப்போம்? நாம் ஒருவரை நினைத்தால் எங்கோ தூரத்தில் உள்ளவர்க்கு விளக்கம் அல்லது தும்மல் வரும் என்பதை நாம் மட்டுல்ல, வள்ளுவரே சொல்கிறாரே?

ஒரு தலைவன் திடீரெனத் தும்மினானாம்! அருகிலிருந்த தலைவி 'யாருள்ளித் தும்மினீர்?' என்று கோபித்துக் கொண்டாள் என்று வள்ளுவர் இன்பத்துப்பாலில் பாடி இருக்கிறாரே! எனவே எண்ணம் மிக வலிவானது; அது அலைஅலையாக சுற்றுச்சூழலில் பரவுவது.

நம்முடைய எண்ணத்திற்கே வலிவு இருக்குமானால், அப்பர் அடிகளைப் போன்ற அருளாளர்களின் எண்ணத்திற்கு எவ்வளவு வலிவு இருக்கும்? தில்லையைக் காணப் போகிறோம் என்று துள்ளிக் குதிக்கிறார் அப்பர். அவரது உற்சாகம் அலைஅலையாகப் பரவ, வழியில் உள்ள சோலைகளில் மயில்களுக்கும் உற்சாகம் தொற்றிக் கொள்ள அவை ஒன்றன் எதிரே ஒன்றென ஆடி மகிழ்கின்றனவாம்! இந்த உற்சாகம் அறிவு சில உடைய மயிலுக்கு மட்டுமின்றி, ஓரறிவுயிராகிய தாமரைக்கும் தொற்றிக் கொண்டு வழியில் உள்ள தடாகங்களில் உள்ள தாமரைகளும் மொட்டு விரிந்து காற்றில் ஆடி அந்தத் தடாகங்கேளே பொலிவு கூடினவாம்.

சேக்கிழார் இதைக் குறித்துக் கொள்கிறார். 'காவில் களிமயில் மகிழ்வுற்று எதிர்எதிர் ஆட கடிகமழ் கமலம் சூழ், வாவித் தடமலர் வதனம் பொலிவுறு மருதத்தண்பணை வழிவந்தார்' என்று பாட்டில் குறிக்கிறார்.

ஆமாம்! வருபவரை முக மலர்ச்சியோடு வரவேற்க வேண்டுமல்லவா? எனவே தடாகங்களில் உள்ள தாமரைகள் முகம் மலர்ந்து அப்பர் அடிகளை வரவேற்றனவாம்! ஆம்! இப்படித்தான் அப்பர் தில்லைத்

தரிசனத்தால் ஊனாலும், உயிராலும் மலரப் போகிறார் என்று அவை குறித்தன போலும்!

இப்படி தாமரைகள் எல்லாம் முருகவிழ்ந்து மலர ஆர்வத்துடன் குளத்து எருமைகள் உற்சாகம் தொற்றிக் கொள்ள குளத்தை அலைத்து மேய்கின்றன. குளத்திற்கு அருகே நடப்பட்டு வளரும் கரும்புப் பயிர்களுக்கும் இந்த உற்சாகம் தொற்றிக் கொள்ள கரும்பெல்லாம் ஓரடி உயர்ந்து வளர்ந்து விட்டனவாம்!

அப்பர் அடிகளின் உற்சாக எண்ண அலைகளால் இயற்கைச் சுற்றுச் சூழலே என்னவெல்லாம் மாற்றம் பெறுகின்றன! காம்ப்ளான் சாப்பிட்ட சிறுவன் திடீரென உயரமாய் வளர்ந்து விடுவான் என்று சொல்வது உண்மையோ என்னவோ, ஆனால் அப்பரின் தில்லை வருகையால் கரும்புகள் எல்லாம் காம்ப்ளான் உண்டது போல திடீரென ஓரடி உயர்ந்து விட்டனவாம்!

திடீரென வளர்ந்த காரணத்தால் கரும்பின் கணுக்களில் உதிரும் முத்துக்கள் சரசரவென உதிர்ந்தனவாம்! அது உருக்கத்தால் கரும்பின் கண் ஆனந்த கண்ணீர் சொரிவது போல இருந்தனவாம். 'இதோ, இவர் தொண்டின் திருவுருவம் அல்லவா? அவரது அன்பு பெருகியதால் அல்லவா இயற்கையில் ஒன்றைத் தொட்டு ஒன்றில் உற்சாகம் தொற்றிக் கொள்ள அது என் மீது பதிந்து இப்படி வளர்ந்து விட்டேன்' என்று கரும்பு அடிகள் பால் உருகிக் கண்ணீர் முத்துக்களைச் சொரிந்தனவாம்.

இதைச் சேக்கிழார் பாட்டில் படம் பிடிக்கும் அழகைப் பாருங்கள்.

முருகிற் செறிஇதழ் முளகிப் பருகரில் முதுமேதிகள் புது மலர்மேயும்
அருகிற் செறிவன மெனமிக் குயர்கழை அளவிற்பெருகிட வளர்இக்குப்
பெருகிப் புடைமுதிர் தரளம் சொரிவன பெரியோர் அவர்திரு வடிவைக்கண்டு
உருகிப் பரிவுறு புனல்கண் பொழிவன எனமுன் புளவன வயலெங்கும்

இந்த இயற்கை மாற்றங்களை எல்லாம் நாம்தான் பார்க்கிறோம்; வியக்கிறோம்! அப்பர் அடிகளோ இவை எவற்றையும் கவனியாமல் ஒரே சிந்தையால் தில்லை நோக்கி விரைந்து கொண்டிருக்கிறார்! விரைவாக ஓடும் இரயிலில் பணம் செய்வோர்க்கு கண்காணும் காட்சிகளெல்லாம் விரைவில் பின்ஓடி மறையுமோ அப்படி அப்பருக்கு இவையெல்லாம் பிற்பட்டனவாம்

இதை சேக்கிழார் அப்படியே பதிவு செய்கிறார். "அளவில் பெரியவர் அயல்நெற் பணைவயல் அவை பிற்படும் வகை அணைகின்றார்"

ஊர் நெருங்க நெருங்க சோலைகளில் குயில்கள் தென்படுகின்றன. இவை சாதாரணக் 'குக்கூ'க் குயில்கள் அல்ல போலும்! இவை மணிவாசகர் 'குயிற் பத்தில்' கண்ட குயில்கள் போலும்! இறைவனோடு நெருங்கியவை ஆதலால் மணிவாசகர், இக்குயில்களைப் பார்த்து 'இறைவனை வரக்கூவாய்' என்று பாடினார் அல்லவா?

இந்தக் குயில்கள் அடித்துப் புரண்டு கொண்டு ஓடி வந்து அப்பர் வந்து கொண்டிருப்பதைப் பார்க்கின்றனவாம். ஐயோ! எவ்வளவு பெரியவர்! தனியாக வந்து கொண்டிருக்கிறாரே. ஒன்றுமில்லாதவன் எல்லாம் கைக்கூலி கொடுத்து புகழ்பாடிக் கும்மலித்து வர வருகின்றானே! ஒரு பேனர்! ஒரு கட் அவுட்! ஒன்றுமில்லையே! முன்னமே அப்பர் ஒரு குறுஞ்செய்தி அனுப்பி இருந்தாரானால் ஊரை எல்லாம் கூட்டி வரவேற்றிருக்கலாமே! இப்பவும் ஒன்றும் மோசம் போய்விடவில்லை! எல்லோரையும் நாமே அழைப்போம்! என்றண்ணி அக்குயில்கள் எல்லாம் கூவினவாம்! என்ன கூவின? சேக்கிழார் பதிவு செய்துவிட்டார். அதைப் பார்ப்போம்.

"பிறவி என்ற பகை ஒழியும் நெறி எது என்று காலம் காலமாய்த் தேடிக் கொண்டிருப்பவர்களே! எல்லோரும் வாருங்கள்! இருவினை ஏறிக் கொண்டே போக அது கட்டிப்போட மேலும் மேலும் கட்டு இறுகிக் கொண்டேருக்கிறதே, இந்தப் பாசக்கட்டு என்று ஒழியுமோ என்ற கவலை உடையவர்களே! எல்லோரும் வாருங்கள்! இதோ அப்பர் அடிகள் தொண்டே திருவுருவமாக வருகிறார்! அவருக்குத் தில்லை தரிசனம்! நமக்கு அவரது தரிசனம்."

இப்படி குயில்கள் கூவி அழைத்தவுடன் கிளிகளும், பூவைகளும் ஓடிவந்துவிட்டன. அப்பரே வேகமாக இந்த வயதில் நடக்கிறார். கிளிகளும், பூவைகளும் அவரை வரவேற்பன போல் அவருக்கு முன்பாக பணிவோடு தொழுது வரவேற்கின்றன. அட, கிளிகளுக்கம், பூவைகளுக்கும் இவ்வளவு அறிவா என்று வியக்கிறோம்.

வியப்பிற்கு இதில் ஒன்றுமில்லை! சம்பந்தர் பாட்டு தெரியாதா? என்கிறார் சேக்கிழார்.

சொன்னால் தெரிந்து கொள்கிறோம் என்கிறோம்; சொல்கிறார்.

பாரிசையும் பண்டிதர்கள் பன்னாளும்
பயின்றோதும் ஓசை கேட்டு
வேரிமலி பொழிற்கிள்ளை வேதங்கள்
பொருட் சொல்லும் மிழலையாமே

திருவீழி மிழலையில் தினந்தோறும் வேதவிற்பன்னர்கள் பாராயணம் செய்ய செய்யக் கேட்டு அவ்வூர் கிளிகளும், பூவை என்னும் மைனாக்களும் வேதங்களுக்குப் பொருள் சொல்லுமாம். அப்படியானால் தில்லைக்கு வருபவர்கள் தமிழ்வேதம் கேட்டுக் கேட்டுப் பழகிய இவ்வூர் கிளிகளும், பூவைகளும் இப்படி அறிவோடு அப்பரைப் பணிவதில் என்ன வியப்பு?"என்கிறார் சேக்கிழார்.

நம் வியப்பு தணிவதற்கு முன் கிளிகளும், மைனாக்களும் இப்படிப் பேச ஆரம்பித்து விட்டன.

"தொண்டு மனம் முற்செய் தவத்தால் வரும். அத்தொண்டின் உச்சத்தைத் தொட்டு தொண்டே ஓர் உருவமாக வருகிற பெரியவர் இவர்! அருவமான தொண்டின் உருவமாகக் காணக் கிடைத்த இக்காட்சி ஓர் அதிசயம் அல்லவா1 அர அர! அர அர!" என்று சுவை மிழற்றுகின்றன. அப்படியே சேக்கிழார் இதை இப்படிப் பதிவு செய்கிறார். பாட்டு காண்க!

அவர்முன் பணிவொடு தொழுதங் கணைவு அணிகொம்பரின்மிசை அருகெங்கும்
தவமுன் புரிதலின் வருதொண்டெனை நிலை தலைநின் றுயர்தமிழ் இறையோராம்
இவர்தந் திருவடிவதுகண் டதிசயம் எனவந் தெதிர் அரஅர என்றே
சிவமுன் பயில்மொழி பகர்கின்றன வளர்சிறை மென் கிளியொடுசிறுபூவை

கிளிகளும், மைனாக்களும் இவ்வாறு முகமன் கூறிக் கொண்டே நாதசுரக் கலைஞர்கள் போலே அப்பரை அவரது வேகத்திற்கு ஈடுசெய்து அழைத்துச் செல்ல அப்பர் தில்லைத் திருவீதி வந்தடைகிறார். இங்கே அப்பரைக் கண்டு அடியார்கள் கூட்டம் திரண்டு அவரை வரவேற்கிறது.

இயற்கையும், ஓரறிவு- ஈரறிவுயிர்களும், கிளிகளும், குயில்களும், பூவைகளும், அடியார்களும் இப்படி அப்பரை வரவேற்கும் போது நாம் மட்டும் சும்மா இருப்பது அழகா என்று எண்ணிய வாயுதேவன் அப்பர் நுழைந்த தில்லைத் திருவீதியயை பெருக்குவான் போல் காற்றெறிய வீதி சுத்தமாயிற்று; இனி நம் பணி என்று வருணதேவன் பூமழை பொழிந்து வீதியை அலம்பி விட்டான். வெம்மைநீர் ஆகாதென்று அடியார்கள் வீதியில் குளிர்நீர் விட்டு வீதியைக் குளிரச் செய்கிறார்கள்; முனிவர்கள் துதி ஓதி எதிர்கொள்கிறார்கள். மறையவர் மறை ஓதி வரவேற்கிறார்கள்.

இத்தனையும் இயற்யாகத் தன்னெழுச்சியாக நடைபெறுகிறது- எவ்வித முன்னேற்பாடும் இல்லாமல்! சுந்தரர் ஓர் ஊருக்குப் போகும் போது சிவபெருமான் அவ்வூர்ப் பெரியவர்களின் கனவில் போய் வரவேற்புக்கு முன்னேற்பாடு செய்ததைக் கேட்டிருக்கிறோம். ஆனால் இங்கே எல்லாம்

தன்னெழுச்சியாக இயற்கையாக நடைபெறுவதைக் கண்டு அதிசயிக்கிறோம்.

இதுவரை அப்பர் சுவாமிகளின் தில்லைத் தரிசனத்திற்குச் செல்லும் முன் பெற்ற அனுபவம். இப்போது அப்பர் தில்லை நடராசர் முன் நிற்கின்றார். அவர் என்னென்ன செய்தார், என்னென்ன அனுபவம் பெற்றார் என்று சேக்கிழார் படம் பிடித்துக் காட்டும் பாடல் காண்போம்.

கையும் தலைமிசை புனை அஞ்சலியன; கண்ணும்பொழி மழை ஒழியாதே
பெய்யும் தகையனக ரணங்களும் உடன்உருகும் பரிவின பேறெய்தும்
மெய்யும் தரைமிசை விழுமுன்பெழுதரும்; மின்தாழ்சடையொடு நின்றாடும்
ஐயன் திருநடம் எதிர்கும் பிடும்அவர் ஆர்வம் பெருகுதல் அளவின்றால்

இந்தப் பாடலுக்கு விளக்கம்சொல்வது அதிகப் பிரசங்கித்தனம்! இதை அனுபவிக் வேண்டும்! அவ்வளவுதான்!

அப்பர் அடிகளின் கை தலைமேல்; கண்களில் மழை பொழிவது போல கண்ணீர்; கலை, காலம்,நியதி, வித்தை, அராகம் ஆகிய உள் அந்தக் கரணங்களும் உருக அவற்றைவிடத் தூலமான மனம், சித்தம், புத்தி, அகங்காரம் என்னும் புற அந்தக் கரணங்களும் உருகின; உடன் தூல உடல் கரைந்து வெளியோடு வெளியாகும் பேறு எய்துகிறது; அந்த வாயுநிலை உடலோடு ஒன்றி தன்னெழுச்சியாகப் பெருக தரைமீது படிந்து வணங்குகின்றார். உடல் வாயு நிலைக்கு வந்து விட்டதனால் தரையில் உடல் படியாது உடனே மேலெழுகிறது. இவர் மீண்டும் மீண்டும் தரையில் படிந்து வணங்க முயல்கிறார்; உடலோ மீண்டும் மீண்டும் வாயுநிலையில் எழுதருகின்றது.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த நடராசர், 'போதும், போதும்! எப்ப வந்தாய்?' என்று அன்போடு நலம் விசாரிக்கின்றார். உடனே திருநேரிசைப்பாவில் அப்பர் பாடித் துதிக்கின்றார். ஆர்வம் பெருகுகின்றது; குறுந்தொகையில் பாடித் துதிக்கின்றார்; ஆர்வம் மேலும் மேலும் பெருகுகின்றது; திருத்தாண்டகம் பாடித் துதிக்கின்றார். ஒவ்வொன்றும் அரசாங்கத்தில் இன்று காணும் ஊழல் கோடிகளைவிட பல மடங்கு பலகோடி இன்பம் பயப்பது.

அப்பர் சுவாமிகளைப் பார்த்து நடராசர் என்று வந்தாய் என்று கேட்டது அப்பர் சுவாமிகளுக்கு கேட்டது; அதை அவர் தம் தேவாரத்தில் பதிவு செய்துவிட்டார். நமக்கெல்லாம் கேட்காது; சொல்லப் போனால் நமக்கு கேட்காதிருப்பதே நல்லது; ஒரு வேளை நடராசப்பெருமான் நம்மைப் பார்த்து 'ஏன் வந்தாய்' என்று கூட கேட்கக் கூடும்.

இனி, தேவாரத்தில் இப்பதியைப் பாடிய பதிகத்தில் ஒன்றிண்டையாவது காண்பது கடமை. அவற்றில் அப்பர் அடிகள் தில்லைத் தரிசனத்தால் பெற்ற அனுபவத்தைப் பாடிப் பதிவு செய்து வருகின்ற தலைமுறைக்கு விட்டுச் சென்றவை.

முதலில் தில்லையில் நடராசப் பெருமானைக் கண்ட அளவில் அப்பர் அடிகளின் உடலில் சில மாற்றங்கள் நிகழ்ந்தன. அதனைக் கோடி காட்டி, 'கரணங்களும் உடன் உருகும் பரிவின போறய்தும் மெய்' என்று சேக்கிழார் தம் பாடலில் பதிவு செய்துள்ளார்.

கையைத் தலைமேல் வைத்து கும்பிட்டார்; கண்களில் நீர் மழை போல் கொட்டியது என்பன எல்லாம் கண்களால் பிறரால் பார்க்க இயல்பன. ஆனால்உள் அந்தக் கரணங்களும், புற அந்தக்கரணங்களும உருகிக் கரைவது நம் கண்களால் காண இயலாதவை. இதை அந்த நிலை எய்திய சேக்கிழார் போன்றவர்கள் தாம் கண்டு கூறமுடியும்.

தான் காண்பதும் பிறர்க்கு காண முடியாததாக ஆகும் போது சேக்கிழார் அதைக் கூறமாட்டார்; அதை அவர் பெரியபுராணம் முழுதும் ஒரு மரபாகவே கடைப்பிடித்து வந்துள்ளார் என்பதை அறிவாழத்துடன படிக்கும் அறிஞர்கள் அறிவர். சான்று காட்ட ஆவணம் ஏதோ ஒரு வகையில் இல்லையேல் சேக்கிழார் அதைப் பற்றியே பேசுவதில்லை.

அப்படியானால், தில்லைத் தரிசனத்தில் அப்பர் அடிகளின் அந்தக் கரணங்கள் உருகின என்பதை எதைக் கொண்டு சேக்கிழார் பதிவு செய்தார்? ஒரே சான்று அப்பர் சுவாமிகளே அதை தனது தேவாரப் பாடல் ஒன்றில் இலைமறை காய்மறையாகக் கூறியிருப்பது தான்!

அந்தப் பாடல் இதோ!

அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கும் மேலுமிப் பூமிசை
என்அன்பால் இக்குமாறு கண்டின்புற
இன்னம் பாலிக் குமோ இப்பிறவியே!

'என்னம்பா லிக்கு மாறு' என்று வருவதற்கு 'என் அன்பால் இக்குமாறு' என்றும் ஒரு பாடம் உண்டு என்று திருப்பனந்தாள் மடத்தின் பதிப்பில் உள்ளது மிக முக்கியமானது. இக்கு- கரும்பு; உடலின் ஊடே மூளையின் ஒரு பாகமாகத் தொங்கும் சுழிமுனையை யோகியர் கரும்பு என்று பரிபாஷையால் கூறுவர்- அதுவே பேரின்பப் பெருவழியாய் இருப்பதால், இதனால்தான் பட்டினத்தார் கரும்பை ஏந்தினார் என்க.

தில்லைத் தரிசனத்தின் முன் அப்பரின் சுழிமுனை அடிநிலை அனுபவங்களால் சற்று மாறி இன்பம் அளித்தது. ஆனால் தில்லைத் தரிசனத்தால் அவருடைய சுழுமுனை முற்றுமாக மாறி முற்றிய இன்பம் தந்தது என்பதைத் தான் 'என் அன்பால் இக்குமாறு கண்டு இன்புற' என்று பாடலில் அப்பர் தன்னுபவத்தை வெளிப்படுத்திப் பாடினார்.

அந்தச் சான்றைக் கொண்டு – அதாவது அகச்சான்றைக் கொண்டு– சேக்கிழார் சுழிமுனை மாற்றத்தின் போது என்ன மாற்றத்தின் விளைவாக அது நடைபெறும் என்பதை விரித்து கரணங்கள் உருகின என்று பாடினார்.

நம் உடலில் பூதங்கள் ஐந்து, தன் மாத்திரைகள் ஐந்து, கன்மேந்திரியங்கள் ஐந்து, ஞானேந்திரியங்கள் ஐந்து என மொத்தம் 20 தத்துவங்கள் தூலமாய் உருவம் உடையவை. ஆனால் அதற்குமேல் மனம் 4, வித்தியா தத்துவம் 7, சிவதத்துவம் 5 என 16 தத்துவங்ள அருவமானவை.

அருவமானவை சீக்கிரம் உருகி மாற்றம் அடையும்; கடின உருவமுடையவை உருகிக் கரையத் தாமதாகும். எனவே அருவமான கரணங்கள் முதலில் உருகின. ஆயின் தூல உடலாகிய ஏனையவை எஞ்சுவினை உள்ளளவும் இருக்கும். எனவே அவை இருக்க உள்ளே அருவம் தனது உள்ளடக்கம் மாறி வாயுநிலை அடைய அப்பர் உடலால் தரையில் வணங்கினாலும், உள்ளே வாயு நிரம்பி நிற்பதால் 'விழுமுன்பு எழுதரும்' என்று சேக்கிழார் இந்த அனுபவத்தைப் பாடினார். இதற்கு 'அன்னம் பாலிக்கும்' எனத் தொடங்கும் அப்பர் அடிகளின் தேவாரமே சான்று.

இது போல, 'அனைத்தும் வேடமாம் அம்பலக் கூத்து' என்றதும், 'பொன்னினால் எழுதி மேய்ந்த சிற்றம்பலக்கூத்தன்' என்றதும், 'ஓதினார் வேதம் வாயால்' என்றதும், 'மையரிக் கண்ணினாளும் மாலும்ஓர் பாகமாகி' என்றதும், 'ஊனத்தை நீக்கி உலகரிய என்னை ஆட்கொண்டவன்' என்றதும், 'ஒன்றியிருந்து நினைமின்கள் உந்தமக்கு ஊனமில்லை'என்றதும், 'இடைக்கலம் அல்லேன் எழுபிறப்பும் உனக்கு ஆட்செய்கின்றேன்' என்றதும் போன்ற அப்பரின் தேவார வாக்குகள் ஒவ்வொன்றும் பக்கம் பக்கமாக பொருள் சொன்னாலும் அதன் மேலும் விரிபவை.

அத்தனையும் இவ்வொரு கட்டுரையில் காணுவது இயலாத ஒன்று. யானையைப் பானைக்குள் அடக்க முடியுமா? இவ்வளவிற்குக் கோடிட்டுக் காட்டவாவது திருவருள் இக்கட்டுரை மூலம் துணை செய்ததே என்று நன்றி கூறி மகிழ்கிறேன்.

திருச்சிற்றம்பலம்

3. அப்பர் பெருமானின் சமுதாயப்பணிகள்

காப்பியக்கவிஞர். நா.மீனவன்
காரைக்குடி.

தோற்றுவாய்

அலகில் கலைத் துறை தழைய, அருந்தவத்தோர் நெறி வாழ அவதரித்தவர் திருநாவுக்கரசர். திருவாமூர் வேளாண் குடியில் பிறந்து புறச்சமயம் போயிருந்து இறைவனவன் கருணையினால் சைவநெறி தான்தழைப்ப வந்துதித்த திருநாவுக்கரசர் என்கின்ற வாகீசர். சைவக் குரவர் நால்வரில் ஒருவராவார். தாண்டகம் என்ற யாப்பு முறையைக் கையாண்டு தாண்டக வேந்தர் என்ற சிறப்புப் பெயரைப் பெற்றவர். பரசமயக் கோளரியான ஞானசம்பந்தரின் சம காலத்தவர். வயதால் மூத்தவர் எனவேதான் ஆளுடையபிள்ளையார் இவரை அப்பர் என்றே அழைத்தார். அஞ்செழுத்தை மறவாது எப்பொழுதும் சிந்தையில் அவனுருவைச் சிறை வைத்த ஆளுடைய அரசின் சமுதாயப் பணிகள் பற்றி அறிய முயல்வதே இக்கட்டுரையின் குறிக்கோள்.

தமக்கையும், தம்பியும்

அம்மையும் அப்பனுமாய் விடேயேறி வந்து வாய் மலர்ந்து அழுத ஞானசம்பந்தருக்கு ஞானப்பால் ஊட்டிய திறத்தினால் 'தோடுடைய செவியன்' என்ற பதிகம் பிறந்தது. அப்படிச் சிவனைச் சிந்தையில் வைத்துக் கொண்டவர் திருஞானசம்பந்தர். பரசமய இருளுக்குள் மூழ்கிக் கிடந்த மருள்நீக்கியார் என்ற பிள்ளைத் திருநாமம் பெற்ற நாவுக்கரசருக்குக் கொடிய சூலையைத் தந்து ஆட்கொண்டார் பெருமான். அவர் மீண்டும் சைவ சமயம் சேரக் காரணமாய் இருந்தவர் பெருந்தவப் பெண்மணியான திலகவதியார்.

அழகே உருவான திலகவதியாருக்கு மணங்காண விழைந்த பெற்றோர், பல்லவர் படைத் தலைவராய் இருந்த கலிப்பகையார் என்பவருக்கு மணஞ்செய்து கொடுக்க எண்ணிய காலை இடை வந்த போரால் படுகளத்தில் கலிப்பகை வீரமரணம் அடைந்தார். மணிவினை காணாத மாதரசி திலகவதி உலகை வாழ்வை வெறுத்தார். இந்நிலை கண்ட அவரது தாய் தந்தையர் விண்ணுலகேகினர். சிறு வயதுக் குழந்தையாக இருந்த மருள் நீக்கியார் தமக்கையின் முகம் நோக்க அவரும் தம்பியின் வாழ்வை எண்ணி உயிர் தாங்கி இருந்தார்.

தன்னை அடைந் தார்வினை தீர்ப்பது அன்றோ
தலையாயவர் தம்கடன் ஆவதுதான்

அன்னநடை யார்அதி கைக்கெடில
வீரட்டத்(து)உறை அம்மானே!

என்று பாடி உயர்த்துகிறார். 'என்கடன் பணிசெய்து கிடப்பதே!' என்று நாவுக்கரசர்தான் இறைவனை நோக்கி, 'உன்கடன் அடியேனையும் தாங்குதல்' என்று பாடுகின்றார்.

அப்பரின் உறுதிப்பாடு

நான் உமக்கே ஆட்பட்டேன், உன்னை மறவேன். என்னை என் ஆன்மாவிற்கு உறுதுணையாவது உன் ஐந்தெழுத்தே. நமசிவாய என்ற அஞ்செழுத்தும் எனக்குப் படைக்கலமாகும். எழுபிறப்பும் உனக்கே ஆட்செய்வேன். நீ என்னை உன்னிடமிருந்து நீக்கினாலும் அகல மாட்டேன். உன்னைத் தொழுது தூய வெண்ணீற்றை நான் அணிந்து உன் அடைக்கலம் என்று வந்தேன். அதனை நீ காண்பாயாக! என்று வேண்டுகின்றார். நம் அவயங்கள் அனைத்தும் இறைவனை வணங்குவதற்காகவே என்பது அவர் பாடிய அங்கமாலை என்ற பகுதியில் காணலாம்.

படைக்கல மாகஉன் நாமத்(து) எழுத்(து)
அஞ்சும்என் நாவில் கொண்டேன்
இடைக்கலம் அல்லேன் எழுபிறப்பும்
உனக்(கு)ஆட் செய்கின்றேன்
துடைக்கினும் போகேன் தொழுது
வணங்கித் தூநீ(று) அணிந்(து)உன்
அடைக்கலம் கண்டாய் சிற்றம்பலத்(து) அரனே!

என்று பாடியிருப்பதைக் காணலாம்.

இது போன்ற கருத்தை ஆண்டாள் நாச்சியார் பாடிய திருவெம்பாவையிலும் காணலாம்.

எற்றைக்கும் ஏழ்ஏழ் பிறவிக்கம் உன்தன்னோ(டு)
உற்றோமே ஆவோம் உனக்கேநாம் ஆட்செய்வோம்

இதுவே திருப்பாலை சொல்வது.

நாடு செழிக்க மழை

யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற கருத்தை உள்ளடக்கி ஆன்மா உய்தி பெறுவதற்கான வழிமுறையை நாம் பின்பற்ற வேண்டும் என்பதுதான் திருமுறை பாடிய பெரியவர்கள் சொல்வது. எங்கும்

மழை பொழிந்து நாடு செழிக்கச் செய்வாய் என மேகத்தை வேண்டுகின்ற பாங்கு சமுதாய மக்களுக்கு நீர் எவ்வளவு தேவை என்ற கருத்தை உணர்த்தும் மாணிக்கவாசகர் பாடிய திருவெம்பாவையும், ஆண்டாள் பாடிய திருப்பாவையும் மழை வேண்டிய பாடுகின்றன.

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்(து)உடையான்
என்னத் திகழ்ந்து எம்மை ஆளுடையாள்
மின்னிப் பொலிந்து எம்பிராட்டி திருவடிமேல்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னில் பிரி(வு)இலா எம்கோமான் அன்பர்க்கு
முன்னிஅவன் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழிவாய் மழையேலோர் எம்பாவாய்!

இது மாணிக்கவாசகர் பாடிய மழைப் பாடல்.

ஆழி மழைக்கண்ணா! ஒன்றுநீ கைகரவேல்
ஆழியுள் புக்கு முகந்துகொ(டு) ஆர்த்தேறி
ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்துப்
பாழிஅம் தோளுடையப் பற்பநா பன்கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்(று) அதிர்ந்து
தாழாதே சாரங்கம் உதைத்த சரமழைபோல்
வாழ உலகில் பெய்திட்டாய் நாங்களும்
மார்கழி நீராட மகிந்தேலோர் எம்பாவாய்!

இது ஆண்டாள் நாச்சியார் பாடிய மழைப்பாட்டு.

எனவே, சைவம், வைணவம் என்று எச்சமயத்தவரும் மழையை வேண்டாம் என்பார்களா? மாட்டார்கள். "நீரின்றி அமையாது உலகு" என்பது வள்ளுவன் வாக்கு.

அன்பும் அறனும்

இன்று நீரின் தேவை என்பதை நாடு நன்கு அறிந்துள்ளது. அக்காலத்தில் இது எத்தகையது என்பதை வள்ளுவார் வழி உணரலாம். மழை நமக்கு அமுதம் என்று சொன்னவர் வள்ளுவர். மழை பெய்து நாடு வளம் பெற்றால் தள்ளா விளையுள் பெருகும். பாவங்கள் அகலும். ஆன்மாவை இறைநெறியில் செலுத்தும் சிவநெறி வளரும். அல்லவை தேய்ந்து அறம் பெருகும். அமைதி ஆட்சி செய்யும். மக்கள் நன்னெறியில் செல்வர். இவற்றையே அப்பர் பெருமான் வலியுறுத்துகின்றார். அன்பகத்தில்லா வாழ்க்கை வறண்ட பாலை நிலத்தில் மரம் தளித்ததை ஒக்கும் என்பது குறட் கருத்து.

திருவருள் பெருக-தீமை அகல்க!

அப்பர் சமயப் பற்றாளர் மட்டுமல்லர். இடையிடையே சமுதாயச் சிந்தனையும் உடையவர் என்பதை அவருடைய வரலாற்றில் காணலாம். சமுதாயத்தில் மலிந்துள்ள பொய்மை கலந்த தீயயை அகலவேண்டும் என்ற புரட்சிக் கருத்தும் உடையவர்.

இன்றைக்கு நாடெங்கும் 'தூய்மை இந்தியா' என்ற முழக்கம் வளர்ந்துள்ளது. ஆனால் அன்றைக்கே திருநாவுக்கரசர் திருக்கோயில் தூய்மைக்கு வித்திட்ட சமயப் புரட்சியாளர் என்பதை மறக்க இயலாது. அவருடைய தோள் உழவாரம் என்கிற கருவியைச் சுமந்திருக்கும். கோயில் தரைகளில் சுற்றுப்புறங்களில் முளைத்திருக்கும் புல் பூண்டுகளை அக்கருவி கொண்டு களைவார். ஆலய மதிற் சுவர் திருச்சுற்று முதலிய இடங்களில் இருக்கும் களைகளை நீக்குவதே உழவாரப்பணி. இன்றைக்குப் பல இடங்களில் இந்த உழவாரப்பணி சிறப்பாக நடைபெற்றுக் கொண்டு வருகின்றது. அப்பர் பெருமானின் இந்தக் கைத்திருத் தொண்டை மெச்சி இறைவனே திருவீழிமிழலையில் வாசியில்லாத காசு கொடுத்துள்ளார் என்பது அவருடைய உழவாரத் தொண்டுக்குக் கிடைத்த நற்சான்று.

திருமறைக்காட்டில் மூடியிருந்த கதவினைப் பதிகம் பாடித் திறக்க செய்து அனைவரும் வணங்க வழி செய்தார்.

சாதி மறுப்பு

மேலும் சாதிகளை வன்மையாக மறுத்தவர். அவரே சாதி மறுப்பு என்ற சித்தாந்தத்தைத் தந்தவர்.

சாத்திரம்பல பேசும் சழக்கர்காள்!
கோத்திரமும் குலமும் கொண்டு என்செய்வீர்?
பாத்திரம் சிவம்என்று பணிதிரேல்
மாத்திரைக்குள் அருளும் மாற்பேறரே!

என்று பாடுவார். சாத்திரம் படித்தவர்ள சில உண்மையை மறைப்பதற்கும் பயன்படுத்துவர் என்பது அவர் கருத்து.

சமயப் போராட்டங்கள்

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்பது திருமூலரின் கருத்து என்றாலும் அன்றைக்கு ஒரே சமயம் இருந்ததில்லை. இருந்த மதங்களுக்கு இடையில் வந்தேறிய சமயங்களும் தங்கள் ஆதிக்கத்தைக் கொண்டுவர முயற்சி செய்தன. அவர்கள் சுயநலம் விரும்பியவர்களாக ஆட்சி

அதிகாரத்திலும் புகுந்தனர். சமுதாயக் கேடுகள் கால் பாவத் தொடங்கின. திருமுறைகள் தோன்றிய காலத்தில் பௌத்தமும், சமணமும் சைவ, வைணவ மதத்திற்கு எதிராக முளைத்தன. இவற்றைத் திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் எதிர் கொள்ள வேண்டியவர்கள் ஆனார்கள்.

மதுரையில் சமணம் தலையெடுக்கப் பாண்டியன் மன்னன் ஆன கூன்பாண்டியனும் சமணத்தைத் தழுவினான். அவன் மனைவியும் அரசியுமான மங்கையர்கரசியாரும் அமைச்சர் குலச்சிறையாரும் சைவநெறியில் நின்றனர். இந்தச் சமயத்தில்தான் ஞானசம்பந்தர் மதுரை வருகிறார். அவர் தங்கியிருந்த திருமடத்திற்குச் சமணர்கள் தீயிட்டனர். ஆனால் சம்பந்தர் அரசனின் வெப்பு நோயைப் போக்கிச் சமணர்களோடு அனல் வாதம், புனல்வாதம் செய்து சைவத்தை நிலை நிறுத்தி வேந்தனையும் சைவநெறிக்கு மாற்றினார். மணிமேகலைக் காப்பியத்தில் சமய வாதங்கள் நடைபெற்றதாக வரலாறு. நாவுக்கரசர் காலத்தில் பல்லவ வேந்தன் சமணனாய் இருந்து, சமணசமய குருவாக இருந்த தருமசேனர் என்ற பெயர் கொண்ட நாவுக்கரசர் சைவரானார் என்பதறிந்து சமணர்கள் சொற்படி அவருக்குப் பல இன்னல்களைச் செய்தான். அப்பர் அஞ்செழுத்து ஓதி அக்கொடுமைகளில் இருந்து மீண்டார். அடியார்களுக்கு உணவிடல், நீர் வேட்கை தீரத் தண்ணீர்ப்பந்தல் வைத்தல் போன்றவை திருமுறைக் காலத்தில் பெரிதும் பின்பற்றப்பட்ட தொண்டுகள். நாவுக்கரசரையே தெய்வம் என நம்பிய அப்பூதியடிகள் நாவுக்கரசர் பெயரால் இத்தொண்டுகளைச் செய்தார் என்பது வரலாறு. இந்நெறியையைப் பின்பற்றித்தான் பின்னர்த் தோன்றிய வடலூர் வள்ளல் சத்திய தருமச் சாலையை உண்டாக்கிப் பசித்தோர்க்கெல்லாம் உணவளித்தார். வாடிய பயிரைக்கண்ட போதெல்லாம் வாடினேன் எனவும் பசிபோக்க உணவிடும் பணிக்குத் திருநாவுக்கரசரே வள்ளல் பெருமானுக்கு முன்னோடி.

முடிவுரை

சமயப் பூசலை, வேற்று மதங்களால் விளைந்த தீங்குகளை நீக்கும் பணியிலும், 'ஆருயிர்கட்கெல்லாம் அன்பு செய்ய வேண்டும்' என்ற பண்பாட்டையும் நமக்கு உணர்த்தியவர் நாவுக்கரசர். சமயத்தோடு சமுதாய நெறியையும் பின்பற்றும் நெறிமுறைக்கு அவரே முன்னோடி என்பதை மறுப்பதற்கில்லை.

திருச்சிற்றம்பலம்

ஆதீன குரு முதல்வர்
புதுக்கோட்டை
திலகவதியார் திருவருள் ஆதீனம்



அன்னை சாயிமாதா பிருந்தாதேவி



அருள்நிலைக்கு இட்டுச்செல்கின்ற நிலையிலும், சமுதாயத்தில் புரையோடியுள்ள அழுக்காறுகளையும் தூற்றுவதோடு, நம்மையும் அதிலிருந்து விடுபடவும் ஆற்றுப்படுத்துகிறார். **சாத்திரம்பல பேசும் சழக்கர்காள், கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர்** என்றதையும், இவ்வுலகை ஆள, குறையா செல்வத்தை (நிதியினை) தந்தாலும் அது மங்கும் செல்வமாகத்தான் இருக்கும் என்றதையும், அத்தகையச் செல்வத்தைப் பெறுவதைக் காட்டிலும் சிவநெறிக்கே தன்னை ஆட்படுத்திக் கொள்வோம் என்றதையும், ஆவுரித்து தின்னும் புலையரேனும் அவர்கள் சிவநெறிக்கு ஆட்பட்டால் அவரை நாமும் போற்றி வணங்குவோம் என்று அக்காலங்களில் ஒடுக்கப்பட்ட நிலையில் இருந்துள்ள மக்களையும், பிற சமயங்களைத் தழுவியவர்களையும் சிவநெறிக்கு திரும்பவும் அழைக்க அவர் உரைக்கின்ற காட்சியும், மாட்சியும் அவருடைய சமய, சமுதாயப்பார்வைக்குச் சான்று பகர்கின்றன

என்கடன் பணி செய்து கிடப்பதே என்ற அப்பரின் வாசகம் இன்றும் சமய மற்றும் பொது மேடைகளிலும் அதிகளவில் பேசப்படுவதை நாம் பார்க்கலாம். **நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்** என்ற வாசகம், மக்களாட்சியின் தத்துவத்திற்கு வந்த முதல் புரட்சிக்குரல் என நாம் பறைசாற்றலாம். அது மட்டுமா, நேர்மறைச் சிந்தனை வேண்டும் என்பதனை **இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை** என்று பாடுவதும் இம் மண்ணிலுள்ள மானுட சமுதாயம் எழுச்சியோடு, வளர்ச்சியும் பெற வேண்டும் என்ற நோக்கமாகத்தான் அப்பரடிகளுக்கு இருந்திருக்க வேண்டும்.

டாக்டர். **அரு.லெட்சுமணன்**
உச்சநீதி மன்ற மேனாள் நீதியரசர்

திலகவதியார் திருவருள் ஆதீனம்
வெளியீடு
1120/5, தஞ்சாவூர் சாலை, புதுக்கோட்டை -622 001.
04322-228024 / 97891 82825, 63809 28173
www.sivabrindadevi.org / sivabrindadevi@gmail.com